# பிள்ளைப்பெருமாளையங்கார்

அருளிச்செய்த

# திருவரங்கத்துமாலை

விரிவுரையுடன்.

(முற்பாதி.)

ஸ்ரீ க. சுப்பிரமணிய ஐயர்,
B A
அவாசரிய
அன்பளிப்பு

---

சே. கிருஷ்ணமாசாரியர்

பதிப்பித்தது.

சென்னை

கணேச அச்சுக்கூடம்.

1909

[இப்புத்தகம் தனியே வேண்டுவோர்க்கு விலை அணா 6.]

# பிள்ளைப்பெருமாளையங்கார் வரலாறு.

* அழகியமணவாளதாச ரென்கிற திவ்வியகவி † பிள்ளைப்பெருமாளையங்கார், சோழநாட்டில் திருமங்கையென்னுந் திருப்பதியில் பிராமணவருணத்தில் ‡ ஸ்ரீவைஷ்ணவசமயத்தில் அவதரித்து, நல்லாசிரியர்பக்கல் தென்மொழியில் தொல்காப்பியம் முதலிய அரிய பெரிய இலக்கணநூல்களையும் பழையசங்கச்செய்யுள்களையும் அக்காலத்துவழங்கிய மற்றைநூல்களையும் ஐயந்திரிபறஓதிஉணர்ந்து, இங்ஙனமே வடமொழியிலும் வேதம் வேதாங்கம் வேதாந்தம் முதலிய சகல கலைகளிலும் வல்லவராகி, மற்றும் தமது ஸ்ரீவைஷ்ணவசமயத்திற்கு உரிய சம்பிரதாயக்கிரந்தங்களெல்லாவற்றையுங் கற்று அவற்றிலும் அதிநிபுணராய், அடக்கமுதலிய நற்குணங்களெல்லாம் ஒருங்கே அமையப்பெற்று, ஆழ்வார்களருளிச்செயல்களில் ஆழ்ந்து ஈடுபடுபவராய், திருவரங்கம்பெரியகோயிலி லெழுந்தருளியிருக்கின்ற நம்பெரியபெருமாளுடைய திருவடித்தாமரைகட்கு மிக்கபக்திப்போன்புபூண்டு ஒழுகுமவராய் அமர்ந்திருந்தனர். அமருநாளில், அந்நாட்டிலாண்டுகொண்டிருந்த § அரசன், அவரது நற்குணங்களனைத்தையும் அறிந்து, 'இக்குணங்களெல்லாம் ஒருங்கு அமைவது அருமை அருமை!' என வியந்து, அவரைத் தனது சம்ஸ்தானத்திற்கு வரவழைத்து அவர்க்குத் தனது இராஜகாரியங்களிற் சிறந்ததோர் உத்தியோகங் கொடுத்து, அவரைத் தன் சமீபத்தில் வைத்துக் கொண்டனன். அவர் உத்தியோகத்தை மேற்கொண்டிருந்தபோதும் விஷ்ணுபக்தி விஞ்சினின்றார்.

அப்பொழுது ஒருநாள், இராஜசம்ஸ்தானத்தில் உத்தியோகம்நடத்துகின்றவர்களின் நடுவே தாமும் உடனிருந்து காரியஞ்செய்துவருகிற அவர், தமதுதோளி லணிந்த உத்தரீயத்தை இரண்டுகையிலுங்கொண்டு 'கிருஷ்ண கிருஷ்ண' என்று தேய்த்தனர். அதுகண்ட பலரும் 'ஐயங்காரே! நீர் நுமது உத்தரீயத்தை இங்ஙனம் என் செய்தீர்?' என வினவ, அவர், 'திருவரங்கம் பெரியகோயிலில் நம்பெருமாள் திருத்தேரி லெழுந்தருளித் திருவீதியிலுத்ஸவங்கண்டருளுகிறபோது அருகுபிடித்தகைப்பந்தத்தின் சுவாலை தாவியதனாற் பற்றியெரிகிற திருத்திரையை அவித்தேன்' என்றார். அது கேட்டு அவர்கள் 'கோயிலில் நம்பெருமாள் திருத்தேருத்ஸவங் கண்டருளுகிறது உமக்கு இங்ஙன் எங்ஙனே தெரிந்தது?' என்று நகைத்து 'ஏதோ இவர்க்கு இவ்வாறு திகைப்பு உண்டாயிருக்கிறது: இது இராஜசேவைக்குமிக விரோதமாகுமே!' என்று அவர்விஷயத்தில் இரக்கமுற்றவர்களாய், நடந்த செய்தியை அரசனுக்கு அறிவித்தனர். இது நிற்க: கோயிலில் திருத்தேரிலே திருத்திரையிற் பந்தத்தின் சுவாலை தாவியெரியும்போது அருகிற்பெருமாளைச்சேவித்துநின்ற ஐயங்கார் கைகளால் திரையைத்தேய்த்துத் தீயை அவித்திட்டதாக அர்ச்சகர் முதலிய சந்நிதிகைங்கரியபரர்கள் கண்டு உடனே தோஷபரிகாரஞ்செய்து திருத்தேருத்ஸவத்தை நடத்தினார்கள். பின்பு இவ்வரலாறுகளைச் செவியுற்றறிந்த அரசன் ஆச்சரியபரவசனாய் ஐயங்காரைநோக்கி 'திருத்தேருத்ஸவத்திற்கு எங்ஙனே போயினீர்!' என்ன, ஐயங்கார் 'எனக்கு மாநஸாநுபவமே யல்லது கோயிலுக்குப் போனதில்லை'

---

* அழகியமணவாளனென்பது, ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருக்கின்ற திருமாலின் திருநாமம்; அப்பெருமானுக்கே அடியவராயிருந்ததனால், இவர் அழகியமணவாளதாச ரெனப் பெயர்பெற்றனர்.

† கிருஷ்ணனுடைய குழந்தைத்திருநாமமாகிய பிள்ளைப்பெருமாளென்னும் பெயரை இடப்பெற்ற ஐயங்கா ரென்று இப்பெயர்க்குப் பொருள்கூறுவர். ஐயங்காரென்பது, ஸ்ரீவைஷ்ணவப்பிராமணர்க்குக்குறியாய்வழங்கும்.

‡ இவரை 'தென்கலைவைணவர்' என்பர், புலவர்புராணநூலுடையார்

§ இவ்வரசனைப் பெரியதிருமலைநாயக னென்பர் ஒருசாரார்; அது காலக்கணக்குக்கு ஒத்துவராது. MAHAMAHOPADHYAYA

என, அரசன் 'ரதோத்ஸவத்தினன்றுநீர் அங்குஇருந்ததாகப்பலர்சொல்வது பொய்யோ?' என்ன, அப்போது இவர்இங்கிருந்தபடியேஉத்தரீயத்தை'கிருஷ்ணகிருஷ்ண'என்றுதேய்த்ததுகண்ட சிலர் 'இவர் அப்பொழுது இங்கேதான் இருந்தனர்' என்று உண்மைகூற, அரசன் 'நன்று!' என்று அத்தெய்விகத்திருவருட்செயலைக்குறித்து ஆச்சரியப்பட்டதுமன்றி அன்றையிரவு நித்திரையில் தான் நம்பெருமாள்சந்நிதிக்குப் போனதாகவும், தென்திருக்காவேரியில் ஐயங்கார் நீராட்டஞ்செய்துநிற்கக் கண்டு அவருடனே சந்நிதிக்குப்போய்ப் பெரியபெருமாளைச் சேவித்து மீளும்போது ஐயங்காரைக் காணாது மயங்கியதாகவுங் கனாக்கண்டு, கண்விழித்து, பொழுதுவிடிந்தவுடனே ஐயங்காரைவருவித்து,'நீர் மகாநுபாவரும் நம்பெருமாளுக்குஅந்தரங்க பக்தருமாக இருக்கின்றதனால், இனி என்னிடம் உத்தியோகஞ்செய்தற்குச் சிறிதுந்தக்கவரல்லீர்; அடியேன் இதுவரையிலுந் தேவரீர்பெருமையை அறியாதுசெய்த அபராதங்களையெல்லாம் பொறுத்து, அடியேன் செய்யவேண்டும் பணிவிடையை நியமித்தருளவேண்டும்' என்று வேண்ட, ஐயங்கார் 'பெரியகோயிலில் எனக்கு நிரந்தரவாசங்கிடைக்கும்படி செய்யவேண்டும்' என்ன, அரசன் அன்றுதொடங்கிக் கோயிலில் அவர்க்கு ஓர் இருப்பிடம் அமைப்பித்து, தளிகைப்பிரசாதமும் அவர்க்குக் கிடைக்குமாறு செய்து அனுப்பிவிட்டனன்.

அவரும், அவ்வாறே எழுந்தருளியிருந்து, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக்கலம்பகம், ஸ்ரீரங்கநாயகரூசல், திருவேங்கடமாலை, திருவேங்கடத்தந்தாதி, அழகரந்தாதி, நூற்றெட்டுத்திருப்பதியந்தாதி என்னும் * எட்டுநூல்களையும், பரப்பிரஹ்மவிவேகம்முதலிய பலநூல்களையும் அருளிச்செய்து, பலநாள் வாழ்ந்திருந்தனர்.

இவர் திருவேங்கடமாலை முதலிய நூல்களியற்றியதைக் குறித்து ஒருசாரார்வழங்குவதொரு வரலாறு வருமாறு:—இவர் ஸ்ரீரங்கநாதனுக்கே தொண்டராகி அப்பெருமானையன்றிப் பிறிதொருதெய்வத்தை மறந்துந் தொழாத மனவுறுதியுடையவராய், அப்பரமன்விஷயமாகவே மாலையும் அந்தாதியும் கலம்பகமும் ஊசலும் பாடியபொழுது, திருவேங்கடமுடையான் இவர்வாயால் தாம்பிரபந்தம் பாடப்பெற விரும்பித் தமது உண்மைவடிவத்துடன் இவரது கனவில் தோன்றி 'வேங்கடத்தின் விஷயமாகச் சிலபிரபந்தம்பாடுக' என்று கட்டளையிட, இவர் அதற்குஇணங்காமல் 'அரங்கனைப் பாடின வாயாற் †குரங்கனைப் பாடேன்' என்றுகூறி மறுக்க, திருவேங்கடமுடையான் எங்ஙனமாவது இவர்வாயாற் பாடல்பெற அவாக்கொண்டதுமன்றி, எல்லாத்திருப்பதிகளிலுமெழுந்தருளியிருக்கின்ற எம்பெருமான் ஒருவனேயென்று இவர்க்குத்தெரிவித்து இவர்கொண்டுள்ள பேதபுத்தியை அகற்றவுங் கருதியதனால், இவர்க்கு உடனே கண்டமாலையென்னுங் கொடியநோய் உண்டாகும்படி செய்ய, அந்தவியாதியால் மிகவருந்திய இவர் அதன்காரணத்தை உணர்ந்துகொண்டு அப்பெருமான்பக்கல் தாம் அபசாரப்பட்ட அபராதம் தீருமாறு உடனே திருவேங்கடமாலை திருவேங்கடத்தந்தாதி என்னும் பிரபந்தங்களை இயற்றி அப்பெருமானைத் துதிக்க, அதுபற்றித் திருவுள்ளமுவந்த திருவேங்கடமுடையான் உடனே இவரெதிரில் எழுந்தருளிக் காட்சிதந்து அநுக்கிரகிக்க, அதனால் இவர் அப்பொழுதே அந்நோய்நீங்கப்பெற்றவராகி, பின்பு, அவ்வடமலைக்குஈடான தென்மலை

---

* இந்த எட்டுநூல்களும், 'அஷ்டப்பிரபந்தம்' எனவும், 'ஐயங்கார்பிரபந்தம்' எனவும் வழங்கும்.

† திருவேங்கடமுடையானைக் குரங்கனென்றது, குரங்குகளுடன்மலை வாழ்தலால்; "மந்திபாய் வடவேங்கடமாமலை," "வானரமும் வேடு வேங்கடம்" என்றார் ஆழ்வார்களும்.

யின்விஷயமாக அழகரந்தாதிபாடி,அப்பால் தமதுபேதபுத்தியொழிந்தமை நன்குவிளங்க நூற்றெட்டுத்திருப்பதியந்தாதி பாடினர்.

திருவேங்கடமுடையான்[ஸ்ரீநிவாசன்] ஐயங்கார்க்குச் சேவைசாதித்த இடம் - கோயிலில் சலவைக்கல்மண்டபப்பிராகார மென்கிறஉட்பிராகாரத்தில் தென்கிழக்குப்பக்கத்தில் என்பர்.

பரமதநிரஸநம்பண்ணி ஸ்வமதஸ்தாபநஞ்செய்தற்பொருட்டு இவர் பாடிய பாடல்களின் தொகுதியே, பரப்பிரஹ்மவிவேக மெனப்படுவது.

விசுவரூபதரிசநபசுசம்வாதமென்னும் மறுபெயரையுடைய பரப்ரஹ்மவிவேக மென்ற நூலின் உரைத்தொடக்கத்தில் அந்நூல்வரலாற்றைக் குறித்து எழுதியுள்ள விவரத்தை அடியிற்காண்க:—“திருவரங்கத்தமுதனார் திருப்பேரனாராகிய அழகியமணவாளதாசரென்கிற திவ்வியகவி பிள்ளைப்பெருமாளையங்கார் நம்பெருமாள்முதலிய சில திவ்வியதேசப்பெருமாள்களின்மீது தமிழ்ப்பிரபந்தங்கள்பல செய்தருளுங்காலத்தில், தமிழிலக்கணவிலக்கியங்களைக் கற்றுவல்ல சிறந்த புலவர்கள் பலரும் இவருடைய கவிகளிற் சொல்நோக்கு பொருள்நோக்கு முதலியவற்றைக் கண்டுங் கேட்டுங் கொண்டாடுவதை ஆனைக்காவிலிருக்கும்ஆகமவாதிகள் கேள்விப்பட்டு ‘இப்படிப்பட்ட வித்துவானால் நம்முடைய ஜம்புகேசுரச்சிவபெருமான்மீது ஒரு பிரபந்தம் பாடுவித்துக்கொள்ளவேண்டும்’ என்னுங் கருத்துடையவர்களாய் ஒருநாள் இவருடையதிருமாளிகையில் வந்து தங்கள்கருத்தை வெளியிட, அதுகேட்டருளி,திரிகரணத்தாலுந் தேவதாந்தரத்தைப் பற்றறவிட்ட சுத்தசத்தவ தொண்டக்குல ஸ்ரீவைஷ்ணவசிகாமணியாகிய ஐயங்கார் புன்னகைகொண்டு ‘யாம்அரங்கனைப்பாடினவாயினால் மற்றொரு *குரங்கனைப் பாடுவதில்லையே’ எனத் திருவாய்மலர்ந்தருள,கேட்டு, ‘குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொள்ளுமவரைப்போல நம்முடைய பரமசிவத்தின்மீது பாடல்பெற்றுக்கொள்ள வந்து குரங்கனென்னுஞ்சொல்லைப் பெற்றுக் கொண்டோமே’ என்று மனம் பொறுதவர்களாய்ச் சடக்கென எழுந்திருந்து, ‘எவ்வகையினாலாவது உம்முடைய வாக்கினால் எங்கள்பரமசிவத்தின் மீது ஒருபாடலாவது பெற்றுக்கொள்ளுகிறோம்’ என்று சபதங்கூறித் தங்களிருப்பிடத்திற்குப்போய் அதற்குவகைதேடிக்கொண்டிருந்தனர்கள். இப்படியிருக்கச்செய்தே, கோயிலில் உதயத்தில் திருக்காப்புநீக்கி நம்பெருமாளுக்குச் செய்யுங் கைங்கர்ய மாகிய விசுவரூபதரிசநஞ் செய்விக்கப்போகிற சமயத்திற் கொண்டுபோய் அர்ச்சகர் சமர்ப்பிக்கிற பொருள்களில் ஒன்றாகிய கபிலையென்கிற பசுவானது ஒருநாள் ஆனைக்காவைச்சார்ந்த ஒருபுலத்தில் மேய அதை மேற்கூறிய ஆகமவாதிகள் பிடித்து இதனால் தாங்கள் கொண்டகருத்தை ஈடேற்றுவித்துக்கொள்ளலாமென நினைத்துக் கட்டிவைத்தனர்கள்.அன்றுஇராத்திரி கோயிலில்அர்ச்சகர்முதலாயினோர் விசுவரூபதரிசநபசுவைக் காணமல் தேடிக்கொண்டு போகையில், ஆனைக்காவிலிருக்கக் கண்டு ஆகமவாதியர்களைப் பசுவைக்கொடுக்கும்படி கேட்க, அவர்கள் ‘உங்களுடைய பிள்ளைப்பெருமாளையங்கார் வந்து கேட்டால் தருகிறோம்’ என்றுசொல்ல,அதுகேட்டு,விசுவரூபதரிசநத்துக்குப்ராதக்காலத்தில்வேண்டுமேயென்னும் எண்ணத்தினால் அதைமறுத்துஒன்றும்பேசாமல் ஒத்துக் கொண்டு, பரபரப்புடன் சென்று ஐயங்காரிடத்தில் விண்ணப்பஞ் செய்ய,

---

* குரங்கம் - மான்: வடசொல்; அதனை இடக்கையிலேந்தியுள்ளவன், குரங்கன்: எனவே, சிவபிரானும். அன்றி, குரங்குமுகமுள்ள நந்திகேசுரனை அடிமையாகவுடையனாதல்பற்றியும், அநுமானாக அவதரித்தவனாதல்பற்றியும், சிவபிரானைக் குரங்க னென்றன ரென்னலாம். கு - குற்சிதமான, ரங்கன் - அம்பலத்தையுடையான் என்றுங் கூறுவர்.

"மறந்தும் புறந்தொழாமாந்தர்" என்கிறபடியே அந்தப்பிரபந்நநிஷ்டாநுபவ ராகிய வைதிகவைஷ்ணவரானவர் அதுகேட்டருளி, 'துஷ்கர்மகாலம்தவிர மற்றைக்காலத்தில் ருத்திரபூமியில் அடிவைப்பது கூடுமோ? அன்றியும் அவ் வாலயத்திற் பிரவேசிப்பது வைதிகவைஷ்ணவனுக்குத் தக்க தன்று: 'ஆனை துரத்திவந்தாலும் ஆனைக்காவில் நுழையாதே' என்கிற பழமொழியையே னும் கேட்டதில்லையோ? ஆதலால், அந்த ஆகமவாதியர்களைக் கோயிலிடத் தில் அழைத்துவாருங்கள்' எனச் சொல்லினர். அவ்வாறே அந்த ஸ்ரீவைஷ் ணவர்களும் ஆனைக்காவிற்சென்று அவர்களுக்குச்சொல்ல, எவ்வகையாலா யினும் ஐயங்காரால் ஒருபாடல்பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துக்கொண்டி ருந்த அவர்களும், 'நம்முடைய எண்ணம் நிறைவேறுங்காலம் இதுதான்' என்று அதற்கு ஒத்துக்கொண்டு, அதிகசந்தோஷத்தோடு அக்கபிலையையும் ஓட்டிக்கொண்டு, ஜயவிஜயர்கள்எழுந்தருளியிருக்கும் சந்தநுமகாராஜமண் டபத்தில் வந்துசேர்ந்தனர்கள். ஐயங்காரும் அவ்விடத்தில் எழுந்தருளி,'கபி லையை விடுவதற்கு உங்களுடைய கருத்து எது?" என்று கேட்டருள, அவர் கள் 'உம்முடைய வாக்கால் ஜம்புகேசுரசிவபெருமானாகிய எங்கள்தெய்வத் தின்மீது ஒருபாடல்பாடித்தருவீரேல், விசுவரூபதரிசனப்பசுவை நாங்கள் விடுவதற்கு யாதோராடங்கமு மில்லை' என்று சொல்லினர். "பொய்ம்மை யும் வாய்மையிடத்த புரைதீர்ந்த, நன்மை பயக்கு மெனின்" என்கிற குறளின்படி அவர்கள்சொன்னதற்குஇணங்கினவரைப்போலநடித்து ஐயங் கார் 'நம்பெருமாளுக்கு விசுவரூபதரிசனத்திற்கு மற்றுநாள் பிராதக்காலத் தில் ஆடங்கமாகிறபடியால், அப்பசுவை விடுவீர்களாகில், உடனே யாம் பாடுகிறோம்' என, 'எங்கள்சிவபெருமான்விஷயமாக நீர்பாடுவது யதார்த்த மாகில், அப்பாட்டில் இரண்டொரு சீரையேனும் முன்னே சொல்லுவீ ராகில் பசுவை விடுகிறோம்' என்று அவர்கள்சொல்ல, ஐயங்காரும் புன் னகைகொண்டு அவ்வாறே "மங்கை பாகன்" என்று முதலிரண்டு சீரை அருளிச்செய்தமாத்திரத்தில், அப்பசுவை விட்டனர்கள். உடனே ஐயங்கா ரும் முன் தாம் சொன்ன சீரைத் தொடங்கி,

"மங்கைபாகன் சடையில்வைத்த கங்கை யார்பதத்துநீர்
வனசமேவு முனிவனுக்கு மைந்தனை தில்லையோ
செங்கையா லிரந்தவன் கபால மாரகற்றினர்
செய்யதாளின் மல ரரன் சிரத்தி லான தில்லையோ
வெங்கண்வேழ மூலமென்ன வந்த துங்கள்தேவனோ
வீறுவாணனமரி லன்று விறலழிந்த தில்லையோ
அங்கணுலக முண்டபோது வெள்ளிவெற் பகன்றதோ
ஆதலா லரங்கனன்றி வேறுதெய்வ மில்லையே.

ஆதலால், சேஷகோடியிற்சார்ந்தவரேயொழிய உங்கள்தேவதை பரமாத்மா வல்லர்" என்று இச்செய்யுளைச் சொல்லி 'உலகத்தூக்குப் பலதெய்வங்கள் உண்டோ? ஒருதெய்வமேயாம்; அத்தெய்வம் திருவரங்கனேயல்லாமல் வே றில்லை' என, அதுகேட்டு அவ்வாகமவாதியர்கள் 'கிணறுவெட்டப்பூதம்புறப் பட்டாற்போல் இதுஎன்ன விபரீதமாய்முடிந்ததே!' என்றசினங்கொண்டு அந்த ஆகமவாதிகளுக்குட் சிறந்த நிஷ்டாநுபவர்களாகிய சிலவித்வான்கள் வேதவிருத்தமாகிய ஆகமபுராணங்களைக்கொண்டு புலவர்பெருமானாகியஐய ங்காரோடு வாதுசெய்யத்தொடங்கினர்கள். அவ்வாதிசைவவித்வான்கள் கேட்ட வினவுக்கு விடைசொல்லியருளிய உத்தரங்களைப்பின்னுள்ளோரும் தெரிந்துகொள்ளும்படி பரமகாருணிகராகிய ஐயங்கார் வெள்ளைப்பாவாற் கூறினர். ஆதிசைவசமயநிஷ்டாநுபவர்களாகிய வித்துவான்கள் சொல்லிக் கொண்டுவந்தபிரச்னைகளுக்கு வடமொழியிலும்தென்மொழியிலும் தெய்வ ப்புலமையுள்ள வீரவைஷ்ணவசிகாமணியாகிய ஐயங்கார் அருளிசசெய்த

விடைகளை மறுத்துச்சொல்ல ஒன்றுந் தோன்றாமல் அவ்வாதியர்கள் 'ஓம்' என்று தங்கள்தங்களிருப்பிடத்துக்குச் சென்றனர்கள்."

'திருநறையூர்நம்பிமேகவிடுதூது' என்ற நூலும் இவர்செய்ததென்பர். இவர்செய்தனவாகத் தனிப்பாடல்களும் சில வழங்குகின்றன.

பின்பு இவர் ஒருநாள் தமதுதிருவடிகளிற் சம்பந்த முடையவர்களை நோக்கி 'நமக்கு அந்திமதசை பசுவினாலே நேரிடும்' என்று சொல்லி, அப்படியே சக்கரவர்த்தித்திருமகனைச்சேவித்துக்கொண்டு ஸ்ரீவைகுண்டநாதர் சந்நிதியிற் சேவிக்கும்பொழுது, ஒரு நொண்டிப்பசு வந்து தவறி இவர்மேல் விழ, அது விழுந்ததனாலாகிய துன்பத்துடனே இவர்

"துளவ துளவவெனச் சொல்லுஞ் சொற் போச்சே
அளவி னெடுமூச்சு மாச்சே—முளரிக்
கரங்கால் குளிர்ந்ததே கண்ணும் பஞ்சாச்சே
இரங்கா யரங்கா வினி"

என்று சொல்லித் திருநாட்டை யலங்கரித்தனர்.

இவர், சிலேடை திரிபு யமகம் அந்தாதி கலம்பகம் ஊசல் முதலியன விசித்திரமாகப்பாடுவதில் ஒப்புயர்வில்லாது மிக வல்லவர்; இது, இவர்செய்துள்ள நூல்களால் இனிதுவிளங்கும்: அன்றியும், 'திவ்வியகவி' என்ற இவரது பட்டப்பெயர்தானே இதனை வற்புறுத்தும். இவர் இயற்றிய திருவரங்கக்கலம்பகம் - வெண்பாப்பாடுதலில் வல்ல புகழேந்தியும், விருத்தம்பாட வல்ல கம்பரும், அந்தாதிக்குஎடுத்த ஒட்டக்கூத்தரும், கலம்பகத்திற்கென்று சிறப்பித்துச்சொல்லப்படுகின்ற இரட்டையர்களும், சந்தம்பாடுதலிற்சமர்த்தரான படிக்காசுப்புலவரும் முதலிய மகாவித்வான்கள் சேர்ந்து செய்தாலொத்த சிறப்பினை யுடையது. இங்ஙனமிருக்க, ஒருசாரார் 'ஐயங்கார் அம்மானையில் அடிசறுக்கினார்' என்று குறைகூறுவது, சிறிதும் சரியன்று; திருவரங்கக்கலம்பகத்திலுள்ள "தேனமருஞ்சோலை" என்ற தொடக்கத்து அம்மானைச்செய்யுளினது ஈற்றடியின்பிற்பகுதியிற் பொருந்திய சிலேடைப் பொருள்நயத்தையும் சரித்திரவமைப்பையும் ஆழ்ந்தகருத்தையும் ஊன்றி நோக்குமிடத்து, அங்ஙனம் இழித்துரைப்பாரது பழிப்புரை வெற்றுரையேயா மென்பது தெற்றென விளங்கும்: அன்றியும், அக்கூற்று அழுக்காற்றினாலாகியதேபோலும்; அந்த அம்மானைச்செய்யுளின் அருமைபெருமைகள் இங்கு விரிப்பிற் பெருகும். இன்னும், இவர் செய்துள்ள பிரபந்தங்களெல்லாம், ஸ்ரீவைஷ்ணவசம்பிரதாயத்தில் உள்ள நம்மாழ்வார்முதலிய ஆழ்வார்கள் பன்னிருவர் அருளிச்செய்த திவ்வியப்பிரபந்தங்களின் ஸாரார்த்தங்களும், நாதமுனிகள் முதலிய ஆசாரியர்களுடைய அருளிச்செயல்களின் விசேஷார்த்தங்களும் பொதிந்திருத்தல்மாத்திரமேயன்றி, "சொல்நோக்கும் பொருள்நோக்கும் தொடைநோக்கும் நடைநோக்கும் துறையின்நோக்கோடு எந்நோக்குங் காண இலக்கிய" மாகியும் இருப்பன.

இவர், ஸ்ரீவைஷ்ணவவிசிஷ்டாத்வைதமதஸ்தாபநாசாரியரான ஸ்ரீபகவத்ராமாநுஜாசார்யரென்கிற ஸ்ரீபாஷ்யகாரரது அந்தரங்கசிஷ்யரான கூரத்தாழ்வானுடைய குமாரராகிய ஸ்ரீபராசரபட்டரது சிஷ்யராதலாலும், அந்தப்பட்டரது திருவவதாரம் சாலிவாகனசகாப்தம் ஆயிரத்துநாற்பத்தைந்தில் என்று தெரிதலாலும், இவரது காலம் இற்றைக்குச் சற்றேறக்குறைய எழுநூற்றுறுபதுவருஷத்துக்குமுன்னராகின்றது; (இப்பொழுது நிகழ்கிற சாலிசகம் ௧௮௨௨.) இவரை ஸ்ரீபாஷ்யகாரரது ஸ்ரீபாதத்திலாசிரயித்தவர்களுட் பிரதானரும், இராமாநுசநூற்றந்தாதி அருளிச்செய்தவருமாகிய திருவரங்கத்தமுதனாரது திருக்குமார ரென்று பலரும் திருப்பேரனு

ரென்று சிலரும் வழங்கிவருவதும், கீழ்க்கூறிய காலக்கணக்கையே வற்புறுத்தும்.

இவர்பேரனார், ஸ்ரீரங்கநாயகிபாருசல்செய்தகோனேரியப்பனையங்கார். இன்னும் இவரது வைபவவிசேஷங்களை வல்லார்வாய்க் கேட்டுஉணர்க. அடியில்வருகிற புலவர்புராணச்செய்யுள்கள் இங்குநோக்கத்தக்கவை:—

(௧) "தென்கலையிணையன் செகமெலாம்புக
ழின்கவிப்பிரபலன் இணையில்பட்டர்தம்
நன்கணத்தினர்களிலொருவன் நாரணன்
பொன்கழலன்றி மற்றொன்றும் போற்றிலான்.

(௨) மருவழகியமணவாளதாசனென்
றொருபெயர்புனைந்தவன் உரைக்குமோர்சொலாற்
பொருள்பலதருங்கவிபொறிக்கும்பொற்பினிற்
பெருமிதனெனப் பலர்பேசும் பெற்றியான்.

(௩) செவ்வியசொற்சுவைசிறிதுந்தேர்ந்திடா
தவ்வியப்போர்பொருமவர்களன்றிமற்
றெவ்வியற்புலவருமிசைந்து நாடொறுந்
திவ்வியகவியெனச்செப்புஞ் சீர்த்தியான்.

(௪) தேனையுமமுதையுமனையதீஞ்சொலோர்ந்து
ஆனையின்கன்றெனவமைக்கும்பாடலான்
எனையபாடலொன்றேனுமோதிலான்
பூனைபோல்வஞ்சனைப்புந்திகொண்டிலான்"

இவரை மிகுதியாகச் சிவதூஷணைசெய்கின்றவரென்று சைவர்கள்பழித்தற்குப் புலவர்புராணமுடையார் கூறும் சமாதானத்தை அடியில்வருகின்ற செய்யுள்களிற் காணலாம்:—

(௧௫) "சிவனைநிந்தனைசெய்தவனேயென
இவனைச்சிற்சிலிளஞ்சைவரேசுவார்
அவன்தன்மாயவனுகத்திற்பாதியென்று
உவந்துபாடியபாக்களுமுள்ளவே.

(௧௬) என்றென்றுந்தனதிட்டதெய்வத்தையே
நன்றென்றேததிடல்ஞானிகள்சம்மதம்
அன்றென்றோதவொண்ணுமதனாலவன்
குன்றென்றச்சுதனைக்குறிக்கொண்டதே.

(௧௭) சைவரிற்சிலர்தாமரைக்கண்ணனை
வைவதொப்பவயிணவரிற்சிலர்
மைவனக்களவள்ளலைநிந்தனை
செய்வதுண்டுமதங்கொண்டசிந்தையால்.

(௧௮)—(௨௨) ... ...

(௨௩) திரிவுசொற்றிறந்தேடித்தினந்தினம்
அரியின்மேற்கவிபாடுமெந்தணன்
கரிவலஞ்செய்கருவைமன்றன்னிலும்
பெரிதுநிந்தனைபேசிலனுண்மையே.

(௨௪) வளங்குலாந்துறைமங்கலவாசன்போல்
உளங்கனன்றரியன்பரொருவரும்
களங்கறுத்தவராயிரர்க்காதுதல்
விளங்கொர்பாடல்விளம்பிலர்மெய்ம்மையே."

ஸ்ரீ

# கோயின்மாலை

என்னும்

# திருவரங்கத்து மாலை.

'திரு' என்னும் பலபொருளொருசொல் - வடமொழியில் 'ஸ்ரீ' என்பதுபோல, தமிழிலே தேவர்கள் அடியார்கள் ஞானநூல்கள் மந்திரங்கள் புண்ணியஸ்தலங்கள் புண்ணியதீர்த்தங்கள் முதலிய மேன்மையையுடைய பலபொருள்கட்கு விசேஷணபதமாகி, மகிமைப்பொருளைக்காட்டி, அவற்றிற்குமுன்னே நிற்கும்; ஸ்ரீமகாவிஷ்ணு ஸ்ரீபக்திசாரர் ஸ்ரீராமாயணம் ஸ்ரீஅஷ்டாக்ஷரம் ஸ்ரீரங்கம் ஸ்ரீகைரவிணி ஸ்ரீபாதம் எனவும், திருமால் திருமழிசைப்பிரான் திருவாய்மொழி திருவெட்டெழுத்து திருவரங்கம் திருவல்லிக்கேணி திருவடி எனவும் வழங்குவது காண்க. இது, இங்கு அரங்கத்திற்கு அடைமொழி; மாலைக்கு அடைமொழியாகவுமாம்.

திருவரங்கம் என்பது - திருமாலின் திவ்யதேசங்கள் நூற்றெட்டனுள் தலைமைபூண்டதும், சோழநாட்டுத்திருப்பதிகள் நாற்பதில் முக்கியமானதும், 'கோயில் திருமலை பெருமாள்கோயில்' என்று பிரதானமாக எடுத்துக்கூறப்படுகின்ற மூன்றுதலங்களுள் முதலதும், 'கோயில்' என்றும் 'பெரியகோயில்' என்றும் மறுபெயருடையதும், 'பூலோகவைகுண்டம்' எனப்படுகின்ற மகிமையுடையதும், 'போகமண்டபம்' எனப்படுவதுமாகிய தலம்.

பிரணவாகாரமான ஸ்ரீரங்கவிமானத்திலே ஆதிசேஷசயனத்திற் பள்ளிகொண்டருளுந் திருமால், ஆதியிற் சத்தியலோகத்திற் பிரமனது திருவாராதனத்திருவுருவமாயிருந்தான்; பின்பு, சூரியகுலத்து மநுகுமாரனை இக்ஷ்வாகுமகாராசன் பிரமனைக்குறித்துப் பலகாலம் அரும்பெருந்தவம்புரிந்து அத்தேவனருளால் அப்பெருமானைத் தான் பெற்றுத் திருவயோத்திக்குஎழுந்தருளப்பண்ணிக்கொண்டுவந்து பிரதிஷ்டித்துத் திருவாராதனஞ்செய்துவந்தனன்; அந்த ஸ்ரீரங்கநாதனே, இக்ஷ்வாகுமுதல் இராமபிரான்வரையிலுள்ள இரவிகுலமன்னவரெல்லார்க்குங் குலதெய்வமாகி விளங்கினான்; இங்ஙனம், மனிதவுருவங்கொண்ட பெருமாளாகிய இராமபிரானால் வணங்கப்பட்டமைபற்றி, அரங்கநாதனுக்கு 'பெரியபெருமாள்' என்று திருநாமம்: இராமபிரான், வனவாசஞ்சென்று விபீஷணனுக்கு அபயமளித்துக் கடல்கடந்து இலங்கைசேர்ந்து இராவணாதிராக்ஷஸசங்காரஞ்செய்து திருவயோத்திக்கு மீண்டு பட்டாபிஷேகஞ்செய்துகொண்டபின்பு, சுக்கிரீவன் முதலியஅனைவர்க்கும் விடைகொடுத்து அவரவரை ஊர்க்கு அனுப்பும்பொழுது, தனது திருவாராதனமூர்த்தியும் குலதனமுமான திருவரங்கநாதனைத் தனக்குமிகவும்அந்தரங்கனான விபீஷணாழ்வானிடங் கொடுத்து ஆராதித்துவரும்படி நியமித்து அனுப்பினான்; * அங்ஙனமே அவ்வரக்கர்பெருமான் அவ்வமரர்பெருமானை அவ்விமானத்துடனே எழுந்தருளப்பண்ணிக்கொண்டு இலங்கைநோக்கிச் செல்லும்பொழுது, இடைவழியில் உபய

---

* இராமபிரான், திருவவதாரத்தைமுடித்துக்கொண்டு தன்னடிச்சோதிக்குஎழுந்தருளும்போது, வந்து தன்னைவணங்கித் தனது பிரிவை யாற்றமாட்டாதுநின்ற விபீஷணனுக்கு இக்ஷ்வாகுகுலதெய்வமும் தனதுதிருவாராதனமூர்த்தியுமான திருவரங்கநாதனைத் தந்தருளினனென வரலாறு கூறுதலு முண்டு.

காவேரிமத்தியிலே பெருமான் புடைபெயராது விமானத்துடனே நிலை நின்றருளினான்: அவ்வாறு திருமால் திருவுள்ளமுவந்து தங்கிய இடமே ஸ்ரீரங்கமெனப்படுவது.

(ஸ்ரீவைகுண்டம் திருப்பாற்கடல் சூரியமண்டலம் யோகிகளுடைய உள்ளக்கமலம் என்னும் இவையனைத்தினும் இனியதென்று திருமால்)திருவுள்ளமுவந்து எழுந்தருளியிருக்குமிடமானது பற்றி, 'ரங்கம்' என்று அவ்விமானத்திற்குப் பெயர்; திருமால் இங்கு ரதியை [ஆசைப்பெருக்கத்தை] அடைகின்றனனென்க. ரங்கம் என்னும் வடமொழி, அகரம் மொழிமுதலாகிமுன் வரப்பெற்று 'அரங்கம்' என நின்றது;[நன்னூல் - பதவியல்-௨௧.] இங்கு 'அரங்கம்' என்பது - விமானத்தின்பெயர் திருப்பதிக்குஆனதோர் ஆகுபெயர் [தானியாகுபெயர்]. இனி, திருமகளார் திருநிருத்தஞ்செய்யுமிடமாயிருத்தலாலும், ஸ்ரீவைஷ்ணவர்களுடைய திருவக்கு [மேன்மைக்கு]க்கூத்துப்பயிலிடமாயிருத்தலாலும், ஆற்றிடைக்குறை [நதியினிடையேயுயர்ந்த திடர்] யாதலாலும், திருவரங்கமென்னும் பெயர் வந்ததெனினுமாம்.

திரு என்பதற்கு - மேன்மையான என்று பொருள்கொண்டால் திருவரங்கம் என்ற தொடர் - பண்புத்தொகையும், மேன்மையையுடைய என்று பொருள்கொண்டால் இரண்டாம்வேற்றுமையுருபும்பயனும்உடன்தொக்கதொகையுமாம். அரங்கத்துமாலை யென்ற தொடர் - அரங்கத்தினது சம்பந்தமான மாலை யென்று விரித்து அரங்கத்தின்விஷயமான பிரபந்தமென்று பொருள்கொண்டு ஆறாம்வேற்றுமைத்தொகையாகவும், அரங்கத்தைப்பற்றிய மாலை யென்று விரித்துப் பொருள்கொண்டு இரண்டாம்வேற்றுமையுருபும்பொருளுந்தொக்கதொகையாகவும் உரைக்கத்தக்கது; அரங்கத்தின்மேற் சாத்திய மாலை யென்று விரித்துப் பொருள்கொண்டு எழனுருபும்பயனுந்தொக்கதொகை யென்பாரும் உளர். திருவரங்கம் என்ற தொடரில், வகரவொற்று - உடம்படுமெய்; [நன் - உயிரீற்றுப்புணரியல் - ௧௨.] அரங்கத்துமாலை யென்ற தொடரில், அத்துச்சாரியையின் முதல்அகரம், மவ்வீறுஒற்றழிந்துநின்றஅகரத்தின்முன் கெட்டது; [நன் - மெய்யீற்றுப் புணரியல் - ௧௯, உருபுபுணரியல் - ௧௫.] மாலா என்னும் வடமொழி, மாலை யென விகாரப்பட்டது; "ஆவீறு ஐயும்" என்றார் நன்னூலார். மலர்கள்கொண்டு தொடுக்கப்பட்ட பூமாலை போலச் சொற்கள்கொண்டு தொடுக்கப்பட்ட பாமாலை யாகிய பிரபந்தமென்க; எனவே, மாலை யென்பது - இங்கு உவமையாகுபெயராம்.

மாலை யென்பது - பலவகைப் பிரபந்தங்களுள் ஒன்று. அதன் இலக்கணம் - ஒருவிஷயத்தைக்குறித்துப் பலசெய்யுள்கூறுவது. திருவரங்கம் பெரியகோயிலி லெழுந்தருளியிருக்கின்ற திருமாலின் திருவடிகளிலே சூட்டுந் திருமாலை போலுதலால், திருவரங்கத்துமாலை யெனப்பட்டது; "அடிசூட்டலாகு மந்தாமம்," "செய்ய, சுடராழியா னடிக்கே சூட்டினேன் சொன்மாலை," "கற்றினம்மேய்த்த கழலிணைக்கீ, ழுற்ற திருமாலை பாடுஞ்சீர்" என்றார் பெரியாரும். "முதனூல் கருத்தன் அளவு மிகுதி, பொருள் செய்வித்தோன் றன்மை முதல் நிமித்தினும், இடுகுறியானும் நூற்கு எய்தும் பெயரே" என்றுகூறப்படுகின்ற நூற்பெயர்வகைகளுள் நுதலிய பொருளினாலும் தன்மையினாலும் பெயர்பெற்றது இந்நூலென அறிக; (நுதலியபொருள் - நூலிற் கூறப்பட்ட விஷயம். தன்மை-நூலின் இயல்பு.) இங்கு 'அரங்கம்' என்பது - அத்திருப்பதியிலெழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானைக் குறித்தது; இலக்கணை. இனி, "திருவாளன் திருப்பதிமேல், திருவரங்கத் தமிழ்மாலை விட்டுசித்தன்விரித்தன" என்று பெரியாழ்வார் திருமொழியிற்கூறியபடி திருவரங்கத்தின் விஷயமான தமிழ்த்தொடையாதல்பற்றி 'திருவரங்கத்துமாலை' எனவும் தகும்; (மேற்காட்டிய அருளிச்

செயலின் வியாக்கியானத்தில் 'தேஶ்யரான பெருமாளைச் சொன்னதெல்
லாம் உபஸர்ஜநகோடியிலேயாய், அத்தேசமேயாய்த்து இத்திருமொழிக்கு
விஷயம்' என்றது காண்க.) எனவே, திருவரங்கத்தைப்பற்றிப் பாடிய
தொரு பிரபந்த மென்பது பொருளும், திருவரங்கத்திலெழுந்தருளியிருக்
கின்ற எம்பெருமானைக்குறித்துப் பாடியதொரு நூலென்பது கருத்து மாக
லாம். 'கோயின்மாலை' என்பதற்கும் இங்ஙனமே கொள்க.

ஆசிரியர் தொல்காப்பியனார் செய்யுளியலில் "விருந்தே தானும், புது
வது கிளந்த யாப்பின் மேற்றே" என்பதனால், 'விருந்துதானும், பழங்கதை
மேலதன்றிப் புதிதாகத் தாம்வேண்டியவாற்றால் தொடுக்கப்படுந் தொடர்
நிலைமேலது' என்று கூறினமையின், இம்மாலை, அங்ஙனங்கூறிய விருந்தா
மென்றும் உணர்க. அச்சூத்திரவுரையில் அந்தாதியும் கலம்பகமும் முதலா
யின உதாரணங்காட்டப்பட்டுள்ளவாறுங் காண்க. இனி,இதனைச் சிறுகாப்
பியத்துள் அடக்குவர் பிற்காலத்தார். இப்பிரபந்தம், தோத்திரரூபமானது.

நூலின் புறமாக முதலிற்கூறிய காப்புச்செய்யு ளொன்றும், நூலின்
இறுதியிற்கூறும் "மனிதக்கவிமொழியா மங்கைவாழ்மணவாளவள்ளல், புனி
தக்கவிகொண்டுமாலைசெய்தான் புயல்போன்முழங்குந், தொனிதக்கசங்கந்
திருச்சக்கரஞ் சுடர்வாண் முசலங், குனிதக்கசார்ங்கந் தரித்தா ரரங்கர்
பொற்கோயிலுக்கே" என்னுந் தற்சிறப்புப்பாயிரச்செய்யு ளொன்றும் நீங்க
லாக நூற்றுப்பதினொரு செய்யு ளுடையது,இந்நூல். கட்டளைக்கலித்துறை
யினால் அமைந்தது.

தலத்தின் பெயர்—ரங்கம், ஸ்ரீரங்கம், திருவரங்கம், பெரியகோயில்,
கோயில் என்பன. பூலோகவைகுண்டம், போகமண்டபம், ஸ்வயம்வ்யக்த
க்ஷேத்ரம் என்பவை, விசேஷநாமங்களாம். இது, ஸ்வயம்வ்யக்தக்ஷேத்ரம்
எட்டில் ஒன்று.

இத்திருப்பதியின் எம்பெருமானது திருநாமம் — ஸ்ரீரங்கநாதன்,
பெரியபெருமாள், நம்பெருமாள், அழகியமணவாளன்.

கோலம்—பள்ளிகொண்ட திருக்கோலம். சேஷசயனம்.

சந்நிதி—தெற்குநோக்கியது.

நாச்சியார்—ஸ்ரீரங்கநாயகி, ஸ்ரீரங்கநாச்சியார்.

விமானம்—பிரணவாகாரவிமானம்: வேதசிருங்கம்.

நதி—உபயகாவேரி. (தென்திருக்காவேரியும், வடதிருக்காவேரியும்
[கொள்ளடம்.])

தீர்த்தம்—சந்திரபுஷ்கரிணி முதலிய நவதீர்த்தங்கள்.

தலவிருக்ஷம்—புன்னைமரம்.

பிரதியக்ஷம்—தர்மவர்மா, ரவிதர்மன், சந்திரன், காவேரி முதலான
வர்களுக்குப் பிரதியக்ஷம்.

பாடல்—பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழி
சையாழ்வார், நம்மாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், தொண்ட
ரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார் என்கிற ஆழ்
வார்கள் பதின்மர், ஆண்டாள் இவர்கள் மங்களாசாஸநம்.

பஞ்சகாவியங்களுள் ஒன்றாகிய சிலப்பதிகாரத்தில் இந்தத்திவ்யதேச
மும் இதிலெழுந்தருளியிருக்கின்றஎம்பெருமானும் "நீலமேக நெடும்பொற்
குன்றத்துப், பால்விரிந் தகலாது படிந்தது போல, ஆயிரம் விரித்தெழு
தலையுடை யருந்திறற்,பாயற் பள்ளிப் பலர்தொழு தேத்த,விரிதிரைக் காவிரி
வியன்பெருந் துருத்தி, திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்,.. ..என்
கண் காட்டென் றென்னுளங் கவற்ற, வந்தேன்" என்று பாராட்டிக்கூறப்
பட்டிருத்தலுங் காண்க.

# திருவரங்கத்துமாலை.

## சிறப்புப்பாயிரம்.

மறைப்பொருளோ வச்சிரப்பொருளோ மனுவேமுதலா
முறைப்பொருளோ விதிகாசபுராணமுதுப்பொருளோ
விறைப்பொருளாநம்பெருமாளுடைத்திருவெட்டெழுத்துள்
ளுறைப்பொருளோ மணவாளர்தமாலையினுட்பொருளே.

(இதன்பொருள்.) மணவாளர்தம்-அழகியமணவாளதாசருடைய, மாலையின் - திருவரங்கத்துமாலையினது, உள் - உள்ளே யமைந்திருக்கின்ற, பொருள் - பொருளானது,—மறை பொருளோ - வேதங்களின் பொருளேயோ? அ சிரம் பொருளோ - அவ்வேதமுடிவுகளின் பொருளேயோ? மனுவே முதல் ஆம் - மநுஸ்மிருதி முதலான, முறை - தருமசாஸ்திரங்களின், பொருளோ - பொருளேயோ? இதிகாச புராணம் முது பொருளோ - இதிகாசங்கள் புராணங்கள் என்னுமிவற்றினது தேர்ந்தபொருளேயோ? இறை பொருள் ஆம்-பரதத்துவமாகிய, நம்பெருமாளுடை - நம்பெருமாளுடைய, திரு எட்டு எழுத்து - ஸ்ரீஅஷ்டாக்ஷரமந்திரத்தினது, உள் உறை-உட்கருத்தாகிய, பொருளோ - பொருளேயோ? (என்றவாறு.)—ஏகாரம் - ஈற்றசை.

இங்ஙனம் ஐயந்தோன்றப் பலவாறு விகற்பித்துக்கூறினா ராயினும், வேதம் வேதாந்தம் தருமசாஸ்திரம் இதிகாசம் புராணம் அஷ்டாக்ஷரம் என்னுமிவையெல்லாவற்றினதுபொருளும் இத்திருவரங்கத்துமாலையில் அடங்கியிருக்கின்றன வென்பது கருத்தாம். எனவே, இவ்வாறு பலவகையாகஐயப்பட்டது, இன்னதென்றுஒன்றன்மையாலே வரையறுத்துச்சொல்லத்தெரிந்திலே மென்றதல்லது, தேர்ந்துதெளியாமையாற்சொன்னதன் றென அறிக. "புகழுநல்லொருவனென்கோ பொருவில்சீர்ப்பூமியென்கோ, திகழுந்தண்பரவையென்கோ தீயென்கோ வாயுவென்கோ, நிகழுமாகாசமென்கோ நீள்சுடரிரண்டுமென்கோ, இகழ்விலிவ்வனைத்துமென்கோ கண்ணனைக்கூவுமாறே" என்றாற்போல, மிக்கஈடுபாட்டினால் இப்படி வியந்துகூறினரென்க. இதனால், இந்நூலின் சிறப்பையும், இந்நூலாசிரியரது வேத சாஸ்திர பாண்டித்ய விசேஷத்தையும் விளக்கியவாறாம். மறைப்பொருள் முதலிய யாவும் இந்நூலில்இருத்தலை வெளிப்படையாகக்காணலாம்; குறிப்பால் நுண்ணிதின் உய்த்துஉணரத்தக்க இடங்களும் உண்டு.

(ஓதலாகாதென்று சிலர்க்கு) மறைக்கப்படுதல்பற்றி, மறை யென்று பெயர்; மறு - பகுதி, ஐ - செயப்படுபொருள்விகுதி. இனி, இச்சொல்லுக்கு-(எளிதிலுணரலாகாதபடி) மறைந்துள்ளபொருள்களையுடையதென்று காரணப்பொருள் கூறவுமாம். அவ்வேதந்தான், ருக் யஜுஸ் ஸாமம் அதர்வணம் என நான்குவகையது. பொருள் - அர்த்தம். வேதத்தின்பிரிவுஇரண்டனுள், யாகாதிகிரியைகளைக்கூறுவதும் கர்மகாண்டமெனப்படுவதுமான பூர்வபாகத்தின் பொருளை 'மறைப்பொருள்' என்றும், பகவானைக்குறித்ததும் உபநிஷத்தென்றும் வேதாந்தமென்றும் பிரமகாண்டமென்றுங் கூறப்படுவதும் வேதத்தின்தேர்ந்தகருத்துமான உத்தரபாகத்தின் பொருளை 'அச்சிரப்பொருள்' என்றுங் கூறினர். அச்சிரம் - வேதசிரம் என்றபடி. செய்யாமொழியாதலாற் சிறந்தபிரமாணமாகிற வேதத்தின் பொருளை ஐயந்திரிபற நிச்சயிப்பதற்கு உரிய ஸாதநங்கள். ஸ்மிருதிகளும் இதிகாசபுராணங்களு

மாம். ஆதலால், அவை வேதத்திற்கு உபப்ரும்ஹணங்களெனப்படும்: அவற்றுள், பெரும்பாலும் வேதத்தினது பூர்வபாகத்தின் அர்த்தம் ஸ்மிருதிகளாலும், உத்தரபாகத்தின் அர்த்தம் இதிகாசபுராணங்களாலும் நிச்சயிக்கத்தக்கது; இதிகாசபுராணங்களுட் புராணங்களினும் இதிகாசம் பிரபலமான பிரமாணமாம்என்பது உணர்க. இதுவே, மறைப்பொருள் முதலியவற்றை ஒன்றன்பின்ஒன்றாக நிறுத்திய முறைமைக்குக் காரணம். ("வேதார்த்தம் அறுதியிடுவது, ஸ்ம்ருதீதிஹாஸபுராணங்களாலே. ஸ்ம்ருதியாலே, பூர்வபாகத்திலர்த்தம் அறுதியிடக்கடவது; மற்றையிரண்டாலும், உத்தரபாகத்திலர்த்தம் அறுதியிடக்கடவது. இவையிரண்டிலும் வைத்துக்கொண்டு இதிஹாஸம் ப்ரபலம்; அத்தாலே, அது முற்பட்டது" என்ற ஸ்ரீவசநபூஷண வாக்கியங்களும், அவற்றின் வியாக்கியானங்களும் இங்கு நோக்கத்தக்கன.) வேதத்தின்பொருளை நினைத்துச் செய்யப்பட்டனவாதலால் ஸ்ம்ருதிகளென்றுபெயர்பெற்றனவும்,ஆப்தர்களான மநு அத்ரி விஷ்ணு ஹாரீதர் யாஜ்ஞவல்க்யர் பராசரர் முதலானவர்களாற் சொல்லப்பட்டனவுமான தருமசாஸ்திரங்கள், 'மனுவே முதலாம் முறை' எனப்பட்டன; அவை, பதினெட்டு. அவையெல்லாவற்றினுள்ளும் மநுஸ்ம்ருதியே மிகச்சிறத்தலால், 'மனுவே முதலாம்' என்று அதனையே தலைமையாக எடுத்துக்கூறினர்; ('எல்லாருஷிகளும் ஒருதட்டும், மநு ஒருதட்டுமாம்'என்றும்,'மநுஸ்ம்ருதிக்கு மாறாக மற்றைப்பதினேழுஸ்ம்ருதிகளும் ஒரேவாக்காய்ச்சொல்லியிருந்தாலும் அது ஒப்புக்கொள்ளத்தக்கதன்று' என்றும், 'மநுஸ்ம்ருதிக்கு விரோதமான ஸ்ம்ருதி புகழையடையாது' என்றும் பலஇடங்களில் அந்நூலின்சிறப்புக் கொண்டாடப்பட்டிருத்தல் காணலாம்.) இதிஹாஸங்களாவன - பூர்வசரித்திரத்தைக் கூறுவனவான ஸ்ரீராமாயணம், மகாபாரதம் முதலியன. புராணங்களாவன-ஸ்ருஷ்டிக்கிரமம் முதலிய ஐந்துலக்ஷணங்களுடன் கூடியவையான பிராம்மம் பாத்மம் வைஷ்ணவம் முதலிய பதினெட்டாம். ('புராணத்திற்காட்டில் இதிஹாஸத்துக்கு ப்ராபல்யம் - பரிக்ரஹாதிசயம், மத்யஸ்தனதை, கர்த்தாராப்ததமத்வம் ஆகிற இவற்றாலே' என்பர் ஆன்றோர்; இதன் விவரத்தை, தத்வநிர்ணயம், ஸ்ரீஸஹஸ்ரநாமபாஷ்யம், ஸ்ரீவசநபூஷணவியாக்கியானம் முதலியவற்றிற் கண்டும், கற்றுங்கேட்டுமுணர்ந்தஆன்றோர்பக்கல் கேட்டும் உணர்க; இங்கு விரிப்பிற் பெருகும்.)

இறைப் பொருள் - தலைமையாகிய பொருள். "முதலாவார் மூவரே யம்மூவருள்ளும்,முதலாவான் மூரிநீர்வண்ணன்" என்றபடி எம்பெருமான் தேவாதிதேவனும் ஸர்வேச்வரனு மாதலால்,'இறைப்பொருளாம் நம்பெருமாள்' என்றார். 'இறைப்பொருளாம்' என்றதைத் திருவெட்டெழுத்திற்கு அடைமொழியாகவுங் கொள்ளலாம். எட்டுத்திருவக்ஷரமாய் மூன்றுபதமாயிருப்பதும் நாராயணநாமத்தையுட்கொண்டதுமான பெரியதிருமந்திரம் ஸகலவேதாந்ததாத்பர்யமாய் எல்லாமந்திரங்களினும் பிரதான மாதலால், 'இறைப்பொருளாம் திருவெட்டெழுத்து' எனத்தகும். "ஸகலதைவங்களிலும் ஸர்வேஶ்வரன் ப்ரதாநனாயிருப்போலே, ஸகலமந்த்ரங்களிலும் இம்மந்த்ர விசேஷம் ப்ரதாநமாயிருப்ப தொன்று" என்று ஆன்றோர் அருளிச்செய்திருப்பதை நோக்குமிடத்து 'இறைப்பொருளாம்'என்றதை நம்பெருமாள், திருவெட்டெழுத்து என்ற இரண்டனோடுஞ் சேர்த்தல் இனிதாம். நம்பெருமாள்-ஸ்ரீரங்கநாதன். இத்திருநாமம், உயர்ச்சியை விளக்கும்; "நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை, யென்பரவரவர்த மேற்றத்தால், அன்புடையோர் சாற்று திருநாமங்கள்" என்ற உபதேசரத்தினமாலையைக் காண்க. பதரிகாச்ரமத்தி லெழுந்தருளியிருக்கின்ற நாராயணனது திருவெட்டெழுத்தை'நம்பெருமாளுடைத்திருவெட்டெழுத்து'என்றது,திவ்யதேசத்துஎம்பெருமான்களில் நம்பெருமாளுக்கு உள்ள தலைமைபற்றி

யென்க. ஸ்ரீரங்கதிவ்யதேசத்து மூலமூர்த்தியைப் பெரியபெருமாளென்றும், உத்ஸவமூர்த்தியை நம்பெருமாளென்றும் வழங்குவது, ஸம்பிரதாயம்; இருவர்க்கும் பொதுப்படக் கூறுதலும், 'எம்பெருமான்' என்றாற்போல நமதுகடவுளென்றபொருளில் திருமாலை 'நம்பெருமாள்' என்றலும் உண்டு. "ஸம்ஸாரிகள் தங்களையும் ஈச்வரனையும் மறந்து ஈச்வரகைங்கர்யத்தையும் இழந்து இழந்தோமென்கிற இழவுமின்றிக்கே ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலே விழுந்து நோவுபட, ஸர்வேச்வரன் தன்க்ருபையாலே இவர்கள் தன்னையறிந்து கரைமரஞ்சேரும்படி தானே சிஷ்யனுமாய் ஆசார்யனுமாய் நின்று திருமந்த்ரத்தை வெளியிட்டருளினான்" ஆதலால், 'நம்பெருமாளுடைத் திருவெட்டெழுத்து' எனப்பட்டது. இங்கு, ஆறும்வேற்றுமையுருபு-செய்யுட்கிழமைப்பொருளின் பாற்படும். ஆதியில் பதரிகாச்ரமத்திலே நாராயணனால் நரனுக்கு உபதேசிக்கப்பட்ட திருமந்திர மென்க. இனி, விஷயமாகவுடைமையை ஆறும்வேற்றுமைப்பொருளாகிய சம்பந்த மெனக் கொண்டு, நம்பெருமாள்விஷயமான அதாவது ஸ்ரீமந்நாராயணனையுணர்த்துகின்ற திருமந்திர மென்றலு மாம். திருவெட்டெழுத்துள்ளுறைப்பொருள்-பரமாத்மஸ்வரூபம், ஜீவாத்மஸ்வரூபம், இவ்விருவர்க்குமுள்ள ஸம்பந்தத்தின் ஸ்வரூபம் முதலியன. ('இத்தால், ஈச்வரன் ஆத்மாக்களுக்குப்பதியாய்நின்று ரக்ஷிக்கு மென்கிறது. ஆக, திருமந்த்ரத்தால், எம்பெருமானுக்கேயுரியேனான நான் எனக்குரியனன்றிக்கேயொழியவேணும்; ஸர்வசேஷியான நாராயணனுக்கே எல்லாவடிமைகளுஞ்செய்யப்பெறுவேனாகவேணுமென்றதாய்த்து' என்ற முமுக்ஷுப்படியைக் காண்க.)

ஓகாரங்கள் - ஐயப்பொருளன. ஶிரஸ், மநு, இதிஹாஸ புராணம் என்ற வடசொற்கள் விகாரப்பட்டன. இங்கு 'மனு' என்றது - சுவாயம்புவமநுவினாற் செய்யப்பட்ட நூலைக் குறித்தது; கருத்தாவாகுபெயர்: 'திருவள்ளுவர்' என்றாற் போல. ஏகாரம் - உயர்வுசிறப்பு; அசையுமாம். முறையை [ஒழுக்கத்தை] யுணர்த்தும் நூலை 'முறை' என்றது, காரியவாகுபெயரின் பாற்படும். முறை யென்ற சொல்லுக்கு நூலென்ற பொருளும் உண்டு. இதிகாசபுராணங்களைச் சேர்த்துக்கூறியதன் காரணம், இரண்டும் வேதாந்தப்பொருளைத் தெளிவிப்பனவாதல். 'இதிஹாஸபுராணம்' என்னும் உம்மைத்தொகை, வடநூல்முடிபு. 'குறைந்தஉயிரெழுத்துக்களையுடையசொல்லாவது சிறப்புடையசொல்லாவது உம்மைத்தொகையில் முந்திநிற்பதாதல் வேண்டும்' என்ற வடமொழி வியாகரணநூலார்கொள்கையில் முதல்வகையின்படி 'புராணேதிஹாஸம்' என்னவேண்டியிருக்க அங்ஙனங்கூறாது 'இதிஹாஸபுராணம்' என அதிகஉயிரெழுத்துக்களையுடைய இதிஹாஸபதத்தை முன்நிறுத்தியது, அதன் சிறப்பினாலென்க. 'இதிகாச புராண முழுப்பொருளோ' என்ற பாடத்திற்கு - இதிகாசபுராணங்களின் பூர்ணமான அர்த்தமோ வென்பது பொருள்.

மூன்றாமடியின் முதலில் 'இறைப்பொருளோ' என்று பாடமாயின், இவையெல்லாவற்றிலுஞ் சிறந்ததொரு பொருளோ வென்று உரைக்க. நம்பெருமாள் - நமது தலைவர். இங்கு 'நம்' என்ற தன்மைப்பன்மை, 'எல்லாவுயிர்களையும் உளப்படுத்தியது. பெருமாள் = பெருமான்: பெருமையையுடையவன். இதில், பெருமை யென்ற பண்புப்பகுதி ஈற்றுஐகாரம்மாத்திரங் கெட்டு 'பெரும்' என நின்றது; ஆன் என்ற ஆண்பால்விகுதி, 'ஆள்' என ஈறு திரிந்தது: ஆள் என்ற பெண்பால்விகுதியே சிறுபான்மை ஆண்பாலுக்கு வந்த தென்றலும் ஒன்று. அன்றி, பெருமையை ஆள்பவனெனக் கொண்டால், ஆள் என்ற வினைப்பகுதி கருத்தாப்பொருள்விகுதிபுணர்ந்துகெட்டதெனவேண்டும். (பெருமாள் என்பதன் பெண்பால், பெருமாட்டி.) உடைய

என்னும் ஆறும்வேற்றுமைச்சொல்லுருபு ஈறுதொக்கு 'உடை' என நின்றது. எட்டெழுத்து-பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகையாய், அத்தனையெழுத்துக்களையுடைய மந்திரத்தைக் குறித்தது. உள் உறைப்பொருள் - உள்ளே உறுவதாகிய பொருள். உறை—உறு - பகுதி. ஐ - கருத்தாப்பொருள்விகுதி. உள்ளுறையெனினும் உட்கிடையெனினும் ஒக்கும். முதுப்பொருள், இறைப்பொருள், உள்ளுறைப்பொருள் - பண்புத்தொகைகள். இனி, உள்ளே உறைதலையுடைய பொருளென்றுங் கொள்ளலாம்; இப்பொருளில் உறை - முதனிலைத்தொழிற்பெயர்: இரண்டாம்வேற்றுமையுருபும்பயனுந்தொக்கதொகை. ஒருபெயரின் ஒருபகுப்பைக்கொண்டு அப்பெயர்முழுவதையுங் குறிப்பதொரு மரபுபற்றி, அழகியமணவாளதாசரை 'மணவாளர்' என்றார்; (இதனை, வடநூலார், 'நாமைகதேசே நாமக்ரஹணம்' என்பர்.) தம் - அசை. 'மணவாளர்தம்மாலை' என்றவிடத்துத் தொக்குநின்ற ஆறும்வேற்றுமையுருபு - செய்யுட்கிழமைப்பொருளது; கூர்மபுராணம், கபிலரகவல், கம்பராமாயணம், "பற்றற்றான்பற்று" என்றவற்றிற் போல: அழகியமணவாளதாசரால் இயற்றப்பட்ட மாலை யென்க. இனி, விஷ்ணுபுராணம், விநாயகரகவல், சீவகசிந்தாமணி என்றாற்போல, 'மணவாளர்தம் மாலை' என்றதை அழகியமணவாளனென்றுதிருநாமமுடைய ஸ்ரீரங்கநாதன் விஷயமான மாலை யென்றுங் கொள்ளலாம்; திருவரங்கத்துமாலை யென்ற நூற்பெயரின் பரியாயநாமமாம். "கோயிலில் வந்த வந்த, மணவாளர் பொற்றிருப்பாதாம்புயங்கட்கு மாலையென. மணவாளர் சூடும்" மாலை யாதலால், இருவகையும் ஏற்கும். 'மணவாளர்' என்ற பன்மை, உயர்வுபற்றியது. 'மாலையினுள்' என்றவிடத்து, உள் - ஏழனுருபுமாம்.

இச்செய்யுளில் 'மணவாளர்' என ஆக்கியோன்பெயரும், 'மணவாளர் தம்மாலை' என நூற்பெயரும், நுதலியபொருளும், 'மறைப்பொருளோ' என்பது முதலாக விகற்பித்துக்கூறியவாற்றால் நுதலியபொருளும், இவ்வொருநூலுணர்ந்தவர் அப்பலநூற்பொருள்களையும் ஒருங்கேயுணர்வரென நூற்பயனும், அம்மறைமுதலியவற்றின் வழிநூலிதுவென நூல்வந்தவழியும், பரந்துகிடந்த அந்நூற்பொருள்கள் பலவற்றைத் தொகுத்துக்கூறிய நூலிது வெனத் தொகுத்தலாகிய நூல்யாப்பும், அம்மறைப்பொருள்முதலியவற்றையுணரும்விருப்பமுடையார்பலரும் இந்நூல்கேட்டற்குரிய அதிகாரிகளெனக் கேட்போரும், அப்பொருள்கள்பலவற்றையும் சிலவாழ்நாட்பல்பிணிச்சிற்றறிவினராகியமனிதர்கள் எளிதில்உணர்ந்துய்யும்படி ஒருங்கே சுருங்கச்சொல்லி விளங்கவைத்தல் வேண்டுமென்று ஆசிரியர் கொண்ட அருளே இந்நூல்செய்ததற்கு ஏது வெனக் காரணமும் பெறப்பட்டன. "ஆக்கியோன்பெயரே வழியே எல்லை நூற்பெயர்யாப்பே நுதலியபொருளே, கேட்போர் பயனோடு ஆயெண்பொருளும், வாய்ப்பக் காட்டல் பாயிரத்தியல்பே", "காலங் களனே காரண மென்றிம், மூவகை யேற்றி மொழிநருமுளரே" என்ற சிறப்புப்பாயிரத்திலக்கணத்தில் மற்றவை குறிக்கப்படுவன உய்த்துணர்ந்துகொள்க.

இக்கவி, அபியுக்தரி லொருவர் செய்தது. இது, வைஷ்ணவஸம்பிரதாயத்தில் 'தனியன்' எனப்படும்; (நூலினுட்சேராது) தனியே பாயிரமாய் நிற்றல்பற்றியது, அப்பெயர். உயர்திணையாண்பால்விகுதி சிறுபான்மை அஃறிணைக்கும்வருதலை, கடுவன், கோட்டான், தோளுக்கினியான் என்றவிடங்களிற் காண்க: நாலடியார், சிவஞானசித்தியார் என்றஇடங்களில் 'ஆர்' விகுதிபோல இங்கு 'அன்' விகுதி உயர்வுகுறிப்ப தென்றலுமாம்.

## காப்பு.

காப்பு - காத்தல்; அது, இங்கு, காக்கின்ற கடவுளின் விஷயமான வணக்கத்தைக் குறிக்கும்: ஆகவே, கவி தமக்கு நேரிடத்தக்க இடையூறுகளை நீக்கித் தமது எண்ணத்தை நிறைவேற்றவல்ல தலைமைப்பொருளின் விஷயமாக உயர்ந்தோர் வழக்கத்தின்படி செய்யுந் தோத்திர மென்பது கருத்து.

[திருவரங்கநாதனது திருமேனியவயவங்களும்,
திவ்வியாயுதங்களும்.]

நாளும் பெரியபெருமாளரங்கர் நகைமுகமுந்
தோளுந் தொடர்ந்தென்னையாளும்விழியுந் துழாய்மணக்குந்
தாளுங் கரமுங் கரத்திற் சங்காழியுந் தண்டும் வில்லும்
வாளுந் துணைவருமே தமியேனை வளைந்துகொண்டே.

(இ - ள்.) பெரியபெருமாள் அரங்கர் - பெரியபெருமாளென்று ஒரு திருநாமமுடையவரான ஸ்ரீரங்கநாதருடைய, நகை முகமும் - மலர்ச்சியையுடைய திருமுகமும், தோளும் - திருத்தோள்களும், என்னை தொடர்ந்து ஆளும் விழியும் - என்னை விடாதுதொடர்ந்து அடிமைகொள்ளக்கடாக்ஷிக்கின்ற திருக்கண்களும், துழாய் மணக்கும் தாளும் - திருத்துழாய்மணம் வீசுகின்ற திருவடிகளும், கரமும் - திருக்கைகளும், கரத்தில்-அக்கைகளில் ஏந்துகின்ற, சங்கு ஆழியும் சங்கசக்கரங்களும், தண்டும்-கதையும், வில்லும்-தனுசும், வாளும்—, தமியேனை வளைந்துகொண்டு - வேறுதுணையுங்கதியுமில்லாத என்னைச் சூழ்ந்துகொண்டு, நாளும் - தினந்தோறும் [எந்நாளும்], துணை வரும் - துணையாக வரும்; (எ - று.) —வருமே என்பதில், ஏகாரம் - தேற்றம். ஈற்றேகாரம் - அசை

இங்ஙனம், தமது வழிபடுகடவுளும், எடுத்துக்கொண்ட இப்பிரபந்தத்திற்கு ஏற்புடைக்கடவுளுமாகிய திருவரங்கநாதனது திருவவயவங்களையும் ஐம்படையையும் தமக்குநீங்காத துணையாகக்கொண்டமை கூறியதனால், எடுத்துக்கொண்ட இந்நூல் இடையூறின்றி இனிதுமுடியு மென்பது கருத்து.

திருவரங்கத்திற்குப் பெரியகோயிலென்றும், அங்குஎழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானுக்குப் பெரியபெருமாளென்றும் திருநாமங்கள் வழங்கும். பெருமாள் - இராமபிரான்; (இளையபெருமாள் - லக்ஷ்மணன்:) இராமபிரானால் முன்பு திருவாராதனஞ் செய்யப்பெற்றமைபற்றி, ஸ்ரீரங்கநாதனுக்கு 'பெரியபெருமாள்' என்று திருநாமம். அரங்கர் - ரங்கமென்னும் விமானத்தில் எழுந்தருளியிருப்பவர். நகை முகம் - புன்சிரிப்பையுடைய முகமென்றும், ஒளியையுடைய முகமென்றுங் கொள்ளலாம். தொடர்தல் - தேடிப்பின்தொடர்தலுமாம். துழாய்மணக்குந் தாள் - அடியார்கள் அருச்சித்த திருத்துழாயின் வாசனை வீசப்பெற்ற தாள்; இடத்துநிகழ்பொருளின் தொழில், இடத்தின்மேற் சார்த்தப்பட்டது. அன்றி, துழாயினால் மணக்குந் தாளென்றும், துழாயோடு இயற்கைமணம்வீசுந் தாளென்றுங் கூறலாம். இனி, திருத்துழாய் வாசனைவீசுதற்குக் காரணமான திருவடி யென்றல் சிறக்கும்; இப்பொருளில், பெயரெச்சம் - காரியப்பொருளது: "நோய் தீரும்மருந்து" என்றாற் போல. 'ஸர்வகந்தன்' என்று பெயர்பெறும்படி இயற்கைத்திவ்வியபரிமளமுடைய கடவுளாதலால், இங்ஙனங்கூறுதல் ஏற்கும். திருத்துழாய் அங்குரித்ததுமுதல் என்றும்மாறாத நறுமணமுடையதாதலால், என்றும்மாறாத இயற்கைநறுமணமுடைய திருமாலுக்கு உரியதாய்ச் சிறக்கும்.

திருமாலின் சங்கம் - பாஞ்சஜந்ய மென்றும், சக்கரம் - சுதர்சந மென்றும், கதை - கௌமோதகீ யென்றும், வில் - சார்ங்க மென்றும், வாள் - நந்தக மென்றும் பெயர்பெறும். இவை துஷ்டநிக்கிரகஞ்செய்யுங்கருவியாய்ச்சிறத்தலால், இவற்றைத் தமதுஇடையூறுதவிர்க்குங்காப்பாகக் கொண்டார்; அன்றியும், இவை, எம்பெருமானுக்குக் குற்றேவல்செய்யும் பரிஜனங்களாய் எப்பொழுதும் அவனருகில்விடாதுநின்று அவனதுதிருவுள்ளக்கருத்தின்படி தொழில்செய்யும்: திருவரங்கத்தந்தாதிக்காப்பில் "அரங்கர், காராழிவண்ணப்பெருமா னந்தாதிக்குக் காப்புரைக்கில், ........கூராழி சங்கந் திருக்கதை நாந்தகங் கோதண்டமே"என்றதுங் காண்க. நகைமுகம் முதலியவற்றைக் காப்பாகக்கொண்டது, அவை சிஷ்டபரிபாலனஞ்செய்தற்கு உறுப்பாதலால். ஒருதிருக்கை திருச்சங்கையும், அதற்கேற்ற மற்றொரு திருக்கை திருவாழியையுந் தரித்தல் இயல்பாதலால், அவற்றை 'சங்காழி' எனச் சேர்த்துக்கூறினர்.

'நாளும்' என்ற உம்மை, தொறுப்பொருளது. மற்றை உம்மைகள் - எண்ணுப்பொருளன. அரங்கர் - உயர்வுப்பன்மை. முகம், கரம் - வடசொற்கள். சங்கு, தண்டு-முறையே சங்கம், தண்டம் என்ற வடசொற்களின் விகாரம். நகை - நகுத லென 'ஐ' விகுதிபெற்ற தொழிற்பெயராகவேனும், நகைத்தலென முதனிலைத்தொழிற்பெயராகவேனுங் கொள்ளத்தக்கது. துழாய் - துளஸீ என்ற வடசொல்லின் சிதைவு. சங்காழி - பன்மைவிகுதி பெறாத அஃறிணையும்மைத்தொகை. ஆழி - வட்டவடிவமா யுள்ளது; (அசுரர் முதலிய கொடியவர்களை) அழிப்ப தென்று இதற்குக் காரணப்பொருள் கூறவுமாம். வரும் - செய்யுமென்முற்று; இது நிகழ்காலமுணர்த்துதலை "பல்லோர்படர்க்கை முன்னிலை தன்மை, அவ்வயின் மூன்று நிகழுங் காலத்துச், செய்யு மென்னுங் கிளவியொடு கொள்ளா" என்னுந் தொல்காப்பியச்சூத்திர நோக்கி யுணர்க. அரங்கர்நகைமுகம்முதலியன தமக்குத்துணையாய்வருதல் முக்காலத்திலும்உளதாதலால், நிகழ்காலத்தாற் கூறப்பட்டது; [நன் - பொது - ௬௨.] "முந்நிலைக்காலமுந் தோன்று மியற்கை, எம்முறைசசொல்லும் நிகழுங்காலத்து, மெய்ந்நிலைப்பொதுச்சொற் கிளத்தல்வேண்டும்" என்ற தொல்காப்பியச்சூத்திரத்தின் உரையில் 'நிகழுங்காலத்து மெய்ந்நிலைப்பொதுச்சொல்' என்றதற்கு 'நிகழ்காலத்திற்கு உரித்தாய்நின்றும் வினைக்காலங்களையும்உள்ளடக்கிநிற்கும் பொருள்நிலைமையினையுடைய செய்யுமென்னுஞ்சொல்' என்றுபொருள்கூறி, 'மலைநிற்கும், தீச்சுடும், ஞாயிறுஇயங்கும், திங்களியங்கும்' என்றவற்றை உதாரணங் காட்டினர் நச்சினார்க்கினியர்; சேனாவரையர்கருத்தும் இதுவே. தமியேன் - தனித்துள்ள யான்; இது, தனிமைப்பொருள்குறித்த தமியென்னும்வினைப்பகுதியடியாப் பிறந்து பணிவையுணர்த்துந் தன்மையொருமைப் பெயர். 'வளைந்துகொண்டு' என்பது, ஒருசொல்நீர்மைத்து; "என்றுகொண்டினையகூறி" என்றவிடத்துப் போல; "கிளந்தவல்ல வேறுபிற தோன்றினுங், கிளந்தவற்றியலா னுணர்ந்தனர்கொளலே" என்னுந் தொல்காப்பியத்து இடைச்சொல்லியற்புறனடைச்சூத்திரத்தால் 'கொண்டு' என்னும் அசை கொள்ளலும் அமையும்.

## நூல்.

க. திருவாழி சங்குதிருவாழிவாழி சிறந்தகொண்ட
லுருவாழி யோகத்திருத்துயில்வாழி யுலகளந்த
மருவார்மதுமலர்த்தாள்வாழி வாழிவணங்குமன்பர்
பெருவாழ்வனையபெருமாளரங்கப்பெருஞ்செல்வமே

(இ - ள்.) திரு - ஸ்ரீமகாலக்ஷ்மி, வாழி - வாழக்கடவள்; சங்கு திரு ஆழி - ஸ்ரீசங்கசக்கரங்கள், வாழி-வாழக்கடவன; சிறந்த கொண்டல் உரு- சிறந்த காளமேகம்போன்ற (திருமாலின்) திருமேனி, வாழி - வாழக்கடவது; திரு யோகம் துயில் - (அப்பெருமானது) சிறந்த யோகநித்திரை, வாழி - வாழக்கடவது; உலகு அளந்த - உலகங்களை (இரண்டுஅடியாக) அளவிட்ட, மருஆர் மது மலர் தாள்-வாசனைநிறைந்த தேனையுடைய தாமரை மலர் போன்ற திருவடிகள், வாழி-வாழக்கடவன; வணங்கும் அன்பர் பெருவாழ்வு அனைய - நமஸ்கரிக்கின்ற மெய்யடியார்கட்குப் பெரியவாழ்க்கை போன்ற பெருமாள் - பெரியபெருமாளுடைய, அரங்கம் பெருஞ் செல்வம் - ஸ்ரீரங்கத்தைப் பெரியஐசுவரியம், வாழி - வாழக்கடவது; (எ - று.)

எம்பெருமானது தரிசனத்தைப் பெற்றபோது, அத்தேவாதிதேவனுடைய பற்றுணர்வு, வம்பிலாற்றல், யாவரையும்பாதுகாக்குந்திறம், அழியாவியல்பு முதலிய திவ்வியகுணங்களைக் கருதுதற்குமுன்னே அப்பெருமானது திவ்வியசௌந்தரியத்திற் கண்செலுத்தி அதனையே சேவித்து அதில் ஈடுபட்டு ஆழ்ந்த பக்திபரவசராகி, அதனால் தம்நிலையையும் எம்பெருமான் நிலையையும் மறந்து, 'காலாதீதமான வைகுண்டத்திலே யிருக்கிற இந்த அரும்பொருள் காலம்நடையாடப்பெற்ற இவ்வுலகத்திலே கண்ணுக்கு இலக்காகுதலால், திருஷ்டிதோஷங்காரணமாக இதற்கு என்னதீங்குவருமோ! என்று தமக்குஉள்ளஆதராதிசயத்தால் அநாவசியமாக அதிக பயசங்கை கொண்டு 'இத்திருமேனிக்கு எவ்வாற்றாலும் ஒருகுறையும் வராதிருக்க வேணும்'என்று வாழ்த்துபவராய் 'திருப்பல்லாண்டு' என்னுந் திவ்வியப்பிரபந்தம் பாடி, இங்ஙனம் பொங்கும்பரிவுடையரானதனாற் பெரியாழ்வாரென்றுபெயர்பெற்ற விஷ்ணுசித்தர் போலவே, இந்தஅழகியமணவாளதாசரும் திருவரங்கநாதனைச்சேவித்தவுடனே முதலில் வாழ்த்தக்கூறலானார். இதனால், இவரது அன்பின்மிகுதி விளங்கும். எம்பெருமானைக் கண்டவளவிலே அடிமைத்தொழில்கள்செய்து தமக்குவேண்டுவனவற்றை வேண்டிப் பெறநினையாமல் அவனதுவாழ்வையே தமக்குப் பரமபுருஷார்த்தமாக நினைத்தலின் அருமைபெருமைகளை யுணர்க.

பெரியபெருமாளைக் கண்ணெதிரிலேகாணும்போது, அப்பெருமானைச் சார்ந்துள்ள செம்பொன்னிறத்தவளான பெரியபிராட்டியினது திருமேனியொளி காளமேகத்திற்கொடிமின்னல்போலக் கண்களைக்கவரும்படி மிக விளங்குதலால், 'பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாக்களுக்கும் ஸர்வமங்களங்களையுஞ்செய்பவளான இத்திருமகளதுசேர்க்கைநித்தியமாயிருக்கவேணும்'என்று மங்களாசாஸநஞ்செய்பவராய் முதலில் 'திருவாழி' என்றார். பொய்கையாழ்வார் சூரியதீபத்தையேற்றியும் பூதத்தாழ்வார் ஞானதீபத்தையேற்றியுங் காட்ட எம்பெருமானைக் காண்கின்ற பேயாழ்வார் முதலில் "திருக்கண்டேன்" என்றமை காணத்தக்கது. ஒருவன் எம்பெருமானை ஆசிரயிக்கப் புக்கால் அப்பொழுது அவன்குற்றம்பாராமல் அவனைத் தன்நிழலிலேவைத்துச் சமயமறிந்து எம்பெருமான்திருமுன்பேகொண்டுவிட்டு இவன்குற்றத்தைப்பொறுப்பிப்பதற்குப் பிராட்டியின்புருஷகாரம் இன்றியமையாததாதலால் "அந்தமில்சீர்ப், பொற்பாவைதன்னருளாற் பொன்னரங்கர்தாள்

பணிந்து,நற்பாலடைந்துய்ந்தேன்நான்'' என்றபடிபிராட்டிமுன்னாகப்பெருமாளையடையவேண்டியதாதல்பற்றியும் அவளைமுதலில்வாழ்த்துதல் ஏற்கும். அநந்தரம் சற்றுஉற்றுநோக்குமிடத்து,சந்திரசூரியமண்டலங்கள்போல விளங்குகின்றனவாய் முறையே அவனது இடத்திருக்கையிலும் வலத்திருக்கையிலு முள்ள சங்கசக்கரங்களின் சோதி காணப்படுதலால், 'எம்பெருமானது திருமேனிக்குக்காவலாய்த் துஷ்டநிக்கிரகசிஷ்டபரிபாலனத்துக்கு உறுப்பாக வுள்ள இத்திவ்வியாயுதங்கள் என்றும் அழிவின்றிவாழவேண்டும்' என்று ஆசாஸிப்பவராய் 'சங்கு திருவாழி வாழி' என்றனர். மற்றும்ஊன்றிப் பார்க்கையில், அப்பரமனது முடிவில்லதோரெழில்நீலமேனியும் அத்திருமேனிபள்ளிகொண்டிருக்கிற கிடையும் கட்புலனாதலால், அவற்றைவாழ்த்தலாயிற்று. எம்பெருமான்திருமேனி நீர்கொண்டமேகம்போலக் காண்பவர்கண்களைக்குளிரச்செய்து அவர்கள்தாபந்தவிர்த்து அவர்களைஉய்விப்பதாதலால் அதற்கும், அந்தஅமலனது யோகநித்திரை எல்லாவுயிர்களும் உய்யும்வகையைச்சிந்திப்பதாதலால் அதற்கும் வாழ்த்துக்கூறல் வேண்டிற்று. திருமேனியைக் கண்ணுற்றபின்னர் அந்தஆதிமூர்த்தியைத் திருப்பாணாழ்வார்போலத் திருவடிமுதல் திருமுடியீறாகச் சேவித்து அநுபவித்து ஆனந்தமடையத்தொடங்குகின்றாராதலால், 'தாள்வாழி' என்றார். இவ்வளவுஅநுபவத்திற்குங் காரணம் கோயில்வாசமென்பதுகொண்டு, ஈற்றில் 'அரங்கப்பெருஞ்செல்வம்' வாழ்த்தப்பட்டது.

'சங்குதிருவாழி' என்று சேர்த்துக்கூறியதன் காரணம், காப்புச்செய்யுளுரையிற் கூறப்பட்டது. யோகநித்திரை - எல்லாவற்றையும் அறிந்துகொண்டே லோகரக்ஷணசிந்தையுடனே தூங்குகின்றதுபோலப்பிறர்க்குத் தோன்றவைக்கும் நிலை; இது - அறிதுயில், விழிதுயில், துயிலாத்துயில், பொய்த்துயில், மாயத்துயில் எனவும்படும். 'மருவார்'என்றது - மலர்க்கும் தாளுக்கும், 'வணங்குமன்பர்பெருவாழ்வனைய' என்றது - பெருமாளுக்கும் அரங்கத்திற்கும் அடைமொழியாகத்தக்கது.

திருவாழி சங்குதிருவாழிவாழி—''வடிவாய்நின்வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு, வடிவார்சோதிவலத்துறையுஞ்சுடராழியும் பல்லாண்டு, படைபோர்புக்குமுழங்குமப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே'' என்றார் திருப்பல்லாண்டில். தாள்வாழி—''உன்செவ்வடிசெவ்விதிருக்காப்பு'' என்றது திருப்பல்லாண்டு. வாழி பெருமாளரங்கப்பெருஞ்செல்வம்— ''ஸ்ரீரங்கஸ்ரீஸ்ச வர்த்ததாம்'' என்ற வடமொழிமேற்கோளைக் காண்க.

உலகளந்தது, திரிவிக்கிரமாவதாரத்தில்; அவ்வரலாறு வருமாறு:— மகாபலியென்னும் அசுரராஜன் தன்வல்லமையால் இந்திரன்முதலியயாவரையும்வென்று மூன்றுஉலகங்களையுந்தன்வசப்படுத்தி அரசாட்சிசெய்துகொண்டு செருக்குற்றிருந்தபொழுது,அரசிழந்ததேவர்கள் திருமாலைச்சரணமடைந்து வேண்ட,அப்பெருமான் குள்ளவடிவானவாமநாவதாரங்கொண்டு காசியபமாமுனிவனுக்கு அதிதிதேவியினிடந்தோன்றிய பிராமணப்பிரமசாரியாகி, வேள்வியியற்றி யாவர்க்கும் வேண்டியஅனைத்தையுங் கொடுத்துவந்த அந்தப்பலியினிடஞ் சென்று, தவஞ்செய்தற்குத் தன்காலடியால் மூவடிமண் வேண்டி, அதுகொடுத்தற்கு இசைந்து அவன் தாரைவார்த்துத் தத்தஞ்செய்த நீரைக் கையிலேற்று உடனே திரிவிக்கிரமனாக ஆகாயத்தையளாவிவளர்ந்து ஓரடியாற் பூலோகத்தையும் மற்றோரடியால் மேலுலகத்தையும் அளந்து, தானமாகப்பெற்ற மற்றோரடிநிலத்திற்கு இடமின்றாகவே அதற்காக அவன்வேண்டுகோளின்படி அவனது முடியில் அடியைவைத்து அவனைப் பாதாளத்திலழுத்தி அடக்கின னென்பதாம். பூலோகத்தையளந்ததில், அதன்கீழுள்ள பாதாளலோகமும் அடங்கிற்று; எனவே,

எல்லாவுலகங்களையுமளந்ததாம். இவ்வரலாற்றினால், கொடியவரையடக்குதற்கும் இயல்பில் அடிமையாகின்ற அனைத்துயிரையும் அடிமைகொள்வதற்கும் வேண்டிய தந்திரம் வல்லவ னென்பது தோன்றும்.

திரு - பெரியபிராட்டியார். வாழிய என்னும் வியங்கோள்வினைமுற்று, ஈற்று யகரவுயிர்மெய் கெட்டு 'வாழி' என நின்றது; அதன்முன் வருமொழி முதல்வலிஇயல்பாம்: [நன் - உயிர் - கஅ.] வியங்கோள் ஐம்பால்மூவிடங்கட்கும்பொதுவாத லுணர்க. 'சங்கு திருவாழி' என்ற தொடரின் இடையிலுள்ள 'திரு' என்ற அடைமொழியை, மத்திமதீபமாக, முன்நின்ற 'சங்கு' என்றதனோடுங் கூட்டுக; இவை ஆயுதகோடியில்மாத்திரமன்றி ஆபரணகோடியிலுஞ்சேர்தலால், அழகிய சங்கசக்கரங்களெனவுந் தகும். 'சிறந்த' என்ற விசேஷணம், உபமானமாகிய கொண்டலோடும், உபமேயமாகிய உருவோடும் இயையும். கொண்டலுக்குச் சிறப்பு - உலகமும் அதற்குஉறுதியாகியஅறம்பொருளின்பங்களும் நடத்தற்கு ஏதுவாதலும், குளிர்ந்தவடிவுடைமைபற்றிக்கண்டோரால்விரும்பப்படுதலும். உருவிற்குச்சிறப்பு-"அண்டர்கோ னணியரங்க னென்னமுதினைக், கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்றபடி கண்டவர்கண்களைக்கவர்தலும்.அவரது பிறவிப்பெருங்கடலைப் போக்குதலும். உரு-வடிவும்,நிறமுமாம். ஆர் மலர்-வினைத்தொகை: மரு வார் என்றுஎடுத்து, வாசனைநீண்ட என்றலு மொன்று; நெடுந்தூரமளவும்வாசனைவீசுகின்ற என்று கருத்து. தாளுக்கு, மது - இனிமைமிகுதி; ("அம்ருதஸ்யந்திபாதபங்கஜே" என்பது காண்க.) அடைமொழிகொடாமல் 'மலர்' என்றால், அது, எல்லாமலர்களினுஞ்சிறந்ததாகிய தாமரைமலரைக் குறிக்கும். அது - திருவடிகட்கு, செம்மை மென்மை அழகுகளில் உவமம். அன்பர்-அன்பையுடையவர்; பக்தர். அவர்கட்கு எல்லாநன்மைகளும் திருவரங்கநாதனாலும் ஸ்ரீரங்கமகிமையாலும் உண்டாதல்பற்றி, 'அன்பர் பெருவாழ்வாய பெருமாளரங்கப்பெருஞ்செல்வம்' எனப்பட்டது. கொண்டல் - நீர்கொண்ட மேகத்திற்குத் தொழிலாகுபெயர்; கொள்-பகுதி, தல் - விகுதி, ளகரதகரங்கள் ணகரடகரங்களானது - சந்தி. உரு - ரூப மென்ற வடசொல்லின் சிதைவு. யோகம், மது - வடசொற்கள். 'பெருமாள்' என்பதை. திரு, சங்கு திருவாழி, உரு, துயில், தாள் என்றவற்றோடுங் கூட்டுக. 'பெருமாள் அரங்கப்பெருஞ்செல்வம்' என்பதற்கு - பெரியபெருமாளாகிய ஸ்ரீரங்கத்திலுள்ளபெருஞ்செல்வமென்றலும் அமையும்; "உங்கள் பூர்வர்கள் தேடிவைத்த மஹாநிதி இதுகாணும்" என்றுசொல்லி ஆளவந்தார்க்கு மணக்கால்நம்பி பெரியபெருமாளைச் சுட்டிக்காட்டிய வரலாற்றையுணர்க; "ஸ்ரீரங்கமங்களநிதி." 'பெருவாழ்வு' என்றது, அழியாத முத்தியுலகத்துப்பேரின்பவாழ்வுமாம்.

இச்செய்யுள் - தண்டியாசிரியர்கொள்கைப்படி 'வாழ்த்து' என்னும் அலங்காரமாம்; "இன்னார்க் கின்னதியைக வென்று தாம், முன்னியது கிளத்தல் வாழ்த்தென மொழிப" என அதனிலக்கண முணர்க. முதலிடை கடைகளில் மங்கலவாழ்த்தையுடைய காப்பியம் அழிவின்றிநின்று சிறப்புறுமென்பது ஆன்றோர்கொள்கை யாதலால், முதலில் வாழ்த்துக்கூறினர்; "ஆதியு மந்தமு நடுவு மங்கலம், ஓதிய முறைமையி னுரைப்ப ராயிடின், ஏதமி லிருநிலக் கிழத்தி யின்புற, நீதியம் பனுவல்கள் நிலவு மென்பவே" என்பது காண்க.

எல்லாநூல்களும் மங்கலமொழிமுதல்வகுத்துக்கூறவேண்டுவது மரபாதலால், 'திரு' என்று தொடங்கினார்; "வழிபடு தெய்வ வணக்கஞ் செய்து, மங்கலமொழி முதல்வகுத் தெடுத்துக்கொண்ட விலக்கண விலக்கியம், இடுக்க ணின்றி யினிது முடியும்," "சீர் மணி பரிதி யானை திரு நிலம்

உலகு திங்கள், கார் மலை சொல் எழுத்துக் கங்கை நீர் கடல் பூத் தேர் பொன், எருறு மிவை மூவாறும் இதன் பரியாயப்பேரும், ஆருமங்கலச்சொல் செய்யு ளாய்ந்து முன்வைக்க நன்றாம்" என்பன நோக்குக. (க)

உ. படுப்பவரைப்பணிமெல்லணையாகப் பருவரையாற்
றடுப்பவரைப்பண்டுமண்டுகன்மாரி தரணியிடந்
தெடுப்பவரைத் தம்மடியாரிடும்பச்சிலைக்குமுத்தி னே.
கொடுப்பவரைச் செம்பொற்கோயிலுள்ளேகண்டுகொண்டன

(இ - ள்.) பணி - திருவனந்தாழ்வான் [ஆதிசேஷன்], மெல் அணை ஆக - மெத்தென்ற படுக்கை யாக, படுப்பவரை - (அதன்மேற்) பள்ளிகொண்டருள்பவரும்,—பண்டு - முன்னே [கிருஷ்ணாவதாரத்தில்], மண்டு கல் மாரி - (இந்திரன்பெய்வித்த) மிகுதியான கல்மழையை, பரு வரையால் - பருத்த (கோவர்த்தனமென்னும்) மலையைக்கொண்டு, தடுப்பவரை - தடுத்தருளியவரும்,— தரணி - (ஹிரண்யாக்ஷனாற் கவர்ந்துகொள்ளப்பட்ட) பூமியை, இடந்து எடுப்பவரை - (வராகாவதாரமாகிக்) கோட்டினாற்குத்தியெடுத்தருளியவரும்,—தம் அடியார் இடும் பசு இலைக்கு - தமது திருவடிகளைச்சரணமடைந்தமெய்யடியார்கள் (அத்திருவடிகளில்) அருச்சிக்கின்ற பசுமையான திருத்துழாய்த்தளத்திற்காக, முத்தி கொடுப்பவரை - (அவ்வடியார்கட்குத் தமது) பெருவீட்டைக் கொடுத்தருள்பவருமான பெரியபெருமாளை,—செம் பொன் கோயிலுள்ளே - சிவந்த பொன்மயமான திருவரங்கம் பெரியகோயிலினுள்ளே, கண்டுகொண்டனன் - தரிசிக்கப்பெற்றேன்; (எ-று.)

எம்பெருமானுக்குச் சகலவிதகைங்கரியங்களையுஞ் செய்கின்றவனும் நித்தியர்களிலொருவனும் சர்ப்பராஜனுமான ஆதிசேஷன், "புல்கும்அணையாந் திருமாற்கு அரவு" என்றபடி, அப்பெருமான் சயனிக்கத்திருவுளங் கொண்டபோது அவனதுமென்மைக்குஏற்ற புஷ்பசயனம்போன்ற திருப்பள்ளிமெத்தையாக, அதில் அப்பரமன் பள்ளிகொண்டருளுதலால், 'பணிமெல்லணையாகப் படுப்பவரை' என்றார். "இருளிரியச்சுடர்மணிகளிமைக்கு நெற்றியினத்துத்தியணிபணமாயிரங்களார்ந்தஅரவரசப்பெருஞ்சோதியனந்தனென்னுமணிவிளங்குமுயர்வெள்ளையணையைமேவித், திருவரங்கப்பெருநகருள்தெண்ணீர்ப்பொன்னி திரைக்கையாலடிவருடப்பள்ளிகொள்ளுங், கருமணியைக் கோமளத்தைக் கண்டுகொண் டென் கண்ணிணைகளென்றுகொலோ களிக்குநாளே" என்று பெரியார் பலகாலுங் காணவிரும்பிய திருமூர்த்தி யாதலால், அந்தத்திவ்வியமங்களவிக்கிரகத்தைத் தாம் காணப்பெற்றபேற்றை 'பணிமெல்லணையாகப்படுப்பவரை.....செம்பொற்கோயிலுள்ளேகண்டுகொண்டனன்' என்று வெளியிட்டார். தமக்குக்கட்புலனானவடிவமாதலால் 'படுப்பவரைப்பணிமெல்லணையாக' என்று அர்ச்சாவதாரத்தை முதலிலும், விபவாவதாரங்களுள் வராகாவதாரம் கிருஷ்ணாவதாரத்துக்குமுந்தியதாயினும் தமக்கு ஸந்நிஹிதமானதுபற்றிக் கிருஷ்ணாவதாரத்தை முதலிலும், அதற்குமுற்பட்ட வராகாவதாரத்தை அதன்பின்னும், அடியவர்க்கெளியனாகின்ற ஸௌலப்யமாகிற பொதுநிலையை அதன்பின்னுமாகக் கூறினரென்க. 'பருவரையாற் பண்டு மண்டு கன்மாரி தடுப்பவர்,' 'தரணியிடந்தெடுப்பவர்' என்ற இரண்டுவிசேஷணங்களும், துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலன சீல ரென்பதை விளக்கின. 'வாதாசநம்' என்று ஒரு பெயர்பெறும்படி காற்றைஉணவாகக்கொள்வதான பாம்பு அக்காற்றை உச்சுவாசநிச்சுவாசங்களினால் உட்கொள்ளும்போதும் வெளிவிடும்போதும் உடற்பூரிப்பையும் உடல்தளர்ச்சியையுங் கொள்வதாய்க் காற்றடைத்தமெத்தைபோன்று இனிதுபள்ளிகொள்ளுதற்குப் பாங்காதல் தோன்ற, 'பணி

மெல்லணையாக' எனப்பட்டது; "அடலாயிரவாய்ப்பொருந்து வந்தார் பணிப் பாயார்" என்பர் அழகரந்தாதியிலும்.

**'பருவரையால் தடுப்பவரைப் பண்டு மண்டுகன்மாரி' என்றதன்** விவரம்:—திருவாய்ப்பாடியில் ஆயர்களெல்லாரும் கூடி மழையின்பொருட்டாக இந்திரனைஆராதித்தற்கென்று வழக்கப்படி சமைத்த சோற்றைக் கண்ணபிரான் ஒருகால் அவனுக்குஇடாதபடிவிலக்கிக் கோவர்த்தனமலைக்குஇடச்சொல்லித் தானேஒருதேவதாரூபங்கொண்டு அமுதுசெய்தருள, அவ்விந்திரன் கோபத்தோடு புஷ்கலாவர்த்தம் முதலிய பல மேகங்களையேவி, கண்ணன்விரும்பிமேய்க்கிற கன்றுகளுக்கும் பசுக்களுக்கும் கண்ணனுக்குஇஷ்டரான இடையர்க்கும் இடைச்சியர்க்கும் தீங்குதரும்படி கல்மழையை ஏழுநாள் இடைவிடாது பெய்வித்தபொழுது, கண்ணன் கோவர்த்தனமென்னும் மலையை யெடுத்துக் குடையாகப்பிடித்து மழையைத்தடுத்து எல்லாவுயிர்களையும் இடையூறுசிறிதுமின்றிக் காத்தருளின னென்பதாம். ("மகரத்திற்சூரியன்வந்துதித்தகாலில் வந்திக்க விந்திரனைநோக்கிப் பொங்கல், மிகவிட்டுக்கயிலைமலைபோலேவைக்க விளையாட்டா யத்தனையும் நீயேயுண்ணக், ககனத்திலிந்திரனும்வந்துபார்த்துக் கன்மழையை நிரைமீதில் விடுத்தமட்டில், இகபரத்திற்கிறையவனே நிரைக்காக் குன்றையெடுத்து மழைதடுத்தனையே யெம்பிரானே" என்பது காண்க.) திரிலோகாதிபதியென்று பேர்படைத்தவனான தேவேந்திரன் தானே அவ்வுலகத்தில் ஒருசார் நிரபராதியாயுள்ளசிலஉயிர்கட்கு நலிவுசெய்யப்புக்கவிடத்து எம்பெருமான் தான் அருள்கொண்டு பாதுகாத்தன னென்பதை விளக்கும், இவ்வரலாறு. 'நாம் கோவர்த்தனமலையை ஆராதித்தோம்: அதனால்நேர்ந்த தீங்கைப் போக்கிக் கண்ணன் காத்தருளினான்' என்று இடையர்கள் நினைக்க வொண்ணாதெனக்கருதி, அவர்கள்ஆராதித்தமலையைக்கொண்டே காத்தருளின னென்க. இந்திரன் கல்மழைபொழிந்திட்டதனால், அதனைக் கற்கொண்டுதடுத்தான்; அன்றி நீர்மழையையேபொழிந்திருப்பானாயின் அதனை நீரைக்கொண்டே தடுக்கவல்ல ஸர்வசக்த னென்பது தோன்ற, 'வரையாற் கல்மாரிதடுப்பவர்' என்றார். "கன்மாரியாகையாலே, கல்லையெடுத்து ரக்ஷித்தான்; நீர்மாரியாகில், கடலையெடுத்து ரக்ஷிக்குங்காணும்' என்று பட்டர் அருளிச்செய்வர்; இத்தால், இன்னதைக்கொண்டுஇன்னகார்யஞ்செய்யக்கடவோமென்னும்நியதியில்லை: ஸர்வசக்தனென்கை' என்ற வியாக்கியான வாக்கியம், இங்கு அறியத்தக்கது.

**'தரணியிடந்தெடுப்பவரை' என்றதன் விவரம்**:—இரணியனதுஉடன்பிறந்தவனான ஹிரண்யாக்ஷனென்னுங்கொடிய அசுரராஜன் தன்வலிமையாற் பூமியைப் பாயாகச் சுருட்டியெடுத்துக்கொண்டு கடலில் மூழ்கிச் சென்றபோது, தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளினால் திருமால் மகாவராகரூபமாகத் திருவவதரித்துக் கடலினுட் புக்கு அவ்வசுரனை நாடிக் கண்டு பொருது கோட்டினாற் குத்திக் கொன்று, பாதாளலோகத்தைச் சார்ந்திருந்த பூமியைக் கோட்டினாற்குத்தி அங்குநின்றுஎடுத்துக்கொண்டுவந்து பழையபடிவிரித்தருளின னென்பதாம். ("புண்ணியந்தெய்வதமுஞ்சேர்பூலோகத்தைப் புற்பாய்போற்சுருட்டிக்கொண்டே பாதாளம், நண்ணிரணியாட்சனைப் பின் தொடர்ந்தே யேகி நலமுடனே யாதிவராகத்தேவாகி, மண்ணுலகமனைத்துமிடந்தெடுத் தோர்கோட்டில்வைத்துவர வவன்மறிக்க வதைத்துத் தேவ, ரெண்ணவுலகீரேழும்படியப்பண்ணா யிறைவா நாராயணனே யெம்பிரானே" என்பர் பின்னோரும்.) இப்பொழுதுநடக்கிற சுவேதவராககல்பத்துக்கு முந்தின பாத்மகல்பத்தைப் பற்றிய பிரளயத்தின் இறுதியில் ஸ்ரீமந்நாராயணன் ஏகார்ணவமான பிரளயஜலத்தில்

முழுகியிருந்த பூமியை மேலேயெடுக்கநினைத்து ஸ்ரீவராகாவதாரத்தைச் செய்தருளிக் கோட்டுநுனியாற் பூமியை யெடுத்துவந்தன னென்ற வரலாறும்

இயல்பிலே தமக்கு அடிமையான எல்லாவுயிர்களிடத்தும் காரணமின்றியெழுங் கருணையையுடையவனான கடவுள் அவர்கட்குத் தனது பேரின்பப்பெருவீட்டை யளித்தருளுதற்கு ஒருவியாஜமாக அவர்களிடமொரு துளஸீதளத்தையெதிர்நோக்குகின்றன னென்பது விளங்க,'தம்அடியாரிடம் பச்சிலைக்கு முத்திகொடுப்பவர்' என்றார். பயனாகிய அந்தப் பரமபதத்தின் பெருமைக்கு இவர்களிடம்பச்சிலை ஏற்றஸாதநமன் றாதலை நோக்குமிடத்து, அவனது திருவருள் காரணமின்றியெழுந்ததாத லுணர்க. "பத்திரத்தையும் புஷ்பத்தையும் பழத்தையும் ஜலத்தையும் எவன் எனக்குப் பக்தியுடன் கொடுக்கின்றானோ, சுத்தமான மனத்தையுடையவனான அவனது பக்தியினாற் கொடுக்கப்பட்டதான அதனை நான் அங்கீகரிக்கின்றேன்"என்று ஸ்ரீகீதையிற் கண்ணபிரான் தானே அருளிச்செய்திருத்தல் உணரத்தக்கது; "அச்சுத நின்மெய்யடியாருகந்தேயிட்ட தணுவெனினுமகமேருவாகக்கொள்வாய், நிச்சயமாயுனைநம்பியெண்ணுமூடர்நினைத்திடிலோ நூற்றையொன்றாவுங்கொள்ளாயால்" எனப் பின்னோர் கூறியதுங் காண்க. 'தம்மடியாரிடம் பச்சிலைக்கு முத்திகொடுப்பவர்' என்ற தொடரில், சிறியதைப் பெற்றுக் கொண்டு பெரியதைக் கொடுத்த லாகிய பரிவர்த்தநாலங்காரந் தோன்றுதல் காண்க; அதனிலக்கணத்தை, தண்டியலங்காரத்தில் "பொருள்பரிமாறுதல் பரிவருத்தனையே" எனக் காணலாம்; இது, மாற்றுநிலையணி என்றுஞ் சொல்லப்படும். 'இலைக்கும்' எனப்பிரித்து இழிவுசிறப்பும்மையாகக்கொள்ளுதலு மொன்று. அடியார்கள் எம்பெருமானை வசப்படுத்தும் பச்சிலையாகின்றது திருத்துழா யென்பதும் இங்குத் தோன்றும்; ஆகவே, அதனால் அவர்கள்வசப்பட்டு அவர்கட்குப் பெருவீடுதந்திடுகின்றன னென்க.

படுப்பவர் கொடுப்பவர் என்றவற்றில்,பகரமொற்றிடைநிலை-எதிர்காலமுணர்த்தாமல் தன்மையுணர்த்திற்று; படுக்குமியல்பினர், கொடுக்குமியல்பினர் என்று பொருள். 'பண்டு தடுப்பவர்' என்றது, இயல்பினால் இறந்தகாலம் எதிர்காலமாகச்சொல்லப்பட்ட காலவழுவமைதி; 'யாம் பண்டுவிளையாடுவது இச்சோலை' என்றாற் போல: [நன் - பொது - ௩௩.] 'பண்டு' என்பதை, 'எடுப்பவர்' என்பதனோடுங் கூட்டுக; அதுவும் அவ்வகைக் காலவழுவமைதியே. படுப்பவரை, தடுப்பவரை, எடுப்பவரை, கொடுப்பவரை என்றவை - ஒருபொருளின்மேல் வந்த பலபெயர்கள்; இவை, 'கண்டுகொண்டனன்' என்னும் ஒருவினையைக் கொண்டன. விசேஷணச்சொற்கள், விசேஷ்யச்சொல் இவையனைத்திலும் வேற்றுமையுருபுவிரியவைப்பது, வடமொழிநடை. இங்கே 'படுப்பவரை' என்றதை விசேஷ்யமாகவும், மற்றைமூன்றையும் விசேஷணமாகவுங் கொள்ளுதல் சாலும். பணம் - படம்: அதனையுடையது பணீ யென வடமொழிக்காரணக்குறி;அது ஈறுகுறுகிற்று. மெல் அணை - பண்புத்தொகை. 'வரையால்' என்பதில், 'ஆல்' உருபு - கருவிப்பொருளது. கல்மாரி - சிலாவர்ஷம்; ஆலாங்கட்டிமழை. தரணி - வடசொல்; (பொருள்களைத்) தரிப்ப தென்று காரணப்பொருள்படும். இடந்து, இட-பகுதி. அடியார்-அடிமை யென்னும் பண்பினடியாப் பிறந்த பெயர். பசுமை+இலை = பச்சிலை: பண்புப்பெயர். ஈறுபோய்த் தன்னொற்றுஇரட்டிற்று. முக்தி என்ற வடசொல்லுக்கு - (பற்றுக்களை) விட்டுஅடையுமிடமென்பது உறுப்புப்பொருள்; வீடு என்ற தமிழ்ப்பெயரும் இப்பொருள் கொண்டதே. செம்பொன்-மாற்றுயர்ந்த பொன். கோயில்=கோவில்:இலக்கணப்போலி; கோ இல் - இறைவனது இடம், தலைமையான இடம்; இது

தேவாலயங்கட்கெல்லாம் பொதுப்பெயராயினும், நூற்றெட்டுத்திருமால் திருப்பதிகளுள் திருவரங்கம் தலைமைபெற்றதாதலால், அதனை 'கோயில்' எனச் சிறப்பாகவழங்குவது, வைஷ்ணவசம்பிரதாயம்;இது, காரணவிடுகுறி யின்பாற்படும். (சிவதலங்களுட் சிறந்ததான சிதம்பரத்தை 'கோயில்' என வழங்குவர் சைவர்.) கண்டுகொண்டனன்—'அன்' விகுதி, தன்மையொருமைக்கு வந்தது. (உ)

௩. ஆளானவர்கண்களிகூரரங்கத்தரவணைமேற்
காளாசலமெனக்கண்டுகொண்டேன் மறைகாணவொண்ணாத்
தாளாயிரஞ் செம்பொன்மாமுடியாயிரந் தாமநெடுந்
தோளாயிரந் திருக்கண்ணாயிரங் கொண்ட சோதியையே.

(இ - ள்.) மறை காண ஒண்ணா - வேதங்களாலும் அறியமுடியாத,— தாள் ஆயிரம் - ஆயிரம் திருவடிகளையும், செம் பொன் மா முடி ஆயிரம் - சிவந்தபொன்மயமான அழகிய கிரீடத்தைத் தரித்த ஆயிரம்திருமுடிகளையும், தாமம் நெடுந் தோள் ஆயிரம்-மாலையைத்தரித்த பெரிய ஆயிரம் திருத்தோள்களையும், திரு கண் ஆயிரம் - ஆயிரம் திருக்கண்களையும், கொண்ட- தன்னிடத்திற் கொண்ட, சோதியை - ஒளிவடிவமான ஸ்ரீமந்நாராயண மூர்த்தியை,—ஆள் ஆனவர் கண் களி கூர் அரங்கத்து-அடியார்கள் (கண்டு) கண்களிப்புமிகுதற்குக்காரணமான திருவரங்கம்பெரியகோயிலில், அரவு அணைமேல் - ஆதிசேஷனாகிய சயனத்தின்மேல், காள அசலம் என கண்டு கொண்டேன் - கருநிறமுள்ளதொரு மலை (கிடந்தாற்) போல(ச் சயனத் திருக்கோலமாயிருக்க)க் காணப்பெற்றேன்; (எ - று.)

எல்லாப்பொருள்களையும் உள்ளபடி உணர்ந்து உரைக்கின்ற வேதங்களாலும் காணமுடியாத பரஞ்சோதிஸ்வரூபமான பரமாத்மாவை இந்நிலவுலகத்திலே திருவரங்கத்திருப்பதியில் திருவனந்தாழ்வானாகிய திருப்பள்ளி மெத்தையில் "பச்சைமாமலைபோல்மேனி பவளவாய் கமலச்செங்கண், அச்சுதா" என்றபடி ஒருநீலமலைபோலே பள்ளிகொண்டிருக்கக் காணப் பெற்றேன் என்று, பிறர்களுக்குஅரியவித்தகனானஎம்பெருமான் பத்துடையடியவர்க்குஎளியனாகின்ற இயல்பையும், தமது பாக்கியவிசேஷத்தையும், கீழ்ச்செய்யுள்போலவே இச்செய்யுளும் கொண்டாடிக்கூறியதாம். 'மறை காணவொண்ணா' என்றது; சோதியோடு இயையும்; பரப்ரஹ்மஸ்வரூபத்தைத் தான் முழுவதுங் காணமாட்டாமையை, வேதம் தானே கூறுகின்றது. தேஜோரூபியாதலால், 'சோதி' என்றார்; அடுத்தசெய்யுளில் "ஒண்சுடர்" என்பதுங் காண்க.

ஆள்ஆனவர் - அடிமைப்பட்டவர். கண்களிகூர் - கண்களாற்காணுதலால் மனம்களிகூர்தல், அக்கண்களின்மேல் ஏற்றிக்கூறப்பட்டது; ஒருவகை உபசாரவழக்கு. ஆளானவர்கண்களிகூர் அரங்கம்—'கூர்'என்ற வினைத்தொகை - காரியப்பொருளதாய், காரணப்பெயரைக் கொண்டது. கூர்- மிகுதிகுறிக்கும் உரிச்சொல். அரவணை - ஸர்ப்பசயநம். அரா அணை என்றும் பிரிக்கலாம். அரா என்னும் குறியதன்கீழ்ஆகாரம், குறுகியும் அதனோடுஉகரமேற்றும் நிற்கும். காள + அசலம் = காளாசலம்: தீர்க்கசந்திபெற்ற வடமொழித்தொடர்; பண்புத்தொகை. காளம் - கருநிறமானது. அசலம் - சலியாதது என மலைக்குக் காரணக்குறி. காளாசலம் - நீலகிரி: காளமேகம்படிந்ததொரு பெருமலை யென்றுங் கொள்ளலாம். என - உவமவுருபு. காளாசலம்- நிறத்திற்கும், கம்பீரமான தோற்றத்திற்கும் உவமை. ஒண்ணா - ஒன்றா என்பதன் மரூஉ; ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம். 'செம்பொன்மாமுடி' என்றதை அன்மொழித்தொகையாகவாவது அடையடுத்தஆகுபெய

ராகவாவது கொள்ளவே, சிரசை யுணர்த்தும். 'செம்பொன்' என்பதை அத்துலாகிய கிரீடத்துக்குக் கருவியாகுபெய ரெனக்கொண்டு, முடி - சிரசு என்றலுமாம். மா முடி - பெரிய கிரீடமுமாம். தாமம் - வடசொல்; திருத்துழாய்மாலை, மலர்மாலைகள், பொன்மணிகளாலாகிய ஆரங்கள், வனமாலையென்னுந் திவ்வியமாலை இவைகளையெல்லாங் குறிக்கும். தாமம் எனக்கொண்டு. ஒளியென்னவுமாம். 'திரு' என்ற அடைமொழியை, தாள் முடி தோள் என்றவற்றிற்குங் கூட்டலாம்.

ஈக 'ஆயிரம்' என்றது, அளவில்லாததென்னும்பொருளது. அங்ஙனங்கொள்ளாவிடின், தாளாயிரம் முடியாயிரம் முதலியன சேராவாம். ஆகவே, அளவற்ற பாதம்முதலிய சகல அங்கங்களையு முடையவ னென்பதாம். அபரிமிதமாய் அற்புதமாயிருக்கிற மகாஞானமும் மகாசக்தியு முள்ளவன் எம்பெருமான் என்பது, தேர்ந்தபொருள். பெருமான் சகலஇந்திரியங்களாலேயாதல் ஓர்இந்திரியத்தாலேயாதல் திருமேனியாலேயாதல் திவ்யாத்மஸ்வரூபத்தாலேயாதல் எல்லாவற்றையும் எப்போதும் எல்லாவிதத்திலும் அறிகின்றவனும் செய்கின்றவனுமாயிருக்கின்றா னென்பது, முக்கியமான கருத்து. இங்ஙனமேயன்றி, அநேகம் திருமுடிகள் திருக்கண்கள் திருக்கைகள் திருவடிகள் முதலான அவயவங்களாற் செறிந்திருக்கின்றான் பகவா னென்பது கருத்தன்று. அளவில்லாதகண்முதலியவற்றையுடையவன் எப்படி அளவில்லாதகாட்சி முதலானவற்றையுடையனாயிருப்பனோ அப்படியே பகவானும் என்று எடுத்துக்காட்டினபடியாம். மற்றும், விசுவரூபங்காட்டுகிறசமயங்களில்மாத்திரம் எம்பெருமான் பலஅவயவங்களைக்கொள்ளுதலும் உண்டு. இங்கு, சிலர், உலகமெல்லாம் பகவானுடைய சொரூப மாதலால் உலகத்திலுள்ளாருடைய முடி புயம் முதலியவையெல்லாம் அவனுடையவையா மெனக் கருத்துக்கூறுவர்; அது பலவிதத்திலும் பொருந்தா தென அறிக. இது திவ்யாத்மஸ்வரூபம் கூறியபடி. (௩)

௪. பூங்காவிரிப்புனற்கோயிலுள்ளேமிக்கபோகமெல்லாம் [போ
யாங்காணயோகத்துயில்கொண்டவாறெள்ளுமெண்ணெயும்
னீங்காதுலகத்துயிர்க்குயிராகிநியாமகனா
யோங்காரமாயதனுட்பொருளாய்நின்றவொண்சுடரே.

(இ - ள்.) எள்ளும் எண்ணெயும் போல்—, நீங்காது - இடையறாமல், உலகத்து உயிர்க்கு உயிர் ஆகி - உலகத்திலுள்ள ஜீவாத்மாக்களுக்கு அந்தராத்மாவாகியும், நியாமகன் ஆய்-(அந்த ஜீவாத்மாக்களுக்கெல்லாம்) தலைவனாகியும், ஓங்காரம் ஆய் - பிரணவமந்திரஸ்வரூபியாகியும், அதன் உள் பொருள் ஆய் - அம்மந்திரத்தினது உள்ளேயடங்கியபொருளாகியும், நின்ற - (எந்நாளும் அழிவின்றி ஒரேதன்மையதாய்) நிலைபெற்ற, ஒள் சுடர்-பிரகாசிக்கின்ற சோதியானது, பூ காவிரி புனல் கோயிலுள்ளே-அழகிய காவேரிநதியின் நீரினாற் சூழப்பெற்ற திருவரங்கம்பெரியகோயிலினகத்தே, மிக்க போகம் எல்லாம் யாம் காண - மிகுதியான போகங்களெல்லாவற்றையும் நாம் காணும்படி, யோகம் துயில் கொண்ட ஆறு - யோகநித்திரையைக் கொண்டிருக்கின்ற விதம், (என்ன ஆச்சரியம்!) (எ - று.)

உடலினுள்ளே உயிர் அதற்குத் தாரகமாய் நியாமகமாய்ச் சேஷியாய்த் தங்கியிருத்தல்போலப் பரமாத்மா ஜீவாத்மாக்களினுள்ளே அந்தர்யாமியாய் அவற்றிற்குத் தான் தாரகனாய் நியாமகனாய்ச் சேஷியாய் விடாது வீற்றிருத்தலால், 'நீங்காது உலகத்து உயிர்க்குஉயிராகி நியாமகனாய்' என்றார். 'எள்ளும் எண்ணெயும் போல்' என்றாராயினும், எள்ளினுள் எண்ணெய் போலென்பது கருத்து; அது பிரிந்து காட்டாமல் எங்கும் பரந்து மறை

ந்தநிற்றற்கு உவமை. எள் - ஜீவாத்மாவுக்கும், எண்ணெய் - பரமாத்மாவுக்கும் உபமானம். 'எள்ளுமெண்ணெயும்போல்' என்றதனால், எல்லாம் தானுமாகியும் அல்லதுமாகியும் இறைவன் நிற்கின்ற நிலையைத் தோன்றவைத்தனரென்னலாம். 'உலகம்' என்றது, அசித்துக்களை. 'உயிர்' என்றது, சித்துக்களை. 'உயிர்க்குஉயிர்' என்றது, ஈசுவரனை. 'உலகத்து உயிர்க்கு உயிராகி நியாமகனாய்' என்றதனால், சித்துக்களுக்குப்போலவே அசித்துக்களுக்கும் பரமாத்மா தாரகனும் நியாமகனும் சேஷியுமாதல் தோன்றும். இதுவே, விசிஷ்டாத்வைதசித்தாந்தம். "கருதரிய வுயிர்க்குயிராய்க் கரந்தெங்கும் பரந்துறையும், ஒருதனிநாயக மென்று னுன்புகழ்க்கு வரம்பாமோ" என்பர் திருவரங்கக்கலம்பகத்திலும். ("திடவிசும்பெரிவளி நீர்நிலமிவைமிசைப், படர்பொருள்முழுவதுமா யவையவைதொறும், உடன்மிசையுயிரெனக்கரந் தெங்கும்பரந்துளன்," "பரந்ததண்பரவையுள்நீர்தொறும்பரந்துளன்,பரந்த வண்டமிதென நிலவிசும் பொழிவறக், கரந்தசிலிடந்தொறு மிடந்திகழ் பொருடொறுங், கரந்தெங்கும்பரந்துளன்" என்றார் நம்மாழ்வாரும்.) தாரகன் - தாங்குபவன், வாழச்செய்பவன். நியாமகன் - நியமிப்பவன், நடத்துபவன். சேஷி - தலைவன், உடையவன்.

சொல்லும் பொருளும் ஆகிய இரண்டுமாய் நிற்பவன் எம்பெருமானேயாதலால், 'ஓங்காரமாய் அதனுட்பொருளாய் நின்ற' என்றார்; "ஓங்காரோ பகவாந் விஷ்ணுః" என்றது காண்க. 'ஓங்காரம்' என்றதில், 'காரம்' என்பது - சாரியை; அகாரம், ஆகாரம் என்றவற்றிற் போல. பிரணவம், அகார உகார மகாரங்க ளாகிய மூன்று ஓரெழுத்தொருமொழிகள் கூடியதோ ரெழுத்தாம். அது ஸகலவேதகாரணமும், ஸகலவேதஸங்க்ரஹமும், ஸகலவேதஸாரமுமாதலால், தலைமைபற்றி எடுத்துக்கூறப்பட்டது. அதன்பொருள், ஸர்வரக்ஷகனான திருமாலுக்கே உரியபொருள் ஜீவாத்மா என்பது; இப்பொருளில், பகவானுக்கே பிராதானியந்தோன்றுதலால், பகவான்பிரணவத்தின்பொருளாவன்: "ப்ரணவோ பகவத்வாசீ ப்ராதாந்யாதர்த்தஸம்பவாத்" என்பதுகாண்க. ஒண்சுடர்-சூரியசந்திர அக்நிகளாகிய முச்சுடர்களின்ஒளியினும்மேம்பட்ட பேரொளி; புறவிருளையேபோக்குகின்ற அவ்வொளிகளினுஞ்சிறக்குமாறு அகவிருளையும் அகற்றும்ஞானவொளி; தோற்றக்கேடுகளும் மிகுதிகுறைவுகளுமின்றி என்றும்ஒருபடிப்படவிளங்கும்ஒளி. இப்படிசேதநாசேதநங்களுக்கு வியாபகனும் அந்தர்யாமியும் மந்த்ரார்த்தஸ்வரூபியும் தேஜோரூபியுமான பரமாத்மா சில்வாழ்நாட்பல்பிணிச்சிற்றறிவினராகியநாமெல்லாம் எளிதிற்சேவித்துஈடேறும்படி இவ்வுலகத்தில் திருவரங்கம்பெரியகோயிலிலே பள்ளிகொண்டதிருக்கோலமாய்க் காட்சிதந்தருள்கின்ற திருவருட்பெருமை என்னே! என்று கொண்டாடியவாறாம். முடிக்குஞ்சொல், வருவித்துஉரைக்கப்பட்டது. விதத்தையுணர்த்துகின்ற 'ஆறு' என்றசொல் வருமிடங்களில் முடிக்குஞ்சொல் கூறப்படாது எஞ்சிநிற்பதை இலக்கியங்களிற் பலவிடத்துக் காணலாம்; இது, இசையெச்சம். இப்படி 'ஆறு' என்ற சொல் முடிபின்றி வியப்புவிளக்குதலை, "வெள்ளைவாகனக்குரிசில்வின்மை வல்லபமிருந்தவாறே" என்ற வில்லிபுத்தூரார்பாரதத்திலுங் காண்க.

'பூங்காவிரிப்புனல்' என்ற அடைமொழி, "தெளிவிலாக்கலங்கல்நீர் சூழ் திருவரங்கம்" என்றபடி தலத்தின் நீர்வளவாய்ப்பைக் காட்டும். திருவரங்கம் போகமண்டபமெனப்படுதலால், 'மிக்கபோகமெல்லாம்யாம்காணயோகத்துயில்கொண்ட ஆறு' எனப்பட்டது; முன்னும் "பெருமா ளரங்கப்பெருஞ்செல்வம்" என்றார். போகம் - வைபவம்: செல்வமும், சுகானுபவமும். அங்கு எம்பெருமானுக்கு எல்லாஐசுவரியங்களும் குறைவறவிருத்தலும், அப்பெருமான் தெண்ணீர்ப்பொன்னிதிரைக்கையாலடிவருடஇனிது

பள்ளிகொள்ளுதலுங் காண்க. இனி, 'மிக்கபோகமெல்லாம் யாம்காண' என்பதற்கு-(எம்பெருமானைச்சேவித்ததன்பயனாக இம்மைமறுமைவீடுகளில்) மகாபாக்கியங்களையெல்லாம் நாம் அனுபவிக்கும்படி யென்றும் பொருள் கொள்ளலாம். மிக்கபோகம் - வரம்பிலின்ப மெனப்படும் நிரதிசயசுகாநுபவ மென்றலுமாம்.

காவிரி - காவேரீ என்ற வடசொல்லின் விகாரம்; அப்பெயர் - கவேர னென்ற அரசனது மகள் என்று பொருள்படும். போகம், யோகம், நியா மகன், ஓங்காரம் - வடசொற்கள். தம்மைப்போன்ற அடியார்களையுஞ் சேர்த்துக்கொண்டு, உளப்பாட்டுத்தன்மைப்பன்மையாக, 'யாம்' என்றார்; கவிகளுக்குஉரிய இயற்கைத்தனித்தன்மைப்பன்மையுமாம். எண்ணெய் - எள் நெய்: எள்ளின் சாரம். ஒள்-ஒண்மை யென்ற பண்பின் அடி. ஒள் + சுடர் = ஒண்சுடர்: பண்படிகளின் லகார ளகாரங்கள் வலிவர னகார ணகாரங்களாம். (சு)

ரு. கறங்காழிநாலெட்டிலக்கமியோசனை கட்செவியின்
பிறங்காகமும்மையிலக்கமியோசனை பேருலகி
லிறங்காழிமேகமெனவேயரங்கத்திலெந்தையதி
லுறங்காகநீளமைந்தைம்பதினாயிரமோசனையே.

(இ - ள்.) கறங்கு - ஆரவாரிக்கின்ற, ஆழி - திருப்பாற்கடலினது, (நீளம்)—, நால் எட்டு இலக்கம் யோசனை-முப்பத்திரண்டுலக்ஷம் யோஜனை யளவாம்; கட்செவியின் - (அதனிடையேயுள்ள) திருவனந்தாழ்வானுடைய, பிறங்கு ஆகம் - விளங்குகின்ற திருவுடம்பினது, (நீளம்)—, மும்மை இலக்கம் யோசனை - மூன்றுலக்ஷம்யோஜனையாம்; பேர் உலகில் இறங்கு ஆழி மேகம் எனவே - பெரிய இந்நிலவுலகத்தி லிறங்கிவந்த சக்கராயுதத்தையுடையதொருமேகம்போல, அரங்கத்தில் எந்தை அதில் உறங்கு - திருவரங்கத்தி லெழுந்தருளி யிருக்கின்ற எம்பெருமான் அத்திருவனந்தாழ்வான் மேலே (பள்ளிகொண்டு) யோகநித்திரைசெய்தருள்கின்ற, ஆகம் - திருமேனியினது, நீளம் - நீட்சி, ஐந்து ஐம்பதினாயிரம் ஓசனை - இரண்டரை லக்ஷம் [இரண்டுலக்ஷத்து ஐம்பதினாயிரம்] யோஜனையாகும்; (எ-று.)

எம்பெருமானுக்குஉரிய பரத்வம், வியூகம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சை என்ற ஐவகைநிலைகளுள் வியூகநிலை, இதிற் குறிக்கப்பட்டது. பிரமன்முதலியதேவர்கள்வணங்கிவழிபடுந்தெய்வமாய் எல்லாஅவதாரங்களுக்கும்முதலாய்ப் படைத்தல் காத்தல் அழித்தல்தொழில்களுக்குக் கர்த்தாவாய்த் திருப்பாற்கடலிலே வாசுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்தர்களாகிய நான்கு ரூபத்துடன் எழுந்தருளியிருக்கின்ற நிலை, வியூக மெனப்படும். அந்த நான்குமூர்த்திகளுட் பிரதானமாகிய வாசுதேவமூர்த்தியின் திருமேனிவளத்தைக் கூறுபவராய், அதற்குஅங்கமாகப் பாற்கடலின்நீளமே தொடங்கிக் கூறலானார். 'ஆழி' என்று பொதுப்படக்கூறினாரேனும், சந்தர்ப்பத்தால், பாற்கடலைக் குறித்தது. நாலெட்டு - பண்புத்தொகை. "ஆசற வயங்குஞ் சாகநற்றீவி னகல நாலெட்டிலக்கத்தி, னோசனை யனந்தன்மிசை யரியுறும் பாலுவரியு மன்னதேயாம்" என்ற மகாபாகவதத்தாலும் பாற்கடற் பரப்பின் எல்லையை யுணரலாம். இதனால், 'நாலெட்டு' என்பதற்கு - உம்மைத்தொகையாக, பன்னிரண்டெனப்பொருள்கொள்ளுதல் பொருந்தாமை, வெளிப்படை. யோசனை - நான்குகுரோசங்கொண்டது; அவ்வளவை, "அங்குலமறுநான்கெய்தினது கரம் கரமோர்நான்கு, தங்குதல் தனுவென்றாகும் தனுவிரண்டது வோர்தண்டம், இங்குறுதண்டமானவிராயிரங் குரோசத்தெல்லை, பங்கமில்குரோசநான் கோரியோசனைப்பாலதாமே" எனக் காண்க. யோசனை, சற்றேறக்குறையக் காதவளவாம்.

கறங்காழி - வினைத்தொகை; கறங்குதல் - ஒலித்தல். ஆழ்ந்துள்ளது ஆழி யெனக் காரணக்குறி; இ - கருத்தாப்பொருள்விகுதி. இலக்கம் - லக்ஷ மென்ற வடசொல்லின் விகாரம். இலக்கம்-நூறாயிரம். யோசனை, ஓசனை - யோஜநா என்ற வடசொல்லின் விகாரங்கள். இலக்கம்+யோசனை = இலக்கமியோசனை: தன்னொழிமெய்ம்முன் யகரம்வர இகரம் தோன்றிற்று; இனி, இலக்கம் இயோசனை என்றுபிரித்து, இகரத்தை "யவ்விற்கு, இய்யும் மொழிமுதலாகி முன்வருமே" என்றபடி யகரத்தைமுதலிலேயுடைய வடமொழியின்முன் வந்த தாகக் கொள்ளுதலும் ஒன்று. கட்செவி-கண்செவி: கண்களாகிய காதுகளை யுடையது; பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை:கண்களையே காதுகளாகவு முடைய தென்று கருத்து;பாம்புகட்குக் கண்ணாகிய பொறியொன்றிலேயே காணுதலுங்கேட்டலு மாகிய புலனறிவிரண்டும் அமைந்திருத்தல் காண்க:இதுபற்றி,வடநூலார் பாம்புக்கு 'சக்ஷுஶ்ரவஸ்' என்று ஒருபெயர் கூறுவர்;'கோகனநாகம்" என்றார் வில்லிபுத்தூராரும். "தெரிமாண் தமிழ்மும்மைத் தென்னம்பொருப்பன்" என்றவிடத்துப் போல, இங்கு 'மும்மை' என்பது - மூன்றின் தன்மையையுணர்த்தாமல் மூன்றென்னுமெண்ணையே உணர்த்தியது: "இருமைவகைதெரிந் தீண்டறம்பூண்டார்" என்ற திருக்குறளில் 'இருமை' என்றதும் இத்திறத்ததே: இதில், 'மை' விகுதி - தன்மையையுணர்த்தாமல் தன்மையையுடைய பொருளையே உணர்த்தியதனால், பகுதிப்பொருள்விகுதியாம்; இதனை வடநூலார் ஸ்வார்த்தபாவதத்திதப்ரத்யய மென்பர்.

எம்பெருமானது திருமேனிக்கு மேகம் - நிறத்திலும், கண்டவர்கண் குளிரச்செய்யுந்திறத்திலும், அடுத்தவரிளைப்புத்தவிர்த்தலிலும் உவமை.சக்கராயுதத்தைக் கையிலுடைய திருமாலுக்கு உவமையாதற்பொருட்டு 'ஆழி மேகம்' என்றார்; அது -இல்பொருளுவமை. திருப்பாற்கடல் இந்நிலவுலகத் திலுள்ள தாதலால், மேகத்திற்கு 'பேருலகிலிறங்கு' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. மேகம் - வடசொல். ஏ - தேற்றம். எந்தை - எமது பரமபிதா: யாம் என்ற பகுதி, 'எம்' என விகாரப்பட்டது; தை - விகுதி. எந்தை = நம்பெருமாள். நீளம் - நெடுமை. ஐந்தைம்பதினாயிரம் - பண்புத் தொகைப் பன்மொழித்தொடர்; இருநூற்றைம்பதினாயிரம். கடலிற் படிந்து அதன்நீரை யுட்கொண்டு கருவுற்றநீலமேக மென்ற பொருளில் 'ஆழி மேகம்' என்றாருமாம்.இனி,'ஆழி மேகம்' என்றதைப் பன்மைவிகுதிபெறாத அஃறிணையும்மைத்தொகை யென்றுகொண்டு, கடலும் மேகமும் போல வென்று தனித்தனி உவமையாக உரைப்பர் ஒருசாரார்.பேருலகில் ஆழி இறங்கு மேகம் என மொழிமாற்றி, பெரியஇவ்வுலகத்திலே அப்பாற்கடலிலிறங்கிப்படிந்ததொரு மேகம்போல வென்று பொருள்கொள்ளுதலும் அமையும். 'நீளம்' என்றதனைப் பிறவற்றிற்குங் கூட்டுக;கடைநிலைத்தீவகம். 'யோசனை' என்றது, பெயர்ப்பயனிலையாய்நின்றது. (௫)

௯. பாற்கடனாலெட்டிலக்கமியோசனை பாற்கடலுண்
மாற்கவிகோயிலகலமுமீரைந்து வானளவுந்
தீர்கமொரேழு திகழ்பணிமூன்று சிறந்தகலை
மேற்கவினொன்றரை யுத்தமர்நீளமிரண்டரையே.

(இ - ள்.) பால் கடல் - திருப்பாற்கடலினது. (நீளம்)—,நால்எட்டு இலக்கம் யோசனை - முப்பத்திரண்டுலக்ஷம்யோஜனையாகும்;பால் கடலுள்- அத்திருப்பாற்கடலினிடையே, மால் கவி கோயில் - திருமாலை வளைந்துகொண்டிருக்கின்ற திருக்கோயிலினது, அகலமும்—,ஈர்ஐந்து (இலக்கம் யோசனை) - பத்துலக்ஷம்யோஜனையாம்; வான் அளவும் தீர்க்கம் - ஆகா

யத்தை யளாவுகின்ற (அத்திருக்கோயிலின்) உயரம், ஓர் எழு (இலக்கம் யோசனை) - ஏழுலக்ஷம்யோஜனையாம்; திகழ் பணி - விளங்குகின்ற திரு வனந்தாழ்வானது, (நீளம்)—, மூன்று (இலக்கம் யோசனை) - மூன்றுலக்ஷம் யோஜனையாம்; சிறந்த அகலம் - மேன்மையுற்ற (அத்திருவனந்தாழ்வானது) அகலம், ஏல் கவின் ஒன்றுஅரை (இலக்கம் யோசனை) - பொருந்திய அழகையுடைய ஒன்றரைலக்ஷயோஜனையாம்; உத்தமர் - (அதிற்பள்ளி கொண்டருள்கின்ற) புருஷோத்தமரான எம்பெருமானுடைய, நீளம் - (திருமேனியின்) நீட்சி, இரண்டரை (இலக்கம் யோசனை) - இரண்டரைலக்ஷம் யோஜனையாம்; (எ - று.)

'அகலம்,' 'தீற்கம்' என்ற சொற்க ளில்லாத இடங்கட்கெல்லாம், 'நீளம்' என்பது, தகுதிபற்றி, முந்தினசெய்யுளிற்போல எடுத்துக்கூட்டப் பட்டது. 'தீற்கம்' என்பதை 'பாற்கடல்,' 'பணி' என்றவற்றோடுங் கூட்டி, அதற்கு அவ்விடங்களில் நீளமென்றுபொருள்கொள்ளுதலுமாம். 'இலக்கம்,' 'யோசனை' என்ற சொற்கள் எடுத்து எல்லாவாக்கியங்களிலுங் கூட்டப்பட்டன; முதனிலைத்தீவகம். 'பாற்கடல் நாலெட்டிலக்கமியோசனை,' 'திகழ்பணி மூன்று,' 'உத்தமர்நீள மிரண்டரை' என்ற மூன்றுவிஷயங்கள் கீழ்ச் செய்யுளிற்கூறியனவே யானும், 'பாற்கடலுள்மாற்கவிகோயிலகலமு மீரைந்து,' 'வானளவுந்தீற்க மொரேழு', 'சிறந்தகல மேற்கவினொன்றரை' என்ற மூன்றுவிஷயங்கள் புதியன வாதலால், இச்செய்யுள் கூறியதுகூற லென்னுங்குற்றத்தின்பாற்படா தென்க. முன்சொன்ன மூன்றுவிஷயங் களை இங்கு மீளவுஞ்சொன்னது, அவற்றைச்சார்ந்தவிஷயங்களனைத்தை யும் ஒருங்குதொகுத்துணர்த்தவேண்டு மென்னுங் கருத்தினு லென்க; "கூறியதுகூறினுங் குற்றமில்லை, வேறொருபொருளை விளக்குமாயின்" என்பது காண்க. வெவ்வேறுநூல்களிற்கூறியவற்றின் மொழிபெயர்ப்பாக இங்ஙனம் தனித்தனிகூறினர்போலும்.

மால் - பெருமை, அடியார்கள்பக்கல் அன்பு, திருமகளிடத்துக் காதல், மாயை, கருநிறம் இவற்றை யுடையவன்; தன்னையடைந்தவர்க்குத் தன்பக்கல் மோகத்தை விளைப்பவ னென்றும் பொருள்கொள்ளலாம். மாற் கவி- இரண்டாம்வேற்றுமைத்தொகை யாதலின், உயர்திணைப்பெயரீறு திரிந்தது; "இயல்பின் விகாரம்". உம்மை-எச்சப்பொருளது. ஈரைந்து - பண்புத்தொகை. அளவும் - அளாவும் என்பதன் விகாரம். இனி, 'வான்அளவும்' என்பதற்கு - ஆகாயம்வரையிலும் என்று உரைத்தல் சிறப்பன்று. 'தீர்க்கம்' என்ற வடசொல் எதுகைநோக்கி, 'தீற்கம்' என்று விகாரப்பட்டது. சிறந்தகலம் - சிறந்தஅகலம் என்றதன் தொகுத்தல். 'ஏல் கவின்' என்ற வினைத்தொகையில், லகரம் திரிந்தது, எதுகைநயம்நோக்கி யென்க. இனி, ஏல்என்பதை முதனிலைத்தொழிற்பெயரென்றுகொண்டு, இரண்டாம்வேற்று மையுருபும்பயனுந் தொக்கதொகை யாக்கி, ஏற்றலையுடைய அழகென்றலு மொன்று. நீளத்துக்குஏற்றஅகலமாய்அமைந்து அழகுசெய்து சிறப்ப தென்பது தோன்ற, 'சிறந்தகலம்' என்றும், 'ஏற்கவின்' என்றுங் கூறின ரென்க. ஒன்றரை, இரண்டரை - உம்மைத்தொகைகள்: ஒன்றும் அரையும், இரண்டும் அரையும் என விரியும். உத்தமர் - சிறந்தவர்; உத்தமபுருஷர். 'மால் கவி' என்பதற்கு - மேகங்கள்படிகின்ற வென்று உரைப்பாரு முளர்; பெருமையோடு கவிந்த வென்பர் ஒருசாரார்.

இனி, இச்செய்யுளை ஊன்றிநோக்குமிடத்து, இது இந்நூலாசிரியர்செய்ததன்றி வேறியாரோசெய்து இந்நூலினிடையே சொருகுகவியாகச் சேர்த்த தென்றுசொல்லவும் இடமுண்டு; இத்தன்மையதை வடநூலார் 'ப்ரக்ஷிப்தம்' என்பர். இங்ஙனம் ஊகித்தற்குஉரிய காரணங்கள்:—(க)இவ்வகைப்பிர

பந்தத்திற் செய்யுள்தோறும் பிரபந்தத்தலைவன்பெயரையேனும் தலப்பெய
ரையேனுங் கூறும் மரபிற்கு மாறாக 'உத்தமர்' என்ற பொதுப்பெயரைக்
கூறுதல். (௨)கீழ்ச்செய்யுளோடு இச்செய்யுள் ஒருசார் கூறியதுகூறலாதல்.
(௩)இப்பிரபந்தச்செய்யுள்களின்தொகை ௧௧௦-எனமுழுத்தொகையாகாது,
இச்செய்யுளைச்சேர்க்குமிடத்து ௧௧௧ - எனச் சொச்சத்தொகை கொள்ளு
தல்; (௪)'நீளம்' என்ற சொல்லைக் கடைநிலைத்தீபகமாக முன்வாக்கியங்களி
லும் 'தீர்க்கம்' என்பதை இடைநிலைத்தீபகமாக முன்பின்வாக்கியங்களிலுங்
கூட்டுதற்கு இடமின்றி 'அகலம்' என்ற சொல் இடையிடையேவந்துநின்று
'பாற்கடல்.' 'பணி' என்றவற்றிற்கு இன்னஅளவென விளங்கவொட்டா
மை. (௫)'மாற்கவி' என்ற சொற்றொடரும் 'தீர்கம்' என்ற சொற்பிரயோக
மும் சிறவாமை.(௬)அவற்றோடு,'சிறந்தகலம்,''ஏற்கவின்'என்ற தொடர்கள்
சொல்லமைப்பிலும் பொருள் வளத்திலுஞ்சிறப்பின்றித் திவ்வியகவியான
ஐயங்காரது செய்யுள்நடையழகிற்கு ஏலாமை. (௭)'வானளவும்' என்றது
பயனின்றிநிற்றல். இவை முதலாக 'குன்றக்கூறல், மிகைபடக்கூறல், கூறி
யதுகூறல், வழூஉச்சொற்புணர்த்தல், மயங்கவைத்தல், வெற்றெனத்தொடு
த்தல், நின்றுபயனின்மை' என்ற நூற்குற்றங்களும், பிறவும் உய்த்துணர்
ந்துகொள்க. ஐயங்காரது செய்யுள்களின் சொற்பொருள்வளங்கள் "தே
னையு மமுதையு மனைய தீஞ்சொ லோர்ந், தானையின்கன்றென வமைக்கும்
பாடலான் ,ஏனைய பாட லொன்றேனு மோதிலான்;பூனைபோல்வஞ்சனைப்
புந்திகொண்டிலான்" என்றுகொண்டாடும்படியிருத்தல், பிரசித்தம். (௬)

௭. அடித்தலமந்தவதலம் பொருதிரையாழிவையங்
கடித்தல நேமிக்கிரியுடையாடை கபாலிமுன்னாண்
மிடித்தலமந்தொழித்தானரங்கன் விழியிருகோண்
முடித்தலமண்டமுக டினியாமென்மொழிவதுவே.

(இ - ள்.) முன் நாள் - முற்காலத்தில், கபாலி - (பிரமனது) தலையோ
ட்டை(க் கையிலே) யுடையவனாகிய சிவன், மிடித்து --(அப்பிரமனது சாப
த்தால்) வறுமையுற்று, அலமந்தது - (கண்ட இடமெங்கும் இரந்து) திரிந்து
வருந்தியதை, ஒழித்தான் - போக்கியருளியவனான,அரங்கன் - திருவரங்க
நாதனுக்கு,—அடி தலம் - திருவடிகளிருக்குமிடம், அந்த அதலம் - அந்த
[கீழுலகமாகிய] அதலலோகமாம்; கடி தலம் - திருவரையிருக்குமிடம்,
பொரு திரை ஆழி வையம்-மோதுகின்ற அலைகளையுடைய கடலாற் சூழப்
பட்ட பூலோகமாம்; உடை ஆடை-(அத்திருவரையில்) உடுக்கப்படுவதாகிய
வஸ்திரம், நேமி கிரி - (அப்பூலோகத்தைச் சூழ்ந்திருக்கின்ற) சக்கரவாள
பர்வதமாம்; விழி - திருக்கண்கள், இரு கோள் - சூரியசந்திரர்களாம்; முடி
தலம் - திருமுடியிருக்குமிடம், அண்டம் முகடு - அண்டகோளத்தின் உச்சி
யாம்; (என்றால்), இனி யாம் மொழிவது என்-(அப்பெருமானது திருவுருவ
த்தின் பெருமையைக்குறித்து) இனி நாம் சொல்லத்தக்கது யாதுஉளது!

எம்பெருமானது விராட்ஸ்வரூபத்தின் அல்லது விசுவரூபத்தின் மகத்து
வத்தைச் சிறிதெடுத்துக்காட்டி, அது முழுவதுங்கூறுதற்கரிதென்று அதன்
அருமைபெருமைகளை விளக்கியது, இது.

அதலம் - கீழேழுலகங்களி லொன்று;இங்கே, கீழுலகமென்றமாத்திர
மாய்நின்றது.'அந்த' என்று சேய்மைச்சுட்டாற் குறித்தனர், அது பலயோ
சனைதூரங்கட்குஅப்பாலுள்ளதனால்; உலகறிசுட்டுமாம். வையம் - (பொருள்
களை) வைக்குமிட மெனக் காரணப்பொருள்படும். நேமிக் கிரி - ஏழுமகா
த்வீபங்களைச் சூழ்ந்திருக்கின்ற ஏழு பெருங்கடல்களுக்கும் அப்பாற் கோட்
டைமதில்போலச் சூழ்ந்துள்ளதொரு பெருமலை. சக்ராகாரமாக[வட்டமாக]

ப் பூமியைச் சூழ்ந்திருத்தல்பற்றி,அதற்குச் சக்ரவாளமென்று பெயர். அதன் பரியாயநாமமாக 'நேமிக்கிரி' என்றார். நேமி - சக்கரம், கிரி - மலை. உடை - உடு - பகுதி: ஐ - செயப்படுபொருள்விகுதி. அலமந்தது - இறந்தகாலத்தொழிற்பெயர்; அலமா - பகுதி; ஈறுகுறுகிற்று. ஒழித்தான்-பெயர். கோள்-க்ரஹமென்ற வடமொழிப்பெயர்க்கு ஏற்ற தமிழ்ச்சொல். இருசுடரிற் சூரியன் வலக்கண்ணும், சந்திரன் இடக்கண்ணுமாம். தலம், கடி, நேமி, கிரி, கபாலீ, அதலம், அண்டம் - வடசொற்கள்.

சிவபிரான்இரத்தலைத் திருமால் ஒழித்த கதை:—ஒருகாலத்திலே, பரமசிவன் தன்னைப்போலவே பிரமனும் ஐந்துதலையுடையனாயிருப்பது பலரும் பார்த்துமயங்குதற்கு இடமாயிருக்கின்றதென்றுகருதி அவனது சிரமொன்றைக் கிள்ளியெடுத்துவிட, அக்கபாலம் அப்படியே சிவன்கையில் ஒட்டிக்கொள்ளுதலும், அவன் 'இதற்கு என்செய்வது?' என்று கவலைப்பட, தேவர்களும் முனிவர்களும்'இப்பாவந்தொலையப் பிச்சையெடுக்கவேண்டும்: என்றைக்குக் கபாலம் நிறையுமோ, அன்றைக்கே அது கையைவிட்டுஅகலும்' என்றுஉரைக்க, சிவபெருமான் பலகாலம் பலதலங்களிலுஞ் சென்று பிச்சையேற்றுக்கொண்டே வருந்தித் திரிந்தும் அக்கபாலம் நீங்காதாக, பின்பு ஒருநாள் பதரிகாச்சிரமத்தை யடைந்து அங்குஎழுந்தருளியுள்ள நாராயணமூர்த்தியை வணங்கி இரந்தபோது, அப்பெருமான் 'அக்ஷயம்' என்று பிக்ஷையிட, உடனே அது நிறைந்து கையைவிட்டுஅகன்றது என்பதாம். திருமால் தனது திருமார்பின் வேர்வைநீரைக்கொண்டு அக்கபாலத்தை நிறைத்து ஒழித்ததாகவும் வரலாறு உண்டு. இச்சரித்திரமுகத்தால், எம்பெருமானுடைய பரத்வத்தை வெளியிட்டவாறு. (எ)

அ. திண்சுடராழியரங்கேசர் திக்குத்திருச்செவியின்
மண்கழலிற் சத்யலோகஞ்சிரத்தின் மருத்துயிரிற்
றண்கதிருள்ளத்தில்வானுந்தியிற் செந்தரணிகண்ணி
லொண்கனலிந்திரன்வாழ்முகப்போதிலுதித்தனரே.

(இ - ள்.) திண் சுடர் ஆழி அரங்கேசர் - வலிமையையும் ஒளியையுமுடைய சக்கராயுதத்தை யேந்திய திருவரங்கநாதரது, திரு செவியில் - அழகிய காதிலிருந்து, திக்கு - திக்குகளும், கழலில் - திருவடிகளிலிருந்து, மண் - பூமியும், சிரத்தில் - திருமுடியிலிருந்து, சத்யலோகம்-சத்தியலோகமும், உயிரில் - உயிரிலிருந்து, மருத்து - வாயுவும், உள்ளத்தில் - மனத்திலிருந்து, தண் கதிர் - குளிர்ச்சியான கிரணங்களையுடைய சந்திரனும், உந்தியில் - திருநாபியிலிருந்து, வான் - ஆகாயமும், கண்ணில் - திருக்கண்ணிலிருந்து, செம் தரணி - செந்நிறமுள்ள சூரியனும், வாழ் முகம் போதில் - சிறப்புற்ற தாமரைமலர்போன்ற திருமுகத்திலிருந்து, ஒள் கனல் இந்திரன் - ஒளியுள்ள அக்கினியும் இந்திரனும், உதித்தனர் - (ஆதியில்) தோன்றினார்கள்; (எ - று.)

இது-புருஷஸூக்தத்திற் கூறிய விஷயம்; "மறைப்பொருள்." அங்குக் கூறிய முறை - 'தண்கதிர் உள்ளத்தில்,கண்ணில் தரணி,முகத்தில் இந்திரன் கனல், உயிரில் மருத்து, உந்தியில் வான், சிரத்திற் சத்யலோகம், கழல்களில் மண், திக்குக்கள் திருச்செவியில்' என்றுஉள்ளது. இவ்விஷயம், இதிஹாஸபுராணாதிகளிலும் காணப்படுகின்றது. 'கண்ணிலே சூரியனும், மனத்திலே சந்திரனும், பிராணனிலே வாயுவும், முகத்திலே அக்கினியும், நாபியிலே அந்தரிக்ஷமும், சிரத்திலே மேலுலகமும், கர்ணத்திலே திசையும், பாதங்களிலே பூமியும் உண்டாயின' என்றது, விஷ்ணுபுராணம். பிறவும் இங்ஙனம் கண்டுகொள்க; விரிப்பிற் பெருகும்.

திக்கு, மண், சத்யலோகம், மருத்து, தண்கதிர், வான், தரணி, கனல், இந்திரன் என அஃறிணையும் உயர்திணையும் கலந்துவெண்ணி, மிகுதியால், 'உதித்தனர்' என உயர்திணைப்பன்மைமுடிபைப் பெற்றன; "பார்ப்பா ரற வோர் பசுப்பத்தினிப்பெண்டிர், மூத்தோர் குழவி யெனுமிவரை" என்றவிடத்துப் போல. திக்கு மண் சத்யலோகம் வான் என அஃறிணைப்பொருள் நான்காக, மருத்து தண்கதிர் தரணி கனல் இந்திரன் என உயர்திணைப் பொருள் ஐந்தாதலால் மிகுதி யெனப்பட்டது; அன்றி, அஃறிணையும் உயர் திணையும் விரவிச் சிறப்புப்பற்றி உயர்திணையால்முடிந்தன வெனினும் அமையும்; 'பொன்னனும் குதிரையும் வந்தார்கள்' என்றாற்போல: அஃறிணையினும் உயர்திணை சிறந்ததென்பது வெளிப்படை. இத்திணைவழுவமைதியை "திணை பால் பொருள் பல விரவின சிறப்பினும், மிகவினும் இழிபினும் ஒருமுடிபினவே" எனக் கூறினர் நன்னூலார். மருத்து, தண்கதிர், தரணி, கனல் என்ற சொற்கள்-தேவர்களைக் குறித்தலால், உயர்திணையாம்; ஆகவே, 'உதித்தனர்' என்ற பாடம் வழு வென்றுகொண்டு 'உதித்தன' என்றுதிருத்துதல் குற்சிதமாதலுணர்க. இனி, ப்ரத்யேகாந்வயமாக, 'உதித்தனர்' என்ற முற்றை அதததற்குஏற்ப 'உதித்தன,' 'உதித்தது', 'உதித்தனன்' என மாற்றித் தனித்தனிகூட்டிமுடித்தலும் இலக்கணமே.

ரங்கேசர், திக், ஸத்யலோகம், ப்ரஸ், மருத், தரணி, இந்த்ரன், முகம்- வடசொற்கள். ரங்க+ஈசர்=ரங்கேசர்: வடமொழிப்புணர்ச்சி, குணசந்தி; அ ஆ முன் இ ஈ வரின், அவ்விரண்டுங் கெட ஓர்ஏகாரம்தோன்றும். 'செவியில்' முதலியவற்றில், இல் - ஐந்தனுருபு, நீக்கப்பொருளது. திருவை மற்றைத்திருவவயவங்களுக்குங் கூட்டுக. சத்யலோகம் - மேலேழுலகங்களுள் மேலது; அதுவே பிரமலோகம். தண் கதிர் - பண்புத்தொகை யன்மொழி. கனல் இந்திரன் - உம்மைத்தொக்குப் பன்மைவிகுதிபெறாததனால், உயர்திணைப் பெயர்ச்செவ்வெண். வாழ்தல் - மேம்படுதல். முகப்போது - முன் பின்னாகத்தொக்க உவமைத்தொகை. 'வாழ்' என்பதைப் போதிற்குஅடைமொழியாக்கி, இங்கே போதிற்கு வாழ்வு - காலபேதத்தால் வாடுதலும் குவிதலும் இன்றி எப்பொழுதும் மலர்ந்தபடியேவிளங்குத லென்னலாம். அங்ஙனம் ஒருமல ருண்டானால் அதுவே எம்பெருமானது திருமுகத்திற்கு உவமையாகு மென இல்பொருளுவமை கூறியவாறும். அரங்கரது நகைமுகத்திற்கு உவமையாதற்கு ஏற்ப 'வாழ்போது' என்றன ரென்க. இனி, 'வாழ்' என்ற வினைத்தொகையைக் காரணப்பொருளதாக்கி முகத்தோடு இயைத்து, (அடியவர்) பேரின்பவாழ்வடைதற்குக் காரணமானமுக மென்றலுமாம். திண்மை - ஆழிக்கு அடைமொழி. ஆழிக்குத் திண்மை - எவ்வளவுவலிமையையுடைய கொடியவரையும் தவறாது அழித்தல் முதலியன. ஆழிக்குச் சுடர் - ஆயிரங்கோடிதிவாகரன்போ லொளிர்தல். இனி, திண் சுடர் - மிக்கவொளி யென்னவுமாம். தரணிக்குச் செம்மை - இனம்விலக்க வந்ததல்லாத இயற்கையடைமொழி. இந்த்ரன் என்பது - பரமைசுவரியமுடையவ னென்று பொருள்படும். செய்யுளோசையின்பொருட்டு, 'சத்தியலோகம்' என்னாது 'சத்யலோகம்' என்றார். (அ)

௯. புரமாயிரந் திருக்கண்மலராயிரம் புண்டரிகக்
கரமாயிரங் கழற்கான்மலராயிரங் கண்ணிமுடிச்
சிரமாயிரந் திருநாமமுமாயிரஞ் செய்யகையி
லரமாயிரங்கொண்டதிண்டிறலா ழியரங்கருக்கே.

(இ - ள்.) செய்ய கையில் - சிவந்த (வலத்) திருக்கையிலே, அரம் ஆயிரம் கொண்ட திண் திறல் ஆழி - ஆயிரம்அரங்களைக்கொண்ட மிக்கவலிமை

யையுடைய சக்கராயுதத்தை யேந்திய, அரங்கருக்கு - திருவரங்கநாதர்க்கு, —புரம் ஆயிரம் - திருமேனி ஆயிரமாம்; திரு கண் மலர் ஆயிரம் - செந்தாமரைமலர்போன்ற திருக்கண்கள் ஆயிரமாம்; புண்டரிகம் கரம் ஆயிரம் - செந்தாமரைமலர்போன்ற திருக்கைகள் ஆயிரமாம்; கழல் கால் மலர் ஆயிரம் - வீரக்கழலையணிந்த செந்தாமரைமலர்போன்ற திருவடிகள் ஆயிரமாம்; கண்ணி முடி சிரம் ஆயிரம் - மலர்மாலையையும் கிரீடத்தையுந் தரித்த திருமுடிகள் ஆயிரமாம்; திருநாமமும் ஆயிரம் - திருப்பெயர்களும் ஆயிரமாம்.

* "தோள்களாயிரத்தாய் முடிகளாயிரத்தாய் துணைமலர்க்கண்களாயிரத்தாய், தாள்களாயிரத்தாய் பேர்களாயிரத்தாய் தமியனேன்பெரியவப்பனே" என்றார் நம்மாழ்வார். "வேதஞ்செப்பும், பேராயிரந் திண்பெரும்புயமாயிரம் பெய்துளவத், தாரார்முடியாயிரம்" என்றார் கம்பரும். இதன்கருத்து, மூன்றாஞ்செய்யுளினுரையிற் கூறப்பட்டது.

புரம், புண்டரீகம், கரம், நாமம், அரம் - வடசொற்கள். கண்மலர், கான்மலர் - முன்பின்னாகத்தொக்க உவமத்தொகைகள். புண்டரீகமென்பது வெண்டாமரைக்குப்பெயராக நிகண்டுகளிற்கூறப்பட்டிருப்பினும், 'புண்டரீகாக்ஷன்' என்றஇடத்திற்போல, இங்கே, செந்தாமரையைக் குறித்தது; கொடியின் பெயர், இங்கு, மலர்க்கு இலக்கணை. கழல் - வீரர் தமது வீரத்திற்கு அறிகுறியாகக் காலிலணிவது; வள்ளல்கள் தமது கொடைக்கு அறிகுறியாக அணிவது முண்டு. துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனங்களைத் தான் செய்தருளுதல் விளங்க, எம்பெருமான் திருவடியிற்கழல்கட்டிக்கொண்டிருக்கின்றனனென்க. இனி, கான்மலர் - நறுமணத்தையுடைய மலர்போன்ற, கழல் - திருவடி யென்றலுமாம். கண்ணி - முடியிற்சூடும்மாலை. நாமமுமாயிரம்—இறந்ததுதழுவியஎச்சவும்மை யாதலால், கடைசியில் வைக்கப்பட்டது. அரம்-சக்கரத்தின் ஆர். திண், திறல் - ஒருபொருட்பன்மொழி. ஆழிக்குத் திண்திறலாவது - அசுரர் அரக்கர் முதலிய கொடியவ ரனைவரையும் கருதியமாத்திரத்திலுங்கடுகச்சென்று கருவறுத்து உயிர்கவரும் ஆற்றல். செய்ய- செம்மை யென்னும் பண்பினடியாப் பிறந்த குறிப்புப்பெயரெச்சம். திண்திறல் - வலிய போர்செய்யவல்ல என்றலு மொன்று. கண்ணி - திருத்துழாய்மாலையுமாம். (௬)

௭. முன்னாள்விசும்பும்புவியுந்திசையுமுறைவகுத்த
வந்நான்முகன்றனதாவியெல்லா மலராசனையா
மின்னார்மழைமுகினன்னாகமீதில்விழிதுயில்கூ
ரெங்கநாதனுக்கொருமூச்சென்று வேதமிசைக்கின்றதே.

(இ - ள்.) முன் நாள் - முற்காலத்தில் [மகாப்பிரளயம்நீங்கியவுடனே தான் எம்பெருமானது திருநாபிக்கமலத்திலிருந்து தோன்றியகாலத்தில்], விசும்பும் - ஆகாயத்தையும், புவியும்-பூமியையும், திசையும் - மற்றை யெட்டுத் திக்குகளையும், முறை வகுத்த - (அந்தஎம்பெருமானது திருவயிற்றினுள்ளே தான்கண்ட) கிரமத்தின்படி வகைப்படுத்துச் சிருஷ்டித்த, அ நான்முகன்தனது - நான்குமுகங்களையுடையவனான அந்தப்பிரமனது, ஆவி எல்லாம் - உயிர்முழுவதும் [வாழ்நாளெல்லாம்],—மலர் ஆசனை ஆம்-செந்தாமரைமலரை(த் தான்வீற்றிருக்கும்) பீடமாகவுடையவளான திருமகளாகிய, மின் - மின்னல், ஆர் - பொருந்திய, மழை முகில் - கார்காலத்து மேகம்

* "நமோஸ்த்வநந்தாய ஸஹஸ்ரமூர்த்தயே, ஸஹஸ்ரபாதாக்ஷிசிரோருபாஹவே, ஸஹஸ்ரநாம்நே புருஷாய" என்ற வடநூல்மேற்கோளையுங் காண்க.

[நீலமேகம்] போன்ற திருமேனியையுடையவனுன, நல் நாகம்மீதில் விழி துயில் கூர் எம் நாதனுக்கு - சிறந்த ஆதிசேஷன்மேல் திருக்கண்வளர்ந்தருள்கின்ற நம்பெருமாளுக்கு, ஒரு மூச்சு - ஓர்உயிர்ப்பாம் [ஒரு சுவாசமாம்], என்று—, வேதம் இசைக்கின்றது - வேதம் சொல்லுகின்றது; (எ - று.)

பத்துத்திக்குகளுள் மேலை 'விசும்பு' என்றும், கீழை 'புவி' என்றும், மற்றையெட்டையும் 'திசை' என்றுங் குறித்தார். ஐம்பெரும்பூதங்களுள் முதலதாகிய விசும்பையும், ஈற்றதாகிய புவியையுங் கூறவே, மற்றைப்பூதங்களையுங் கூறியவாருயிற்று. இவற்றைக் கூறியது, மற்றைச் சராசரப்பொருள்களுக்கும் உபலக்ஷணம். அகரச்சுட்டு, பிரசித்திபற்றியது. மிகவிளங்குகின்ற மெல்லிய வடிவுபற்றி, திருமகளை மின்னலென்ருர். மார்பில் திருமகளையுடையநீலநிறமுள்ள திருமால், மின்னல்பொருந்திய நீர்கொண்டகாளமேகம் போல்வன். ஆதிசேஷனுக்கு நன்மை - எப்பொழுதும் பலவகைக் கைங்கரியங்களைச் செய்தலும், அழிவில்லாமையும் முதலியன. இனி, நல்ல பாம்பென்னும்வழக்குப்பற்றி 'நன்னுகம்' என்ருருமாம். ஆவியெல்லாம் ஒருமூச்சு - பிரமனது உயிர்வாழ்க்கைநாளெல்லாம் எம்பெருமானுக்கு ஒரு மூச்சுவிடுங்காலமென்க. இதனுல், மிகநீண்டஆயுளையுடையவனென்று பிரசித்தனுன பிரமனது ஆயுளெல்லை காலவரையறைக்குஉட்படாத திருமாலுக்கு ஒருமூச்சுவிடுங்காலவளவேயென்று எம்பெருமானது மேன்மையை விளக்கியதாம்.

புவி, திஸா, நாகம், நாதன், வேதம் - வடசொற்கள். புவியென்பது வடமொழியில் ஏழாம்வேற்றுமைவிரியாயினும், தமிழிற் பெயர்மாத்திரமாய் நிற்கும். வேதம் என்பது - (அறியவேண்டியவைகளையெல்லாம்) அறிவிப்பது என்று காரணப்பொருள்பெறும்.

'என்நாதன்' என்றது, நம்பெருமாளென்ற திருநாமத்தின் பரியாய நாமமாய்நின்றது; ஆகவே, பிரபந்தவிலக்கணப்படி இச்செய்யுளிற் பிரபந்தத்தலைவனது பெயர் கூறியதாம். முதலடியிலும் மூன்ருமடியிலும் சிறப்புனகரமாகவும், இரண்டாமடியிலும் நான்காமடியிலும் பொதுநகரமாகவும் எதுகையமைத்தனரென்க; இவ்வாறு அமைத்தல், ஒருவகைநயம்: இதனைப் பலவிடங்களிற் காணலாம். இனி, 'என்னுதன்' என்ற பாடமும், என் நாதன் என்றுபிரிந்து, எனக்குத் தலைவனென அத்திருவரங்கநாதனையே குறிக்கும்; மந்நாதனென்பது, இதற்குஏற்ற வடமொழித்திருநாமமாம். (௧0)

௧௧. எண்ணிற்றிகிரிப்பிறப்பிடமானது மெண்ணுமவர்
நண்ணிச்சிறக்கவிருப்பிடமானது நாசமில்லா
விண்ணிற்பதிக்குக்கடைத்தலையானதும் விண்ணவர்தங்
கண்ணிற்சிறந்தது மாநீரரங்கர்தங்கண்ணிலொன்றே.

(இ - ள்.) எண்ணில் - ஆராய்ந்துபார்க்குமிடத்து,—திகிரி பிறப்பு இடம் ஆனதும் - சூரியனுக்குப் பிறந்தஇடமாகியதும், எண்ணுமவர் நண்ணி சிறக்க இருப்புஇடம் ஆனதும் - (தன்னைத்)தியானஞ்செய்யும் அடியார்கள் பொருந்தி மேன்மைபடுதற்குக் காரணமானதும், நாசம் இல்லா விண்ணின் பதிக்கு கடைத்தலை ஆனதும் - (எக்காலத்தும்)அழிதலில்லாத பரமபதத்திற்குச் செல்லும் வழிக்குத் தலைவாயிலாகியதும், விண்ணவர்தம் கண்ணின் சிறந்ததும் - தேவர்களுடைய கண்களைக்காட்டிலும் மேன்மைப்பட்டதும், மா நீர் அரங்கர்தம் கண்ணில் ஒன்றே - சிறந்த காவேரிதீர்த்தத்தாற் சூழப்பட்ட திருவரங்கத்திலே யெழுந்தருளியிருக்கின்றவரான நம்பெருமாளுடைய திருக்கண்களுள் ஒன்றேயாம் [வலக்கண்ணும்]; (எ - று.)

புருஷசூக்தம் முதலியவற்றிற் கூறியபடி சூரியன் எம்பெருமானது திருக்கண்ணிலிருந்து ஆதியில் உண்டானதனால், 'திகிரிப்பிறப்பிடமானது அரங்கர்தங்கண்ணிலொன்று' என்றார்; முன்னும் (அ) "செந்தரணி கண்ணில்" என்றமை காண்க. (எ) "அரங்கன்விழி யிருகோள்," "சந்த்ர ஸூர்யௌச நேத்ரே" என்றபடி எம்பெருமானுக்கு வலக்கண் சூரிய னென்பது பற்றி, மற்றைமூன்றுவிஷயங்கள் கூறுகின்றார். சூரியனைத்தியானித்தல் முதலியனசெய்பவர் இம்மைமறுமைகளிற் பலவகைநன்மைகளையடைந்து மேம்படுதல்பற்றி, 'எண்ணுமவர் நண்ணிச் சிறக்க இருப்பிடமானது' எனப்பட்டது; சூரியபகவானுக்கு அவ்வகைமகிமையிருத்தல், 'ஆதித்யஹ்ருதயம்' முதலியவற்றால் விளங்கும். 'இருப்பிடம்' என்றது, காரணமென்ற பொருளில் வந்தது; இலக்கணைவழக்கு. விருப்பு இடம் என்று எடுத்து, விரும்பப்படுவதாகிய விஷய மென்று பொருள்கொள்ளலுமாம்.

"உறுகால்கிளர்பூதமெலா முகினும், மறுகா நெறி" என்றபடி பலவுமழியுங் கற்பாந்தகாலங்களிலும் பரமபதம் அழியாது நித்தியமாயிருத்தலால், 'நாசமில்லா விண்' என்றார்; "கலங்காப்பெருநகரம்" எனப்பெரியாரும் பணித்தார். ஜீவாத்மாக்கள் அர்ச்சிராதிகதியாகிற மார்க்கத்தாற் பரமபதத்திற்குச் செல்லும்பொழுது சூரியமண்டலத்தைப் பிளந்துகொண்டு அதன்நடுவினூற் செல்லுதலால், 'நாசமில்லா விண்ணிற்பதிக்குக் கடைத்தலையானது' எனப்பட்டது; ("இருளகற்று மெறிகதிரோன் மண்டலத்தூடேற்றி வைத் தேணிவாங்கி, அருள்கொடுத்திட் டடியவரை யாட்கொள்வானமருமூ ரணியரங்கமே," "வெங்கதிர்ப் பரிதிவட்டத் தூடுபோய் விளங்குவாரே," "காரார் புரவியேழ் பூண்ட தனியாழித், தேரார் நிறைகதிரோன் மண்டலத்தைக்கீண்டுபுக்,காராவமுத மங்கெய்தி யதினின்றும், வாரா தொழிவதொன் றுண்டே." "மன்னுங் கடுங்கதிரோன் மண்டலத்தி னன்னடுவு, ளன்னதோ ரில்லியி னூடுபோய் வீடென்னுந், தொன்னெறிக்கட் சென்றார்" என்ற ஆழ்வாரருளிச்செயல்களைக் காண்க.) "அந்தச்சூரியபகவான்தான், இராப்பகல்களின்ஏற்பாட்டிற்குக்காரணமாயும், யோகிகளுக்குச் சகலகிலேசங்களும் விடுபட்டுப்போகுங்காலமாகிய முடிவுகாலத்தில் தேவயானமார்க்கமாயு மிருக்கின்றான்" என்றது, ஸ்ரீவிஷ்ணுபுராணம். தேவயானமெனினும், அர்ச்சிராதிமார்க்கமெனினும் ஒக்கும்; அதாவது - முதலில் அக்கினி, பின்பு முறையே பகல், பூர்வபக்ஷம், உத்தராயணம், வருஷம், காற்று, சூரியன், சந்திரன், மின்னல், வருணன், இந்திரன், பிரமன் என்பவர்களுடைய எல்லைகளாம்: மோக்ஷமடைபவர்கள்போகும்வழி இது. இதன் விவரத்தை, ஸ்ரீபிள்ளைலோகாசாரியர் அருளிச்செய்த அர்ச்சிராதி யென்னும் ரஹஸ்யக்ரந்தம் முதலியவற்றிற் பரக்கக்காணலாம். சூரியமண்டலத்தைக் கீண்டு புக்கு ஊடுருவி அப்பாற்செல்லுதல் அண்டகடாகத்தைப்பேதித்துப் புறப்படுவதற்கு முற்பட்ட தாகையால், சூரியனை முக்திமார்க்கத்திற்குத் தலைவாயி லென்றார். கடைத்தலை=தலைக்கடை: முன்பின்னாகச் சொல்நிலை மாறியது, இலக்கணப்போலி; முதலிலேயுள்ள வாயில் அல்லது முதலாகிய வாயில் என்க. தலை - முதல், கடை - வாயில்.

தேவாதிதேவனாகிய எம்பெருமானுக்கு வலக்கண்ணாகிற சூரியன் அப்பெருமானுக்குஅடிமையாகிற தேவர்களுடைய கண்களினும் மிகப்பலமடங்குசிறத்தலால், 'விண்ணவர் தங் கண்ணிற் சிறந்தது' எனப்பட்டது. மற்றும், "கண்ணாவா னென்றும், மண்ணோர் விண்ணோர்க்குத், தண்ணார் வேங்கட, விண்ணோர் வெற்பனே," "சக்ஷுர்மித்ரஸ்ய வருணஸ்யாக்நே:" என்றபடி மண்ணுலகத்தவர்க்கேயன்றி விண்ணுலகத்தவரான சூரியன்முதலிய தேவர்கட்குங் கண்போன்றவனான எம்பெருமானுக்கு "கண்ணிற்சிறந்த வுறுப்

பில்லை'', "ஸர்வேந்த்ரியாணும் நயநம் ப்ரதாநம்'' என்றபடி சிறந்த கண்ணென்னும்உறுப்பாகின்ற சூரியனை அவ்விண்ணவர்களுடைய கண்ணினுஞ் சிறந்ததென்று சொல்லுதல் ஏற்கும். அன்றியும், "ஜகச்சக்ஷு:'' என்றபடி உலகத்து உயிர்கட்கெல்லாங் கண்ணாயிருக்குந்தன்மை சூரியனுக்குஉளதேயன்றி மற்றைத்தேவர்களுடைய கண்களுக்கு இல்லையாகையால், அரங்கர் தங்கண்ணிலொன்றாகிய சூரியன் விண்ணவர்தங்கண்ணிற் சிறந்ததெனத் தகுவன். "பூவியே ழொருகா லுடைய தேரிலே திருச்சக்கரமொத்துக் காலசக்கரச்செங்கோல்நடாவி ஜ்யோதிஶ்சக்ரவொளிசுருக்கி அக்ஷீணாமீயதேஜோம்ருதத்துக்குஊற்றும் மந்தேஹர்க்குச்செந்தீயும் முக்திமார்க்கத்தலைவாசலும் கண்ணவான்கண்ணிற்பிறந்தகண்மணியும் த்ரயீமயமுமான மண்டலத்திலே'' என்ற ஆசார்யஹ்ருதயம் இங்கு நோக்கத்தக்கது.

திகிரி - வட்டம்: வட்டவடிவான சூரியனுக்கு வடிவுப்பண்பாகுபெயர். நாஶம் - வடசொல். 'நாசமில்லா விண்' எனவே, பரமபத மென நன்கு விளங்கிற்று; சுவர்க்கலோகம்முதலியன கற்பந்தோறும்அழியு மென அறிக. 'விண்' என்று தேவலோகமாகிய சுவர்க்கத்திற்கும் பெயருண்டாதலால், அதனை விலக்குதற்கு 'நாசமில்லா'என்ற அடைமொழி கொடுக்கவேண்டியதாயிற் றென்க. விண் - ஆகாயம்: இங்கே, பரமாகாசம்; இன் - சாரியை. பதி - வழி. விண்ணிற் பதி - நான்கனுருபும்பயனுந்தொக்கதொகை. இனி, 'விண்ணிற்பதி' என்றதை இருபெயரொட்டுப்பண்புத்தொகையாகக் கொண்டு, பரமபதமாகிய நகரமென்றலுமாம்; பதி - ஊர். இன் அல்லது இல் - ஏழனுருபு எனக்கொண்டு, பரமபதமென்ற திவ்யலோகத்தி லுள்ள ஸ்ரீவைகுண்டநகர மென வகுத்துரைத்தலும் அமையும். விண்ணவர்தம்—தம்-சாரியை. கண்ணின், இன் - ஐந்தனுருபு, எல்லைப்பொருளது. காவேரிதீர்த்தத்திற்குச் சிறப்பு - தன்னில்நீராடியவர்க்கும் தன்கரைகளில்வாழ்பவர்க்கும் மாத்திரமே யன்றித் தனதுதீர்த்தத்திற்பரிசித்த காற்றுச் செல்லுமிடமவ்வளவும் உள்ளார்க்கும் முத்திதரவல்ல மகிமை. இருப்பிடம் - உறையுமிடம் என்றுகொண்டு, சூரியனைத்தியானித்தவர் அந்தத்தியானத்தின்பயனாகச் சூரியலோகத்தையடைவ ரென்னும் பொருளைக் கூறியதாக்கலு மொன்று. மா நீர் - அரங்கத்திற்கு அடைமொழி. அரங்கர்க்கு அடைமொழியாக்கி, சிறந்த தன்மையையுடைய [திருக்கல்யாணகுணங்களையுடைய] ரங்கநாத ரென்னவுமாம்; இப்பொருளில், நீர் - நீர்மை யென்ற பண்பின் அடி.

௩௨. புறக்குன்றுபுல்லிதழ் முந்நீர்பிரசம் பொருவில்செம்பொன்
னிறக்குன்றுகன்னிகை யெண்கிரிதாது நிலமதனுட்
பிறக்குந்துகண் முதுமாசுணநாளம் பிரமன்வண்டு
சிறக்குந்திகிரியரங்கேசருந்திச்செழுமலர்க்கே.

(இ - ள்.) சிறக்கும் - மேன்மையுற்ற, திகிரி-சக்கராயுதத்தை யேந்திய, அரங்க ஈசர் - திருவரங்கநாதரது, உந்தி - திருநாபியில் தோன்றிய, செழு மலர்க்கு - செழுமையான தாமரைமலர்க்கு,—புறம் குன்று- (பூமியைச்சூழ்ந்த கடலுக்கு) அப்பால் (மதில்போலச்) சூழ்ந்திருக்கின்ற சக்கரவாளபர்வதம், புல் இதழ் - புறவிதழாம்; முந்நீர் - கடல், பிரசம் - தேனும்; பொருவு இல் - ஒப்பில்லாத, செம் பொன் - சிவந்தபொன்மயமான, நிறம் குன்று - ஒளியையுடைய மகாமேருபர்வதம், கன்னிகை-கொட்டையாம்; எண் கிரி - அஷ்ட குலபர்வதங்கள், தாது-அகவிதழ்களாம்; நிலம் - பூமி, அதனுள் பிறக்கும் துகள்-அம்மலரினுள்ளே தோன்றும் மகரந்தப்பொடியாம்; முது மாசுணம் - பழமையான பெரும்பாம்பு [ஆதிசேஷன்], நாளம் - தண்டாம்; பிரமன் - பிரமதேவன், வண்டு - வண்டாவன்; (எ - று.)

இதிற் கூறிய உவமை, தோற்றங் காரணமாகக் கற்பித்தது; மெய்யுவமை. திருமாலின் திருநாபியினின்று பிரமனுடன்தோன்றிய அண்டகோளத்தையே நாபித்தாமரைமலராகக் கொண்டு கற்பனைகூறலாயினர். 'எல்லாத்தீவுகட்கும் நடுவிலுள்ளதான ஜம்பூத்வீபத்திற்கு நடுவில், மேருவென்கிற சுவர்ணபர்வதமானது-எண்பத்துநாலாயிரம்யோஜனை உயரமுள்ளதும், பதினாறாயிரம்யோஜனை பூமிக்குள்ளே உருவியதும், முப்பத்தீராயிரம்யோஜனை தலையில்விரிந்ததும், பதினாறாயிரம்யோஜனை அடியில்விரிந்ததுமாகி, பூமியென்னுந் தாமரைமலர்க்குக் கர்ணிகைபோல விளங்குகின்றது' என்றது, ஸ்ரீவிஷ்ணுபுராணம். ("கமலமென்பொகுட்டின், நடுவுறை மேருவெனும்வரை யுடைத்தாய் நாவலந்தீவு வாய்த்திடுமே" என்ற ஸ்ரீபாகவதத்தையும்,"பூமியென்னுங் கமலத்தின் பொகுட்டுப் போலும் பொலங்கிரி" என்ற மகாபாகவதத்தையும், "விண்ணுயர் சம்புத்தீவி னடுவுநின்ற மேருவரை செங்கமலப்பொகுட்டுப்போல, நண்ணும்" என்ற கந்தபுராணத்தையும் காண்க.) புல் இதழ்- (மலரின் வெளியே) புல்லுகின்ற [சார்ந்துள்ள] இதழ் என வினைத்தொகை; புல்லுதல் - சார்தல். இனி, (நிறம் மணம் மென்மை அழகு இவற்றில் அகவிதழ்போலச் சிறப்புறாமையாற்) புல்லிதாகிய இதழ் எனப் பண்புத்தொகையுமாம்; புல்லிது-புன்மையுடையது: இப்பொருளில், புல் - புன்மை யென்ற பண்பின் அடி; புன்மை - சிறுமை. அண்டத்திற் பூமி கடல்களுக்குப் புறத்தேயுள்ள குன்றைப் புறவிதழென்றும், அவற்றினகத்திலுள்ள குன்றுகளை அகவிதழென்றுங் கூறினார். கடல், திரவபதார்த்தமாதலால், இங்கே தேனெனப்பட்டது. மகாமேருவைக் கொட்டையென்றது, நிறமும்,"பரந்தும்பர்நிமிர்ந்திடு பைம்பொன்வரை"என்றபடி உயர்ந்து தலைவிரிந்த வடிவமும் பற்றி.எண்கிரி - மால்யவாந், கந்தமாதநம், நிஷதம், ஹேமகூடம், இமயம், நீலம், சுவேதம், சிருங்கம் என்பன: சிறிது வேறுபடக் கூறுதலு முண்டு. பூமி, துகள்மயமாதலால், இங்கே பூந்தாதெனப்பட்டது. இனி, தாது - கேஸரமென்றும் கிஞ்ஜல்கமென்றுங் கூறப்பட்டு இதழ்களின்உட்புறத்திலே கர்ணிகையைச்சுற்றி மெல்லியகம்பிகள்போலவும் பட்டுநூல்கள்போலவுமுள்ள பூந்தாதுஎன்றும், அத்தாதிற்பிறக்குந்துகள் - புஷ்பதூளியெனப்படும் மகரந்தப்பொடியென்றும் உரைப்பாரும் உளர். தேன் - மலரினுள்ளே யுள்ளது. மகாமேருவைச் சார்ந்துள்ள மலைகளைக் கேஸரபர்வதமென வழங்குதலுங் காண்க. ஆதிசேஷனை நாளமென்றது, உள்துளையுள்ள நீண்ட வடிவுபற்றி; ("தண்ணந்தாமரைத்தாளெனத் தடக்கையாற் பிலத்தில், நண்ணுஞ் சேடனை யெடுத்து" என்றார் நைடதத்தும்.) கீழே யிருந்து உலகத்தைத்தாங்குகின்ற ஆதிசேஷன், உலகமாகிய தாமரைமலர்க்குக் காம்பாவன். இத்தாமரைமலர்க்கு மேலிடமெனத்தக்க சத்தியலோகத்தில் வாழ்தலாலும், எப்பொழுதும் வேதகீதஞ்செய்துகொண்டிருத்தலாலும், பிரமனை வண்டெனலாயிற்று; "வண்டா யயனான்மறைபாட மலர்ந்த தொரு தாமரைப்போது, பண்டாலிலையின்மிசைக்கிடந்துபாரு நீரும்பசித்தான்போ, லுண்டா னுந்திக்கடல் பூத்தது" என்றார் கம்பரும். திருமாலின் திருநாபியை, இவ்வகைப்பெருந்தாமரைமலரைப்பூத்தவொரு பெருநீர்நிலையாகக் கொள்க. வண்டுக்கு ரீங்காரம்போல, பிரமனுக்கு வேதங்களை முகங்களாற் பாடுதல். மலரின்மேலிடத்தில் ஏகதேசத்தில் வண்டு மொய்த்தல்போல, அரங்கேசருந்திச்செழுமலரின்மேலே ஏகதேசத்திற் பிரமன் அடங்கிக்கிடக்கின்றானென, திருமாலினது திருநாபிக்கமலத்தின் பெருமையைத் தெரிவித்தார்.

முந்நீர் - படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் மூன்று நீர்மைகளையுடையது; அல்லது, ஆற்றுநீர் ஊற்றுநீர் மழைநீர் என்னும் மூன்றுவகை

நீரை யுடையது; பண்புத்தொகை யன்மொழி. கன்னிகை - பொகுட்டு: கர்ணிகா என்ற வடசொல்லின் சிதைவு. கிரி, நாளம், ப்ரஹ்மா - வடசொற்கள். ஆதிசேஷன் பிறப்பிறப்பில்லாத நித்ய னாதலால், 'முதுமாசுணம்' என்றார்; தொன்றுதொட்டுள்ள மகாநாக மென்க. (௧௨)

௧௩. இருகூலமும்பொருமாநீரரங்கத்திலெந்தை யந்தண்
முருகூர்கமலமுனியாய்வகுக்கு முறைமையினாற்
புருகூதனுக்குத்திருத்தம்பியாகிப்புரக்கு முமை
யொருகூறுகொண்டவரனாயழிக்கு முகாந்தத்திலே.

(இ - ள்.) இரு கூலமும் - இரண்டுபக்கத்துக் கரைகளையும், பொரு - மோதி யுடைக்கின்ற, மா நீர் - மிகுதியான (காவேரி) நீர்ப்பெருக்கினாற் சூழப்பட்ட, அரங்கத்தில் - திருவரங்கத்திலே எழுந்தருளியிருக்கின்ற, எந்தை - எம்பெருமான் [நம்பெருமாள்],—அம் - அழகிய, தண் - குளிர்ச்சியான, முருகு ஊர் - வாசனைவீசுகின்ற,கமலம் - தாமரைமலரில்தோன்றிய, முனி ஆய் - பிரமனாகி,முறைமையினால் வகுக்கும் - கிரமப்படி (உலகங்களையும் அவற்றிலுள்ள சராசரங்களையும்) படைத்தருள்வன்;புருகூதனுக்கு திருதம்பி ஆகி - தேவேந்திரனுக்குச் சிறந்த தம்பியாய்த் தோன்றி [உபேந்திரமூர்த்தியாகி], புரக்கும் - காத்தருள்வன்; உமை ஒரு கூறு கொண்ட அரன் ஆய் - பார்வதியை ஒருபாகத்திலே [தனதுஉடம்பின் இடப்பக்கத்திலே] வைத்துக்கொண்ட சிவனாகி, உக அந்தத்தில் - யுகமுடிவுகாலத்தில் [கற்பாந்தகாலத்தில்], அழிக்கும் - அழித்தருள்வன்; (எ - று.)

"ஆக்குமா றயனா முதலாக்கியவுலகங், காக்குமாறு செங்கண்ணிறை கருணையங்கடலாம், வீக்குமா றரனா மவைவீந்தநாண் மீளப், பூக்கு மாமுதலெவ னவன் பொன்னடி போற்றி" என்ற வில்லிபுத்தூரார்பாரதம், இங்கு நோக்கத்தக்கது. பிரமனுக்கும் சிவனுக்கும் அந்தராத்மாவாய்நின்று ஸ்ரீமந் நாராயணன் தானே படைப்புஅழிப்புக்களைச் செய்வ னென்க. இந்த ஒற்றுமைநயம்பற்றியே, ஆழ்வாரும் "சிவனா யயனாய்" என்றும், "முனியே நான்முகனே முக்கண்ணப்பா" என்றும், "தாமோதரனுருவாகிய சிவற்குந் திசைமுகற்கும்" என்றும், "அரனயனென வுலகழித்தமைத்துளனே" என்றும் அருளிச்செய்தார். இவர்கள் எம்பெருமானுக்குச்சரீரஸ்தாநமாக,அவன்தான் ஆத்மாவாக நின்று தொழில்செய்யு மென்க. ('இருந்துபடைக்கும்ஆஸநத்தோபாதி ப்ரஹ்மா' என்றது, நம்பிள்ளையீடு.)திரிலோகாதிபதியான இந்திரன் ஆதியில் அசுரர்கள்நலிதலால் வருந்தித் தேவர்களுடனே திருமாலைச் சரணமடைந்து 'நீ எப்பொழுதும் என்னுலகத்தில் எழுந்தருளியிருந்து என் பகைதவிர்த்து எம்மைப் பாதுகாத்தருளவேண்டும்' என்று வேண்ட, அதற்குஇணங்கிய ஸ்ரீமகாவிஷ்ணு, காசியபமுனிவனது மனைவியாகிய அதிதிதேவியின் வயிற்றில் அவ்விந்திரனுக்குத் தம்பியாய் ஓர் அவதாரமெடுத்துத் தோன்றி உபேந்திரனெனப்பெயர்கொண்டு தேவலோகத்தில் அவ்விந்திரனருகிலேநின்று அவனதுதுயரத்தைத்தீர்த்து அனைத்துயிரையும்பாதுகாத்தருளலாயினனென்ற வரலாறு, இங்கு அறியத்தக்கது. "ஆக்குந்தொழிற்கு விரிஞ்சியைவைத் தழிக்குந்தொழிற்குச் சிவனைவைத்துக், காக்குந்தொழில் தான்கைக்கொளருட்கடவுள்" என்றபடி தானாநிலையில்நின்று காத்தலையும்.பிரமருத்ரர்களுக்கு அந்தர்யாமியாய்நின்று படைத்தல்அழித்தல்களையுஞ் செய்தலால், "உலகம்யாவையுந்தாமுளவாக்கலும், நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா, அலகிலாவிளையாட்டுடையாரவர், தலைவ ரன்னவர்க்கே சரணாங்களே" என்னும்படி முத்தொழிலும் எம்பெருமானுக்கு உரியதாம்.

உபேந்திராவதாரத்தைச் சொன்னது, துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபால நங்களாற் காத்தல்தொழில்நிகழ்த்துதற்பொருட்டு அப்பெருமான்கொண் டருளும் மூர்த்திகளுக்கெல்லாம் உபலக்ஷணம். 'இப்படிபிறந்த பிரமாண்டத் தில், பிரகிருதிஸ்வரூபனும், மக தகங்கார தந்மாத்ரா மகாபூத சரீரகனும், ஜகதீச்வரனுமான விஷ்ணுதேவன் சதுர்முகசொரூபனாய்த் தானே அவதரி த்தான்', 'அந்த அண்டத்தில், விசுவேசுவரனான நாராயணன் பிரமரூபியாகி ரஜோகுணப்ரதாநனாய்த் தேவ அசுர கந்தர்வ மநுஷ்ய பசு பக்ஷி தாவரங்க ளைச் சிருஷ்டித்துக்கொண்டு, அப்ரமேயபராக்ரமனும் ஷட்குணைச்வர்யஸம் பந்நனுமான தானே ஸாத்விககுணப்ரதாநனாய் லீலார்த்தமாக யுகங்கள் தோறும் நாநாவிதமான திவ்யாவதாரங்கள் செய்து கல்பாந்தபர்யந்தமும் ஜகத்தைப் பரிபாலநம்பண்ணிக்கொண்டும், பிரளயகாலத்தில் தாமஸகுண ப்ரதாநனான ருத்ரரூபியாகியிருந்து அதிகபயங்கரனாய்ச் சராசரங்களான அகிலபூதங்களையும் விழுங்கி, மூன்றுலோகங்களையும் ஏகார்ணவமாகப் பண்ணி, ஸஹஸ்ரபணாமண்டலமண்டிதனான ஆதிசேஷனாகிய படுக்கையிலே சயனித்துக்கொண்டு, அப்பால் பிரளயாந்தத்தில் திரும்பவும் எழுந்திரு ந்து பிரமரூபியாய் முன்போலவே பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்தருள்வன். ஷட்குணைச்வர்யஸம்பந்நனான ஜநார்த்தநனொருவனே அந்தந்தச்சொரூபங் களில்நின்று சிருஷ்டி ஸ்திதி சங்காரங்களைச் செய்வதனால், பிரமா விஷ்ணு ருத்ரன்என்கிற திருநாமங்களையடைகின்றான்', 'சகலபூதங்களுக்கும்ஆத்மா வாய் எல்லாவற்றையும் தனக்குச்சரீரமாக வுடையவனானமையாலே, கை கால் முதலானசரீரத்தின்செய்கை சரீரியான ஆத்மாவுக்கு உபகாரகமாவதுபோல் பிரமாதிகள்செய்யுஞ் சிருஷ்டிமுதலானவையெல்லாம் அவனுக்கு உதவி யாகவிருக்கும்" தான் ஸர்வசக்தனாயிருக்கப்பிரமாதிகளை இடையில்வைப்பது எனெனின்,—அவர்களுக்கு இப்படி வரங்கொடுத்திருக்கின்றானாகையால்' என்ற ஸ்ரீவிஷ்ணுபுராணவாக்கியங்கள், இச்செய்யுட்குமேற்கோளாகலாம்.

கூலம், கமலம், முநி, புருஹூதன், உமா, ஹரன், யுகாந்தம் - வட சொற்கள். கமலம் - இங்கே, திருநாபித்தாமரை. முநி - மநநசீலன்: லோக ஸ்ருஷ்டியைக்குறித்து எப்பொழுதும் சிந்தனைகொண்டவன். 'முறைமை யினாற் புருகூதனுக்குத் திருத்தம்பியாகி' என்று இயைத்து, தான் தே வாதிதேவனேயாயிருக்கவும் ஓர்அவதாரவிசேஷத்திலே ஏறிட்டுக்கொண்ட உறவுமுறைமையினால் இந்திரனுக்குத்தம்பியாகி யென்றுஉரைப்பினும்அமை யும். புருஹூத னென்பதற்கு - (யாகங்களில்) மிகுதியாக அழைக்கப்படு தலை யுடையவ னென்பது காரணப்பொருள்; புரு - மிகுதி, ஹூதம்-அழை க்கப்படுதல். தம்பி—தாம் - பகுதி, முதல்குறுகிற்று; பி - முறைப்பெயர் விகுதி. 'இருகூலமும்' என்ற உம்மை - இனைத்தென்றுஅறிபொருளில் வந்த முற்றும்மை. எந்தை வகுக்கும், புரக்கும், அழிக்கும் - செய்யுமென் முற்றுக்கள் ஆண்பாலுக்கு வந்தன; [நன் - வினை - உகூ.] முருகு ஊர்தல் - நறுமணம் பரவுதல்; தேன் நிறைந்து பெருகுதலுமாம். யுக + அந்தம் = யுகா ந்தம்: தீர்க்கசந்தி. இங்கே, யுகமென்றது - இலக்கணையாய், பிரமனது தினமாகிய கற்பத்தையும், அவனது ஆயுளாகிய மகாகற்பத்தையுங் குறிக் கும்: அவ்விரண்டின் இறுதியிலேதான் பிரளயம்உண்டு என்றும், ஒவ்வொரு யுகத்தின்முடிவிலேயாவதுஒவ்வொருசதுர்யுகத்தின்முடிவிலேயாவது பிரள யமில்லை யென்றும் உணர்க: ஆகவே, யுகாந்தமென்பதிலுள்ள யுகமென்பது, கல்ப மகாகல்பங்களின் ஈற்றி லுள்ள சதுர்யுகத்திற் கடைசியுகத்தை யெ ன்றலுமாம். ஹரன் - (பிரளயகாலத்தில் எல்லாவற்றையும்) அழிப்பவன்; சங்காரக்கடவுள். 'முறைமையினால்' என்றதில், 'ஆல்' என்ற மூன்றனுருபு- அடைமொழிப்பொருளது. (௧௩)

௧௪. வாரித்தலமுங்குலபூதரங்களும்வானுமுள்ளே
பாரித்துவைத்தவிவ்வண்டங்கள்யாவும் படைக்க முன்னாள்
வேரிப்பசுந்தண்டுழாயரங்கேசர்விபூதியிலே
மூரிப்புனலிற்குமிழிகள்போல முளைத்தனவே.

(இ - ள்.) வாரி தலமும் - கடல்சூழ்ந்த உலகங்களையும், குல பூதரங்களும் - குலபருவதங்களையும், வானும் - ஆகாயத்தையும், உள்ளே பாரித்து வைத்த - (தமது) அகத்திலே பரப்பிவைத்துள்ள, இ அண்டங்கள் யாவும் - இந்தஅண்டங்களெல்லாம்,—முன் நாள் - ஆதிகாலத்திலே, படைக்க - (எம்பெருமான்) சிருஷ்டிக்கும்போது,—வேரி பசுந் தண் துழாய் அரங்க ஈசர் விபூதியிலே-தேனையுடைய பசுநிறமான குளிர்ந்த திருத்துழாய்மாலையைத் தரித்த அத்திருவரங்கநாதரது லீலாவிபூதியில், மூரி புனலில் குமிழிகள் போல முளைத்தன - பெருவெள்ளத்திற் (குமிழ்த்த) நீர்க்குமிழிகள் போலத் தோன்றின; (எ - று.)

'அண்டங்கள்தாம், அநேகங்களாய், பதினுலுலோகங்களோடே கூடி, ஒன்றுக்கொன்று பதிற்றுமடங்கான எழாவரணங்களாலுஞ் சூழப்பட்டு, ஈச்வரனுக்கு க்ரீடா கந்துக ஸ்தாநீயங்களாய், ஜலபுத்புதம்போலே ஏககாலத்திலே ஸ்ருஷ்டங்களாயிருக்கும்' என்றது, தத்வத்ரயம். "நிற்குநெடுநீத்த நீரின்முளைத்தெழுந்த, மொக்குளேபோலமுரணிற்றவண்டங்க, ளொக்கவுயர்ந்துனுளேதோன்றி யொளிக்கின்ற, பக்கமறிதற்கெளிதோ பரம்பரனே" என்பது, கம்பராமாயணம். "வான்புனலி, னுருவமுறு குமிழி போற் பிரமாண்டமா யுதிக்கும்" என்றது, கூர்மபுராணம். 'இப்படி பஞ்சபூதங்களினலே பிறந்த அண்டம், நீர்க்குமிழிபோலே ஒரு கணப்பொழுதிலே அபிவிருத்தியாயிற்றே யல்லாமல், க்ரமக்ரமமாக அபிவிருத்தியாகவில்லை' என்ற ஸ்ரீவிஷ்ணுபுராணமுங் காண்க. அண்டங்கள் பல வென்பதும், அவையெல்லாம் ஒரேவகையாயிருக்கு மென்பதும், அவையாவும் ஒரேகாலத்தில் முழுமொத்தமாய் உத்பத்தியாயின வென்பதும் இதனால் விளங்கும். விபூதி - செல்வம்: வடசொல். அது - லீலாவிபூதியெனவும், த்ரிபாத்விபூதி யெனவும் இருவகையதெனப்படும். அவற்றில், லீலாவிபூதி - விளையாட்டுக்குரிய செல்வம்; எம்பெருமானுக்குத் திருவிளையாடலெனப்படுகின்ற படைப்புக்காப்புஅழிப்புக்கு உரிய பொருள்: பிரபஞ்சம். த்ரிபாத்விபூதி - எம்பெருமானது செல்வங்களுள் முக்காற்பங்காகவுள்ளது; முத்தியுலகம். மற்றைக்காற்பங்காகவுள்ளது, லீலாவிபூதி. லீலாவிபூதியினும் மும்மடங்குகொண்டது த்ரிபாத்விபூதி யென்க. இச்செய்யுளிற் குறித்த விபூதி - லீலாவிபூதி யென்னலாம்.

'வாரித்தலம்' என்றது, உவர்நீர் கருப்பஞ்சாறு கள் நெய் தயிர் பால் நன்னீர் என்கிற ஏழுசமுத்திரங்களால் முறையே சூழப்பட்டிருக்கின்ற ஜம்பூ பிலக்ஷம் சால்மலம் குசம் கிரௌஞ்சம் சாகம் புஷ்கரம் என்ற ஏழு தீவுகளையும். குலபூதரங்கள் எட்டு, ௧௨ - ஆஞ்செய்யுளி னுரையிற் கூறப்பட்டன. இங்கே, 'குலம்' என்றது, சிறப்பை யுணர்த்தும். பூதரம் என்ற வடசொல்-பூமியைத் தரிப்ப தென்று பொருள்படும்; பூமிக்கு மேலும் கீழும் நின்று அதனை நிலைநிறுத்துதலாலும், நதிகளின் உற்பத்திக்கு இடமாகி நின்று அதுகொண்டு நிலவுலகத்துஉயிர்களைப் பாதுகாத்தலாலும், மலைகள் பூதரமென்று பெயர்பெறும். அண்டத்தையும் அண்டகாரணங்களையும் எம்பெருமான் தானேஉண்டாக்குவன்; அண்டத்திற்கு உட்பட்ட பொருள்களைப் பிரமன்முதலியோர்க்கு அந்தர்யாமியாய் நின்று உண்டாக்குவன்: இவற்றில், முந்தியது - ஸமஷ்டிஸ்ருஷ்டி யெனவும், பிந்

தியது - வ்யஷ்டிஸ்ருஷ்டி யெனவும் படும். இச்செய்யுளிற் கூறியது, ஸமஷ்டிஸ்ருஷ்டி. முந்தினசெய்யுளிற்கூறியது, வ்யஷ்டிஸ்ருஷ்டி. ஆகவே, கீழ்ச்செய்யுளில் 'எந்தை யந்தண்முருகூர்கமலமுனியாய்வகுக்கும்' என்றதனோடு, இச்செய்யுளில் 'அண்டங்கள்யாவும் படைக்க முன்னாள்........முளைத்தன' என்றது மாறுகொளக்கூறலாகாமை யுணர்க.

வாரி - நீர்: வடசொல்; கடலுக்கு இலக்கணை. யா - அஃறிணைப்பன்மைவினாப்பெயர்; இதில் 'வை' விகுதி புணர்ந்துகெட்டது. இங்கு. வினா - எஞ்சாமைப்பொருளது. உம்மை-முற்று. துழாய்- துளஸீ என்ற வடசொல்லின் சிதைவு. அதனாலாகிய மாலைக்குக் கருவியாகுபெயர். மூரி - பெருமை. வேரி - வாசனையும், பசுமை - வாடாமையுமாம். குமிழ்ப்பது குமிழி யெனக் காரணப்பெயர்; இ - கருத்தாப்பொருள்விகுதி: இனி, முகுள மென்ற வடசொல் குமிழி யெனச் சிதைந்த தென்னவுமாம்; மொக்கு ளென்பது, அதன் பொருள்: அது, நீர்க்குமிழிக்கும் பெயராம். (௧௪)

கரு. நெடுங்கடனிற்பது நாயிறுகாய்வது நிற்றலுங் கா
லொடுங்கிநடப்பதுந் தண்கார்பொழிவது மூழிதனிற்
சுடுங்கனல்பற்றிச்சுடாதேயிருப்பதுந் தும்பைபுனைந்
தடுங்கனலாழியரங்கேசர்தந்திருவாணையினே.

(இ - ள்.) நிற்றலும்-நாள்தோறும்,நெடுங் கடல் நிற்பதும்-பெரிய கடல் (மேன்மேற்பொங்கியெழாமல்) ஒருநிலையில் அடங்கிநிற்பதும், நாயிறு காய்வதும்-சூரியன் (தவறாமல்வந்து) வெயில்காய்வதும்,கால் ஒடுங்கி நடப்பதும்-காற்று (உலகம்பொறுக்கும்படி) அடங்கிவீசுவதும், தண் கார் பொழிவதும்-குளிர்ச்சியான மேகங்கள் (காலத்தில் வந்து) மழைபொழிவதும்,ஊழிதனில் சுடும் கனல் பற்றி சுடாதே இருப்பதும்-கற்பாந்தகாலத்தில் (உலகத்தைச்) சுட்டெரிக்கின்ற படபாமுகாக்கினி (அதற்குமுன்பு உலகத்திற்) பற்றிக்கொண்டு (அதனைச்) சுட்டெரித்தழியாமல் (கடலிடையே அடங்கி) இருப்பதும், (ஆகிய இவையெல்லாம்), தும்பை புனைந்து - தும்பைப்பூமாலையைச் சூட்டிக்கொண்டு, அடும் - (அசுரர்முதலிய கொடியவர்களை) அழிக்கின்ற, கனல் ஆழி - அக்கினிபோலச் சுவாலைகளைவீசுகின்ற சக்கராயுதத்தை யேந்திய, அரங்கேசர்தம் - திருவரங்கநாதரது, திரு ஆணையினே - சிறந்த கட்டளையினாலேயாம்; (எ - று.)

சமுத்திரராஜன்முதலியோர் தம்தமக்கு எம்பெருமான் கட்டளையிட்ட தொழிலைத் தாம்சரிவரச்செய்யாவிட்டால் அப்பெருமான் சீறித் தம்மைத் தண்டிப்பனே வென்று மிகவும் அஞ்சித் தம்தம்தொழிலில் ஜாக்கிரதையுள்ளவரா யொழுகுகின்றன ரென்பது கருத்து. இது, மற்றைத்தேவர்கட்கும் உபலக்ஷணம். ஆதலால், எம்பெருமானது ஸர்வேச்வரத்வம் கூறியவாறும்; ஸர்வநியாமக னிவனென்க. இதனால், எம்பெருமானது வரம்பிலாற்றல் கூறப்பட்டது. "கூரெயிற்றுடலங்கூற்றங்கொல்வதுங், கார்மழை பொழிவதுங் கதிரெறிப்பதும், மாருதமுளர்வதும் வாரிநிற்பதும், ஆரழல் சுடலு.மென்னாணை யாகுமால்" என்ற ஸ்ரீபாகவதமும், "சகலதேவதைதமக்கியான்றலைவன் சத்தியமே, நிகரில் சாகரங்கரைகடவாததும் நிவரும், ககனமேகங்கள் சொரிவதுங் கடல்வடவைத்தீ, வெகுவிலாததுமென்னுடைவினைதவாக்கினையே" என்ற மகாபாகவதமுங் காண்க. இவ்விஷயம், தைத்திரீயோபநிஷத்திலும் வருகின்றது. 'ஊழிதனிற்சுடுங்கனல் பற்றிச்சுடாதேயிருப்பதும்' என்றதை உபலக்ஷணமாகக் கொண்டு, மற்றையவற்றிற்கும், கற்பாந்தகாலத்தில் தம்தம்ஆற்றலை மிகுதியாகக்காட்டி அதுகொண்டு உலகத்தையழிக்குந் தன்மையனவான கடலும் நாயிறும் கா

லும் காரும் அதற்குமுன்பு அவ்வாறு அழியாமல் அடங்கிநிற்பது மெனக் கொள்க. இனி, அவை கற்பாந்தகாலத்தில் மிகுதியாகப்பொங்கிப்பரந் தும் அதியுக்கிரமான வெயிலை யெறித்தும் மிகுதியாகவீசியும் மிகுதியான மழையைப் பொழிந்தும் எங்கும்பற்றியும் உலகங்களையழிப்பதும் அவர்கட் டளையினாலேயே யென்பது, அருத்தாபத்தியாற் போதரும். 'தும்பை புனைந்தடுங்கனலாழியரங்கேசர்தந் திருவாணையினே' என்ற சொற்சேர்த்தி யால், அவை அங்ஙனம் அஞ்சிஅடங்கிநிற்பது அப்பெருமானது திருச் சக்கரத்தையும் ஆஜ்ஞாசக்கரத்தையும் நோக்கி யென்பதுந் தோன்றும். "அருளார் திருச்சக்கரத்தா லகல்விசும்புந் நிலனும், இருளார் வினை கெடச் செங்கோல்நடாவுதிர்" என்ற திருவிருத்தத்தையும், "செய் யேல் தீவினை யென் றருள்செய்யு மென்கையார்சக்கரக் கண்ணபிரான்" என்ற திருவாய்மொழியையுங் காண்க. அண்டத்தின் அகத்திலுள்ள எழு கடல்களே யன்றி அண்டத்தின்புறத்திலுள்ள பெரும்புறக்கடலும் அடங்க, 'நெடுங்கடல்' என்றார். நிற்றல் - நித்யம் என்ற வடசொல்லின் சிதைவு; உம்மை - தொறுப்பொருளது. இனி, நிற்றல்என்பதை நில்என்றபகுதியின் தொழிற்பெயராகவும் உம்மையை எண்ணுப்பொருளதாகவுங் கொண்டு, சூரியன் காய்வதும் (ஒருபடிப்பட ஆகாயத்தே) நிற்பது மென்று உரைத் தலுமாம்.

தும்பை யென்ற செடியின்பெயர், அதன் மலர்களினாலாகிய மாலைக்கு இருமடியாகுபெயராம்; இம்மலர்மாலை, போருக்குரிய அடையாளப்பூமாலை யாம்; "அதிரப்பொருவது தும்பையாம்" என்றார் பிறரும். இதனைப் போர் செய்யும்வீரர் தாம்தரிப்பதேயன்றித் தமதுஆயுதங்கட்குஞ்சூட்டுவது மரபா தலால், 'தும்பைபுனைந்தடுங் கனலாழி' எனப்பட்டது. ஆணை - ஆஜ்ஞா என்ற வடசொல்லின் சிதைவு; இன் - ஐந்தனுருபு, ஏதுப்பொருளது; ஈற்று ஏகாரம் - பிரிநிலை. நிற்பது, காய்வது, நடப்பது, பொழிவது, இருப்பது என்ற தொழிற்பெயர்களில், இடைநிலை - எதிர்காலமுணர்த்தாமல் தன்மை யுணர்த்திநின்றது. 'ஆகும்'என வினைமுற்று வருவித்துமுடிக்க. 'கனல்ஆழி' என்பதற்கு - கோபாக்கினியையுடைய சக்கர மென்றுஉரைப்பாருமுளர்.

௪௬. ஓலப்புனற்பொன்னிநன்னீரரங்க ருகந்திரியுங்
காலத்தினிற்கொள்ளையண்டமெல்லாமுண்டு காமர்பசுங்
கோலக்குழவியுருவா யகண்டமுங்கோத்தவெள்ளத்
தாலத்திலையின்புடைக்கேதுயில்வ ரகமகிழ்ந்தே.

(இ - ள்.) ஓலம் - ஆரவாரத்தைச் செய்கின்ற, புனல் - நீர்ப்பெருக்கை யுடைய, பொன்னி - காவேரியினது, நல் நீர் - திவ்விய தீர்த்தத்தாற் சூழப் பட்ட, அரங்கர் - திருவரங்கத்தில் எழுந்தருளியிருப்பவரான நம்பெருமாள், உகம் திரியும் காலத்தினில் - கற்பம் மாறுங் காலத்தில், கொள்ளை அண் டம் எல்லாம் உண்டு - மிகுதியான அண்டகோளங்களை யெல்லாம் புசித்து [திருவயிற்றில்வைத்துஅடக்கியருளி], காமர் கோலம் பசுங் குழவி உரு ஆய் - (கண்டவர்) விரும்பத்தக்க அழகையுடைய இளங்குழந்தைவடிவமாய், அக ண்டமும் கோத்த வெள்ளத்து - எல்லாவிடங்களிலும் இடைவிடாதுபரவிய அந்தப்பிரளயவெள்ளத்தில், ஆலத்து இலையின் புடைக்கே - ஆலிலையினி டத்திலே, அகம் மகிழ்ந்து - திருவுள்ளமுவந்து, துயில்வர் - யோகநித்திரை செய்தருள்வர்; (எ - று.)

பிரமன்முதலிய சகலதேவர்களு முட்பட யாவும் அழிந்துபோகின்ற கல்பாந்தகாலத்திலே, ஸ்ரீமகாவிஷ்ணு, அண்டங்களையெல்லாம் தன்வயிற் றில் வைத்துக்கொண்டு, சிறுகுழந்தைவடிவமாய், பிரளயப்பெருங்கடலிலே,

ஆதிசேஷனது அம்சமானதோ ராலிலையின்மீது பள்ளிகொண்டு அறிதுயில் செய்தருள்கின்றன னென்பது, நூற்கொள்கை. இது - எம்பெருமானது செயற்கரியனசெய்யும் விசித்திரசக்தியையும், பரத்வத்தையும், பேரருளுடைமையையுங் காட்டும்.

புனல் - நீர்; ஆறு எனக்கொண்டு, பொன்னி புனல் - காவேரிநதியினது, நல் நீர் - நல்ல நீரினாற் சூழப்பட்ட என்றலுமாம். இனி, பொன்னி-காவேரியாற் சூழப்பட்ட, நல் நீர் - சிறந்ததன்மையையுடைய, அரங்கர் - திருவரங்கத்திலுள்ளவர் என்றலும் அமையும்; அரங்கத்திற்கு நல்லநீர்மையாவது - ஒருமாத்திரைப்பொழுது தன்னிடத்தில்வசித்தவரையும் பரிசுத்தராக்கி வீடுபேற்றிற்குஉரியராகும்படிசெய்யும் மகிமை. உகம் - இங்கே, கற்பம்; (௧௫) "உகாந்தம்" என்றதிற் போல. உகம் திரியும் காலத்தினில் - ஒருகல்பம்முடிந்து மற்றொருகல்பம்வரவேண்டிய சமயத்திலென்க; கல்பாந்தத்திலென்றதாம். உண்டு=உட்கொண்டு. காமர் - காமமருவு என்பதன் விகாரம். காமர், கோலம் என்பன-ஒருபொருட்பன்மொழி யென்றலுமொன்று. பசுமை-இங்கு இளமைமேலது; நீலநிறத்தைக் குறிப்பதாகவுங் கொள்ளலாம். குழவி - இளமையையுடையதெனக் காரணப்பொருள்படும்; குழ - இளமை குறிக்கும்உரிச்சொல்: பகுதி; இ-பெயர்விகுதி. உரு-ரூபமென்ற வடசொல்லின் சிதைவு. அகண்டம் - வடசொல். ஆலத்து, அத்து-சாரியை. புடைக்கே =புடையிலே: உருபுமயக்கம். அகம் - அகத்துஉறுப்பு, அந்தஃகரணம். அகண்டமுங் கோத்த வெள்ளம் - எல்லாப்பொருள்களையுந் தன்வசத்தில் அடக்கிக்கொண்ட பிரளயநீர்ப்பெருக்கு. தான் என்றுமழிவில்லாத நித்தியனென்பது தோன்றப் பள்ளிகொண்டிருப்ப னென்பார், 'அகமகிழ்ந்து துயில்வர்' என்றார். (௧௬)

௧௭. தாற்றுக்கமுகவனஞ்சூழரங்கர்சயனமுகக்
காற்றுப்புலரும்படிமுதல்வீசுங் கறைக்களத்த
னீற்றுச்சிவந்தெழுங் காராழித்தீச்சுடு நீள்கழலி
னாற்றுப்பெரும்பெருக்கண்டமெல்லாங்கொள்ளுமந்தத்திலே.

(இ - ள்.) அந்தத்திலே - கல்பாந்தகாலத்திலே,—தாறு கமுக வனம் சூழ் அரங்கர் - குலைகளையுடைய பாக்குமரங்களையுடைய சோலைகள் சூழ்ந்த திருவரங்கத்தில் எழுந்தருளியிருப்பவரான எம்பெருமானுடைய, சயனம் - படுக்கையாகிய ஆதிசேஷனது, முகம் - (ஆயிரம்) முகங்களினின்றும் எழுகின்ற, காற்று - காற்றானது, முதல் - முதலில், புலரும்படி வீசும்-(எல்லாப்பொருள்களும்) உலர்ந்துபோகும்படி நெடிதாய்வீசும்; (பிறகு அந்த முகக்காற்றிலிருந்து), கறை களத்தன் - நஞ்சுண்டு கறுத்த கண்டத்தையுடையவனான ருத்திரமூர்த்தி, நீற்று சிவந்து எழும்-(எல்லாப்பொருள்களையும்) எரித்துநீறாக்கிக்கொண்டு கோபித்துத் தோன்றுவன்; கார் ஆழி தீ சுடும் - (திருவரங்கநாதர்பள்ளிகொள்ளுகின்ற) கரிய கடலிலேயுள்ள படபாமுகாக்கினி (உலகத்தை) எரிக்கும்; நீள் கழலின் ஆறு பெரும் பெருக்கு-(அத்திருமாலினது) நீண்ட திருவடி பட்டதனா லாகிய துளைவழியாற் பெருகிய பெரும்புறக்கடல்வெள்ளம், அண்டம் எல்லாம் கொள்ளும் - அண்டகோளம்முழுவதையும் தன்னிடத்தில்அகப்படும்படி கவர்ந்துகொள்ளும்.

கீழேழுலகங்களுள்ளுங்கீழதான பாதாளலோகத்தின் கீழே முப்பதினாயிரம்யோஜனையுள்ள இடத்தில், ஸ்ரீமகாவிஷ்ணுவினது ஸம்ஹாரத்திருமேனியாய் விளங்குகின்றவரும் அத்திருமாலுக்குப் படுக்கை குடை சிங்காசனம் மரவடி முதலிய பல வடிவமாகிப் பலவகைக்கைங்கரியஞ்செய்கின்றவருமான ஆதிசேஷன் எழுந்தருளியிருந்து உலகங்களைத் தாங்கிக்கொண்டி

ருக்கின்றனர்; பிரளயகாலத்திலே, முதலில், அந்தஆதிசேஷனுடைய ஆயிரம்முகங்களினின்றும் மிகப்பெரிய மூச்சுக்காற்று எழுந்து நெடுநேரம் நெடுந்தூரம் வீசி, உலகங்களையும் உலகத்துப் பிராணிவர்க்கங்களையும் உலரச் செய்யும்; பின்பு, அந்தச் சுவாசத்திலிருந்து விஷாக்கினிச்சுவாலைகளோடு கூடின அழித்தற்றொழிற்கடவுளான காலாக்கினிருத்திரமூர்த்தி உண்டாகிக் கோபாவேசத்தோடு அதியுக்கிரமாய்க் கீழுலகங்களையெல்லாம் தகித்துக்கொண்டு பூமிக்கும்வந்து அதையும் கொளுத்தி மேலுலகங்களையும் எரித்திடுவர்; மற்றும், கடலிடையேயுள்ளதான படபாமுகாக்கினியும் அச்சமயத்தில் வெளிக்கிளம்பி உலகங்களை ஒருபுறம் எரிக்கும்; பிறகு, அண்டகடாகத்திற்குவெளியேயுள்ளதான பெரும்புறக்கடல்வெள்ளம் பிரவேசித்து உலகங்களையெல்லாம் ஜலமயமாக்கி அழிக்கின்றது என்பது நூற்கொள்கை. மேல் (அசு - ஆஞ்செய்யுள்) "ஓலாழிசூழ்புவியுச்சியிலேந்து முகக்கடையிற், காலான நற்றுணைமூர்த்தியைக் காலு மக்காலமெல்லாம், மேலாவிளங்கும் புவிமீதிலென்றன் விழுத்துணையாம், மாலா மரங்கமணவாளர் கண்டுயில் மாசுணமே" என்பதுங் காண்க. "சேடனுனைத் தூக்கிரவுதாசனன்றூன் சினமுறு முருத்திரனுடனே, மூடிமூவுலகுமெரித்திட," "சேடன், சீர்தரு முகத்தின்றீயாற் சேர்பொருள்யாவுந் தீய, ஓர்தருமண்டந்தானு முலந்து நீறாகுமன்றே," "விடந்திகழ்தீயி னண்டம் வேமியல் விளம்பின் வெய்ய, கொடுந்தழல்பட்டு நீறுங் கோமயபிண்டம்போலாம், அடைந்திடும்பருவநூறுங்கதிர்நெடுங்காற்றக்காற்றா,லுடைந்துமுன்னீறாகண்டமுற்றிடு மணுக்களாயே" என்றது பாகவதம். பிறவும் கண்டுகொள்க.

'அரங்கர்' என்பதை, 'சயனம்,' 'ஆழி,' 'கழல்' என்ற மூன்றனோடுங் கூட்டுக. எம்பெருமான் கடல்கள்தோறுங் கண்வளர்ந்தருள்வ னென்று ஒரு பிரமாணவித்தி யுண்டாகையாலே, "உவர்க்குங் கருங்கடல் நீருள்ளான்" என்றபடி 'அரங்கர் காராழி' எனப்பட்டது. "அண்டத்தைக் கவிந்து ஒன்றிலும்ஒன்றுபத்துமடங்குமிகுதியான ஜலம் அக்கினி வாயு ஆகாசம் அகங்காரம் மகத்தத்துவம் பிரகிருதிதத்துவம் ஆகிய ஏழுஆவரணங்க ளிருக்கின்றன; தேங்காயானது எப்படி நார்மட்டைகளினாற் கவியப்பட்டிருக்கின்றதோ, அப்படி பிரமாண்டம் ஸப்தாவரணங்களினாற் கவியப்பட்டிருக்கின்றது" என்றது, ஸ்ரீவிஷ்ணுபுராணம். இப்படி அண்டகடாகத்தைச் சூழ்ந்திருக்கின்ற முதல் ஆவரணமும், அண்டத்தின் அளவினும் பத்துமடங்குமிக்கதுமான ஜலமே பெரும்புறக்கட லெனப்படுவது. மகாபலிசக்கரவர்த்தியின் செருக்கை யடக்குதற்பொருட்டு வாமநாவதாரங்கொண்டு சென்று அம்மாவலிபக்கல் மூவடிவேண்டிய திருமால் திரிவிக்கிரமனாக ஆகாயத்தை யளாவி வளர்ந்து ஓரடியாற் பூமிமுழுவதையும் அளந்து மற்றோரடியால் மேலுலகத்தை யளத்தற்காக அவ்வடியை நீட்டி மேலேசெலுத்த, அத்திருவடிபட்டதனால் அண்டகடாகத்தின் மேலிடம் சிறிதுஉடைபட, அத்தொளை வழியாகப் பெரும்புறக்கடலின்நீர் அண்டகோளத்தினுள்ளே விழுந்திடலாயிற்று என்பதை, மேல் ௬எ - ஆஞ் செய்யுளில் "அரங்கேசர்பொற்றாள்பட்டுடைந்த வண்ட மேலக்கடாகத் தொளைவழியாக விழும் புனல்" என்பதனாலும் உணர்க. இவ்வாறு திருமாலினது மேலேநீண்ட திருவடி பட்டதனாலாகிய வழியினாற் பெருகும் பெரும்புறக்கடல்வெள்ளத்தை 'நீள்கழலின் ஆற்றுப்பெரும்பெருக்கு' என்றார். இங்கு, 'ஆறு' - வழி; நதியன்று. பிரளயகாலத்திற் பெரும்புறக்கடற்பெருக்கினால் அண்டம் அழிவதை, 'இந்தப்பிரபஞ்சத்தை மூடிக்கொண்டிருக்கிற அண்டரூபமான பிருதிவியானது, அதைச்சூழ்ந்த அப்பில் லயமாகின்றது' என்று ஸ்ரீவிஷ்ணுபுராணத்திற் பிராகிருதப்பிரளயங் கூறுமிடத்துக் கூறியதனா லுணர்க. பெரும்புறக்கடல்நீரை

'நீள்கழலின்ஆற்றுப்பெரும்பெருக்கு'என்று வேறுவகையாற்கூறியது, பிறிதினவிற்சியணி. இனி, திருமால் உலகமளந்தகாலத்தில் மேலே சத்தியலோகத்துச் சென்ற அப்பிரானது திருவடியை அங்கே யுள்ள பிரமன் தன் கைக்கமண்டலதீர்த்தத்தாற் கழுவி விளக்க அந்தஸ்ரீபாததீர்த்தமாகப் பெருகிய பெருக்கே கங்காநதியாதலும், சகரசக்கரவர்த்தியின் குமாரர்கள் அறுபதினாயிரவரும் பாதாளலோகத்திற்குச் செல்லும்பொருட்டு நகங்களாலும் ஆயுதங்களாலும் தோண்டிய பெரும்பள்ளமே பிறகு பகீரதன் மிகமுயன்று கொண்டுவந்த கங்காநதியின் தீர்த்தத்தால் நிரம்பிக் கடலாகிச் சாகரமென்று பெயர்பெற்றதும், பிரளயகாலத்திற் கடல் பொங்கியெழுந்து உலகத்தையழித்தலு மாகிய தன்மைகளைக் கருதி 'நீள்கழலின் ஆற்றுப்பெரும் பெருக்கு அண்டமெல்லாங் கொள்ளும்' என்றதாகவுங் கொள்ளலாம்: நீண்ட திருவடியினின்று தோன்றிய கங்காநதியின் பெரிய வெள்ளமென்க; இவ்வுரையில், ஆறு - நதி.

க்ரமுகவநம், ஶயநம், முகம், களம், அண்டம், அந்தம் - வடசொற்கள். வனம்-இங்கு, ஊரைச்சூழ்ந்த சோலை. சயனமானது முகக்காற்றைப் புலரும்படி முதல்வீசும் என்றும் உரைக்கலாம். பாற்கடல்கடைகையில் அதனினின்றுஎழுந்த அதிபயங்கரமான பெருவிஷத்தைக் கண்டமாத்திரத்தில் அதன் கொடுமையைப் பொறுக்கமாட்டாமல் அஞ்சியோடிய தேவர்களின் வேண்டுகோளின்படி அவ்விஷத்தைச் சிவபிரான் அமுதுசெய்து கண்டத்தில்நிறுத்தியதனால் அக்கழுத்துக் கறுத்தமைபற்றி, சிவபிரானுக்கு விஷகண்டனென்றும் நீலகண்டனென்றும் காளகண்டனென்றும் பெயர்களாயின; அக்கருத்தமைய 'கறைக்களத்தன்' என்றார்: கறை - கறுப்பு, விஷம். நீற்றுதல் - எரித்துச் சாம்பலாக்குதல். இங்கு 'நீற்று' என்ற வினைப் பகுதிதானே நீற்றியென வினையெச்சப்பொருள்பட்டது; இதில் விகுதிமுதலியன புணர்ந்துகெட்டன வென்க: "வரிப்புனை பந்து" என்றவிடத்து 'வரி'என்றதிற் போல: "வினைபுனைநல்வினைகூஉக் கேட்பவும்" என்றவிடத்து 'இனை' என்பதும் அது. செம்மை யென்னும் பண்பின் அடி. 'சிவ' என்று விகாரப்படும்; அது உரிச்சொல்லாய்க் கோபத்தையும்உணர்த்துதலை "கறுப்புஞ்சிவப்பும் வெகுளிப்பொருள" என்ற தொல்காப்பியத்தால் அறிக. இங்கு 'எல்லாம்' என்றது, எஞ்சாமைப்பொருள்குறித்தது. 'நீற்றிச் சிவந்தெழும்' என்று பாடம்ஓதாதது, எதுகைநயம்நோக்கி யென்க. இனி, கார்ஆழி சிவந்துஎழும் தீ கறைக்களத்தன் நீறு சுடும் என்று மொழிமாற்றி, கரியகடலிற்சிவந்தெழுகின்ற வடவைத்தீயானது (எல்லாப்பொருள்களையும்) சிவபிரானணியும்வெண்ணீறுபோலாம்படி யெரிக்குமென்று உரைப்பாருமுளர்.

லோகஸம்ஹாரங்கூறுவார், அத்தொழில் எம்பெருமானுடைய அங்க உபாங்கங்களினாலாகுமென்று அவ்விறைவனது மகிமையை வெளியிட்டார்.

௧௫. * சின்னூல்பலபலவாயாலிழைத்துச்சிலம்பிபின்னு
மந்நூலருந்திவிடுவதுபோல வரங்க ரண்டம்
பன்னூறுகோடிபடைத்தவையாவும்பழம்படியே
மன்னூழிதன்னில்விழுங்குவர்போதமனமகிழ்ந்தே.

---

*"யதோர்ணநாபிஸ் ஸ்ருஜதே க்ருஹ்ணதே ச",
"ஊர்ணநாபிர் யதா ஸ்ருஷ்ட்வா, ஸ்வயம் தத் க்ரஸதே புநః -
ததா ஸ்ருஷ்ட்வேதமகிலம், ஸ்வயம் தத் க்ரஸதே ஹரிః,"

(இ - ள்.) சிலம்பி - சிலந்திப்பூச்சியானது, பல பல சில் நூல் - பலபல சிறிய [மெல்லிய] நூல்களை, வாயால் இழைத்து - வாயினால் நூற்று, பின்னும் - பின்பு, அ நூல் அருந்திவிடுவது போல - அந்தநூலை(த் தானே) உட்கொண்டிடுவது போல,—அரங்கர்-திருவரங்கநாதர்,பல் நூறு கோடி அண்டம் - பலநூற்றுக்கோடிக்கணக்கான அண்டங்களை, படைத்து - சிருஷ்டித்து, மன் ஊழிதன்னில் - மகாப்பிரளயகாலத்தில், அவை யாவும் - அந்த அண்டங்களெல்லாவற்றையும், போத மனம் மகிழ்ந்து - மிகவும் திருவுள்ள முவந்து, பழம் படியே - முன்போலவே [தம்வயிற்றில்தங்கும்படி], விழுங்குவர் - உட்கொண்டருள்வர்; (எ - று.)

ஸ்வரூபவிகாரமில்லாம லிருந்துகொண்டே சிலவற்றையுண்டாக்குதலும் அங்ஙனமுண்டாக்கினவற்றையுட்கொள்ளுதலும்அல்பசக்தியையுடைய சிலந்திப்பூச்சிக்குஇயல்பாகும்போது,ஸ்வரூபத்திற்குவிகாரமில்லாமலிருந்துகொண்டே அண்டங்களைப் படைத்தலும் விழுங்குதலுமாகிய இயல்பு ஸர்வசக்திகனான எம்பெருமானுக்குக் கூடுத லரிதோ வென்னுங் கருத்தமைய இவ்வுவமைகூறின ரென்னலாம்; "ஒருசிலந்திக்கு உண்டான ஸ்வபாவம் ஸர்வசக்திக்குக் கூடாதொழியாதிறே" என்ற தத்வத்ரயத்தையுங் காண்க.

உவமையணி. பரம்பொருளான எம்பெருமானுக்கு அற்பஜந்துவான சிலந்திப்பூச்சியை உவமைகூறியது இழிவுவமைக்குற்றத்தின்பாற்படாதோ வெனின், படாது; தன்வாயால்வெளிப்படுத்தியதைத் தானே யுட்கொள்ளுதற்குச் சிலந்தியுவமை சிறத்தலாற் குணம்மிக்கதெனக் கொள்ளப்பட்டது. "மிகுதலுங் குறைதலுந் தாழ்தலு முயர்தலும், பால்மாறுபடுதலும் பாதுபாடுடைய" என்ற தண்டியலங்காரசூத்திரத்தாலும், அதன் உரையாலும், உயர்ந்தபொருளை இழிந்தபொருளோடு உவமித்தல் புன்புலவர்புணர்க்குங்கால் வெறுக்கப்படுவதோர் சிறப்பின்மை தெரிந்து ஆன்றோராற் குற்றமென்று தள்ளப்படுதலும், அதுவே நன்புலவர்புணர்க்குங்கால் விரும்பப்படுவதோர் சிறப்புடைமை தெரிந்து ஆன்றோராற் குணமென்றுகொள்ளப்படுதலுங் காண்க. இவ்வாறே "வேம்பின்புழு வேம்பன்றியுண்ணா தடியேன், நான்பின்னுமுன்சேவடியன்றிநயவேன்," "மெல்லியலாக்கைக்கிருமி குருவின்மிளிர்தந் தாங்கே, செல்லியசெல்கைத் துலகை யென்காணு மென்றனுந் தன்னைச், சொல்லிய சூழல் திருமாலவன் கவி யாதுகற்றேன், பல்லியின்சொல்லுஞ் சொல்லாக் கொள்வதோ வுண்டு பண்டுபண்டே," "நாயனையார் கேண்மை கெழீஇக்கொளல் வேண்டும்," "குடப்பாற் சில்லுறை போலப்,படைக்குநே ரெல்லாந் தானாயினனே" என நல்லிசைப் புலவர்செய்யுள்களில் வருவன கண்டுகொள்க. 'மிகுதல் குறைதல் தாழ்தல் உயர்தல் பால்மாறுபடுதல் முதலியன குற்றமேனும் குணம்மிக்குழிக் கொள்க' என்பர். இவ்வுவமை ஸ்ரீபாகவதத்திலும், ஸ்ரீரங்கராஜஸ்தவத்திலும் கூறப்பட்டுள்ளது.

இங்கே, சின்மை - சிறுமைமேலது; நுண்மைமேலதுமாம். அருந்திவிடுவது என்பதில், விடு என்பது - துணிவுணர்த்தும். அண்டம் - உலகவுருண்டை. கோடி - நூறுலக்ஷம். மிகப்பல வென்றற்கு,'பன்னூறுகோடி'என்றார். அண்டம் பன்னூறுகோடி—"அப்பெரும்புவிக்குத்தானோராயிரகோடியண்ட, மொப்பிலவென்னவுண்டால்," "அங்கண்மாஞாலத்தண்ட மாயிரகோடிதன்னில்" என்றது கந்தபுராணம். மன் - பெருமை: உரிச்சொல். பழம்படியே போத என இயைத்து, முன்போலவே தம்வயிற்றினுட்படும்படி விழுங்குவ ரென்றலுமாம்; போத - புகுத என்றதன் மரூஉ. வெளியிலிருத்த

லோடு திருவயிற்றினுள்ளேயிருத்தலோடு வாசியில்லை யென்னுங் கருத்தால் 'முன்போலவேயிருக்க' என்றருமாம். பிரளயாபத்துநேர்கிறகாலத்தில் எல்லாவற்றையும் தமது திருவயிற்றினுள்ளே வைத்துக்கொண்டு அவைகெடாதபடி தாய்போலப் பாதுகாக்கும் எம்பெருமானது இயற்கைப்பேரருளும், வரம்பிலாற்றலும் இங்கு வெளியாம். "வெற்றிப்போர்க் கடலரையன் விழுங்காமல் தான் விழுங்கி யுய்யக்கொண்ட, கொற்றப்போராழியான்," "பேயிருக்கு நெடுவெள்ளம் பெருவிசும்பின்மீதோடிப் பெருகுகாலம், தாயிருக்கும்வண்ணமே யும்மைத் தன்வயிற்றிருத்தி யுய்யக்கொண்டான்" என்றார் திருமங்கையாழ்வாரும். 'தன்னுள்' என்ற பாடத்திற்கு, மண் ஊழி - பெரிய கற்பாந்தகாலத்தில், தன் உள் போத - தனது வயிற்றினுள்ளே புகும்படி, விழுங்குவ ரென்னலாம்; அப்பொழுது, 'அரங்கர்' என்றதற்கு ஏற்ப 'தம்முள்' என்னாது 'தன்னுள்' என்றது, பன்மையொருமை மயக்கத்தின்பாற்படும்.

சிருஷ்டி சங்காரங்கள், இதனாற் கூறப்பட்டன. (௧௮)

௧௯. பந்திக்கமலத்தடஞ்சூழரங்கர் படைப்பழிப்புச்
சிந்தித்திடுவதுமில்லைகண்டீ ரத்திசைமுகனோ
டுந்திக்கமலம்விரிந்தால்விரியு முகக்கடையின்
முந்திக்குவியி லுடனேகுவியு மிம்மூதண்டமே.

(இ - ள்.) பந்தி - வரிசையான, கமலம் - தாமரைமலர்களையுடைய, தடம் - தடாகங்கள், சூழ் - சூழ்ந்த, அரங்கர் - திருவரங்கத்தில் எழுந்தருளியிருப்பவரான எம்பெருமான், படைப்பு அழிப்பு சிந்தித்திடுவதும் இல்லை - சிருஷ்டி சங்காரங்களை நெஞ்சினால்நினைப்பதும் இல்லை; (மற்று என்னெனில்),—அ திசைமுகனோடு - அப்பிரமனுடனே, உந்தி கமலம் விரிந்தால் - (எம்பெருமானது) திருநாபித்தாமரைமலர் (முன்னே) மலர்ந்தால், இ மூது அண்டம் - பழமையான இந்த அண்டங்கள், விரியும் - (உடனே) தோன்றும்; உகம் கடையில் - கற்பாந்தகாலத்தில், முந்தி குவியில் - முன்னே (அத்தாமரைமலர் பிரமனுடன்) மூடினால், உடனே—, குவியும் - (இந்த அண்டங்களும்) ஒடுங்கிவிடும்; (எ - று.)—கண்டீர் - தேற்றம்.

"இருபது மந்தரத்தோளு மிலங்கைக்கிறைவன் சென்னி, யொருபது மந்தரத்தே யறுத்தோ னப்ப னுந்தி முன்னாள்,தரு பதுமந் தரவந்தன நான்முகன்றன் முதலாவரு பதுமந்தரமொத்த பல்சீவனும் வையமுமே," "ஒரு நாலுமுகத்தவனோ டுலகின்ற யென்ப ரதான், திருநாபி மலர்ந்ததல்லால் திருவுளத்திலுணராயால்," "வெண்டிரைக்கனைகடல் நெடுவேலிமூதுலக, முண்டுவைத்தலைநாகபோகத்தினிலுறங்குந், தண்டுழாய்முகி லுந்தியந்தடத்தினிற் றுளைத்தாட், புண்டரீகமொன்றலர்ந்தது புவியெலாம்பூப்ப," "நீலமால்வரைநெற்றியிற்பொடித்தசெங்கதிரே, போலவான்சுடர்பொழிதருமுளரியம்பொகுட்டின்,மேலதாகவந்தெழுந்தது வெயில்விரிபசும்பொற்,கோலமேவியகுலமறைமழலைவாய்க்குழவி" என்பன இங்கு நோக்கத்தக்கன.

'திசைமுகனோடு', 'உந்திக்கமலம்,' 'முந்தி' என்பவற்றை 'விரிந்தால்,' 'குவியில்' என்னும் இரண்டனோடும், 'உடனே,' 'இம்மூதண்டம்' என்பவற்றை 'விரியும்', 'குவியும்' என்னும் இரண்டனோடுங் கூட்டுக. திசைமுகனோடு அண்டம்விரியும், திசைமுகனோடு அண்டம்குவியும் என்று கூட்டி யுரைக்கவுமாம். திசைமுகன் - நான்கு திசையையும் நோக்கிய நான்குமுகங்களை யுடையவன். 'அத்திசைமுகன்' என்று சுட்டியது, பிரசித்திபற்றி; உலகறிசுட்டு. உந்தி - கொப்பூழ். கமலம் - தற்சமவடசொல்.

'உகக்கடையிற் குவியில்' என்பதற்கு ஏற்ப, கற்பத்தின்தொடக்கத்தில் விரிந்தால் என்க. முதுமை + அண்டம் = மூதண்டம்: பண்புப்பெயர், ஈறுபோய் ஆதிநீண்டது. கற்பந்தோறும் அண்டம் ஒருதன்மையதாயிருத்தல் தோன்ற, 'மூதண்டம்' எனப்பட்டது. அண்டம் பிரவாகம்போல நித்தியமாயிருத்தல் பற்றியும், 'மூதண்டம்' எனத்தகும். பந்தி - பங்க்தி என்ற வடசொல்லின் விகாரம். கமலத்தடம் - திருக்காவேரியின் மடுக்களாகவுமாம். உம்மை - இழிவுசிறப்பு. 'கண்டீர்' என்ற முன்னிலைப்பன்மையிறந்தகாலமுற்று, இயல்புபற்றியகாலவழுவமைதியாய்க் காண்பீரென்றபொருளில் வரும்; தெளிவுபற்றிய காலவழுவமைதியுமாம். இச்சொல் இடைச்சொல்தன்மைப்பட்டு முன்னிலையசையாயும் தேற்றப்பொருள்தருவதாயும் நிற்கும். உலகத்தாரை நோக்கி 'இந்த உண்மையையும் வியப்பையும் எம்பெருமானது மகிமையையும் அறிவீராக' என்றவாறுமாம். (௧௯)

௨௦. அடந்தைநடந்தைவனஞ்சூழரங்கத்தரவணைமேற்
கிடந்தனர் துங்கக்கிரிமிசைநின்றனர் கேழலொன்று
யிடந்தனர் மீளவிழுங்கினர் கான்றன ரீரடியாற்
கடந்தனர் கைவழிமண்ணான திந்தமண் காரணர்க்கே

(இ - ள்.) அடந்தை நடந்தை வனம் சூழ் - அடந்தை நடந்தை யென்ற சோலைகள் சூழ்ந்த, அரங்கத்து - திருவரங்கத்தில், அரவு அணைமேல் - ஆதிசேஷனாகிய சயனத்தில், கிடந்தனர் - பள்ளிகொண்டருளினர்; துங்கம் கிரிமிசை - உயர்ந்த திருவேங்கடமலையின்மேல், நின்றனர் - நின்றருளினர்; கேழல் ஒன்று ஆய் - ஒப்பற்றதொரு வராகாவதாரமாகி, இடந்தனர் - கோட்டாற் குத்தியெடுத்தருளினர்; மீள - பின்பு, விழுங்கினர் - (கற்பாந்தகாலத்தில்) விழுங்கியருளினர்; கான்றனர் - (கற்பத்தொடக்கத்தில்) உமிழ்ந்து வெளிப்படுத்தியருளினர்; ஈர் அடியால் கடந்தனர் - (ஸ்ரீராமாவதாரத்தில்) இரண்டுதிருவடிகளால் நடந்து கடந்தருளினர்; (ஆகவே), காரணர்க்கு - (எல்லாவற்றிற்குங்) காரணராகிய எம்பெருமானுக்கு, இந்த மண் - இந்தப்பூமி, கை வழி மண் ஆனது - (மட்கலம்வனையுங்குயவன்) கைகளால்வழிக்கும் மண்போல ஸ்வாதீனமாயுள்ளது; (எ - று.)

எம்பெருமான் இந்நிலவுலகத்தில் திருவரங்கத்திலே பள்ளிகொண்ட திருக்கோலமாயும், திருமலையில் நின்றதிருக்கோலமாயும் எழுந்தருளியிருக்கின்றனர்; மற்றும், கேழலாய்ப் பூமியை இடந்தும், இறுதியில் விழுங்கியும், பிறகு உமிழ்ந்தும், ஈரடியாற் கடந்தும் அருளினர்: ஆதலால், ஜகத்காரணரான அப்பெருமானுக்கு, இந்தப்பூமி, குயவன்கைகளால்வழிக்கும்மண்போல, ஸ்வாதீனமாயும், நினைத்தபடியெல்லாம்முடிவதாயும், எளியதாயும் இருக்கின்ற தென்பதாம். "தொன்னிலக்கிழமை சுட்டின் நன்மதி, வேட்கோச் சிறாஅர் தேர்க்கால்வைத்த, பசுமட் குரூஉத்திரள் போல வவன், கொண்ட குடுமித் தித்தண்பணைநாடே" என்ற புறநானூறு, ஒப்புநோக்கத்தக்கது. "கிடந்திருந்து நின்றளந்து கேழலாய்க் கீழ்புக்கு, இடந்திடும் தன்னுள்கரக்கும் உமிழும், தடம்பெருந்தோளாரத்தழுவும் பாரென்னுமடந்தையை, மால்செய்கின்ற மாலார்காண்பாரே" என்ற திருவாய்மொழியையும், அதன் ஆறாயிரப்படிவியாக்கியானத்தில் 'எம்பெருமான்தனக்கு இந்தஜகத்தானது இஷ்டஸர்வசேஷ்டாவிஷயமாயிருக்கையாலே அவனுக்கே சேஷமென்கிறார்' என்றதையும், "கோட்டுமண்கொண்டிடந்து குடங்கையின்மண்கொண்டளந்து, மீட்டுமதுண்டுமிழ்ந்து விளையாடு விமலன்," "படைத்தபாரிடந்தளந்ததுண்டுமிழ்ந்து", "பாரிடந்து பாரையுண்டு பாருமிழ்ந்து பாரளந்து பாரையாண்ட, பேராளன்", "இதுநீ, படைத்திடந் துண்டுமிழ்ந்த

பார்” முதலிய மற்றையாழ்வாரருளிச்செயல்களையுங் காண்க. எளிமைகுறித்தற்குக் கைகளினின்றுவழித்தெறியும்மண்ணை உவமைகூறும் உலகவழக்கும் இங்குக்கொள்ளத்தக்கதாம்.

அடைமொழிகொடாமற் சொல்லப்படுஞ் சொல் அவ்வகுப்பிற் சிறந்த பொருளின்மேல்நிற்றல் இயல்பாதலால், ‘கிரி’ என்பதற்கு - சிறந்தமலையாகிய திருவேங்கட மென்று பொருள்கொள்ளப்பட்டது; ‘கோயில்’ என்றது சிறப்பினால் திருவரங்கத்தைக் குறித்தல் போல, ‘திருமலை’ என்பது சிறப்பினால் திருவேங்கடத்தைக் குறித்தலை யுணர்க. அன்றியும், ‘கோயில் திருமலை பெருமாள்கோயில்’ என்ற சேர்க்கைபற்றியும் ‘அரங்கத்தரவணைமேற் கிடந்தனர்’ என்றதை அடுத்துநின்ற ‘தங்கக்கிரி’ என்பதற்கு - திருவேங்கடமென்று பொருள்கொள்ளத் தகும். இனி, திருவேங்கடம் திருமாலிருஞ்சோலை என்ற இரண்டுமலைகளையுங் கொள்ளலுமாம்; “இடவமலைக்கும் புயங்கமலைக்கும்..........இறைவ” என்பர் திருவரங்கத்தந்தாதியில். ‘மீள’ என்றதை ‘கான்றனர்’ என்பதனோடு கூட்டலுமாம். ஈரடி - உபயபாதம். கான்றனர், கால் - பகுதி. அடந்தை, நடந்தை என்பன - ஸ்ரீரங்கத்தில் தொண்டரடிப்பொடியாழ்வார் வைத்து வளர்த்துப் புஷ்பகைங்கரியஞ் செய்துவந்த இடமாகிய பூஞ்சோலைக ளென்பர். (உ०)

[ஹம்ஸாவதார வைபவம்.]

உக. பின்னைக்கினியபெருமாளரங்கர் பெறுதுபெற்ற
முன்னைப்பிரமனைவாழ்விக்கவேண்டி முன்னாள்கவர்ந்த
வன்னத்திருவுருவுள்ளேவளர்ந்ததற்கோரண்டமா
மென்னச்சிறந்தது மூதண்டம் யாமெனியம்புவதே.

(இ - ள்.) பின்னைக்கு - நப்பின்னைப்பிராட்டிக்கு, இனிய - பிரியமுள்ள கொழுநரான, பெருமாள் அரங்கர் - திருவரங்கநாதராகிய நம் பெரிய பெருமாள், முன்னை - முன்பு [கற்பத்தொடக்கத்தில்], பெறுது பெற்ற - அருமையாய்ப் பெற்ற மகனான, பிரமனை—, வாழ்விக்க வேண்டி - உய்வித்தற்பொருட்டு, முன் நாள் கவர்ந்த - முன்புஒருகாலத்திற் கொண்ட, அன்னம் திரு உரு - சிறந்த அன்னப்பறவைவடிவம், உள்ளே வளர்ந்ததற்கு—, ஓர் அண்டம் ஆம் - ஒரு முட்டையாகும், என்ன - என்றுசொல்லும்படி, மூது அண்டம் - பழமையான அண்டகோளம், சிறந்தது - சிறப்படைந்தது; (என்றால்), யாம் என் இயம்புவது - (அவ்வன்னத்திருவுருவத்தின் பெருமையைக்குறித்து) நாம் யாதுசொல்வது! (எ - று.)

முன்னொருகாலத்தில் மது கைடப ரென்ற அசுரர்கள் பிரமதேவனிடத்திலிருந்து வேதங்களை அபகரித்துக்கொண்டு கடலில் முழுகி மறைந்துவிட, ஞானவொளியைத்தரும் பெருவிளக்கான வேதங்கள் ஒழிந்தமைபற்றி உலகமெங்கும் பேரிருள்மூடி நலியாநிற்க, பிரமன்முதலியோ ரனைவரும் கண்கெட்டவர்போல யாதொன்றுஞ்செய்யவறியாமல் திகைத்து வருந்துவது கண்டு திருவுள்ளமிரங்கித் திருமால் கடலினுட் புக்கு அவ்வசுரர்களைத் தேடிக் கண்டுபிடித்துக் கொன்று வேதங்களைமீட்டுக் கொணர்ந்து, ஹம்ஸரூபியாய்ப் பிரமனுக்கு உபதேசித்தருளின னென்ற வரலாறு, இங்கு அறியத்தக்கது. (“மன்னுமாநிலனும் மலைகளுங் கடலும் வானமுந் தானவருலகுந், துன்னுமாயிருளாய்த் துலங்கொளிசுருங்கித் தொல்லைநான்மறைகளும்மறையப், பின்னும் வானவர்க்கும் முனிவர்க்கும் நல்கிப் பிறங்கிருள் நிறங்கெட வொருநாள், அன்னமா யன்றங்கருமறைபயந்தா னரங்கமாநகரமர்ந்தானே,” “முன்னுலகங்களேழுமிருள்மண்டியுண்ணமுதலோடுவீடுமறியாது, என்னிதுவந்ததென்னவிமையோர்திசைப்ப வெழில்வேதமின்றிமறை

யப், பின்னையும் வானவர்க்கும் முனிவர்க்கும் நல்கி இருள்தீர்ந்திவ்வையமகிழ, அன்னமதாயிருந்தங்கறநூலுரைத்த வது நம்மையாளுமரசே," "முன்னிவ்வேழுலகுணர்வின்றியிருள்மிக வும்பர்கள்தொழுதேத்த, அன்னமாகியன்றருமறைபயந்தவனே" என்றார் திருமங்கையாழ்வார்.) இவ்வரலாறு சிறிதுவேறுபடக்கூறுதலு முண்டு.

பாலும்நீரும்கலந்தவிடத்து அவற்றைப்பகுத்து நீரையொழித்துப்பாலையுட்கொள்ளுந்திறம், வெண்ணிறம், பறவைகளிற்சிறத்தல், அழகியவடிவம், நடையழகு, சேற்றில்வெறுப்பு, தாமரைமலரில்வீற்றிருத்தல் என்னுமிவற்றையுடைய அன்னப்பறவை, ஸாராஸாரங்களைப் பகுத்துணர்ந்து அஸாரத்தைத்தள்ளி ஸாரத்தைக்கொள்ளுமியல்பு, சுத்தஸத்வகுணபூர்த்தி, மற்றையோரினும்மேம்பாடு, விலக்ஷணமானதன்மை, நல்நடக்கை, கலக்கத்தில் விருப்பமின்மை, பத்மாஸநத்திலிருப்பு என்னுமிவற்றையுடைய நல்லாசிரியர்க்கு ஏற்றஉவமையாகச் சிறத்தலால், எம்பெருமான் பிரமனுக்கு வேதங்களை யுபதேசிக்கும் பரமகுருவாவதற்கு அன்னப்பறவையுருவத்தை ஏற்ற வடிவமாகக்கொண்டன னென்னலாம்.

'அசுரர்களோடேகலந்துஉருமாய்ந்துபோன வேதத்தைப் பிரிக்கைக்கு உடலாக, நீரையும் பாலையும் பிரிக்கவல்ல அன்னத்தின் வடிவைக் கொண்டு' என்றார் பெரியாரும். 'அண்டம்' என்ற வடசொல்லுக்கு - உலகவுருண்டையென்றும், முட்டை யென்றும் பொருள்களுண்டு. பறவைகள், முட்டையினின்று பிறப்பன வாதலால், அண்டஜ மெனப்படும். திருமால்கொண்ட ஹம்ஸரூபம் உள்ளேவளர்வதற்கு அண்டகோளம் அண்டமாய் [முட்டையாய்]ச் சிறந்த தென்று, அண்டமென்ற சொல்லின் நயம்பற்றிக் கற்பனைகூறினர். உருண்டைவடிவமானமுட்டையில்அன்னப்பறவைவளர்ந்துஎழுமாறுபோல, திருமாலின் ஹம்ஸரூபம் அண்டகோளத்தில் வளர்ந்து தோன்றிற்று என ஒப்புமை யமையும்.

'யாம் என்இயம்புவது' என்றது, எம்மாற்சொல்லமுடியா தென்றபடி. 'யாம்' என்றது, கவிகட்குரிய இயற்கைத்தனித்தன்மைப்பன்மை; மற்றையோரையுங் கூட்டிய உளப்பாட்டுத்தன்மைப்பன்மையுமாம். முன்னைப் பெற்ற எனஇயையும். 'முன்னைப் பிரமன்' என்றே எடுத்து, (மற்றைத்தேவர்முதலியோர்க்கு) முதல்வனாகிய பிரம னென்றலுமாம். 'பெறுப் பேறு' என்றாற் போல, அருமைவிளங்க 'பெறுதுபெற்ற பிரமன்' என்றார். இந்த அடைமொழி, இயல்பாய் மைந்தனிடத்துத் தந்தைக்குஉள்ள பேரன்பை விளக்கும். எல்லாப் பிராணிகளுக்கும் பரமபிதாவான எம்பெருமான் தனது முதற்படைப்பான பிரமனிடத்துக் கொண்ட வாத்ஸல்யத்தால், அம்மைந்தனை வாழ்விக்கவேண்டி, தன் மேன்மையையும் சிரமத்தையும் பாராமலே, அதற்கேற்றதொரு பக்ஷிரூபத்தைக்கொண்டன னென்க. இனி, திருமால் பிரமனைப்படைக்கவேண்டுமென்னும் பிரயத்தின பூர்வகமான செய்கை சிறிதுமில்லாதிருக்கையிலே அப்பெருமானது திருநாபித்தாமரை மலர்ந்தமாத்திரத்திற் பிரமன் அதிலிருந்து தானே பிறந்தமை தோன்ற 'பெறுது பெற்ற பிரமன்'என்றாருமாம்; கீழ் ௧௯ - ஆஞ்செய்யுளை நோக்குக.

பின்னை - நப்பின்னை; ஸ்ரீகிருஷ்ணனது மனைவியரில் தலைமையுடையவள்: கும்ப னென்னும் இடையர்தலைவனது மகள். இவளை மணஞ்செய்து கொள்ளுதற்காக, இவள்தந்தை கந்யாசுல்கமாகக்குறித்தபடி யாவர்க்கும்அடங்காத அசுராவேசம்பெற்ற எழுஎருதுகளையும் கண்ணபிரான் எழுதிருவுருக்கொண்டு சென்று வலியடக்கித் தழுவின னென்று நூல்கள் கூறும். இங்ஙனம் இவள்பக்கல் பெருமான் மிக்ககாதல்கொண் டருளியமைபற்றி, 'பின்னைக்குஇனிய பெருமாள்' என்றார்; ("பின்னை மணாளன்." "அம்பொனு

ருலகமேழுமறிய ஆய்ப்பாடிதன்னுட், கொம்பினார்பின்னை கோலங் கூடு தற் கேறுகொன்றான்," "பின்னைநெடும்பணைத்தோள்மகிழ்பீடுடை, முன்னையமரர்முழுமுதல்தானே," "பின்னைதன்காதலன்" என்றார் ஆழ்வார்களும். "கிருஷ்ணாவதாரத்துக்கு ப்ரதாநமஹிஷி இவளாகையாலே, நப்பின்னைப்பிராட்டியைமுன்னிடுகிறார்கள்," "இவ்வவதாரத்துக்கு ப்ரதாநமஹிஷி இவளிறே. மேன்மைக்கு ஸ்ரீய:பதியென்னுமாபோலேயிறே, நீர்மைக்கு இவளுக்குவல்லபனென்கிறதும்"என்ற வியாக்கியானவாக்கியங்களும் அறியத்தக்கன.) இவள் கண்ணபிரானிடத்து மிக்ககாதல்கொண்டிருந்தமையும், 'பின்னைக்கினிய பெருமாள்' என்ற தொடரில் தோன்றும்; "நப்பின்னையாம், விரகதத்தைக்கு விடையேழ்தழுவின வேங்கடவன், குரகதத்தைப் பிளந்தான் தோள்களாகிய குன்றங்களே" என்பர் திருவேங்கடத்தந்தாதியிலும். இவள், திருமாலின் தேவியருள் நீளாதேவியின் அம்சமெனப்படுவள். இனி, திருப்பாற்கடல்கடைந்தபோது அக்கடலினின்று முன்னே மூதேவி தோன்றப் பின்னே இலக்குமி தோன்றினளாதலால், இலக்குமிக்கு 'பின்னை' என்று ஒருபெயர் வழங்கும்; பின்பிறந்தவளென்க: அத்திருமகளுக்குஇனியபெருமாளென்றபொருளில் 'பின்னைக்கினிய பெருமாள்' என்றனரென்றலுமொன்று.

முன்னை, ஐ - சாரியை. ப்ரஹ்மா,ஹம்ஸம்,ரூபம் என்ற வடசொற்கள் விகாரப்பட்டன. வேண்டி - விரும்பி யென்க. இனி, அன்னத்திருவுருவத்தினுள்ளே வளர்ந்து அதற்குஓர் அண்டமாம் [அவ்வன்னத்திற்கு ஒருமுட்டையாம்] என்னும்படி சிறந்தது மூதண்டமென்று உரைப்பாருமுளர். (௨௧)

[ஸ்ரீமத்ஸ்யாவதார வைபவம்.]

௨௨. சூழிக்களிறுய்யவெவ்வாய்முதலைதுணித்தவுக்ர
பாழித்திகிரிப்படையரங்கேசர் படைப்பவன்ற
னாழிப்பொழுதொருசேலா யொருசெலுவுட்கரந்த
வாழிப்பெரும்புனல்காணாதுதேடுவரவ்விடத்தே.

(இ - ள்.) சூழி - தடாகத்தில் இறங்கிய, களிறு - யானை [கஜேந்திராழ்வான்], உய்ய - பிழைக்கும்படி, வெவ் வாய் முதலை துணித்த - கொடிய வாயையுடைய முதலையைத் துண்டுபடுத்திய, உக்ரம்-பயங்கரமான, பாழி-வலிமையுள்ள, திகிரி படை - சக்கராயுதத்தை யுடைய, அரங்க ஈசர் - ரங்கநாதர்,—படைப்பவன்தன் ஊழி பொழுது - சிருஷ்டிகர்த்தாவாகிய பிரமனது தினமான ஒருகற்பத்தின் முடிவில், ஒரு சேல் ஆய் - ஒப்பற்றதொரு மீன்வடிவமாகி,—ஒரு செலு உள் கரந்த ஆழி பெரும் புனல் - (தனது) ஒருபுறமுள்ளினகத்தே யடங்குகின்ற பெரிய கடல்வெள்ளத்தில், காணாது- (வேதங்களையும் அவற்றைக்கவர்ந்துசென்றசோமுகாசுரனையும்) காணாமல், அ இடத்து தேடுவர் - அந்தஇடத்திலே (அவற்றைத்) தேடுபவராயினர்.

"தேவுடைய மீனமா யாமையா யேனமா யரியாய்க் குறளாய், மூவுருவி லிராமனாய்க் கண்ணனாய்க் கற்கியாய் முடிப்பான் கோயில்" என்றபடி முக்கியமான தசாவதாரங்களின் மகிமைகளை இதுமுதற் கூறுகின்றார்.

முன் ஒருகல்பத்தின் அந்தத்திற் பிரமதேவன் துயிலுகையில் அவன் முகங்களினின்றுவெளிப்பட்டுப்புருஷரூபத்துடன்உலாவிக்கொண்டிருந்தநான்கு வேதங்களையும் மகாபலசாலியும் நெடுங்காலந் தவஞ்செய்து பெருவரங்கள்பெற்றவனுமான சோமுகனென்னும்அசுரன் கவர்ந்துகொண்டு பிரளயவெள்ளத்தினுள் மறைந்துசெல்ல,அதனையுணர்ந்து திருமால் ஒருபெருமீனாகத் திருவவதரித்து அப்பெருங்கடலினுட்புக்கு அவ்வசுரனைத் தேடிப் பிடித்துக் கொன்று, அவன்கவர்ந்துசென்றவேதங்களை மீட்டுக் கொணர்ந்து அவற்றைப் பிரமனுக்குக் கொடுத்தருளினனென்ற வரலாறு இங்குஅறியத்

தக்கது. இவ்வசுரன்பெயர் சோமகனென்றலும், ஹயக்ரீவனென்றலும், இவ்வரலாற்றை வேறுவகையாக விரித்துக்கூறுதலு முண்டு. ("நிலையிடமெங்குமின்றிநெடுவெள்ளமும்பர்வளநாடுமூட விமையோர், தலையிடமற்றெமக்கோர்சரணில்லையென்ன வரணாவனென்னுமருளா,லலைகடல்நீர்குழம்பவகடாடவோடி யகல்வானுரிஞ்சமுதுகில், மலைகளைமீதுகொண்டுவருமீனைமாலை மறவாதிறைஞ் சென்மனனே," "வானோரளவும்முதுமுந்நீர்வளர்ந்தகாலம் வலியுருவின், மீனாய்வந்துவியந்துய்யக்கொண்ட தண்டாமரைக்கண்ணன்" என்பன,பெரியதிருமொழி.)'தேவர்களெல்லையளவுஞ்செல்லக்கடல்வெள்ளம்பரந்தநாள், அத்தையடையத் தன்னுடை ஒருசெலுவிலே அடக்கவல்ல மிடுக்குடைய மத்ஸ்யமாய் வந்து' என்ற வியாக்கியானவாக்கியமும் நோக்கத்தக்கது. "அருமறையாரிருக்கெசுர்சாமத்தினோடுமதர்வணமாகியசதுர்வேதங்கள்தம்மைத், திருடியெடுத்துக்கொண்டேயுததிசேருந்தீயனுக்காமச்சாவதாரமாய் நீ, ஒருசெலுவிற்சமுத்திரத்தைச்சுருக்கியேவைத்துக்கிரத்தாற்சோமுகாசுரனைக்கொன்றிட், டிருளறவே விதிபடைக்க வவ்வேதத்தை யிரங்கியளித்தனை யரியே யெம்பிரானே" என்றார் பின்னோரும்.

செலு-மீனின்உடற்புறத்தேயுள்ள முள்; செதிள் எனவும்படும்: செலுஉள்-அவ்வகைமுட்களின் இடையே குழிந்துள்ள இடம். இனி,செலு - மீன்செட்டை யெனப்படும் மீன்சிறகு என்றுங் கொள்வர். "மானயோசனையளவொழிமெய்யுருவாய்ந்த,மீனமாயினனெடுங்கடற்பரவையின்வீழ்ந்து,கானவெண்டிரைக்கருங்கடலளறெழக்கலக்கிப், போனவாளெயிற்றசுரனைத்தடவுறும்புகுந்து" (கந்தபுராணம் - உபதேசகாண்டம்), "பரமன், உரைசெயற்கரியபருமனைத்தோ, டொப்பிலாவகுலியாயடைந்தான்" (மகாபாகவதம்) என்றபடி,எம்பெருமான் எண்ணிடற்கரிய மிகப்பலயோஜனைநீளமும் அதற்கேற்ற பருமனும்வாய்ந்த பெருமீனானபோது அந்தமற்சியத்தின் ஒருசெலுவினகத்தே கடல்வெள்ளம்முழுவதும் ஒடுங்கும்படியிருந்ததென அதன்பெருமையைக் கொண்டாடுவார் 'ஒருசெலுவுட்கரந்த ஆழிப்பெரும்புனல்' என்றும், இங்ஙனம் தான் கொண்ட பெருமீன்வடிவைப்பார்க்கிலும் கடல் மிகச்சிறிதாயிருக்கவும் அதில் வேதங்களையும் அசுரனையுங் காணாதவர்போலத் தேடினது பாவனையாற்கொண்ட விளையாட்டே யெனக்கருதி அந்தத் திவ்வியலீலையில் ஈடுபடுவார் 'காணாதுதேடுவ ரவ்விடத்தே' என்றுங் கூறினார். 'காணாது தேடுவர்' என்றதற்கு ஏற்றசெயப்படுபொருள் வருவித்து உரைக்கப்பட்டது.இனி, திருமால் ஒருபெருமீன்வடிவானபோது அதனது ஒருசெலுவினகத்தே அவாந்தரப்பிரளயவெள்ளம்முழுவதும் அடங்கினதாக அப்பெரும்புனலைக்காணாது வியந்து ஸப்தரிஷிகள்முதலியோர் அங்குத்தேடுவாராயின ரென்று உரைத்தலு மொன்று; "முடங்குதெண்டிரையபௌவமுற்றுமோர்செலுவுட்சென்று, மடங்கியதுணரகில்லார் மயர்ந்தனர் நேடியன்னோ, ரொடுங்கினரேத்திநின்றா ருயர்வொப்பிலாதமேலோன், தடங்கொள்சேலுருவின்மாண்பியாவரேசாற்றுநீரார்" என்ற ஸ்ரீபாகவதத்தைக் காண்க: இவ்வுரைக்கு, ஏற்றஎழுவாய்வருவித்தல்வேண்டும். ஆய்=ஆக என எச்சத்திரிபாம். இனி, எழுவாய்செயப்படுபொருள்கள்வருவித்தலின்றி,அரங்கேசர் ஊழிப்பொழுதில் ஒருசேலாகித் தனது ஒருசெலுவினகத்தேகரந்த ஆழிப்பெரும்புனலைக் காணாமல் அவ்விடத்துத்தேடுவாராயின ரென வுரைத்தலும் அமையும்; (இது, இந்நூலாசிரியரது ஆசார்யரான ஸ்ரீபராசரபட்டர் அருளிச்செய்த ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் "பக்ஷநிகீர்ணோத்கீர்ண மஹாப்தி ஸ்தல ஜல விஹரண ரத கதி ரசர:" என்றதை ஒருசாருட்கொண்டதாம்.) இனி,ஆழிப்பெரும்புனலை ஒருசெலுவினகத்தே கரந்த [மிகப்பெரிய] ஒருசேலா யென்று அந்வயித்து உரைத்தலுமாம்.

**களிறுய்ய முதலை துணித்த கதை:**—மிக்க விஷ்ணுபக்தியுடையனான இந்திரத்யும்ந னென்னும் அரசன் வழக்கப்படி ஒருநாள் விஷ்ணுபூஜைசெய்துகொண்டிருந்தபோது அகஸ்தியமகாமுனிவன் அவனிடம் எழுந்தருள, அப்பொழுது அவன் தன்கருத்து முழுவதையும் திருமாலைப்பூசிப்பதிற் செலுத்தியிருந்ததனால் அவ்விருடியின்வருகையை அறிந்திடானாய் அவனுக்கு உபசாரமொன்றுஞ்செய்யாதிருக்க, அம்முனிவன், தன்னை அரசன் அலட்சியஞ்செய்தானென்று மாறாகக்கருதிக் கோபித்து, 'நீ, யானைபோலச் செருக்குற்றிருந்ததனால், யானையாகக்கடவை' என்றுசபிக்க, அங்ஙனமே அவன் ஒருகாட்டில் யானையாகத் தோன்றினனாயினும், முன்செய்தவிஷ்ணுபக்தியின்மகிமையால் அப்பொழுதும் விடாமல் நாள்தோறும் ஆயிரந்தாமரைமலர்களைக்கொண்டு திருமாலை அருச்சித்துப் பூசித்துவருகையில், ஒருநாள், பெரியதொருதாமரைத்தடாகத்தில் அர்ச்சனைக்காகப்பூப்பறித்தற்குப் போய்இறங்கியபொழுது, அங்கே முன்பு நீர்நிலையில்நின்று தவஞ்செய்துகொண்டிருந்ததேவலனென்னும்முனிவனது காலைப்பற்றியிழுத்து அதனாற் கோபங்கொண்டஅவனது சாபத்தாற் பெரியமுதலையாய்க்கிடந்த ஹூஹூவென்னுங் கந்தர்வன் அவ்யானையின் காலைக் கௌவிக்கொள்ள, அதனை விடுவித்துக்கொள்ளமுடியாமற் கஜேந்திரன் 'ஆதிமூலமே!' என்றுகூவியழைக்க, உடனே திருமால் கருடாரூடனாய் அங்குஎழுந்தருளி, தனது சக்கராயுதத்தைப் பிரயோகித்து, முதலையைத்துணித்து யானையை அதன்வாயினின்று விடுவித்து இறுதியில் அதற்கு முத்தியைஅருளினன் என்பதாம்.

இவ்வரலாறு, உயர்திணையோடு அஃறிணையோடு பேதமற அடிமைப்பட்ட உயிர்களை அன்போடு துயர்தீர்த்துப் பாதுகாத்தருள்கின்ற எம்பெருமானது கருணைமிகுதியைக் காட்டும். அங்ஙனம் தனது அடிமையான பிராணியினிடத்து அருளினால் அதற்குத்துன்பஞ்செய்தபிராணியின் விஷயமாகப் பெருமான் தனது குளிர்ந்ததிருவுள்ளத்திலே கொடியகோபத்தைக்கொண்டருளிய மகாகுணத்தில் ஈடுபட்டு இதனை யெடுத்துக்கூறினர். கஜேந்திராழ்வானை முதலைவாயினின்று காத்தருளுதற்பொருட்டு அது கூப்பிட்ட பின்பு மடுவின்கரைதேடிஓடிவந்ததுபோல வரவேண்டாமல் நம்மை ஐம்பொறிவாயினின்று உடனேபாதுகாத்தற்பொருட்டு நாமிருக்கிற இந்த நிலவுலகத்திலே கோயில்கொண்டருளினனென்பது தோன்ற, 'களிறுய்யவெவ்வாய்முதலைதுணித்த வுக்ரபாழித்திகிரிப்படையரங்கேசர்' என்றார். 'முதலையும் மூர்க்கனுங் கொண்டதுவிடா' என்றபடி வாயினாற்பிடித்தபிடிவிடாத கொடியஇயல்பினதாதலால், 'வெவ்வாய்முதலை' எனப்பட்டது; யானையின்காலையேயன்றி அதற்குஇறைவனான எம்பெருமானது மனத்தையும் புண்படுத்திய கொடியவாயையுடையதென்றவாறுமாம்: "கொடியவாய்விலங்கு" என்றார் திருமங்கையாழ்வாரும். இவ்வகையான கொடியபிராணியை எளிதிற்கொல்லுதற்கேற்ற மிகக்கொடிய வலிய படைக்கலமென்பது விளங்க, 'உக்ர பாழித் திகிரிப்படை' எனப்பட்டது. 'உய்ய' என்றது, இம்மையில் உயிர்வாழ்தலையேயன்றி மறுமையில் வீடுபெற்றுவாழ்தலையும் உணர்த்தும்.

சூழி - குளம், நீர்நிலை. 'சூழிக் களிறு' என்பதற்கு - முகபடாத்தை யணிந்த யானை யென்று உரைக்கலாகாது, காடுமலைகளில் யதேச்சையாய்த் திரிந்துகொண்டிருந்த யானை யாதலால். அன்றி, முகபடாத்தையணிதற்கேற்ற யானை யென இயற்கையடைமொழிகொண்டதுமாம். இனி, தன் இனமாகிய பல பெண்யானைகளினாற் சூழப்பட்டிருந்ததான ஆண்யானை யென்றலுமொன்று. 'உக்கிர' எனத் திரியாது 'உக்ர' எனவே கொண்டது, செய்யுளோசைநோக்கி. உக்ரபாழி-நிலைமொழி வடமொழி யாதலின், அதன் முன் வருமொழிமுதல்வலி இயல்பாயிற்று. படை - படுக்குங்கருவி; படுத்

தல் - அழித்தல்: ஐ - கருவிப்பொருள்விகுதி. படைப்பவன் - படைத்தற் றொழிற்கடவுள். படைப்பவன்தன்னூழிப்பொழுது - பிரமனது பகலெனப்படுகிற கல்பத்தின் முடிவில் நேர்ந்த அவாந்தரப்பிரளயகாலத்தில்; இதுவே நைமித்திகப்பிரளய மெனப்படுவதும். (௨௨)

[இதுமுதல் மூன்று கவிகள் - ஸ்ரீகூர்மாவதார வைபவம்.]

௨௩. பாட்டுக்குமுத்தமிழ்வில்லிபுத்தூர்வரும்பாவைகுழற்
சூட்டுக்குநல்லவர் தென்னரங்கேசர் தொடுகடல்வாய்
மோட்டுக்கமடத்திருவுருவாகி முதுமுதுகிற்
கோட்டுச்சயிலமுழுவதென்றுத்துயில்கொண்டனரே.

(இ-ள்.) முத் தமிழ்-(இயல் இசை நாடகம்)என மூன்றுவகைப்பட்டதமிழும் வழங்குகின்ற, வில்லிபுத்தூர் - ஸ்ரீவில்லிபுத்தூரில், வரும் - (பெரியாழ்வார்திருமகளாராய்) வந்து திருவவதரித்த, பாவை - ஆண்டாளுடைய, பாட்டுக்கும் - பாமாலைக்கும், குழல் சூட்டுக்கும் - (அவள்) தன் திருக்கூந்தலிலே சூடிக் கொடுத்த பூமாலைக்கும், நல்லவர் - திருவுள்ளமுகந்தவராகிய, தென் அரங்க ஈசர்-அழகிய திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கின்ற தலைவரான நம்பெருமாள்,—தொடு கடல்வாய் - கடையப்படுகின்ற திருப்பாற்கடலில், மோடு கமடம் திரு உரு ஆகி - உயர்ந்த சிறந்த ஆமைவடிவமாகி, முது முதுகில் கோடு சயிலம் உழுவது என்று - வலிய(தனது) முதுகிலே சிகரங்களையுடைய மந்தரபர்வதம் தினவுசொறிவ தென்றெண்ணி, துயில்கொண்டனர் - யோகநித்திரை கொண்டருளினர்; (எ - று.)

முன்னொருகாலத்தில், இவ்வண்டகோளத்திற்குஅப்புறத்திலுள்ள விஷ்ணுலோகத்துச் சென்று திருமகளைப் புகழ்ந்து பாடி அவளால் ஒருபூமாலை பிரசாதிக்கப்பெற்ற ஒரு வித்தியாதரமகள், மகிழ்ச்சியோடு அம்மாலையைத் தன்கைவீணையில் தரித்துக்கொண்டு பிரமலோகவழியாய் மீண்டுவருகையில், துர்வாசமகாமுனி எதிர்ப்பட்டு அவளை வணங்கித் துதிக்க, அவ்விஞ்சைமங்கை அம்மாலையை அம்முனிவனுக்கு அளித்திட்டாள்; அதன் பெருமையை யுணர்ந்து அதனைச் சிரமேற்கொண்ட அம்முனிவன் ஆனந்தத்தோடு தேவலோகத்திற்கு வந்து, அப்பொழுது, அங்கு வெகுஉல்லாசமாக ஐராவதயானையின்மேற் பவனிவந்துகொண்டிருந்த இந்திரனைக் கண்டு அவனுக்கு அம்மாலையைக் கைநீட்டிக்கொடுக்க, அவன் அதனை அங்குசத்தால் வாங்கி அந்த யானையின் பிடரியின்மேல் வைத்தவளவில், அம்மதவிலங்கு அதனைத் துதிக்கையாற் பிடித்து இழுத்துக் கீழெறிந்து காலால் மிதித்துத் துவைத்தது; அதுகண்டு முனிவரன் கடுங்கோபங்கொண்டு இந்திரனை நோக்கி 'இவ்வாறு செல்வச்செருக்குற்ற நினது ஐசுவரியங்களெல்லாம் கடலில் ஒளித்துவிடக்கடவன' என்று சபிக்க, உடனே தேவர்செல்வம்யாவும் ஒழிந்தன: ஒழியவே, அசுரர் வந்து பொருது அமரரை வெல்வாராயினர். பின்பு இந்திரன் தேவர்களோடு திருமாலைச் சரணமடைந்து, அப்பிரான் அபயமளித்துக்கட்டளையிட்டபடி, அசுரர்களையுந் துணைக்கொண்டு, மந்தரமலையை மத்தாக நாட்டி, வாசுகியென்னும் மகாநாகத்தைக் கடைகயிறாகப் பூட்டிப் பாற்கடலைக்கடையலாயினர்என்பது,பாற்கடல்கடைந்த வரலாறு.

அப்பொழுது, மத்தாகிய மந்தரகிரி கடலினுள்ளே அழுந்திவிட,தேவர்கள்வேண்டுகோளினால் திருமால் பெரியதோர்ஆமைவடிவ மெடுத்து அம்மலையின்கீழேசென்று அதனைத் தனது முதுகின்மீது கொண்டு தாங்கி அம்மலை கடலில் அழுந்திவிடாமற் கடைதற்கு உபயோகமாம்படி அதற்கு ஆதாரமாக எழுந்தருளியிருந்தன னென்பது பிரசித்தம். ("அந்தரத்துறையமாரு மசுரருங் கடையும், மந்தரத்தினை மறுகுமவ்வாரிதி மருவிச்,

சுந்தரப்பெருங்கமடமாய் முதுகினிற் சுமந்தான், கந்தரத்தினிற்கவுத்துவங் கவினிய கண்ணன்'' என்றது, பாகவதம்; "மந்தரமத்தமிழ்ந்தாமற் பாற்கடற்குள் வளர்ந் தாதிகூருமமாய் மலையைத்தாங்கிச், சுந்தரவாசுகியை வடமாகச் சுற்றிச் சுராசுரர் நின் றமிர்தங் கடைந்த வந்நாள்'' என்றார் பின்னேரும். அங்ஙனமிருக்கும்போது, விசைபடக்கடைகையில், பெரிய வலிய மந்தரகிரி தன்முதுகின் பரப்பெல்லாங் கொண்டு சுழன்றுவர, அதனைத் தினவுசொறிகின்றவாறுபோலக் கொண்டு, துடைகுத்தவுறங்குவார்போல, ஸ்ரீமகாகூர்மரூபியான பகவான் இனிது துயின்றனனென, அப்பரமனது ஆற்றலையும் இளைப்பின்மையையும் எடுத்துக்காட்டினர். "செருமிகுவாளெயிற்ற வர வொன்று சுற்றித் திசைமண்ணும் விண்ணுமுடனே, வெருவரவெள்ளைவெள்ளமுழுதுங்குழம்பவிமையோர்கள் நின்றுகடையப், பருவரையொன்றுநின்றுமுதுகிற்பரந்துசுழலக் கிடந்து துயிலும், அருவரையன்னதன்மையடலாமையான திருமால் நமக்கொரரணே'' என்ற பெரியதிருமொழிப்பாசுரத்தின் கருத்தை யுட்கொண்டது இச்செய்யுள். "அழியும்பணிவெண்டிரைபுரட்டுமாழிவயிறுகிடங்கெழுந்து, கிழிய நெடுமால்வரைதுளங்கிக்கீழ்வீழ்ந்திடலுந் தனிநின்று, சுழலும்பசும்பொற்கிரிமுதுகுசொறிந்தாங்கணிதினிளநறவ,முழுகுந்துளவோன்மோட்டாமையுருவமெடுத்துத்தாங்கினனால்'' என்ற ஸ்ரீபாகவதத்தையுங் காண்க. "இயல்புடைக்கமடம் வெரினிடைத்தினவங்கொழிந்தில ததனிலை யெளிதோ'' என்றது, மகாபாகவதம்.

எப்படிப்பட்ட பெரிய பாரத்தையும் மிகஎளிதிற் பரிக்கவல்லவன் எம்பெருமானென்பது இதிற்போதரும். உழுதலாவது - பூமியைக்கீறுதல்; இங்கே, இலக்கணையாய், தினவுசொறிதலைக் குறித்தது. கலப்பைகொண்டுஉழுதலாற் பூமி வருந்தாதவாறுபோல மலைதிரிதலாற் பெருமான் வருந்தாதிருந்தனனென்பதும். 'உழுவது' என்ற சொல்லினது ஆற்றலால் விளங்கும்.

பாண்டியநாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில் திருவவதரித்தவரும், வைஷ்ணவ சம்பிரதாயத்திற் பிரசித்திபெற்ற ஆழ்வார்கள் பன்னிருவருள் ஒருவருமாகிய பெரியாழ்வார் ஒருநாள் தமது பூந்தோட்டத்தில் திருத்துழாய்ப் பாத்தியமைத்தற்பொருட்டு நிலத்தைக் கொத்துகையில், அங்கு ஸ்ரீதேவி பூதேவிகளின்அம்சமான ஒருமகள் தோன்றினாள்; அவளை அந்தஆழ்வார் தமதுமகளாகக்கொண்டு கோதையென்று நாமகரணஞ்செய்து வளர்த்து வந்தார்; அம்மங்கை இளமைதொடங்கி எம்பெருமானிடத்திலே பக்திபெருங்காதல்கொண்டு அப்பெருமானையேதான் மணஞ்செய்துகொள்ளக்கருதி, தனது தந்தையார் அவ்வில்லிபுத்தூரில்வாழும் எம்பெருமானுக்குச் சாத்தும்பொருட்டுக் கட்டிவைத்த திருமாலையை அவரில்லாதசமயம்பார்த்து எடுத்துத் தான் கூந்தலில்தரித்துக்கொண்டு, 'அப்பெருமானுக்குநான் நேராத்திருக்கின்றேனோ, இல்லையோ?' என்று தன் செயற்கையழகைக் கண்ணாடியிலேகண்டு, தந்தையார்வருதற்குமுன் அம்மலர்மாலையைக் களைந்து, முன்போலவே நலங்காமல் வைத்துவந்தாள்; இச்செய்தியையுணராமல் ஆழ்வார் அம்மாலையைக் கொண்டுபோய்ச் சுவாமிக்குச் சாத்திவர,பெருமானும் பிரீதியோடு ஏற்றருளினான்; இங்ஙனம் பலநாள் கழிந்தபின் ஒருநாள், வெளியிற்சென்றஆழ்வார் விரைவில்மீண்டுவந்தபொழுது, பூமாலையைத் தமது மகள் சூடியிருப்பதைப் பார்த்து, கோபித்து அவளைக் கண்டித்துப் புத்தி சொல்லிவிட்டு அன்று எம்பெருமானுக்கு மாலைசாத்தாமல் நின்றார். அன்றையிரவில் திருமால் ஆழ்வாரது கனவில் தோன்றி 'உமது மகள் சூடிக்

கொடுத்தமாலையே நமதுஉள்ளத்திற்கு மிகவும் உகப்பாவது' என்று அருளிச் செய்ய, அதனால், ஆழ்வார் தம்மகளைத் திருமகளென்றேகருதி, யாவர்க்குந் தலைவி யென்றகாரணத்தால் 'ஆண்டாள்' என்றும், மலர்மாலையைத் தான் சூடிக்கொண்டபின்பு பெருமானுக்குக் கொடுத்ததனால் 'சூடிக்கொடுத்தாள்' என்றும் பெயரிட்டு வளர்த்துவந்தனர்: பின்பு அம்மங்கை 'திருப்பாவை,' 'நாச்சியார்திருமொழி' என்ற திவ்வியப்பிரபந்தங்களைப் பாடி வாழ்ந்து, தந்தையாருடன் ஸ்ரீரங்கத்திற்குச் சென்று நம்பெருமாளது திருமேனியில் ஐக்கியமாயினள் என்ற வரலாறு, இச்செய்யுளின் முதலிரண்டடிகளிற் குறித்தது. ஆண்டாள்சூடிக்கொடுத்த திருமாலையை விட்டு வேறுதிருமாலையையமைத்துப் பெரியாழ்வார் எம்பெருமானுக்குச் சமர்ப்பிக்க அதனைப் பெருமான் 'இந்தமாலை கோதைமணம்பெறவில்லை' என்று வெறுத்தருளினனென வரலாறுகூறுதலும் உண்டு.

இவ்வாறு ஸ்ரீவில்லிபுத்தூராண்டாள் தனதுகூந்தலிற்சூடிக்கொடுத்த பூமாலைகளையும் பாமாலைகளையும் திருமால் திருவுள்ளமுகந்து ஏற்றுக்கொண்டதனால், 'வில்லிபுத்தூர்வரும் பாவை பாட்டுக்கும் குழற்சூட்டுக்கும் நல்லவர்' என்றார். "அன்னவயற்புதுவையாண்டா ளரங்கற்குப், பன்னு திருப்பாவைப்பல்பதியம்-இன்னிசையாற், பாடிக்கொடுத்தாள் நற்பாமாலை பூமாலை, சூடிக்கொடுத்தாளைச் சொல்லு" என்ற பெரியாரருளிச்செயலும், அதன் வியாக்கியானத்தில் 'பெரியபெருமாளுக்கு வாசிக காயிக ரூப மாலா ப்ரதையாய்' என்றதும் காணத்தக்கன.

வில்லிபுத்தூர் - பாண்டியநாட்டுத் திவ்வியதேசங்கள் பதினெட்டில் ஒன்று. மத்திமதீபமாக, 'வில்லிபுத்தூர்வரும்பாவை' என்றதை, முன்நின்ற 'பாட்டுக்கு' என்றதனோடுங் கூட்டுக. இனி, பாட்டுக்கு-(அடியார்கள்பாடும்) பாடல்களுக்கு எனப் பொதுப்படக் கொள்ளுதலுமாம். பாடுவது, பாட்டு. சூடுதற்குரியது, சூட்டு. அகத்தியமுனிவரும் பாண்டியராசர்களும் சங்கப்புலவர்களும் தமிழ்ப்பாஷையை வைத்தழைத்தோங்கச்செய்ததேசமான பாண்டிவளநாட்டிலுள்ள ஊராதலாலும், சங்கத்தமிழ்மாலை முப்பதுந்தப்பாமே சொன்ன ஆண்டாளுக்கும் தமிழினிசைமாலைகளுரைத்த பெரியாழ்வார்க்கும் திருவவதாரஸ்தலமாதலாலும், 'முத்தமிழ் வில்லிபுத்தூர்' எனப்பட்டது; "செந்தமிழ்த்தென்புதுவை" என்றார் பெரியாழ்வாரும். முத்தமிழ்ப் பாட்டு என்று கூட்டவுமாம். பாவை - சித்திரப்பதுமைபோ லழகியவள்; கண்மணிப்பாவைபோ லருமையானவள்; உவமையாகுபெயர். நல்லவர் - இனியவர். தொடு கடல் - ஆழ்ந்த கடல் எனினுமாம். கடல்வாய், வாய் - ஏழனுருபு. 'மோட்டுக் கமடம்' என்றது, முதுகின் உயர்வுபற்றி. கமடம் - வடசொல். கமடத்திருவுரு=ஸ்ரீகூர்மரூபம். சயிலம் - சைலமென்ற வடசொல்லின் விகாரம்; சலமயமான தென்பது காரணப்பொருள். என்ன - உடன்பாட்டெச்சம். துயில் - முதனிலைத்தொழிற்பெயர். முதுகு முதுகு - முதிர்ந்த முதுகு. 'சயிலம் உழுவது என்ன' என்பதற்கு - மலை தன்முதுகின்மேல் ஊர்வதென்றேனும் எண்ணாமல் என்று உரைத்தலுமாம்; இப்பொருளில், 'என்ன' என்பது - ஈறுகெட்டஎதிர்மறைவினையெச்சமாம்.

எம்பெருமானது பேரருளுடைமையும், வரம்பிலாற்றலுடைமையும் இதிற்கூறப்பட்டன. (உரு)

உச. திரிக்கின்றபொற்குன்றமூந்தாமலாமைத்திருவுருவாய்ப்
பரிக்கின்றதிற்பெரும்பாரமுண்டே பண்டுநான்மறைநூல்
விரிக்கின்றவுந்தியரங்கேசர்தந்திருமேனியின்மேற்
றரிக்கின்றது மகரக்கடலாடைத்தராதலமே.

(இ - ள்.) மகரம் கடல் ஆடை தராதலமே-சுறாமீன்களையுடைய கடலை (உடுக்கும்) ஆடையாகக் கொண்ட [கடலாற் சூழப்பட்டதான] இந்தப் பூலோகம்முழுவதுமே, பண்டு - பழமையாய் [அநாதிகாலமாய்], நால்மறை நூல் விரிக்கின்ற உந்தி அரங்கேசர் - நான்குவகைப்பட்ட வேதங்களாலும் சாஸ்திரங்களாலும் விரிவாகப்புகழ்ந்து கூறப்படுகின்ற திருநாபியையுடைய திருவரங்கநாதர், தம் திருமேனியின்மேல் தரிக்கின்றது - (ஆதிகூர்மரூபியான) தமது திருமேனியின்மீது கொண்டு தாங்கப்பெறுகின்றது; (என்றால், இப்பொழுது), திரிக்கின்ற பொன் குன்று அழுந்தாமல் ஆமை திரு உரு ஆய் பரிக்கின்றதில் - கடைந்துசுழற்றப்படுகின்ற பொன்மயமான மந்தரமலை (கடலில்) அழுந்திவிடாதபடி ஸ்ரீகூர்மரூபியாய் (அதனை)ச் சுமப்பதில், பெரும் பாரம் உண்டே-அதிகபாரம் உண்டோ? [இல்லையென்றபடி].

கீழேழுலகங்களுக்கும் கீழே அஷ்டதிக்கஜங்களும் அஷ்டமகாநாகங்களும் நாகராஜனை ஆதிசேஷனும் இருந்து உலகங்களைத் தாங்க, அவ்விடத்திற்குக்கீழே திருமால் ஆதிகூர்மரூபியாய் எழுந்தருளியிருந்து அவையனைத்தையும் எளிதில் ஒருமலரைப்போலவும் அணுவைப்போலவும் தன்முதுகின்மீது கொண்டு தாங்குகின்றனனென்பது, நூற்கொள்கை; மேல் ௯௨-ஆஞ் செய்யுளில் "தொல்லைக்கமடத்தல நவகண்டந் தொடுகடல்நீர்" என்பதுங் காண்க. அங்ஙனம் ஈரேழுலகங்களையும் அவற்றைத்தாங்கும் பலவற்றையும் ஆதிகூர்மரூபியாய் எப்பொழுதும் எளிதில்தாங்குகின்ற ஸ்ரீமந்நாராயணனது வரம்பிலாற்றலுக்கு, அப்பதினான்குஉலகங்களுள் ஒன்றான நிலவுலகத்திலே யுள்ள பலமலைகளில் ஒன்றாகிய மந்தரகிரியொன்றைக் கடலில் அழுந்தாதபடி கூர்மரூபங்கொண்டு சிறிதுபொழுது தாங்குதல் ஒருபொருளாமோ? என்பது கருத்து. அதனைப்பரித்தவனுக்கு இதுஎவ்வளவு? எனத் தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணி தொனிக்கின்றது.

பொன் குன்று - பொன்னையுடைய மலை; அழகிய மலையெனினுமாம். பாரம், மகரம், தராதலம் - வடசொற்கள். பண்டு தரிக்கின்றது என இயையும். உண்டே, ஏகாரம் - எதிர்மறை. மறை நூல் - உம்மைத்தொகை; மறையாகிய நூல் என இருபெயரொட்டுப்பண்புத்தொகையுமாம். "கடல் வாழ் சுறவு" என்றபடி மகரமீன் கடலிலேயே வாழுமியல்பினதாதலால், 'மகரக் கடல்'என்றார். பூமியைச்சூழ்ந்துள்ளதான கடலை, பூமியாகிய பெண் உடுக்கும் ஆடையாக வருணித்தல், கவிசமயம். (௨௪)

௨௫. ஓருருவெற்பைத்தரித்தது தானவரும்பருள்ளா
யீருருநின்றுகடைந்தது வேலையிதனிடையோர்
பேருருவின்னமுதோடேபிறந்தது பெண்மைகொண்டோர்
நாருருநின்ற தரங்கா விதுவென்னநற்றவமே.

(இ - ள்.) அரங்கா - ரங்கநாதனே! (திருப்பாற்கடல்கடைகின்றகாலத்தில்), ஓர் உரு - (உனது) வடிவமொன்று, வெற்பை தரித்தது-மந்தரமலையைத் தாங்கியது; ஈர் உரு - (உனது) இரண்டுவடிவங்கள், தானவர் உம்பர் உள் ஆய் நின்று - அசுரர்களுள்ளும் தேவர்களுள்ளும் பொருந்தி நின்று, கடைந்தது-(அக்கடலைக்) கடைந்தன; ஓர் பேர் உரு - (உனது) மற்றொரு பெரிய வடிவம், வேலையிதன் இடை - அக்கடலின்நடுவில், இன் அமுதோடே - இனிய அமிருதத்துடனே, பிறந்தது - தோன்றியது; ஓர் நார் உரு - அன்புசெய்யத்தக்க (உனது) மற்றொருவடிவம், பெண்மை கொண்டு நின்றது-பெண்தன்மையைக் கொண்டுநின்றது; இது என்ன நல் தவம்-இப்படி நீ ஒருகாலத்திற் பலவடிவங்களைக்கொண்டு அநுக்கிரகித்தது என்ன நல்ல தவத்தின் பயனோ! (எ - று.)

பாற்கடல்கடைகின்றபோது ஸ்ரீமந்நாராயணன் அக்கடலினிடையே மகாகூர்மரூபத்தைத் தரித்து மந்தரபர்வதத்திற்குஆதாரமாகஎழுந்தருளியிருந்ததனால் 'ஓருரு வெற்பைத்தரித்தது' என்றும், அப்பொழுது வாசுகியின் வாலைப் பிடித்துக்கொண்ட தேவர்களும் தலையைப் பிடித்துக்கொண்ட அசுரர்களும் ஆகிய இருதிறத்தாரும் அதனை வலியப்பிடித்து இழுத்துக் கடையவல்லவலிமையில்லாதவராய்நிற்கஅதுநோக்கி அத்திருமால்தான் ஒரு திருமேனியைத் தரித்துத் தேவர்கள்பக்கத்திலேயும் வேறொருதிருமேனியைத்தரித்து அசுரர்கள்பக்கத்திலேயும் நின்று வாசுகியின் வாலையும் தலையையும் பிடித்து வலமும்இடமுமாகஇழுத்துக் கடைந்ததனால் 'தானவரும் பருள்ளாய் ஈருருநின்றுகடைந்தது'என்றும்,அப்பால் அந்த ஸ்ரீமகாவிஷ்ணு தந்வந்திரியென்னுந் தேவரூபத்தைத் தரித்து அமிருதபூர்ணமான கமண்டலத்தைக் கையிலெடுத்துக்கொண்டு அந்த க்ஷீரசமுத்திரத்திலிருந்து உதயமானதனால் 'வேலையிதனிடை ஓர் பேருரு இன்அமுதோடேபிறந்தது' என்றும், அப்பொழுது அசுரர்கள் தந்வந்திரியின்கையிலிருந்த அமிருத கலசத்தைப் பலாத்காரமாகப் பிடுங்கிக்கொள்ள அந்தஎம்பெருமான் ஜகந்மோஹநகரமான ஒருஸ்திரீரூபத்தைத் தரித்து அசுரர்களை வஞ்சித்து அமுதத்தைக் கைக்கொண்டு அமரர்கட்குப் பிரசாதித்ததனால் 'பெண்மை கொண்டு ஓர்நாருரு நின்றது' என்றுங் கூறினர். 'அரங்கா இது என்னநல் தவம்' என்றது,இப்படி நீ ஏககாலத்தில் அநேகரூபங்களைக்கொண்டு சேவை சாதித்துப் பலவாறுஉதவும்படி அத்தேவர்கள் என்னநல்தவஞ்செய்திருந்தார்களோ வென வியந்தவாறும். இவ்வாலாற்றால், தன்சிரமம் சிறிதும்பாராமலே சமயோசிதமானரூபங்களைக்கொண்டு தன்னைச்சரணமடைந்தவரைப் பரிபாலிக்கும் பகவானது கருணை வெளியாம்.

தானவ ரென்ற வடசொல்-(காசியபமுனிவரது மனைவியருள்)தநுவென்பவளது சந்ததியா ரென்று பொருள்படும்; தத்திதாந்தநாமம். உம்பர் என்ற மேலிடத்தின்பெயர் - இடவாகுபெயராய், மேலுலகத்தில்வசிக்கின்றவர்களான தேவர்களைக் குறிக்கும். 'ஈருரு கடைந்தது' என்றது, பன்மையொருமைமயக்கம்: 'இரண்டுகண்ணுஞ்சிவந்தது' என்றாற்போல; [நன்-பொது-உக:] (தனித்தனி) கடைந்த தென்க. வேலை - ஆவீறு ஐயான வடசொல். 'வேலையிதனிடை' என்றதில், 'இது' என்றது - பகுதிப்பொருள்விகுதியாய் நின்றது; அன் - சாரியை. இனி,வேலைகடைந்தது என்று இயைத்துவிட்டு, இதனிடை என்பதனைஎடுத்தலுமாம். நார் - அன்பு. தவம் - தபஸ் என்ற வடசொல்லின் விகாரம். (உரு)

[இதுமுதல் மூன்று பாசுரங்கள் - ஸ்ரீவராகாவதார வைபவம்.]

உசு. ஆருக்கிவரையளவிடலாந் தென்னரங்க ரிந்தப்
பாருக்கரந்தைதவிர்ப்பதற்காகப் பழிப்பில்பெருஞ்
சீருற்றசெங்கட்கரும்பன்றியாகித் திருக்குளம்பின்
மேருக்கணகணமாத்தலைநாளில்விநோதிப்பரே.

(இ - ள்.) தென் அரங்கர் - அழகிய திருவரங்கத்தில் எழுந்தருளியிருப்பவரான எம்பெருமான்,—தலைநாளில் - முன்னொருகாலத்திலே, இந்த பாருக்கு அரந்தை தவிர்ப்பதற்குஆக - இந்தப்பூமிக்குஉண்டாகிய துன்பத்தை யொழிப்பதற்காக, பழிப்பு இல் பெருஞ் சீர் உற்ற செம் கண் கரும் பன்றி ஆகி - குற்றமில்லாத மிக்கசிறப்புப் பொருந்தியதும் சிவந்தகண்களையுடையதும் கருநிறமுள்ளதுமான வராகாவதாரமாய், திரு குளம்பில்

மேரு கணகணம் ஆ-தமது திருவடிக்குளம்பின்கீழே மகாமேருகிரி மிகவுஞ் சிறியதொருபொருளாகும்படி, விஞேதிப்பர் - விளையாடியருளினர்; (ஆதலால்), இவரை அளவுஇடல் ஆருக்கு ஆம் - இவருடையபெருமையை அளவிட்டுச்சொல்லுதல் யார்க்குக்கூடும்? [இவர்பெருமையை உள்ளபடி மதித்துச் சொல்லுதல் எத்துணைவல்லவர்க்கும் அரிதென்றபடி]; (எ - று.)

வராகாவதாரசரித்திரம், இரண்டாஞ்செய்யுளுரையிற் கூறப்பட்டது. பூமியைப் பாயாகச்சுருட்டியெடுத்துப்போன இரணியாக்கனைக் கொன்று பூமியைக் கொணர்ந்து பழையபடிவிரிப்பதற்காகவும், பூமிக்குநேர்ந்த பிரளயாபத்தைப் போக்கியருளுதற்காகவும் எடுத்த திருவவதார மாதலால், 'பாருக்கு அரந்தை தவிர்ப்பதற்காக' என்றார். இழிந்தபிறப்பென்னுங் குற்றம் இந்தத் திவ்வியவராகமூர்த்திக்கு இல்லை யென்பது விளங்க, 'பழிப்பில் பெருஞ்சீருற்ற' எனப்பட்டது. குழந்தை கிணற்றில் விழுந்தால் உடனே அதிற்குதித்துக் குழந்தையையெடுக்குந் தாய்போலப் பூமி கடலினுட்புக்கவளவிலே திருக்குஞ்சேற்றுக்கும்பின்வாங்காத வராகரூபமாய்க் கடலினுட்புக்குப் பூமியை மேலேயெடுத்து நிறுத்திய மகோபகாரகனே பிறவிப்பெருங்கடலினின்று உயிர்களை ஈடேற்றுதற்குத் தஞ்சமாகத்தக்கவ னென்பது இங்குத் தொனிக்கும்; "ஏனத்துருவா யுலகிடந்த வூழியான் பாதம், மருவாதார்க் குண்டாமோ வான்", "வராகத், தனியுருவன் பாதம் பணியுமவர் கண்டீர்,மணியுருவங் காண்பார் மகிழ்ந்து," "எறிதிரைவையமுற்றும், ஏனத்துருவாயிடந்தபிரா னிருங்கற்பகஞ்சேர், வானத்தவர்க்கு மல்லாதவர்க்கு மற்றெல்லாயவர்க்கும், ஞானப்பிரானை யல்லா லில்லை நான்கண்ட நல்லதுவே" என்றார் ஆழ்வார்களும். கொடியஅசுரன்மீது கோபத்தாற் கண்கள்சிவந்தன வென்க. புண்டரீகாக்ஷனை திருமாலின் அவதார மாதலால், செந்தாமரைமலர்போன்ற கண்க ளென்னவுமாம். "மலர்ந்த செந்தாமரைமலரை யொத்த திருக்கண்களுடையவனும், கருநெய்தற்பூவையொத்து விளங்குந் திருமேனியுடையவனுமான மகாவராகரூபமுடைய ஸ்ரீமந் நாராயணன் கோட்டுநுனியாலே பூமியைஉயரவெடுத்து மகாநீலமலைபோலப் பாதாளத்தினின்றும் எழுந்தருளினன்" என்றது, விஷ்ணுபுராணம். "நீலவரை யிரண்டுபிறைகவ்வி நிமிர்ந்ததொப்பக், கோலவராகமொன்றாய் நிலங்கோட்டிடைக்கொண்ட வெந்தாய்" என்று ஆழ்வார் அருளிச்செய்தபடி, நீலவராகமாதலால், 'கரும் பன்றி' எனப்பட்டது. சில புராணங்களிற் கூறியபடி சுவேதவராகத்தைக் குறிப்பதாயின், கருமை - பெருமை யென்னலாம். குளம்பு - தூரம். 'திருக்குளம்பில் மேரு கணகணம்ஆ' என்பதற்கு-காற்குளம்பின்கீழே மேருகிரி (அகப்பட்டுச் சிலம்பென்னுங் காலணியினுள்ளே யிடப்பட்ட சிறிய பருக்கைக்கற்கள் போலக்) கணகணவென்று ஒலிக்கும்படி யென்றும் உரைக்கலாம்; கணகணத்தல் - ஈரடுக்கு ஒலிக்குறிப்பு: சப்தாநுகரணம். "தூரமத்யகதோ யஸ்ய-மேருঃ கணகணாயதே," "சிலம்பினிடைச் சிறுபரல்போற் பெரியமேரு திருக்குளம்பிற் கணகணப்பத் திருவாகாரங், குலுங்க நிலமடந்தைதனை யிடந்து புல்கிக் கோட்டிடைவைத்தருளிய வென்கோமான் கண்டீர்," "தீதறுதிங்கள் பொங்குசுட ரும்ப ரும்பருலகேழினோடு முடனே, மாதிர மண்சுமந்த வடகுன்று நின்ற மலையாறு மேழுகடலும், பாதமர்சூழ்குளம்பி னகமண்டலத்தி னொருபா லொடுங்க வளர்சே,ராதிமுனேனமாகி யரணாய மூர்த்தியது நம்மையாளுமரசே" என்பன காண்க.

ஆர் - யார் என்பதன் மரூஉ. ஆருக்கு ஆம் என இயையும். ஆருக்கு அளவிடல் என இயைத்து. இவரை (த் திருவுருவத்தின்பெருமையில்) யார்க்குஒப்புச்சொல்லலாகு மென்னவுமாம். பார்-பார்க்கப்படுவது என்றவது,

பருமையையுடையது என்றுவது பொருள்படுங் காரணக்குறி. தவிர்ப்பதற்காக - பொருட்டுப்பொருளில், குவ்வுருபின்மேல் 'ஆக' என்பது சொல்லுருபாய்நின்றது. 'சேங்கட் கரும்பன்றி' என்றவிடத்துத் தொடைமுரண் காண்க. ஆ - ஆக என்பதன் விகாரம். 'தலைநாளில் விழைந்திப்பர்' என்றது, இயல்பினால் வந்த காலவழுவமைதி; [நன் - பொது - ௩௩.] "இறப்பே யெதிர்வே யாயிருகாலமுஞ், சிறப்பத் தோன்றும் மயங்குமொழிக் கிளவி" என்ற தொல்காப்பியச்சூத்திரத்தின் உரையில் 'இவர் பண்டு இப்பொழிலிடத்து விளையாடுவர்' என்பது உதாரணங்காட்டப்பட்டுள்ளது. ()

உஎ. மருமலர்க்கோயின்மடமான்விரும்புமதிலரங்கர்
பெருமையைப்பேசுவதெப்படி நாம் பிறைவாளெயிற்றுக்
கருமுகிற்கோலப்பெரும்பன்றியாயகளேபரத்தி
னொருமயிர்க்காலடியூடேகடல்புக்கொளித்தனவே.

(இ - ள்.) பிறை - பிறைச்சந்திரன்போன்ற, வாள் எயிறு - ஒளியுள்ள பற்களையும், கரு முகில் - காளமேகம்போன்ற [கருநிறமுள்ள], கோலம் - திருமேனியையு முடைய, பெரும் பன்றி ஆய - மகாவராகமாகிய, களேபரத்தின் - திருமேனியினது, ஒரு மயிர்க்கால் அடியூடே-ஒருமயிர்க்காலினது அடியிடத்திலேயே, கடல் புக்கு ஒளித்தன-(ஏழு) கடல்களும் பிரவேசித்து மறைந்தன;(என்றால்),—மரு மலர்-வாசனையையுடையசெந்தாமரைமலரை, கோயில் - இருப்பிடமாகவுடைய, மட மான் - மடப்பத்தையுடைய மான் போன்றவளாகிய திருமகள், விரும்பும் - விரும்பப்பெற்ற, மதில் அரங்கர் - மதில்கள்சூழ்ந்த திருவரங்கத்தில் எழுந்தருளியிருப்பவரான எம்பெருமானுடைய, பெருமையை - மகிமையை, நாம் பேசுவது எப்படி - நாம் புகழ்ந்து சொல்வது எவ்வாறு? (எ - று.)

மகாவராகமூர்த்தியின்பெருமை நம்மால்அளவிட்டுச்சொல்லுதற்கரிது என்பதாம். 'பிறை - வளைந்தவடிவிலும், வெண்மையானஒளியிலும் வக்கிரதந்தத்திற்குஉவமை; "நீலவரை யிரண்டுபிறைகவ்விநிமிர்ந்ததொப்பக்,கோலவராகமொன்றாய்" என்றது காண்க. வாள் எயிறு - வாள்போலக் கூரிதாய் விளங்கும் பல் லெனினுமாம். களேபரம் - வடசொல். மயிர்க்கால் - ரோமத்வாரம், ரோமகூபம். மடமை - இளமையும், பேதைமையுமாம். மான் - உவமையாகுபெயர். மருண்டநோக்கில் மகளிர்க்கு மான் உவமைகூறப்படும். மான்விரும்பும்அரங்கர் என இயையும்: திருமகளால் விரும்பப்படும் அரங்கர்; திருமகளை விரும்பும் அரங்கர் எனினுமாம். எப்படி-வினா, எதிர்மறைகுறித்தது; முன்செய்யுளிலும்,பின்செய்யுள்களிரண்டிலுங் காண்க. "செம்பொன் மதி லேழுடுத்த திருவரங்கப் பெருங்கோயில்"என்கிறபடி ஸப்தப்ராகாரங்கள்சூழ்ந்த தென்பது தோன்ற, மதிலரங்க மெனப்பட்டது. அடியூடே,ஏ - இழிவுசிறப்பு. கடல் - பால்பகாஅஃறிணைப்பெயராய் இங்குப் பன்மைகுறித்தலால், 'ஒளித்தன' என்னும் பன்மைமுற்றைக் கொண்டது. (உஎ)

உஅ. நிறக்குஞ்செழுஞ்சுடர்க்கோடு மிப்பாரு நிசாமுகத்துச்
சிறக்கும்பிறையுங் களங்கமும் போலுமெனிற் சிறுகண்
மறக்குஞ்சரஞ்செற்றமாயோனரங்கன்வராகமதாய்ப்
பிறக்கும்பிறப்பின்பெருமையெவ்வாறினிப்பேசுவதே.

(இ - ள்.) நிறக்கும் - நிறங்கொண்ட, செழுஞ் சுடர் - மிக்க ஒளியையுடைய, கோடும் - (ஸ்ரீவராகமூர்த்தியினது) வக்கிரதந்தமும், இ பாரும் - (அதனாற் குத்தியெடுக்கப்பட்ட) இந்தப்பூமியும், (முறையே), நிசாமுகத்து சிறக்கும் பிறையும்-இராப்பொழுதின்தொடக்கமாகிய மாலைப்பொழுதிலே சிறப்பாய்விளங்குகின்றபிறைச்சந்திரனையும், களங்கமும்-(அதனிடத்துள்ள)

மறுவையும், போலும் - ஒக்கும்: எனின் - என்றால், — சிறு கண் - சிறிய கண்களையும், மறம்-வலிமையையுமுடைய, குஞ்சரம்-(குவலயாபீடமென்னும்) யானையை, செற்ற - கொன்ற, மாயோன் - கண்ணபிரானாகிய, அரங்கன்-ரங்கநாதன், வராகம்அது ஆய் பிறக்கும் - பன்றிவடிவமாய்த் தோன்றிய, பிறப்பின் - திருவவதாரத்தின், பெருமை - பெருமையை, இனி பேசுவது எ ஆறு-இனி (நாம்) சொல்லுவது எப்படி? [இயலாதென்றபடி]; (எ - று.)

இந்நூலாசிரியர்தம் ஆசாரியரான பராசரபட்டரது திருத்தந்தையாராகிய ஸ்ரீகூரத்தாழ்வான் அருளிச்செய்த ஸுந்தரபாஹுஸ்தவத்தில் "புரா வராஹஸ்ய தவேயமுர்வரா தம்ஷ்ட்ராஹ்வயேந்தோ: கில லக்ஷ்ம லக்ஷிதா" என்றதை அடியொற்றியது இச்செய்யுளென்னலாம்; "கிளரகன்புனலுணின்றரியொர்கேழலாய், இளையெனுந்திருவினையெய்தினனரோ, உளவரும் பெருமையோரெயிற்றினுட்புரை, வளரிளம்பிறையிடை மறுவிற்றோன்றவே" என்ற கம்பராமாயணமுங் காண்க. வக்கிரதந்தத்தாற் குத்தியெடுக்கப்பட்டதான பெரிய பூமி அதிலே பிறையினிடத்துக்களங்கம்போல மிகச் சிறிதாய்க் காணப்பட்டதென, அந்தமகாவராகரூபத்தின் பருமையை விளக்கியவாறும்; "பன்றியாய்ப் படியெடுத்த பாழியாயென்பரது, வென்றியாருனதெயிற்றின் மென்றுகள் போனிருந்ததால்" என்பர் திருவரங்கக்கலம்பகத்தில்: "ஏனமொன்றாய் மண்துகளாடி" என்றது, திருவிருத்தம்; 'மஹாவராஹத்தினுடைய திருவெயிற்றுக்கு, ப்ரளயார்ணவகதையான பூமி, ஒருகஸ்தூரிபிந்துவாலே அலங்காரமிட்டாற்போலேயிருக்கை' என்றது, அதன் வியாக்கியானம். "சுறவமெறிகடல்வலயமுழுவதுமோர் நுண்டுகளிற்றுலங்குகோட்டி, னுறைவதனைத் தனிநோக்கி" என்ற கூர்மபுராணத்தையும், "கருமையிற்றவழக் கலையினிற்றெறிசேதகமெனக் காசினி கோட்டின், மருவவாண் டிருணியாகியபரமனெழுந்து தான் வருகின்றவெல்லை" என்ற மகாபாகவதத்தையும், "செய்யதாமரைநான்முகன்செய்தருள், வையம் யாவு மருப்பிற்றுகளென, வெய்துகொண்டு விரிக்குமொராயிரம், பையரா முடியுச்சிபதித்ததால்" என்ற கந்தபுராணத்து உபதேசகாண்டத்தையுங் காண்க. 'கோடும் பாரும், பிறையுங் களங்கமும் போலும்' என்றது, உவமையணி. கோடு பிறையையும், பார் களங்கத்தையும் போலும் என முறையே சென்றுஇயைதலால், முறைநிரனிறைப்பொருள்கோள்; நிரனிறையணியெனவும்படும்: க்ரமாலங்கார மென்பர் வடநூலார்.

குஞ்சரஞ்செற்ற கதை:—வில்விழாவென்கிற வியாஜம் வைத்துக் கம்ஸனால் வரவழைக்கப்பட்டு ஸ்ரீகிருஷ்ணபலராமர்கள் கம்ஸனரண்மனையை நோக்கிச்செல்லுகையில், அவனது அரண்மனைவாயில்வழியில் தம்மைக்கொல்லும்படி அவனால்ஏவிநிறுத்தப்பட்ட குவலயாபீடமென்னும் மதயானை பாகனால் தூண்டப்பட்டுக் கோபித்து வர, அந்த யாதவவீரர் அதனையெதிர்த்து அதன்தந்தங்களிரண்டையும் சேற்றிலிருந்து கொடியையெடுப்பதுபோல எளிதிற்பறித்து அவற்றையேஆயுதமாகக்கொண்டு அடித்து அந்தயானையை உயிர்தொலைத்துவிட்டு உள்ளேபோயினரென்பதாம்.

கிம்சுகம், களங்கம், குஞ்ஜரம், வராஹம் - வடசொற்கள். கண்சிறுத்திருத்தல், யானைக்கு உத்தமவிலக்கணம்; "தீயுமிழ் சிறுகணுஞ் செம்புகருமுடைத்தாய்" என்ற அரசயானையிலக்கணத்தைக் காண்க. மறம் - கோபமும், கொலையுமாம். குஞ்சரம் என்பது-காட்டுப்புதர்களிற் சஞ்சரிப்பதென்றும், துதிக்கையையுடையதென்றும் காரணப்பொருள்படும்; குஞ்சம் - புதரும், துதிக்கையும். செற்ற, செறு-பகுதி. மாயோன்-மாயையையுடையவன்; மாயையாவது - செய்தற்குஅரியனசெய்யுந்திறம்: பிரபஞ்சகாரணமான மூலப்பிரகிருதியுமாம்; ஆச்சரியகரமான குணங்களுஞ் செயல்களு

மென்னலுமாம். 'வராகமது' என்றதில், 'அது' என்பது - பகுதிப்பொருள் விகுதி. (௨௮)

[இதுமுதல் நான்குபாசுரங்கள் - ஸ்ரீநரஸிம்ஹாவதார வைபவம்.]

௨௬. ஆடுமரவிற்றுயிலரங்கேசனருமகற்கா
நீடுந்தறியிலுதித்திலனே னிகிலப்பொருள்க
ளூடும்புறத்தினுமுண்மையெவ்வாறிவ்வுலகறியு
மீடுமெடுப்புமில்லாவொருதெய்வமிவனெனவே.

(இ - ள்.) ஆடும் - படமெடுத்து ஆடுகின்ற, அரவில் - ஆதிசேஷனிடத்தில், துயில் - யோகநித்திரைசெய்தருள்கின்ற, அரங்க ஈசன் - ரங்கநாதன், அரு மகற்கு ஆ - (பெறுதற்கு) அரிய மகனாகிய பிரகலாதனுக்காக, நீடும் தறியில் உதித்திலன் எல் - நீண்ட தூணினின்று (நரசிங்காவதாரமாய்த்) தோன்றியிலனானால்,— ஈடும் எடுப்பும் இல்லா ஒரு தெய்வம் இவன் என - (தனக்கு) ஒப்பானபொருளும் (தன்னினும்) மேம்பட்டபொருளு மில்லாத ஒன்றான கடவு ளிவனே யென்று (எல்லாரும்) நிச்சயிக்கும்படி, நிகிலம் பொருள்கள் ஊடும் புறத்தினும் உண்மை - எல்லாவஸ்துக்களினுடைய உள்ளிலும் வெளியிலும் (அத்திருமால்) உளனாந்தன்மையை, இ உலகு எ ஆறு அறியும் - இந்தஉலகம் எப்படி அறியும்? [அறியா தென்றபடி]; (எ - று.)

தனித்தனி தேவர் மனிதர் விலங்கு முதலிய பிராணிகளாலும் ஆயுதங்களாலும் பகலிலும் இராவிலும் பூமியிலும் வானத்திலும் வீட்டின் அகத்திலும் புறத்திலும் தனக்குமரணமில்லாதபடி வரம்பெற்றவனும்,இரணியாக்கனது உடன்பிறந்தவனுமான இரணியன், தேவர்முதலிய யாவர்க்குங்கொடுமைகளியற்றித் தன்னையே கடவுளாக அனைவரும் வணங்கும்படி செய்துவருகையில், அவனது மகனான பிரகலாதாழ்வான், இளமைதொடங்கி மகாவிஷ்ணுபக்தனாய், தந்தையின்கட்டளைப்படி முதலில் அவன்பெயர்சொல்லிக் கல்விகற்காமல் நாராயணநாமஞ்சொல்லிவரவே, கடுங்கோபங்கொண்ட இரணியன் பிரகலாதனைத் தன்வழிப்படுத்துதற்குப் பலவாறு முயன்றபின், அங்ஙனம்வழிப்படாதஅவனைக் கொல்லுதற்கு என்னஉபாயஞ்செய்தும் அவன் பகவானருளால் இறந்திலனாக, ஒருநாள் சாயங்காலத்தில் தந்தை மைந்தனைநோக்கி 'நீசொல்லும்நாராயணனென்பான் எங்குஉளன்? காட்டு' என்ன, அப்பிள்ளை 'தூணிலும் உளன், துரும்பிலும் உளன், எங்கும் உளன்' என்று உறுதியாய்ச்சொல்ல, உடனே இரணியன் 'இங்குஉளனோ?' என்றுசொல்லி எதிரில்நின்றதூணைப்புடைக்க, அதிலிருந்து திருமால் உடனே மனிதரூபமும் சிங்கவடிவமுங் கலந்த நரசிங்கமூர்த்தியாய்த் தோன்றி இரணியனைப் பிடித்து வாயிற்படியில் தன்மடிமீது வைத்துக்கொண்டு தனது திருக்கைந்நகங்களால் அவன்மார்பைப் பிளந்து அழித்திட்டு, பிரகலாதனுக்கு அருள்செய்தன னென்பது, நரசிங்காவதாரகதை. ("அளந்திட்ட தூணை யவன்தட்ட வாங்கே, வளர்ந்திட்ட வாளுகிர்ச் சிங்க வுருவாய், உளந்தொட் டிரணிய னொண்மார்பகலம், பிளந்திட்ட கைகள்," "எங்குமுளன் கண்ண னென்ற மகனைக் காய்ந், திங்கில்லையா லென் றிரணியன் தூண்புடைப்ப, அங் கப்பொழுதே யவன்வீயத் தோன்றிய வென், சிங்கப்பிரான் பெருமை யாராயுஞ் சீர்மைத்தே" என்றார் ஆழ்வார்களும்.)

வேறேயொரு தூணிலிருந்து நரசிங்கமூர்த்தி தோன்றினால் 'முன்னமே ஒரு நரசிங்கத்தை உள்ளேவைத்து நாட்டிய தூண் அது' என்று சங்கிக்கக்கூடு மாதலால் அதற்குஇடமில்லாதபடி அவ்விரணியன்தானே தனது உயரம்பருமனுக்குப்பொருந்தப் பார்த்து அளந்து நாட்டிய அவன்வாயில் தூணிலிருந்தே திருமால் நரசிங்கமாய்த் தோன்றின னென்பதும். வேறுயா

ரேனும் கையால்தட்ட அத்தட்டியஇடத்திலிருந்து தோன்றினால் 'அவர் தம்கையில் நரசிங்கத்தை அடக்கிக்கொண்டுவந்து தூணிலேபாய்ச்சினர்' என்று சொல்லக்கூடு மாதலால் அதற்குஇடமில்லாதபடி அவ்விரணியன் தானே தன்கையால் தட்டியளவில் திருமால் தோன்றின னென்பதும், அவன் ஓரிடத்தில்தட்ட மற்றோரிடத்திலிருந்து நரசிங்கம் தோன்றினால் 'எங்கும்உளன்' என்று பிரகலாதன்செய்த பிரதிஜ்ஞை தவறி 'நீசொல்லுகிறவன் இங்குஇல்லை' என்று இரணியன்செய்த பிரதிஜ்ஞைநிலைநிற்கு மாதலால் அதற்குஇடமில்லாதபடி அவன் தட்டின இடத்திலிருந்தே திருமால் தோன்றின னென்பதும், அவன் தட்டினபின்பு சிறிதுநேரங்கழித்து நரசிங்கம் தோன்றினால் 'நான் தட்டினபொழுது திருமால் அங்குஇல்லை' என்று அவன் சொல்லித் திருமால் எங்கும் எப்பொழுதும் எல்லாப்பொருள்களிலும் உள்ளும் புறமும் வியாபித்திருக்கின்ற உண்மைநிலையை மறுக்கக்கூடு மாதலால் அதற்குஇடமில்லாதபடி கர்ப்பம் கருமுதிர்தல் பிரஸவம் முதலியனவும் குழந்தையாய்ப்பிறத்தல் பிறகு நாளடைவில்வளர்தல் என்பனவும் இல்லாமல் அவ்வெதிரியினும்பருத்து வளர்ந்தவடிவையுடையவனாய் அப்பொழுதே தோன்றின னென்பதும், அங்ஙனம்தோன்றியவிடத்தும் இரணியன் வெல்லவும் நரசிங்கமூர்த்திதோற்கவுமானால் 'எங்கும்உளன்' என்ற உண்மை நிலைத்தாலும் பரத்வம் ஸித்தியாமற்போய்விடுதல்பற்றி அதனினும் தோன்றாதிருத்தலே நலமாதலால் அங்ஙனமாகாதபடி அக்கொடியவனைத் தவறாதுஅழித்தன னென்பதும், தேவர் மனிதர் விலங்கு தாவரம் என்னும் நால்வகைப் பிறப்புக்களிலுள்ளவற்றில் ஒவ்வொன்றினாலும் தனித்தனி சாகாதபடியும் பிரமசிருஷ்டிக்குஉட்பட்ட எந்தப்பிராணியினாலும் சாகாதபடியும் அவன் பிரமருத்திராதிகளிடத்துப் பெற்ற பெருவரம் பழுதுபடாதிருத்தல்வேண்டி நரங்கலந்தசிங்கமாய்த் தன்னைத் தானே தோற்றுவித்துக்கொண்டு தோன்றின னென்பதும், அஸ்திரசஸ்திரங்களில்ஒன்றினாலும் சாகாதபடியும் ஈரமுள்ளதனாலும் ஈரமில்லதனாலும் இறவாதபடியும் பெற்ற வரம் வீண்போகாதவாறு நகங்களினாற்கீண்டு கொன்றன னென்பதும். பகலிலும்இரவிலும் சாகாதபடி பெற்ற வரம் பொய்படாதவாறு அப்பகலிரவுகளின்சந்தியாகிய மாலைப்பொழுதிலேகொன்றன னென்பதும். பூமியிலும்வானத்திலும்சாகாதபடிபெற்றவரத்தை ஒதுக்குமாறு தன்மடிமீது வைத்துக் கொன்றனனென்பதும், வீட்டின் அகத்திலும் புறத்திலும் இறவாதபடி பெற்ற வரத்திற்கு விரோதமின்றி வாயிற்படியின்மீதுவைத்துக்கொண்டுகொன்றன னென்பதும்முதலியன-அருமையாக் கருதத்தக்க விஷயங்கள். "சுரரசுரர் முனிவர் நரர் கையிற் பாரிற் சுடர்வானிற் பக லிரவி லுள் புறம்பிற், பெருபடையிற்றுன்சாகாவிரணியன் றன்னைப் பிரகலாதன் தர்க்கித்துண்டென்றதூணில், நரகரியாய்ப்பொழுதுபுகுநேரந்தன்னில் நாடியுதித் துயர்வாசற்படிமீதேறி, இரணியனைத்தொடைமிசைவைத் துகிரினாலே யிருபிளவாக்கினை யரியே யெம்பிரானே" என்பர் பின்னோரும்.

ஸர்வவ்யாபியான பரம்பொருள் ஸ்ரீமந்நாராயணனே யென்ற உண்மை இத்திருவவதாரத்தின்செயல்களால் நன்குவிளங்கியதை இப்பாசுரத்தில் எடுத்துக்காட்டினர். கடவு ளுண் டென்பதும், அக்கடவுள் திருமாலே என்பதும் இவ்வவதாரத்தினாற் சாதிக்கப்பட்டமை வெளிப்படை. உயிர்கள் உய்தற்பொருட்டு இவ்வுண்மையைப் பிரதியக்ஷமாக்கியருளினன் எம்பெருமான். அங்ஙனந்தோன்றாமற்போனால் இறைவன் தா னென்பது ஒழியுமென்க. ("நாரணப்பெயரினா னையிலாதொளிர்செகற், பூரணச்செயலினைப்பொலிவுசெய்தருள்வதோர், காரணத்தினி னெடுங்கதிர்மணித்தறியில்வர், தாரணத்தினைவளர்த் தவுணனைக்கொன்றநாள்" என்னும் இருசமய விளக்கத்தையுங் காண்க.)

'அருமகன்' என்றது, தந்தைக்கு மைந்தனிடம் இயல்பாகஇருத்தற்கு உரிய அன்புவிசேடத்தைக் காட்டும்; அன்றி, 'எங்குமுளன் கண்ணன்' என்ற அருமையான பரமார்த்தத்தை எளிதில்வெளியிட்ட மகோபகாரகனான புதல்வனென்ற பொருளில் 'அருமகன்'என்றுருமாம். தனது இளமைப்பருவமுடையகுழந்தை அசங்கதமானதொருவார்த்தையைச் சொன்னாலும் அந்த மழலைச்சொல்லைச் செவிக்கின்பமாகக்கேட்டு மகிழ்தலும், அவ்விளமகன் தானே தக்கதொருவார்த்தையைக்கூறினால் அதற்கு மிகமகிழ்ந்து மகனைப் பாராட்டுதலு மாகிய தந்தையியல்பிற்கு மாறாக இரணியன் பிரகலாதனைப் பகவந்நாமஞ்சொன்னதுவேஏதுவாக 'இவன் என்புத்திர னன்று' என்று கைவிட்டிருக்கவும், எம்பெருமானுக்கு அந்தப் பிரகலாதன்பக்கல் உண்டான புத்திரவாத்ஸல்யமும், பகவந்நாமஞ்சொன்னவர்களைத் தமக்கு எல்லாவகை யுறவினராகவுங்கொள்ளுகின்ற தமது இயல்பும் பற்றி; 'அருமகன்' என்றனரென்னலாம். அவன் தாய்வயிற்றிலிருக்கும்பொழுதேதொடங்கித் தன்சித்தத்தை எம்பெருமான்பக்கல் வைத்த மகாபாகவதோத்தமனாதலாலும் இங்ஙனங் கூறத்தகும்.

ஈடு மெடுப்பு மில்லா வொருதெய்வம்—"ஒத்தார் மிக்காரை யிலையாய மாமாயா" என்றார் திருவாய்மொழியிலும். திருவாய்மொழியில் "ஈடு மெடுப்பு மிலீசன்" என்றதற்கு 'சிலரைத் தாழ்ந்தவரென்று உபேக்ஷித்து இட்டுவைக்கையும் வேறுசிலரை உயர்ந்தவரென்று அங்கீகரித்து எடுத்துக்கொள்ளுதலு மில்லாமல் எல்லார்க்கும் ஸமானனான நடுவுநிலைமையுடையவனென்று பொருள்செய்திருத்தலால், அங்ஙனங்கொள்ளவுந் தகும். 'உலகு' என்றது, உலகத்துஉயிர்களை; அறிதற்குரியன அவையே யாதலால். புறத்தின், இன் - ஏழனுருபு. நரசிங்கமூர்த்தியாகிய சூரியன் தோன்றுதற்குத் தூண் உதயபர்வதமாயிருந்ததென்ற கற்பனை. 'உதித்திலன்' என்ற சொல்லாற்றலாற் போதரும். (௨௯)

௩௦. மறந்தமறையு மழுங்கியமந்திரமும் மகமு
மிறந்ததெய்வங்களு மெல்லா முனெங்குறைந் தெங்கியன்ற
வறந்தருங்கோயிலரங்கனவ்வாளரிக்காளரியாய்ப்
பிறந்தபினன்றோ பிறந்துபெருகிப்பிறங்கியதே.

(இ - ள்.) மறந்த மறையும் - மறக்கப்பட்ட வேதங்களும், மழுங்கிய மந்திரமும் - விளங்காமற்போன மந்திரங்களும், மகமும் - யாகங்களும், இறந்த தெய்வங்களும் - ஒழிந்துபோன தெய்வங்களும், எல்லாம் - ஆகிய இவையெல்லாம், முன் - முன்பு, எங்கு உறைந்து எங்கு இயன்ற - எங்குத் தங்கி எவ்விடத்திற் சஞ்சரித்தன! அறம் தரும் கோயில் அரங்கன் - தருமத்தை நிலைநிறுத்துகின்ற திருவரங்கம்பெரியகோயிலிலெழுந்தருளியிருப்பவனான எம்பெருமான், அ ஆள் அரிக்கு ஆள் அரி ஆய் - அந்தப் பராக்கிரமத்தையுடையபகைவனான இரணியனை யழிப்பதற்காக நரசிங்கவடிவமாய், பிறந்த பின் அன்றோ-திருவவதரித்தபின்பன்றோ, பிறந்து பெருகி பிறங்கியது - (அதெல்லாம்) தோன்றிப் பெருக்கமடைந்து விளங்கிற்று!! (எ - று.)

இரணியன் பிறந்து வளர்ந்து அருந்தவம்புரிந்து பெருவரங்கள்பெற்றுத் தலையெடுத்துச் செருக்கி உலகத்திலே எவரும் பழையகிரமப்படி வேதமோதவும் மந்திரஜபங்கள்செய்யவும் யாகங்கள்புரியவும் தெய்வங்களை வழிபடவுங் கூடாதென்றும், தன்னையே கடவுளாகக் கொண்டு அனைவரும் துதித்து வந்தித்து வழிபடவேண்டுமென்றும் கட்டளையிட்டு அவ்வாணையை எங்குந் தவறாமற் செலுத்திவந்தகாலத்தில் வேதமுதலியனயாவும் இருக்கின்றஇடமுந்தெரியாதபடி மறைந்திருந்ததையும், இப்படிசிலகாலங்கழிந்தபின்னர் எம்பெருமான் நரசிங்காவதாரஞ்செய்து இரணியனைத்தொலை

க்க அதன்பிறகு அவ்வேதமுதலியவனைத்தும் தலையெடுத்ததையும் எடுத்துக் காட்டி, துஷ்டநிக்கிரகஞ்செய்து வேதங்களையும் வைதிககருமங்களையும்நிலை நிறுத்திச் சகலதேவர்களையும் வாழ்விப்பவன் எம்பெருமானே யென்ற உண்மையை உணர்த்தினார். "முக்கணானெண் கணனுமுளரியாயிரங் கணனுந் திக் கணுந்தேவரோடு முனிவரும் பிறருந் தேடிப், புக்கநாடறிகுறுமற்றிரிகின் றார் புகுந்துமொய்த்தார், எக்கணுற்காண்டுமெந்தையுருவமென்றிரங்கிநின் றார்" என்ற கம்பராமாயணத்து இரணியன்வதைப்படலம் இங்குநோக்கத் தக்கது. மறந்த மறை-அத்தியயனமில்லாமையால் மறந்துபோனவேதங்கள்.

'மழுங்கிய' என்பதனை மகத்துக்குங் கூட்டுக; செய்பவரெவருமில்லாமையால் மழுங்கிப்போன யாகங்கள். பிழைத்திருத்தல்தெரியாமையால், 'இறந்த தெய்வங்கள்' எனப்பட்டன. ("தரையின்மீதுபோய் மாயவனுருவெனச்சாற்றும், அரியவேள்வியேமுதலியவறங்களையழித்துப், புரியுமந்தணர்ப்பொன்றுறப்புரிமினோ புரியின், சரியவன்வலிகெடு மூலப்பார்கடவுளரே," "என்னவோதலுஞ் சம்பரன்முதலினோரேகித், தன்னும்வேள்வியே முதலியவறங்களைத்தொலைத்து, மன்னுயிர்க்குழுமாயநன்மனையெரியூட்டிப், பொன்னினாட்டினும் புலவரைப்புடைத்தனர்புகுந்தே" என்ற ஸ்ரீபாகவதம், இங்கு நோக்கத்தக்கது. "அமரரைவதைத்து நீங்கள், விரிவுறுவேதமெல்லாமழிய வேள்வியைச்சிதைத்துத், தரையினின்முனிவரெல்லாந்தவஞ்செயாதியற்று மென்றான்" என்பர் மகாபாகவதத்திலும்.) இன்றி, "இரணியன், அநேக வரங்களைப் பெற்று, கர்விதனாகி, திரிலோகங்களையும் ஸ்வாதீனமாக்கிக்கொண்டு, இந்திரன் சூரியன் வாயு அக்கினி வருணன் சந்திரன் யமன் முதலானோர் செய்கிற அதிகாரங்களைத் தானேசெய்துகொண்டு, யாகங்களிலே அவர்களுக்கான அவிர்ப்பாகங்களைத் தானே கைக்கொண்டு, மூன்று லோகங்களையும் ஏகாதிகாரமாய்த் தானே ஆண்டுகொண்டிருந்தான்; அப்போது, இந்திராதிதேவதைகள், அந்தமகாசூரனுக்குப் பயந்து, சுவர்க்க லோகத்தை விட்டு, மனிதவேஷம்பூண்டு பூமியிற் சஞ்சரித்துக்கொண்டிருந்தார்கள்" என்று ஸ்ரீவிஷ்ணுபுராணம் கூறுதலாலும், இங்ஙனங்கூறத்தகும். மந்த்ரம், மகம், தைவம்-வடசொற்கள். மந்திரமும்மகமும், மகரவொற்று - விரித்தல்விகாரம். இழிவுதோன்ற, தெய்வங்களை அஃறிணையாக்கினர். முன்-காலமுன்; இரணியன்வாழ்ந்தநாளில் என்க. இயன்ற - 'அன்'சாரியைபெறாத பலவின்பால்முற்று. தொகுதியொருமையால், 'பிறங்கியது' என்றார்; 'பிறங்கிய' எனப் பன்மையாகப் பாடமோதுவாரும் உளர். ஆள் அரி - ஆண்மையையுடைய பகைவன். அரி - வடசொல். ஆள் அரி - நரங்கலந்த சிங்கம். அரி - ஹரி என்ற வடசொல்லின் சிதைவு; (யானைமுதலிய பெரியபிராணிகளையும்) அழிக்கவல்லதென்பது காரணப்பொருள். "அந்தியம்போதிலரியுருவாகி யரியையழித்தவனை" என்று பெரியாழ்வார் திருப்பல்லாண்டு பாடியதனை அடியொற்றி 'ஆளரிக்கு ஆளரியாய்' என்றார். வாள் அரி என்று எடுத்து, வாள்போலக்கொடிய பகைவனென்றும், வாளாயுதத்தையேந்திய பகைவனென்றும், (பொன்னிறமானவடிவையுடைமையால் இரணியனென்றுபெயர்பெற்ற) ஒளியையுடைய பகைவனென்றுங் கொள்ளவுமாம். அறம்தரும் அரங்கன் என இயையும். அறம் தரும் - தொலைந்துபோன தருமத்தைக் கொணர்ந்துகொடுக்கின்ற என்க. இங்கு 'அறந்தரும்' என்றது - ஸாபிப்ராயவிசேஷணமாதலால், கருத்துடையடைமொழியணி. (௬௦)

௬௧. அடிகண்டிலரேதலத்தவரைம்முகனேடமரர்
கடிகண்டிலர்மலைவாணிவர்ந்துங் கமலத்தயனார்
முடிகண்டிலரண்டபாமுகடேறியு மோதுணர்ந்தோர்
படிகண்டில ரரங்கேசர்கொள்சிங்கப்படிதனக்கே.

MAHAMAHOPADHYAYA ... LIBRARY

(இ - ள்.) அரங்க ஈசர் - ரங்கநாதர், கொள் - கொண்ட, சிங்கம் படி தனக்கு - நரசிங்கவுருவத்திற்கு,—அதலத்தவர் - கீழுலகத்திலுள்ளவர், அடி கண்டிலர் - திருவடிகளைக் கண்டாரில்லை; ஐம்முகனோடு அமரர் - சிவனும் (மற்றைத்) தேவர்களும், மலை வான் இவர்ந்தும் - (முறையே) கைலாசகிரியின்மேலும் சுவர்க்கலோகத்திலும் உயரவிருந்தும், கடி கண்டிலர் - திருவரையைக் கண்டாரில்லை; கமலத்து அயனார் - (அத்திருமாலின் திருநாபித்)தாமரைமலரில் தோன்றிய பிரமதேவர், அண்டம் மா முகடு ஏறியும் - அண்டகோளத்தினது மிகவுயர்ந்த உச்சியிடத்தில் ஏறியிருந்தும், முடி கண்டிலர் - திருமுடியைக் கண்டாரில்லை; மூது உணர்ந்தோர் -(பலவற்றையும், அறிந்த) பழையபெரியோரும், படி கண்டிலர் - அளவைக் கண்டாரில்லை; (எ - று.)

நரசிங்கமூர்த்தி கொண்ட விசுவரூபத்தின் பெருமையைக் கூறியது, இப்பாசுரம். அதனை, கம்பராமாயணத்து இரணியன்வதைப்படலத்திலும் "பிளந்தது தூணு மாங்கே பிறந்தது சீயம் பின்னை, வளர்ந்தது திசைகளெட்டும் பகிரண்டமுதலமற்று, மளந்த தப்புறத்துச்செய்கையாரறிந்தறையகிற்பார், கிளர்ந்ததுககனமுட்டை கிழிந்ததுகீழுமேலும்," "மன்றலந்துளபமாலைமாலுடமடங்கல் வானிற், சென்றதுதெரிதல்தேற்றும் சேவடிபடியிற்றீண்ட, நின்றதோர்பொழுதி னண்டநெடுமுகட்டிருந்தமுன்னோன், அன்றவனுந்தி வந்தானுமெனத்தோன்றினானால்," "நோக்கினார்நோக்கினார்முன்னோக்குறு முகமுங்கையும், யாக்கையுந்தாளுமாகியெங்கணுந்தானேயாகி, வாக்கினன் மனத்தினன்மற்றறிவினு ளளக்கவாரா, மேக்குயர்சீயந்தன்னைக்கண்டனர் வெருவுகின்றார்" எனக் காண்க. "விண்டிடுதூணினெழுந்தெழிலார்நரமீளி வளர்ந்தசெய, லெண்டவராலு முணர்ந்தறிதற்கரி தென்றிடில் யாரறிவார், அண்டமுகட்டின்வயங்கியமர்ந்திடுமாதியிவ்வரியினெனிர், முண்டகவுந்தியின்வந்தது போன்றனன் முடிவறைதற்கெளிதோ" என்பர் மகாபாகவதத்திலும்.

ஈற்றிலுள்ள 'சிங்கப்படிதனக்கு' என்பதை எல்லாவாக்கியங்களிலுங் கூட்டுக; கடைநிலைத்தீவகம். அடி-பாதம். கண்டிலர்-எதிர்மறைப்பலர்பாலிறந்தகாலமுற்று. அதலம்-கீழேழுலகங்களிலொன்று; இங்கு, கீழுலகமென்ற மாத்திரமாய்நின்றது. ஐம்முகன் - ஐந்துமுகங்களையுடையவன்; சதாசிவமூர்த்தியாகிய சிவபிரானுக்கு ஐந்துமுகங்களுண்டு: ஈசானம், தற்புருடம், அகோரம், வாமம், சத்தியோசாதம் என்று அவற்றிற்குப் பெயர்கூறுவர்; ஓடு-எண்ணுப்பொருளது. ஐம்முகன் மலையிலும், அமரர் வானிலும் இவர்ந்தும் என முறையேசென்றுஇயைதலால், முறைநிரனிறைப்பொருள்கோள். உயர்ந்தஇடங்களில்இருந்துங் கண்டாரில்லையென்றற்கு இதுகூறினர். அவர்கட்குக் கைலாசகிரியும் வானுலகமும் உறைவிட மென்பது, வெளிப்படை. இவர்தல்-ஏறுதல். 'வானிவந்தும்' என்ற பாடத்திற்கு, வான் நிவந்து என்று பிரிந்து இப்பொருளேபடும்; நிவத்தல் - உயர்தல். கடி-இடை; வடசொல். அயன்-அஜனென்றவடசொல்லின் விகாரம்; திருமாலிடத்தினின்று தோன்றியவனென்று பொருள்படும்; அ - விஷ்ணு; "அகாரார்த்தோ விஷ்ணு:" ஆர் என்ற பலர்பால்விகுதி, உயர்த்தற்பொருளில்வந்தது. முடி-சிரசு. 'அண்டமாமுகடு' என்றது, மேலேழுலகங்களுள்ளும் மேலதான சத்தியலோகத்தை. அது, பிரமன்வாழுமிடம். பிரமனது ஆதிசிருஷ்டியில் உண்டானவர்களும் தத்துவஞானமுடையவர்களுமான ஸநகர்முதலிய யோகிகள், 'மூதுணர்ந்தோர்' எனப்பட்டனர். முதுமை யென்ற பண்புப்பெயர், ஈறுபோய் ஆதிநீண்டது; இது, உணர்ந்தோர்க்கு அடைமொழி. படி - ஒப்பும், தன்மையுமாம். சிங்கம்-ஸிம்ஹ மென்ற வடசொல்லின் விகாரம்; (யானைமுதலிய பெரியபிராணிகளையும்) ஹிம்ஸிக்கவல்ல தென்பது காரணப்பொருள்.

'படித்னக்கு' என்பதைப் படியினது என உருபுமயக்க மாக்கியும் உரைக்கலாம். (௬௧)

௬௨. அறியி னரங்கர்முன் னாளரியாகியவப்பொழுது
கொறியினவுணர்தம்வெள்ளங்கள்கோடியுங்கொன்றதிலோ
தறியின்வயிறிற் றருவனெஞ்சுஞ் சரபத்துடலு
நெறியின்வகிர்ந்தபினன்றோ தணிந்ததுநீள்சினமே.

(இ - ள்.) அறியின் - ஆராய்ந்துஅறியுமிடத்து,—அரங்கர்-ரங்கநாதர், முன் - முன்பு, ஆள் அரி ஆகிய அ பொழுது - நரசிங்கமாகஅவதரித்த அப்பொழுது,கொறியின் அவுணர்தம்வெள்ளங்கள் கோடியும்கொன்றதிலோ - ஆடுகள்போன்ற அசுரர்களுடைய கோடிவெள்ளங்களையும் கொன்றதனாலோ, (நீள் சினம் தணிந்தது) - (அந்தநரசிங்கமூர்த்தியினுடைய) மிக்ககோபம் ஆறிற்று [அவ்வளவினால் ஆறவில்லை யென்றபடி];(பின்னை எப்பொழுது ஆறிற் றென்றால்,—)தறியின் வயிறின் - (தான்தோன்றிய) தூணினது நடுவிடத்தை (ப் பிளந்தாற்) போலவே, தருவன் நெஞ்சும் - அசுரனான இரணியனது மார்பையும், சரபத்து உடலும் - (சிவபிரானாகிய) சரபத்தினது உடம்பையும், நெறியின் வகிர்ந்த பின் அன்றோ - முறையே பிளந்தபின்பன்றோ, நீள் சினம் தணிந்தது- (அச்சிங்கப்பிரானது) மிக்ககோபம் தணிந்திட்டது; (எ - று.)

நரசிங்கமூர்த்தி இரணியன் தட்டியதூணைப்பிளந்துகொண்டு அதிலிருந்துதோன்றியவுடனே,இரணியனது சபையிலிருந்தவர்களும் அவனைச்சார்ந்தவர்களுமான மிகப்பலகோடிக்கணக்காகியகொடியஅசுரர்களையெல்லாங் கொன்று அதன்பின்பு இரணியனை வதைத்தன னென்பதும்; மூவுலகத்திற்கும் பெருந்தீங்கு செய்துவந்த இரணியனை அழித்தற்குத் தேவர்கள்வேண்டுகோளினால் தோன்றிய திருமாலின் அவதாரமான அச்சிங்கப்பிரான் இரணியனைமார்புகீண்டுஅழித்தபின்பும் கோபந்தணியாமல் உக்கிரம்மேலிட்டிருக்க, அந்தப்பெருங்கோபத்தைக்கண்டு அதனால்உலகமழியுமென்றுமயங்கி அஞ்சிய தேவர்கள் ஓடிச் சிவபிரானைச் சரணமடைதலும், அக்கடவுள் அவர்கட்கு அபயமளித்து மிகப்பெரியதொரு சரபவடிவங்கொண்டு மிகஆரவாரித்து நரசிங்கத்தை எதிர்த்துவர, நரசிங்கப்பெருமான் அச்சிவசரபத்தையும் இரணியனைப்போலவே பலவாறு சின்னபின்னப்படுத்தி யழித்து, பிறகு பிரகலாதன் பணிந்து பிரார்த்தித்ததனாலும்,தேவர்கள் துதித்ததனாலும்,இலக்குமி சமீபித்ததனாலும் சினந்தணிந்தன னென்பதும், இங்குஅறியவேண்டியவை. ("வாழ்குமரன்மேற் கனகவஞ்சகன்மே லோர்முகத்தே, சூழ்கருணையும் முனிவுந் தோன்றியவாற—கேழ்கிளரும், அங்கவேள்குன்ற வழல் சரபத்தைப்பிளந்த,சிங்கவேள்குன்றத்தினார்க்கு" என்று நூற்றெட்டுத்திருப்பதியந்தாதியிலும், "புக்ககருடனை யோர்புன்மசகம்வென்றதிற, மொக்குங் கனகனுரங்கீண்ட - மிக்கதிற, லாளரியைப் பொன்னனுக்காயஞ்சிக்கிடந்தசிவன், கோள்விளைத்தா னென்னுங் குறி," "பொன்னனுரங்கீண்டதனாற் பொங்குசினமாறிற்றோ,தன்னுசிவசரபஞ்சோரவுயிர் - அன்னதனைப்,பற்றிவகிர்ந்தபின்னர்ப் பாழிநரமடங்க, லுற்றசினந் தணிந்த தாங்கு"என்று பரப்ரஹ்மவிவேகத்திலுங் கூறுவர்.) "தன்னைக்கொல்லவந்த சிவசரபத்தை நரசிங்கப்பிரான் இரணியனைப்போலவே நகங்களாற்பிளந்திட்டனன்" என்றும், "யாதொரு நரசிங்கமூர்த்தியினுடைய கோபாக்கினியிலே சிவனுருவமான சரபம் சலபமாயிற்றோ" என்றும் வடமொழிப்புராணங்களில் வருதலும் காண்க; (சலபம் - விட்டில், விளக்குப்பூச்சி.)

(இருசமயவிளக்கத்தில் "அன்னவன்சேனையாமவுணர்பல்கோடியேர், தன்னுவெஞ்செருவிடைத் துகள்படுத்தருளினான், பின்னையும்பின்னையும்

பெருகுகோபானலம்;முன்னையின்பொழுதினும்மும்மடங்காயதால்,'' "வட வையைத்தின்றிடும் வளைகுலக்கிரிகளைப், பொடிபடப்பிசையு மம்புதிகளைப் பருகும் வான், வெடிபடக்குரல்விடும் விழிநெருப்பெரியுமக், கடையுகத் திடியெனக்கடியபற்கதுவுமால்'' என்று பிரமருத்திரேந்திராதி சரபாவ தாரப்பரிசேதத்திலும், "அச்செருத்தொடர்விடத்தழல்விழிச்சரபமங், கெய் ச்சிறைத்திடவெடுத்தெற்றியெற்றிப்பெரு, வச்சிரத்துகிர்களான்மருவவங்கந் தொறும், பச்சிரத்தம்படப் பரிபவம்பண்ணியே,'' "ஈண்டுமாளரிவெகுண் டிரணியன்றனதுடல், கீண்டவாகீண்டு மெய்க்கிளர்கையாயிரமுறப், பூண்டு சுற்றிப்பெரும்பொன்வரைப்புறனுறத்,தாண்டினு னென்புடன்றேலும் வே ருகவே,'' "கரமுறிந் தேகுதிண்கான்முறிந் தெரிமுகச்,சிரமுறிந் திருவகை ச்சிறைகளின்றிறமுறிந், துரமுறிந் துடன்முறிந் துக்கதா லன்றுமுப், புர முறிந்தெரிபுகப்பொருதவன்சரபமே'' என்று சரபசங்காரப்பரிச்சேதத்தி லும் வருவனவுங் காண்க. இச்சரித்திரத்திற்கு மேற்கோள்—"இத்திறத் தால்விரித்தியானிசைத்தனவெலாம், மைத்தடங்கண்ணிஞய் வாமனீயத்து மா,தித்தியந்தன்னிலுந் தெளிவுறச்செப்பிடும்,பத்தியா லின்னமும்பகர்புரா ணங்கள்கேள்,'' "ஒத்தகாருடமிரண்டென்னுநூருயசீ, ரத்தியாயத்திலே யறையு மாக்கினியமும், சுத்தமாநாற்பதிற்சொல்லு நீணரசிங், கத்துடன் பற்பபாகவதமும்பகருமே'' என அந்நூலிலேயே கூறப்பட்டுள்ளது.)

சரபம் - இரண்டு தலைகளையும், சிறகுகளையும், கூரியநகமுள்ள எட்டுக் கால்களையும், மேல்நோக்கியகண்களையு முடையதொரு மிருகவிசேஷம்; இதனைப் பறவையென்றலு முண்டு. இது, சிங்கத்தை எளிதிற்கொல்லுந் திற முடையது. வெறுஞ்சிங்கமன்றி நரசிங்கமாதலாலும், ஸாமாந்யஸிம்ஹ மன்றி வரம்பிலாற்றலையுடைய புருஷோத்தமனது அவதாரமான திவ்விய ஸிம்ஹ மாதலாலும், சரபத்தைக் கொன்றிட்டது.

நல்லனதீயனபகுத்துணராமையும், ஒன்றுபோனவழியேயெல்லாம்போ தலும், உடனே தமக்குவரும்பெருந்தீங்கையறியாதுமகிழ்ந்திருத்தலு மாகிய ஒப்புமைபற்றி, 'கொறியி னவுணர்' என்றார். இன் - ஐந்தனுருபு, ஒப்பு. வெள்ளம் - ஒரு பெருந்தொகை. 'கோடியும்' என்ற உம்மை - முற்றுப்பொ ருளது. ஓகாரம் - எதிர்மறை. கொன்றதில், இல் - ஐந்தனுருபு, ஏது. தறி யின், இன் - சாரியை. வயிறு - இலக்கணையாய், நடுவிடத்தைக் குறித்தது; "கள்ளிவயிற்றி னகில்பிறக்கும்'' என்றவிடத்துப் போல. மேலே நெஞ்சு உடல்களைக்கூறுதலால், அவற்றோடுஇயையுமாறு 'வயிறு' என்ற சொல்லாற் குறித்தனர்; இவ்வாறுவருவது - ரத்நாவளியலங்காரத்தின்பாற்படும்: கவி சமத்காரம். இவற்றை 'நெறியின்' என்றதனோடு சேர்த்து நயங் காண்க. இன் - ஐந்தனுருபு, ஒப்பு. 'வயிறின்' எனச் சிறுபான்மை உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்தின் றகரவொற்று இரட்டாதுநின்றது; "கறைமிட றணி யலு மணிந்தன்று'' என்றவிடத்திற் போல. 'வயிற்றின்' என்று பாட மோதுவாரு முளர். தகுவன் - அசுரன். ஶரபம் - வடசொல். நெறியின் வகிர்தல் - ஒன்றன்பின்ஒன்றாக [கிரமமாய்]ப் பிளத்தல். அன்றே - தேற்றம். முதலடி - முற்றுமோனை. முன்நாள் அரியாகிய என்றுபிரித்து உரைத்தலுங் கூடும். நெஞ்சு - மார்புக்குத் தானியாகுபெயர். சிங்கத்திற்கு ஆடுகளைக்கொல்லுதல்மிகஎளிதாதல்போல, சிங்கப்பிரானுக்கு அசுரர்களைக் கொல்லுதல் மிகஎளிதாயிருந்த தென்பது, இரண்டாமடியிற் போதரும்; ஆடுகளைக்கொல்வதுபோல அசுரவெள்ளங்கள்கோடியையுங் கொன்றன னென்க. 'தணிந்தது நீள்சினம்' என்பது, முந்தினவாக்கியத்திலுங் கூட் டப்பட்டது. தறியின்வயிற்றோடு தகுவன்நெஞ்சோடு சரபத்துஉடலோடு வாசியில்லை சிங்கப்பிரானால் எளிதில்வகிரப்படுதலி லென்க.

இப்பாசுரத்தில் எம்பெருமானது பரத்வம், வெளியிடப்பட்டது.(௩௨)

[இதுமுதல் ஐந்துகவிகள் - ஸ்ரீவாமநாவதார வைபவம்; திரிவிக்கிரமாவ தாரம் இதில் அடங்கியதே.]

ருரு. தாரேற்றவெண்குடைமாவலிவார்க்கவுந் தாமரைமேற் [க்
சீரேற்றதொன்னான்முகத்தோன்விளக்கவுஞ் செம்பொன்முடி
காரேற்றமேனியரங்கேசர்கையுங்கழலு மொக்க
நீரேற்றன வண்டிருக்குறளாகிநிமிர்ந்தவன்றே.

(இ - ள்.) வள் திரு குறள் ஆகி - வளத்தையுடைய ஸ்ரீவாமநமூர்த்தியாகி, நிமிர்ந்த அன்று - (உடனே திரிவிக்கிரமனாய்) நிமிர்ந்துஉயர்ந்த அந்நாளில்,—தார் ஏற்ற வெள் குடை மா வலி வார்க்கவும் - வெற்றிமாலையைத் தரித்தவனும் ஒற்றைவெண்கொற்றக்குடையையுடையவனுமான மகாபலி சக்கரவர்த்தி (நீர்த்தாரையை)வார்த்துத் தத்தஞ்செய்துகொடுக்கவும், தாமரைமேல் சீர் ஏற்ற தொல் நால்முகத்தோன் விளக்கவும் - (திருமாலினது திருநாபித்)தாமரைமலரில் தோன்றியவனும் சிறப்புப்பொருந்தியவனு மாகிய பழமையான பிரமன் (தன்கையிலுள்ள கமண்டலத்தின் தீர்த்தத்தாற்) கழுவிவிளக்கவும், செம் பொன் முடி கார் ஏற்ற மேனி அரங்கஈசர்-சிவந்த [மாற்றுயர்ந்த]பொன்மயமான கிரீடத்தையும் காளமேகத்தையொத்த திருமேனியையுமுடைய ரங்கநாதரது, கையும் - திருக்கையும், கழலும் - திருவடியும், ஒக்க நீர் ஏற்றன - சமகாலத்திலே நீரையேற்றன; (எ - று.)

திருமால் உலகமளந்த வரலாறு, முதற்செய்யுளினுரையிற் கூறப்பட்டது. ("தன்னுருவ மாரு மறியாமல் தானங்கோர், மன்னுங் குறளுருவின் மாணியாய் மாவலிதன், பொன்னியலும் வேள்விக்கண் புக்கிருந்து போர்வேந்தர், மன்னை மனங்கொள்ள வஞ்சித்து நெஞ்சுருக்கி, என்னுடைய பாதத்தால் யானளப்ப மூவடிமண், மன்னா தருகென்று வாய்திறப்ப மற்றவனும், என்னால் தரப்பட்ட தென்றலுமே யத்துணைக்கண், மின்னார் மணிமுடிபோய் விண்தடவ மேலெடுத்த, பொன்னார் கனைகழற்கா லேழுலகும் போய்க்கடந்தங், கொன்னா வசுரர் துளங்கச் செலநீட்டி, மன்னிவ் வகலிடத்தை மாவலியை வஞ்சித்துத், தன்னுலக மாக்குவித்த தாளானை" என்ற ஆழ்வார்அருளிச்செயல் அறியத்தக்கது.) வாமநமூர்த்தி மகாபலியினிடஞ் சென்று, தவஞ்செய்தற்குத் தன்காலடியால் மூன்றடியிடம் வேண்டி, அது கொடுத்தற்கு இசைந்து அவன் தத்தஞ்செய்த நீரைக் கையில்ஏற்று, உடனே திரிவிக்கிரமனாக ஆகாயத்தையளாவி வளர்ந்தபொழுது, மேலே சத்தியலோகத்துச் சென்ற அப்பிரானது திருவடியைப் பிரமன் தன்கைக் கமண்டலதீர்த்தத்தாற் கழுவிவிளக்க, அந்தஸ்ரீபாததீர்த்தமாகக் கங்காநதி பெருகியதும், இங்குஅறியத்தக்கது. பிரமன் திரிவிக்கிரமமூர்த்தியின்திருவடியை விளக்கியது, தனது இருப்பிடத்திற்கு வந்த பெரியோர்க்குச் செய்ய வேண்டிய ஷோடஶ [பதினாறுவகை] உபசாரங்களிற் பாத்யமென்னும் உபசாரமாம்; அது, நீர்கொண்டு கால்கழுவுதல்.

கையில் தானஜலத்தை யேற்றவுடனே சிறிதுங்காலதாமதமின்றி அதிவிரைவில் மேலுலகைத்தாவியளந்து காலில்நீரையேற்றன னென்னுங் கருத்து நன்குவிளங்க, 'கையும் கழலும் ஒக்க நீரேற்றன' என்றார்; ஒக்க - ஒருங்கு. கைநீரேற்றலாகிய காரணமும், கழல்நீரேற்றலாகிய காரியமும் ஒரேகாலத்தில் நிகழ்ந்தனவாகச் சொல்லுதலால், முறையிலுயர்வுநவிற்சியணி; அக்ரமாதிஶயோக்தி யென்பர் வடநூலார். "காலமொன்றிற் காரண காரியம், நிகழத் தொடுத்தல் முறையிலி யென்ப" என அதன் இலக்கணங் காண்க. இதில், காரணத்திற்கும் காரியத்திற்கும் முன்பின்தோன்றுகைத்

தன்மையில், ஒருகாலத்துண்டாகுகை கற்பிக்கப்பட்டது. இது, காரிய விரைவை யுணர்த்துவது. "மண்தாவெனவிரந்து மாவலியை—ஒண்தாரை, நீரங்கைதோயநிமிர்ந்திலையே நீள்விசும்பி, லாரங்கைதோயவடுத்து" என்ற பொய்கையாழ்வாரருளிச்செயலின் பொருளை அடியொற்றியது இச்செய்யுளென்னலாம்; அதன் உரையில் 'உதகஜலமும் திருவடிவிளக்கினஜலமும் ஏகோதகமாம்படி வளர்ந்திலையோ' என்றதுங் காண்க. இங்ஙனம் விரைந்தது, அவன்மனம்மாறுதமுன்னம்அளந்துகொள்ளவேண்டுமென்னுங் கருத்தினா லென்பர். "அளியினன் மூவடியளந்துகோடியென்,றெளிகொளு மாவலியுதகம்பண்ணவே, களைகணு யுலகினைக் காக்கும் வித்தகன், கிளர்முடியுயரண்டங்கிழிய வோங்கினான்" என்ற மகாபாகவதத்தைக் காண்க. மாவலி வார்க்கக் கைநீரேற்றது, நான்முகத்தோன் விளக்கக் கழல்நீரேற்றது என முறையேசென்று இயைதல், முறைநிரல்நிறைப்பொருள்கோள். குறளுக்கு வண்மை - "ஆலமர்வித்தி னருங்குறளானான்" என்றபடி மூவுலகத்தையும் ஈரடியிலே அளக்கவல்ல பேருருவைத் தன்னுள் அடக்கிக்கொண்டிருத்தல்; எல்லாவுயிர்களின் முடியிலும் தானாக அடிவைத்து அவற்றை ஆட்கொண்டருளும் உதாரகுணமுமாம். நான்முகத்தோனாற் கழல் விளக்கப்படும் மகிமையை யுடையவன் தன்னைச்சரணமடைந்த இந்திரனது குறையைத் தீர்த்தற்காகத் தான் இரவலனாகி உலகங்களைப்பெற்றுக் கொண்டு பின்னர் அவற்றை இந்திரனுக்குக்கொடுத்தருளினனென இச்செய்யுளில் எம்பெருமானது பரத்வமும் ஸௌலப்யமும் தந்திரமும் வண்மையும் விளங்குதல் காண்க.

மாவலி - மஹாபலி என்ற வடசொல்லின் விகாரம். 'தாரேற்ற,' 'வெண்குடை', 'மா' என்ற மூன்றும்-பலிக்கும், 'தாமரைமேல்,' 'சீரேற்ற,' 'தோல்' என்ற மூன்றும் - நான்முகத்தோனுக்கும், 'முடி,' 'மேனி' என்ற இரண்டும்-அரங்கேசர்க்கும் அடைமொழிகள். தார்-இங்கு. வாகைப்பூமாலை. முடி,தான் எல்லாவற்றிற்கும் இறைவனென்பதை விளக்குதற்கு அணிந்தது. 'காரேற்ற மேனி' என்றவிடத்து, 'ஏற்ற' என்றது - உவமவாசகம்; மேகத்தின் தன்மையைக் கொண்ட மேனி யென்றலுமாம். குறள்-குறுகியவடிவம்.

௫௪. தேமிக்கபச்சைத்துழாயரங்கேசர்திருக்குறளாய்த்
தாமிப்புவனங்கடந்தவந்நாண் மணற்சாகரஞ்சூழ்
பூமிப்புடையளவிட்டபொற்றாமரைப்பூங்கழற்கு
நேமிச்சிலம்பு திருச்சிலம்பாகிநிலைபெற்றதே.

(இ - ள்.) தேன் மிக்க - மிகுதியான தேனையுடைய, பச்சை துழாய் - பசுநிறமான திருத்துழாய்மாலையை யணிந்த, அரங்க ஈசர் - ரங்கநாதர், திரு குறள் ஆய் - ஸ்ரீவாமநமூர்த்தியாகி, இ புவனம் கடந்த அ நாள்-இந்த உலகங்களை அளந்த அப்பொழுது,—மணல் சாகரம் சூழ் பூமி புடை அளவிட்ட - மணலையுடைய கடலாற் சூழப்பட்ட பூமியினிடத்தை யளந்த, பொன் தாமரை பூ கழற்கு - அழகிய தாமரைமலர்போன்ற திருவடிக்கு, நேமி சிலம்பு - (பூமியைச்சூழ்ந்த கடலைச் சுற்றி யுள்ளதான) சக்கரவாள பருவதமானது, திரு சிலம்பு ஆகி நிலைபெற்றது - அழகிய சிலம்பென்னும் அணியாகி நிற்றலைப் பெற்றது; (எ - று.)—தாம் - அசை.

எம்பெருமான் உலகமளந்தபொழுது "மண்ணொடுங்கத் தானளந்த மன்", "நின்றகால் மண்ணெலாம்நிரப்பி யப்புறஞ், சென்றுபாவிற்றிலை சிறிதுபாரெனா", "அகலகங்காலினுக் கவனிபோந்தில,ககன முன்னடியினிற் கமலத்தாயின, சகலலோகங்களுந் தாளிரண்டினிற், புகுதவே நிவந்தனன் புயல்கொண்மேனியான்" என்றபடி பூமியினளவினும்பரந்துவளர்ந்து அதனை

யளந்து நின்ற ஒருதிருவடிக்கு,அப்பூமியைச்சூழ்ந்தகடலைச்சுற்றியுள்ளதான சக்கரவாளகிரி சிலம்பென்னும்அணிபோலிருந்த தெனக் கற்பனை கூறினர். பதினாயிரம்யோஜனையுயரமும் பதினாயிரம்யோஜனைபரப்புமுள்ளசக்கரவாள பர்வதம் அத்திருவடிக்குச் சிலம்பென்னும் அணிபோன்ற தென்றதனால், அத்திருவடியின் வளர்ச்சி நன்குவிளங்கும். 'சிலம்பு' என்ற சொல் மலை யென்றும் நூபுரமென்னுங் காலணியென்றும் பொருள்படுதலால்,அச்சொல் நயம்பற்றி,'சிலம்பு சிலம்பாகிநிலைபெற்றது' என்றார்; முன் (உக) "அண்ட மாமென்னச்சிறந்தது மூதண்டம்" என்றாற் போல: சொற்பின்வருநிலை யணியும் உவமையணியுஞ் சேர்ந்துவந்த சேர்வையணி. ஆகி - உவமவுருபு. காலணியென்றபொருளில்,சிலம்புவது சிலம்பு எனக் காரணக்குறி; சிலம்பு தல் - ஒலித்தல்.

தேன் + மிக்க=தேமிக்க: "தேன்மொழி மெய்வரி னியல்பும் மென்மை, மேவி னிறுதியழிவும்" என்றார் நன்னூலார். தேம் மிக்க என்றுஎடுத்து, வாசனைமிக்க என்றலுமாம். பச்சை - 'ஐ'விகுதிபெற்ற பண்புப்பெயர்; பசு என்ற பண்படி, தன்ஒற்றுஇரட்டிற்று. புவநம், ஸாகரம், பூமி - வட சொற்கள். ஸாகரம் - ஸகரசக்கரவர்த்தியினது புத்திரர்களால் தோண்டப் பட்டது; வடமொழித்தத்திதாந்தநாமம். சூரியகுலத்துச் சகரமகாராஜன் அசுவமேதயாகஞ்செய்தபொழுது பூமிப்பிரதக்ஷிணத்திற்காகச் செலுத்திய குதிரையை, பொறாமைகொண்ட தேவேந்திரன் மாயையால் ஒளித்துக் கொண்டுசென்று, பாதாளலோகத்தில் தவஞ்செய்துகொண்டிருந்த கபில முனிவர்பின்னே கட்டிவைக்க, அவ்வேள்விக்குதிரையை நாடிச்சென்ற சகரபுத்திரர் அறுபதினாயிரம்பேர் பூமிமுழுதுந்தேடிக்காணாது, பாதாள லோகத்திற்குப்போதற்பொருட்டுப் பெருவழியாகப் பரதகண்டத்தில் வட கிழக்குப்பக்கத்தில் தோண்டிச் சென்ற பெரும்பள்ளமே, பின்பு கங்கை முதலியவற்றின் நீரினால்நிறைந்து ஸாகரமென்னும்பெயர்பெற்றுக் கட லோடுகூடித் தானும்கடலின்பாற்பட்ட தென்பது வரலாறு. இது, இங்கு, பொதுப்படக் கடலென்றமாத்திரமாய்நின்றது; சிறப்புப்பெயர் பொதுப் பொருளின்மேலும், பொதுப்பெயர் சிறப்புப்பொருளின்மேலும் நிற்றல் பானைநடை. "சகரர்தொட்டலாற் சாகரமெனப் பெயர்தழைப்ப, மகர வாரிதி சிறந்தது" என்றது, கம்பராமாயணம். அளவிட்ட - அளவுஇட்ட; ஒருசொல்தன்மைப்பட்டது. (௫௪)

௫௫. பூமருபொங்கர்புடைசூழரங்கர் பொலங்கழலாற்
பாமருமூவுலகுங்கொண்டபோது பழிப்பில்பெருங்
காமருமோலிச்சிகாமணியாகிக் கவுத்துவமாய்த்
தேமருநாபியந்தாமரையானது செஞ்சுடரே.

(இ - ள்.) பூ மரு-பொலிவு பொருந்திய [அல்லது மலர்கள்நிறைந்த], பொங்கர் - சோலைகள், புடை சூழ்-எல்லாப்பக்கங்களிலுஞ் சூழ்ந்திருக்கப் பெற்ற, அரங்கர்-திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கின்றவரான எம்பெரு மான், பொலம் கழலால் - அழகிய திருவடிகளினால், பா மரு மூ உலகும் கொண்ட போது - பரப்புப் பொருந்திய மூன்றுஉலகங்களையும் அளந்து தமதாக்கிக்கொண்டபொழுது,—செம் சுடர் - சிவந்தகிரணங்களையுடைய தான சூரியமண்டலமானது,(முதலில் அப்பெருமானுக்கு),பழிப்புஇல்-குற்ற மில்லாத, பெரு - பெரிய, காமரு-அழகிய, மோலி-முடியி லுள்ள, சிகாமணி ஆகி - சிரோரத்தினம் போன்றிருந்து, (அதன்பின்), கவுத்துவம் ஆய்-திரு மார்பிலணிந்த ஸ்ரீகௌஸ்துபரத்தினம் போன்று, (பிறகு), தேன் மரு நாபி அம் தாமரை ஆனது - தேன்பொருந்திய அழகிய திருநாபித்தாமரைமலர் போன்றது; (எ - று.)

வாமனமூர்த்தியாகிய திருமால் திரிவிக்கிரமனாக வானத்தையளாவி மேன்மேலோங்கிவளர்ந்தபொழுது, சூரியன் வரவரக்கீழ்ப்பட்டுப் பலவாறு உவமைகூறுதற்கு உரியனாயின னென்க. எம்பெருமான் திரிவிக்கிரமனாக நிமிரத்தொடங்கியபொழுது சூரியன் முதலில் திருமுடிமணிபோன்றும், இன்னும்சற்றுநிமிர்ந்தவளவில் திருமார்பின்மணியான கௌத்துவம்போன்றும், மற்றும்சற்றுநிமிரவே திருவுந்தித்தாமரைமலர்போன்று மிருந்தனனென்பது கருத்து. “மலருந்திமேல்விழமெய்நெரித்தான் வையமேழுந்துஞ்சா,மலருந்தினு னரங்கன் குறளாய் மண்ணளந்தவந்நாள், மலருந்திவாக்கதிர் வண்குடையாய் முடிமாமணியாய், மலருந்தியாய்த் திருத்தாள் விரலாழிமணியொத்ததே”என்பர் திருவரங்கத்தந்தாதியிலும். தண்டியலங்காரவுரையில் உபமாதீபகவணிக்குஉதாரணமாகக்காட்டிய“முன்னங்குடைபோல் முடிநாயகமணிபோல், மன்னுந்திலகம்போல் வாளிரவி - பொன்னகலந், தங்குகவுத்துவம்போ லுந்தித்தடமலர்போ,லங்கணுலகளந்தாற்காம்” என்ற செய்யுளிலும் இக்கருத்துநிகழ்தல் காண்க. “கவிகையாய் மவுலியாய்க் கவின்கொண்மார்பினி, லவிர்மலிகவுத்துவமாகியே மருங், குவிலுறு நாண்மணியாகிக் கோதிலா, வுவமையிலலரிகீழொளிரவோங்கினான்”என்ற மகாபாகவதமுங் காண்க. “சேயொளிபரப்பிவையத்திருளறச்சிதைக்குந்தெய்வக், காய்கதிர்க்கடவுள் மற்றோர்கவுத்துவநிகர்ப்பதம்மா” என்றது, கந்தபுராணத்து உபதேசகாண்டமும்.உவமையணி. செந்நிறமான ஆயிரங்கிரணங்களோடு மலர்ந்து விளங்குஞ் சூரியமண்டலம், ஆயிரம் இதழ்களையுடைய செந்தாமரைமலரையொக்கும். மற்றையுவமைகட்கு, வட்டவடிவமும் விளக்கமும்பொதுத்தன்மைகள். மோலிச் சிகாமணி - கிரீடத்திலுள்ள நடுநாயகரத்தினம்.

‘மூவுலகு’ என்றது, மேல் கீழ் நடு என்ற நோக்கத்தால். மண்ணுலகத்தையளந்ததில் அதன்கீழுலகமும் அடங்குதலால், மூவுலகத்தையும் அளந்ததாம். எம்பெருமானுக்கு உரியனவான உலகங்களைத் தன்னுடையனவென்றுஅபிமானித்த மகாபலியினது மமகாரம் நீங்கப் பெருமான் அவற்றைத் தமதுஅடியின்பாற்படுத்துத் தம்முடையனவாக்கிக்கொண்டு காட்டியமை தோன்ற, ‘கழலால் மூவுலகுங்கொண்டபோது’ என்றார். மௌலி, சிகாமணி, கௌஸ்துபம், நாபி - வடசொற்கள். கவுத்துவம் - முதற்போலி: இது, திருமால்மார்பில்அணியும் திவ்வியரத்தினம்; திருப்பாற்கடல்கடைந்தபொழுது அதனினின்று தோன்றியது. மரு - மருவு என்பதன் விகாரம். பொங்கர் - (நெடுந்தூரத்திலுள்ளாருங் காணும்படி) உயர்ந்து விளங்குவதென்று காரணப்பொருள்படும்; அர் - பெயர்விகுதி. ஆகி, ஆய், ஆனது - உவமவாசகங்கள். செஞ் சுடர் - பண்புத்தொகையன்மொழியென்றாவது, அடையடுத்த சினையாகுபெயரென்றாவது கொள்ளத்தக்கது.

௫௬. ஓதப்புனற்பொன்னிநன்னீரரங்க ருலகளந்த
பாதத்துநீர் விண்படிபிலமூன்றிலும் பால்புரைவெண்
சீதத்தரங்கமந்தாகினியாகிச் செழுங்கங்கையாய்
மேதக்கபோகவதியாகி நாளும்விழுகின்றதே.

(இ - ள்.) ஓதம் புனல்-வெள்ளமாகிய நீரையுடைய, பொன்னி-திருக்காவேரிநதியினது, நல் நீர் - நல்ல நீரினாற் சூழப்பட்ட, அரங்கர் - திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கின்றவரான எம்பெருமானுடைய, உலகு அளந்த பாதத்து-மேலுலகத்தையளந்த திருவடியினின்று பெருகிய, நீர்-தீர்த்தமானது,—விண் படி பிலம் மூன்றிலும்-சுவர்க்கலோகம் பூலோகம் பாதாளலோகம் என்ற மூன்றுஇடங்களிலும், (முறையே), பால் புரை வெள் சீதம் தரங்கம் மந்தாகினி ஆகி - பால்போன்ற வெண்ணிறமான குளிர்ந்த அலை

களையுடைய மந்தாகினியாயும், செழுங் கங்கை ஆய் - செழிப்புள்ள கங்கையாகியும், மே தக்க போகவதி ஆகி-மேன்மைபொருந்திய போகவதியாயும், நாளும் - எந்நாளும், விழுகின்றது—; (எ - று.)

திருமாலின் மேலுலகளந்ததிருவடியைப் பிரமன் கமண்டலதீர்த்தத்தாற் கழுவிவிளக்கிய ஸ்ரீபாததீர்த்தம் சுவர்க்கலோகத்திற்பாய்வதற்கு மந்தாகினியென்றும், பூலோகத்திற்பாய்வதற்குக் கங்கையென்றும், பாதாளலோகம் நோக்கிப்பாய்வதற்குப்போகவதியென்றும் பெயரென உணர்க; "பரமனடிப்புன லுலகைப் பாவனஞ்செய்திடும்பொருட்டுப் பண்டைமேரு, சிரமதனிலளகநந்தையெனவிழுந் திவ்வுலகு கங்காதேவியாகித், தரமதனின்மிகுதேவருலகினின்மந்தாகினியாய்ச் சக்கிரநேமிப், புரமதனிற்போகவதியெனப்பொலிந்த திந்தகதி பின்னுங்கேட்டி" என்றது, பாத்மோத்தரபுராணம். சூரியகுலத்துப் பகீரதசக்கரவர்த்தி, கபிலமுனிவனது கண்ணின் கோபத்தீக்கு இலக்காகி உடலெரிந்து சாம்பலாய் நற்கதியிழந்த தனதுமூதாதையரான சகரபுத்திரர் அறுபதினாயிரவரை நற்கதிபெறுவித்தற்பொருட்டு, நெடுங்காலந் தவஞ்செய்து, தேவகங்காநதியை மேலுலகத்திலிருந்து பூமிக்குக் கொணர்ந்து, பாதாளலோகத்திற்கும் கொண்டுபோயினனாதலால், மூவுலகத்திலும் அத்தீர்த்தம் உளதாயிற்று. பிரமன் ஸ்ரீபாததீர்த்தஞ்சேர்த்த நீர் சிலநாள் தேவலோகத்துத் தங்கியிருந்து பின்னர்ப் பகீரதன்கொணர்கின்றபோது கீழுலகங்கட்கும் வந்ததென்க. விண்ணில் மந்தாகினியாகி, படியிற் கங்கையாய், பிலத்திற் போகவதியாகி என முறையேசென்றுஇயைதலால், முறைநிரல்நிறைப்பொருள்கோள்.

'ஓதப்புனல்' என்றது, பொன்னிக்கு இயற்கையடைமொழியாய்நின்றது. ஓதம் - குளிர்ச்சியும், அலையும், பெருக்குமாம். ஓதம் புனல் - கடலை நோக்கிச்சென்றுசேரும் நீரெனினுமாம். "மலைத்தலைய கடற்காவிரி, புனல்பரந்து பொன்கொழிக்கும்" என்றபடி தான்பெருகும்பொழுது பொன்னைக்கொழித்துக்கொண்டுவருதலால், காவேரிக்கு 'பொன்னி' என்று பெயர்; இ - உடைமைப்பொருள்காட்டும் பெண்பால் விகுதி. பாதம், பிலம், ஸ்ரீதம், தரங்கம், மந்தாகிநீ, கங்கா, போகவதீ - வடசொற்கள். புரை-உவமவாசகம். கங்கை, வெண்ணிறமான நீரை யுடையது. நாளும்,உம்மை-தொறப்பொருளது. கங்கைக்குச் செழுமை - நீர்மிகுதியும், "எழுமையுங்கூடியீண்டியபாவ மிறைப்பொழுதளவினிலெல்லாங், கழுவிடும் பெருமைக் கங்கை" என்றபடி தன்னிடத்து நீராடுபவர்க்குத் தீவினைதீர்த்து நற்கதியருளுதலும்; இச்சொல்லுக்கு - அழகென்றபொருளும் உண்டு. (௫௬)

௫௭. ஓலப்புனலரங்கேசர்பொற்றாள்பட்டுடைந்தவண்ட
மேலக்கடாகத்தொளைவழியாகவிழும்புனல் போய்க்
கோலத்திருவுருக்கொண்டவந்நாள் குரம்பட்டுடைந்த
மூலக்கடாகத்தொளையால்விழுந்தது முற்புனற்கே.

(இ - ள்.) ஓலம் புனல் அரங்க ஈசர்-ஆரவாரத்தைச்செய்கின்ற(காவேரி) நீரினாற் சூழப்பட்ட திருவரங்கத்தின் தலைவரான எம்பெருமானது, பொன் தாள் - (திரிவிக்கிரமாவதாரத்தில் மேலுலகத்தையளந்துசென்ற) அழகிய திருவடி, பட்டு - பட்டதனால், உடைந்த—, அண்டம் மேலக் கடாகம் - அண்டகோளத்தினது மேற்பக்கத்துமூடியில் உண்டான, தொளை வழி ஆக - துளையின் வழியாக, விழும் - (பெரும்புறக்கடலினின்று) உள்ளேவிழுந்த, புனல் - நீரானது,—கோலம் திரு உரு கொண்ட அ நாள் - (அப்பெருமான்) ஸ்ரீவராகரூபத்தைக் கொண்ட அக்காலத்தில், குரம் பட்டு - (அந்த வராகநாயனாரது) திருக்குளம்பு பட்டதனால், உடைந்த—, மூலம் கடாகம் -

(அண்டகோளத்தினது) அடிப்பக்கத்துமூடியின், தொளையால் - துளைவழி யாக, போய் - சென்று, முன் புனற்கே விழுந்தது - பழமையான அக்கடலிலேயே விழுந்திட்டது; (எ - று.)

"பலிசக்கரவர்த்தியின்யாகத்தில் திரிவிக்கிரமவடிவங்கொண்டு உலகத்தையளந்த விஷ்ணுபகவானுடைய வாமபாதத்தினது கட்டைவிரல்நுனியாற் பிளக்கப்பட்ட மேற்பாகத்தையுடைய அண்டகடாகத்தின் தொளைவழியாய் உள்ளேபிரவேசித்த புறக்கடலின்நீர்ப்பெருக்கு" என்று ஸ்ரீபாகவதத்திலும், "ஸ்ரீயஜ்ஞவராகமூர்த்தியினுடைய குளம்பு தாக்கினதனாலே பிளந்த அண்டகடாகத்தினுள்ளே" என்று ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலும் வருதல் காண்க. "பாரளவு மோரடிவைத் தோரடியும் பாருடுத்த,நீரளவுஞ் செல்ல நிமிர்ந்ததே"என்று பொய்கையாழ்வாரருளிச்செய்ததும்காணத்தக்கது. "அண்டம், மோழையெழ முடிபாதமெழ வப்ப, ஹழியெழ வுலகங்கொண்டவாறே" என்றார் நம்மாழ்வாரும். "நண்ணுபொற்றுகளென நாகர்நாட்டொடு, மண்ணகம்பொதிந்த தோர்பத மற்றோர்பதம், விண்ணகங்கடந்துபோய் விரிஞ்சனூரிஇ, ஒண்ணிறவண்டமு முடைய நீண்டதே," "செங்கண்மால்மலர்ப்பதஞ் சென்றமோழையிற், றுங்கவண்டத்தினைச்சூழ்ந்தநீள்கடற், பொங்கவீழ்ந்தொழுகிய புனலை யன்றுகொல், கங்கையென் றின்னமுங் கழறுகின்றதே" என்ற கூர்மபுராணச் செய்யுள்களையும் காண்க. புனல் - ஆவரணஜலம். பொன் தாள் - பொன்மயமான வீரக்கழலை யணிந்த திருவடி யென்றுமாம்; "மேலெடுத்த, பொன்னார்கழற்கா லேழுலகும்போய்க்கடந்து" என்றார் திருமங்கையாழ்வாரும்: அடியார்களைப் பாதுகாத்தற்கென்று கட்டிய கழ லென்க; இவ்வுரைக்கு, பொன் - கருவியாகுபெயர். முன்புனல் - முன்கூறிய புனல் எனினுமாம். அந் நாள்-பூர்வகாலத்தி லென்றபடி.

கீழ்க் கூறிப்போந்த வராகாவதாரத்தின் வைபவத்தோடு சேர்த்துத் திரிவிக்கிரமாவதாரவைபவத்தைக் கொண்டாடியது. இப்பாசுரம்; உலகத்தை எடுத்தும் அளந்தும் ஆண்ட அவதாரங்கட்கு ஒற்றுமை யுண்டிறே. மேலக்கடாசம், அ - சாரியை. கடாஹம், கோலம், சூரம், மூலம்-வடசொற்கள். கடாகம் - ஓடு;விளாஞ்சதையை விளாவோடுபோலவும் தேங்காயைத் தேங்காயோடுபோலவும் பதினான்குஉலகங்களையும் மேலும் கீழும் பக்கங்களிலும் சூழ்ந்திருக்கின்ற அண்டகபாலம்: அண்டகோளத்தின் ஓடு. அண்ட மேலக்கடாகம் - அண்டகடாகத்தில் மேலிடம். மூலக் கடாகம் - அதிற் கீழிடம். கோலம் - பன்றி. புனற்கு=புனலில்; உருபுமயக்கம். பட்டு - படுதலால்: காரணப்பொருட்செயவெனெச்சமாகிய பட என்றதன் திரிபு. (நூஎ)

[ஸ்ரீபரசுராமாவதாரவைபவம்.]

நூஅ. மறிக்குங்கயற்கண்ணிபங்காளன்வாழ்வெள்ளிமால்வரையைப்
பறிக்குங்கபடன்பணைப்புயமோ வவன்பைங்கடகஞ்
செறிக்கும்புயஞ்செற்றவாயிரந்திண்புயமோ வவற்றைத்
தறிக்குந்திறமழுவோ வரங்கா சயத்தாருடைத்தே.

(இ - ள்.) அரங்கா - திருவரங்கனே! மறிக்கும் - பிறழ்கின்ற, கயல் - கயல்மீன்போன்ற, கண்ணி - கண்களையுடையவளான அம்பிகையை, பங்கு ஆளன்-(தனது இடப்)பக்கத்திலுடையவனான சிவபிரான்,வாழ்-வசிக்கின்ற, மால்-பெரிய,வெள்ளிவரையை-வெள்ளிமயமான மலையாகிய கைலாசத்தை, பறிக்கும் - அடியோடுபெயர்த்தெடுத்த, கபடன் - வஞ்சகனான இராவணனது, பணை புயமோ - பருத்த (இருபது)கைகளோ,—அவன்-அவ்விராவணனுடைய, பைங் கடகம் செறிக்கும் புயம்-பசும்பொன்னாலாகிய கடகமென்

னூம்வளையை யணிந்த கைகளை, செற்ற - வலியழித்து நெருக்கிக் கட்டிய, திண் - வலிய, ஆயிரம் புயமோ - (கார்த்தவீரியார்ச்சுனனது) ஆயிரங் கைகளோ,—அவற்றை தறிக்கும் - அவ்வாயிரங்கைகளையும் வெட்டித்தள்ளிய, திறம் மழுவோ- (பார்க்கவராமனுகிய வினது) வலிமையையுடைய கோடாலிப்படையோ,—சயம் தார் உடைத்து - (இவற்றில் எது) வெற்றிமாலையையுடையது? (எ - று.)

மழுவே வெற்றிமாலையையுடைய தென்பதாம். சிவபிரானது கைலாசகிரியைப் பெயர்த்தெடுத்த இராவணன் மிகவலியவனென்றும், அவனிலும் கார்த்தவீரியன் வலியவனென்றும், அவனிலும் பரசுராமன் வலியவனென்றும் கூறியதாயிற்று. விஷத்தையுண்டு கங்கையைத்தரித்து மேருவில்வளைத்துத் திரிபுரமெரித்து மன்மதனைத்தகித்து யமனையுதைத்து அழித்தல்தொழில் நிகழ்த்தும் பேராற்றலையுடைய உக்கிரமூர்த்தியாவான் உருத்திரனென்பது பிரசித்தம். அக்கடவுள் வீற்றிருக்கின்ற கைலாசகிரியை இராவணன் வேரோடுபெயர்த்தனனென்பதும், அங்ஙனம் மிகவலியனுய்த் திக்குவிசயஞ்செய்து திக்கஜங்களையும்வென்ற இராவணனைக் கார்த்தவீரியார்ச்சுனன் கட்டிச்சிறையிலிட்டனனென்பதும், அவ்வருச்சுனனைப் பரசுராமபிரான் தோள்துணித்துத் தொலைத்திட்டனனென்பதும், இதிகாசபுராணங்களால் விளங்குகின்றன: ஆகவே, பரசுராமபிரானது வலிமையும் வெற்றியும் மிகமேம்பட்டனவென்பது நன்குவிளங்கும்; ஆனதுபற்றி, இங்ஙனம் வினவுகின்றவகையால் அப்பெருமானது மகிமையை வெளியிட்டார். இருபதைவென்ற ஆயிரத்தைத் துணித்த ஒன்று மிகமேம்பட்டதென நயங் காண்க. மேல்மேல் ஒன்றினும்ஒன்றுஉயர்ந்ததைச் சொல்லுதலால், மேன்மேலுயர்ச்சியணி; இதனை வடநூலார் ஸாராலங்கார மென்பர்.

"திசையுறுகரிகளைச்செற்றுத் தேவனும், வசையுறக்கயிலையைமறித்துவானெலா, மசையுறப்புரந்தானடர்த்ததோள்களி, னிசையினைத் தும்புருவிசையினேத்தவே," "ஈசனுண்டிருந்தபேரிலங்குமால்வரை, வூசிவேரொடும் பறித்தெடுக்குமூற்றத்தான்," "அரண்தருதிண்டோள்சாலவுளவெனி னாற்றலுண்டோ,கரண்டரிலங்கைவேந்தைச்சிறைவைத்தகழற்கால்வீரன், திரண்டதோள்வனத்தையெல்லாஞ்சிறியதோர்பருவந்தன்னி, லிரண்டுதோளொருவனன்றோ மழுவினுலெறிந்தானென்முள்" என்றகம்பராமாயணம் இங்கு நோக்கத்தக்கது.

**வெள்ளிமலைபறித்த கதை:**—இராவணன் அளகாபுரிக்குச் சென்று குபேரனை வென்று அவனது புஷ்பகவிமானத்தைப் பறித்து அதன்மேலேறிக்கொண்டு கைலாசமலைக்குமேலாக ஆகாயமார்க்கத்திலே விரைந்து மீண்டுவருகையில், அம்மலையின் மகிமையால் விமானம் தடைப்பட்டுநிற்க, அதற்குக்காரணமின்னதென்றுஅறியாது திகைக்கும்போது, நந்திகேசுவரர் எதிரில்வந்து 'சிவபிரானெழுந்தருளியிருக்குமிடமான திருக்கைலாசத்தின் பெருமை யிது' என்றுசொல்லவும், கேளாமல் அந்தத் தசமுகன், 'எனது பிரயாணத்திற்குத்தடையாகிய இம்மலையை இப்பொழுதே வேரோடுபறித்து எடுத்து அப்பாலெறிந்துவிட்டுத் தடையின்றி மேற்செல்வேன்' என்றுகூறி விமானத்தினின்று இறங்கித் தனது இருபதுகைகளையும் அம்மலையின்கீழ்க் கொடுத்து அதனைப்பெயர்த்தனனென்பதாம்.

**இராவணனைக் கார்த்தவீரியன் வென்ற கதை:**—இராவணன் திக்குவிசயஞ்செய்துவருகிறபொழுது கார்த்தவீரியார்ச்சுனனது மாகிஷ்மதிநகரத்திற்குச் சென்று போர்செய்யமுயலுகையில், அங்குள்ளார் 'எங்களரசன் தனக்குஉரியமாதர்களுடனே போய் நருமதையாற்றில் ஜலக்கிரீடைசெய்கின்றான்' என்றுசொன்னதனால், உடனே இராவணன் அங்கிருந்து நரு

மதையாற்றைச் சேர்ந்து அதில்நீராடிக் கரையில் மணலாற் சிவலிங்கத்தை யமைத்துப் பிரதிஷ்டைசெய்து பூசிக்கும்போது, அந்த யாற்றில் மேற்கே இறங்கியுள்ள கார்த்தவீரியார்ச்சுனன் தனதுநீர்விளையாட்டுக்கு அந்நீர்ப் பெருக்குப்போதாதென்றகருத்தால் அந்நீரைத் தனதுஆயிரங்கைகளுள் ஐந் நூற்றினால் தடுத்து நீரைமிகுவித்து மற்றைஐந்நூறுகைகளைக்கொண்டு பல வகைவிளையாட்டுக்கள்நிகழ்த்துகின்றதனால் எதிர்வெள்ளமாகப் பொங்கி வருகின்ற நீர்ப்பெருக்குத் தனதுசிவலிங்கத்தை நிலைகுலையச்செய்ததுபற் றிக் கடுங்கோபங்கொண்டு இராக்கதசேனையுடனே சென்று அருச்சுனனை யெதிர்த்துப் போர்செய்ய, அவன் தனதுஆயிரங்கைகளுள் இருபதினால் இராவணனது இருபதுகைகளைப் பிடித்துக்கொண்டு மற்றையகைகளால் அவனைப் பலவாறு வருத்தித் தனதுஆற்றலால் எளிதிற்கட்டித் தனதுபட் டணத்திற்கொண்டுபோய்ச் சிறையில்வைத்திட, அதனை விபீஷணனால்அறி ந்த அவன்பாட்டனாராகிய புலஸ்தியமகாமுனிவர் அருச்சுனனிடம்வந்து வேண்டி அவனுக்கு 'ராவணஜித்' என்ற ஒரு பெரும்பெயரைக் கொடுத்து, இராவணனைச் சிறைவிடுவித்துச் சென்றன ரென்பதாம்.

கார்த்தவீரியனைப் பரசுராமன் கொன்ற கதை:—அவ்வருச்சுனன் ஒருகாலத்திற் சேனையுடனே வனத்திற்சென்று வேட்டையாடிப் பரசுராம ரது தந்தையான ஜமதக்நிமுனிவரது ஆச்சிரமத்தை யடைந்து அவரநு மதியால் அங்கு விருந்துண்டு மகிழ்ந்து மீளுகையில், அவரிடமிருந்த ஓம தேனு அவர்க்குப் பலவளங்களையும் எளிதிற்சுரந்தளித்தமை கண்டு அதனி டம்ஆசைகொண்டு அப்பசுவை அவரநுமதியில்லாமல் வலியக்கவர்ந்துபோக, அதனையறிந்தஅப்பார்க்கவராமர் பெருங்கோபங்கொண்டு சென்று கார்த்த வீரியனுடன் போர்செய்து அவனைப் பதினொருஅக்ஷௌஹிணிசேனையுடனே நிலைகுலைத்து அவனது ஆயிரந்தோள்களையும் தலையையும் தமது கோடாலி ப்படையால் வெட்டி வீழ்த்தி வெற்றிகொண்டன ரென்பதாம்.

மகளிர்கண்ணுக்குக் கயல் - பிறழ்ச்சியில்உவமம். கண்ணி, இ - பெண் பால்விகுதி. கயற்கண்ணி - மீநாக்ஷி. கயற்கண்ணிபங்காளன்—வில்லிபுத் தூரார்பாரதத்து நிரைமீட்சிச்சருக்கத்தில் (கூஅ) "கவுரிபங்காளன்" என் றது காண்க. 'கயற்கண்ணிபங்காளன்வாழ்வெள்ளிமால்வரையைப் பறிக் குங் கபடன்' என்றதனால், பக்கத்திலுள்ளஅம்பிகை அஞ்சி மருண்டுநோக் கிச் சிவபிரானைத்தழுவிக்கொள்ளும்படி இராவணன் கைலாசகிரியைப் பெ யர்த்தன னென்பதைக் குறிப்பித்தவாறும்; ("அருவியங்குன்ற மரக்கன் பெயர்ப்ப, வெருவிய வெற்பரையன்பாவை—பெருமா, னணியாகமாரத் தழுவினாள்" என்பது காண்க.) வெள்ளி - வெண்ணிறமுடையது; காரணக் குறி: இ - பெயர்விகுதி. 'எட்டினாற் குடுமியைப்பிடிப்பது, எட்டாவிட்டாற் காலைப்பிடிப்பது' என்பதாக, முன்னும் பின்னும் சிவபிரானை வணங்கிப் பிரார்த்தித்துப் பற்பலவரங்கள்பெறுபவனாயிருந்தும் இடையில் நன்றிகெட் டவனாய்ச் செருக்கி அப்பெருமான்வாழ்கின்ற இடத்தைக் களையத்தொடங் கின துரோகியென்பார், 'கபடன்' என்றார்; சீதாபிராட்டியை வஞ்சனை யாற்கவர்பவனாதல்பற்றி இங்ஙனங் கூறினாருமாம். கபடம், புஜம், கடகம், ஜயம் - வடசொற்கள். கடகம் - ஒருவகைக் கைவளை. பசுமை + கடகம் = பைங்கடகம்: "ஈறுபோதல்"என்னுஞ் சூத்திரவிதி. பைங் கடகம் - பொன் னின் பசுமை, கடகத்தின்மே லேற்றப்பட்டது. செறித்தல் - சேர்த்தல். அணிந்த கடகம் புயத்தின்வளர்ச்சியால் அழுந்தப்பெற்ற வெனக் கொள்ள லுமாம்; நாளொருவண்ணம் பொழுதொருமேனியாக அவன்புயங்கள் கொ ழுத்துச் செழித்துப் பருக்கின்றன வென்க. செற்ற, செறு - பகுதி; அது, தன்ஒற்றுஇரட்டி இறந்தகாலங் காட்டிற்று: செறுத்தல் - அடக்குதல். ஒகர

ரங்கள் - வினைப்பொருளன. உடைத்து - உடைமையென்னும்பண்பினடி யாப்பிறந்த ஒன்றன்பாற்குறிப்புமுற்று.

'வெள்ளிமால்வரையைப்பறிக்குங் கபடன்' என்றதனால் 'இராவணன்' என்பதும், 'அவன்புயஞ்செற்ற ஆயிரம்புயம்' என்றதனால் 'கார்த்தவீரியனது' என்பதும், 'அவற்றைத்தறிக்கும் மழு'என்றதனால் 'பரசுராமனது' என்பதும் விளங்கின. சயத் தார் - வெற்றிக்குஅறிகுறியான வாகைப்பூமாலை; "போர்க்களத்து மிக்கோர் செருவென்றது வாகையாம்" என்பது காண்க. "திறமழு சயத்தாருடைத்து"—"வென்றிமாமழுவேந்தி," "செருநுதலூடுபோகி யவராவிமங்க மழுவாளின்வென்ற திறலோன்" என்றார் திருமங்கையாழ்வாரும்.

இராவணன் - பிரமபுத்திரரான புலஸ்தியமகாமுனிவரது குமாரராகிய விச்சிரவமுனிவருடைய மகன்; குபேரனுக்குத் தம்பிமுறையானவன்; கேகசியென்னும் இராக்கதமாதினிடம் பிறந்தவன்; பத்துத்தலைகளையும் இருபதுகைகளையும் உடையவன்; இலங்கைநகரத்தில்வாழ்ந்த ராக்ஷஸராஜன்; அரியபெரியதவத்தைச்செய்து பெருவரங்கள்பெற்றுச் செருக்கியவன்; திரிலோகாதிபதியான இந்திரனையுமுட்பட வென்று அடக்கி ஆண்டவன்.

கார்த்தவீரியார்ச்சுனன் - சந்திரவம்சத்து யயாதிமகாராசனது மூத்த குமாரனாகிய யதுவினது குலத்தவனாகிற கிருதவீரியனுடைய குமாரன்; பலபராக்கிரமங்களிற் சிறந்தவன்; நாராயணாம்சமாய் அத்திரிகுமாரராய் விளங்குகின்ற தத்தாத்திரேயமகாமுனிவரை ஆராதித்து அவருடையஅநுக்கிரகத்தினால் ஆயிரந்தோள்களுடைமை, போரில் வெற்றி, பூமியை முறைப்படி காத்தல், பகைவர்களால் அவமானப்படாமை, சகலலோகங்களுங் கொண்டாடும்படியான மகாபுருஷனால் மரணம் முதலிய பல வரங்களைப் பெற்று, அநேக யாகங்களைச் செய்து, மாகிஷ்மதிநகரத்திற் பலகாலம் அரசாட்சிசெய்தவன். இவனிடம் விஷ்ணுவினுடைய சக்தி ஆவேசித்திருந்தது. (அதுபற்றிய விவரம், அடுத்தசெய்யுளுரையிற் காண்க.)

பரசுராமன்—உலகத்திலே எவரும் அழிப்பவரில்லாமையாற் கொழுத்துத்திரிந்து கொடுமையியற்றிவந்த க்ஷத்திரியவம்சங்கள் பலவற்றை நாசஞ்செய்தற்பொருட்டு நாராயணமூர்த்தி ஜமதக்கினிமுனிவரது மனைவியான ரேணுகையினிடம் இராமனாய்த் திருவவதரித்து, பரசுஎன்னுங் கோடாலிப்படையை ஆயுதமாகக்கொண்டு, அதனாற் பரசுராமனென வழங்கப்பெற்று, தனதுதந்தையின்ஓமதேனுவைக் கவர்ந்து அவனைக்கொன்றிட்டதுகாரணமாகக் கார்த்தவீரியார்ச்சுனனையும் அவனதுகுமாரர்களையுங் கொன்று அதனாலேயே க்ஷத்திரியவம்சம்முழுவதன்மேலுங் கோபாவேசங்கொண்டு உலகத்திலுள்ளஅரசர்கள்பலரையும் இருபத்தொருதலைமுறை பொருது ஒழித்திட்டான்; ஏழு சிரஞ்சீவிகளில் ஒருவன் இவன். (௩அ)

[இதுமுதல் எட்டுப்பாசுரங்கள் - ஸ்ரீதசரதராமாவதார வைபவம்.]

௩௯. மாதண்டமேவுங்கரத்தாரரங்கர் வடமிதிலைக்
கோதண்டவேகம்பிறப்பித்தபோது குவட்டுவெள்ளி
வேதண்டமேயமழுவாளிநாணினன் வென்றிகண்டு
மூதண்டமஞ்சுமழுவாளிகோபமுதிர்ந்ததுவே.

(இ - ள்.) மா தண்டம் மேவும் கரத்தார் - பெரிய (கௌமோதகியென்னும்) கதாயுதம் பொருந்திய திருக்கையை யுடையவராகிய, அரங்கர் - திருவரங்கநாதர், வட மிதிலை-வடக்கிலுள்ள மிதிலாபுரியிலே, கோதண்டம் வேகம் பிறப்பித்த போது - வில்லைவளைத்து முறித்து அதிலிருந்து உக்கிரமானஓசையை யுண்டாக்கியபொழுது,—குவடு வெள்ளி வேதண்டம் மேய மழு ஆளி நாணினன் - சிகரத்தையுடைய வெள்ளிமலையாகிய கைலாசத்திற்

பொருந்திவாழ்கின்ற மழுவென்னும்ஆயுதத்தையுடையவனான சிவபிரான் வெல்கிறான்; வென்றி கண்டு - (ஸ்ரீராமபிரானது) அவ்வெற்றியைநோக்கி, முது அண்டம் அஞ்சும் மழுஆளி கோபம் முதிர்ந்தது-பழமையான அண்டகோளத்திலுள்ளவரனைவரும் அஞ்சும்படியான கோடாலிப்படையையுடையவனாகிய பரசுராமனது கோபம் மிக்கது; (எ - று.)

விதேகதேசத்து மிதிலாபுரியில் வாழ்கின்ற ஜநகமகாராஜன், தனது குலத்துப்பூர்விகராசனான தேவராதனிடம் சிவபிரானால் வைக்கப்பட்டிருந்ததொரு பெரிய வலிய வில்லை எடுத்து வளைத்தவனுக்கே தான் வளர்த்த மகளான சீதையைக் கல்யாணஞ்செய்துகொடுப்பதென்று கந்யாசுல்கம் வைத்திருக்க, வேள்விமுடித்த விசுவாமித்திரமுனிவனுடன் மிதிலைக்குச் சென்ற ஸ்ரீராமபிரான் அவ்வில்லை யெடுத்து வளைத்து நாணேற்றுகையில், அது பேரொலிபடுமாறு முறிந்திட, அதனாற் சனகன் இராமனாற்றலைக்கண்டு மிக்ககளிப்புக்கொண்டு சீதையை இராமனுக்கு மணம்புரியலாயினனென்பதும்; சீதாகல்யாணத்தின்பின் தசரதசக்கரவர்த்தி தனதுகுமாரர்களுடன் மிதிலையினின்று அயோத்திக்கு மீண்டுவருகையில், பரசுராமன் வலியச்சென்று இராமபிரானை யெதிர்த்து 'முன்பு ஹரிஹரயுத்தத்தில் இற்றுப்போன சிவதநுசை முறித்த திறத்தை யறிந்தேன்; அதுபற்றிச் செருக்கடையவேண்டா: வலிய இந்த விஷ்ணுதநுசை வளை, பார்ப்போம்' என்று அலக்ஷ்யமாகச்சொல்லித் தான்கையிற்கொணர்ந்தவில்லைத் தசரதராமன் கையிற் கொடுக்க, அப்பெருமான் உடனே அதனைவாங்கி எளிதில்வளைத்து நாணேற்றி அம்புதொடுத்து 'இந்தப்பாணத்திற்கு இலக்கு யாது?' என்று வினவ, பரசுராமன் அதற்குஇலக்காகத் தனது தபோபலம்முழுவதையும் கொடுக்க, அவன் க்ஷத்திரியவம்சத்தைக்கருவறுத்தவனாயிருந்தாலும் வேதவித்தும் தவவிரதம்பூண்டவனுமாயிருத்தல்பற்றி அவனைக்கொல்லாமல் அவனதுதவத்தைக்கவர்ந்தமாத்திரத்தோடு ஸ்ரீராமன் விட்டருளினனென்பதும், இங்கு அறியவேண்டியவை.

விஷ்ணுவின் தசாவதாரங்களுள் ஆறும்அவதாரமான பரசுராமன் ஏழாம்அவதாரமான தசரதராமன்மீது கோபித்தலும், இவ்விருவரும் ஒருவரோடொருவர் பொருதலும், அவர்களில் ஒருவர் மற்றொருவரை வெல்லுதலும் பொருந்துமோ வெனின்,—துஷ்டர்களாய்க் கொழுத்துத்திரிந்த அரசர்களைக் கொல்லுதற்பொருட்டுப் பரசுராமனிடத்தில் ஆவேசித்திருந்த விஷ்ணுசக்திவிசேஷம் அக்காரியம்முடிந்தபின்பு அவ்விஷ்ணுவின் அம்சாவதாரமான தசரதராமனாற் கவர்ந்துகொள்ளப்பட்டதாதலிற் பொருந்துமென்க. இதனால், ஆவேசாவதாரத்தினும் அம்சாவதாரத்திற்குஉள்ள ஏற்றம் விளங்கும்.

ஸ்ரீமந்நாராயணனது விபவாவதாரங்கள் அளவற்றன. அவை, முக்கியம் அமுக்கியம் என இருவகைப்படும். இவற்றில், முந்தியது - சிறந்தது. பிந்தியது - அதனிலும் தாழ்ந்தது. முக்கியமாவது-ஸாக்ஷாதவதாரம். அமுக்கியமாவது - ஆவேசாவதாரம். ஆவேசந்தான், ஸ்வரூபாவேசமென்றும் சக்தியாவேசமென்றும் இருவகையதாம். ஸ்வரூபாவேசமாவது - சேதநருடைய சரீரங்களில் எம்பெருமான் தன்னுடையரூபத்துடன் ஆவேசித்துநிற்றல்; பரசுராமன், பலராமன் போல்வார் இத்திறத்தர். சக்தியாவேசமாவது - சேதநர்பக்கல் காரியகாலத்திலே எம்பெருமான் சக்திமாத்திரத்தால் தோன்றி விளங்குதல்; கார்த்தவீரியார்ச்சுனன், அருச்சுனன், வியாசர் போல்வார் இத்திறத்தர். இவற்றிற் சக்தியாவேசத்தினும் ஸ்வரூபாவேசம் பிரபலம். இவற்றின் உண்மைநிலையை விஷ்வக்ஸேநஸம்ஹிதை முதலிய ஸ்ரீபாஞ்சராத்ரஸம்ஹிதைகளிலும், தத்வத்ரயத்திலும், அதன் வியாக்கியானத்திலும்

பரக்கக்காணலாம். தசாவதாரங்களுள் பரசுராமாவதாரமும் பலராமாவதாரமும் - ஸ்வரூபாவேசாவதாரங்கள். மற்றவை-ஸாக்ஷாதவதாரங்கள். வில்லுங்கையுமாய் உலகத்தை நன்றாய்ஆளுகைக்காகக் கார்த்தவீரியார்ச்சுனனிடம் திருமாலின்சக்தி சிறிது ஆவேசித்திருந்தது. துஷ்டக்ஷத்ரியநிரஸநார்த்தமாகப்பரசுராமரிடம் திருமாலே தானே சக்திவிசேஷத்தால் ஆவேசித்திருந்தான். தசரதராமாவதாரம்-ராவணவதத்தின்பொருட்டுத் திருமால்தானே நேராய் அவதரித்தது. (இவற்றில் முந்தின இரண்டும்-அஹங்காரயுக்தஜீவர்களை அதிஷ்டித்து நின்றவை.) இவற்றில் ஒன்றைக்காட்டிலும் ஒன்றற்கு உள்ள உயர்வை, கார்த்தவீரியனைப் பரசுராமன் கொல்ல, அப்பரசுராமனைத் தசரதராமன் வென்றதனால் நன்குவிளங்கக்காணலாம். ("ஸ்வரூபாவேசாவதாரமாய்த் தசாவதாரமத்யே ஸஹபடிதனாய்ப்போருகிற அப்பரசுராமன்தான் நிரஸ்தனானபடி எங்ஙனே யென்னில்,—ஸ்வரூபாவேசத்திலும் ஸாக்ஷாதவதாரம் ப்ரபலமாகையாலே, அத்யுத்கடதவமுண்டானபோது இதனாலே அது நிரஸ்தமாகக் குறையில்லை. சக்த்யாவேசத்தில் ஸ்வரூபாவேசம் ப்ரபலமானவோபாதி, ஸ்வரூபாவேசத்தில் ஸாக்ஷாத்வதாரம் ப்ரபலமாகத் தட்டில்லையிறே. சக்த்யாவேசத்தில் ஸ்வரூபாவேசம் ப்ரபலமாகையாலேயிறே, ஸஹஸ்ரபாஹுவர்ஜுநன் பரசுராமனாலே நிரஸ்தனாய்த்து" என்ற வியாக்கியானவாக்கியங்கள் காணத்தக்கன.)

இங்குக்குறித்த இரண்டுவிற்களின் வரலாறு:—முன்னொருகாலத்தில் தேவசில்பியான விசுவகர்மாவினால் நிருமிக்கப்பட்ட சிறந்த இரண்டுவிற்களுள் ஒன்றைச் சிவபிரானும் மற்றொன்றைத் திருமாலும் எடுத்துக்கொண்டார்கள். பின்பு ஒருகாலத்தில் அவ்விற்களுட்சிறந்தது இன்னதென்பதை அறியவிரும்பிய தேவர்களின் வேண்டுகோளாற் பிரமன் அரனுக்கும் அரிக்கும் போரை மூட்டிவிட, அங்ஙனமே அவர்கள் அவ்விற்களைக்கொண்டு பொருகையில், சிவபிரானது வில் சிறிதுமுறிபட்டது. அவ்வாறுஇற்ற வில்லைச் சிவபெருமான் ஜநககுலத்துத் தேவராதனென்னும்அரசனிடம்கொடுத்திட, அது வம்சபரம்பரையாய்ச் சனகமகாராசனளவும் வந்தது. இதுநிற்க: இருத வலிய வில்லை விஷ்ணு ரிசீகமுனிவனிடம் கொடுத்துச் செல்ல, அது அவன்குமாரனான ஜமதக்நியினிடத்தும், அவன்குமாரனான பரசுராமனிடத்தும் பரம்பரையாய்வந்தது. இராமபிரான் இந்தவில்லைக்கொண்டுதான் கரன்முதலாக அரக்கர்பலரையும் அழித்திட்டனன்.

சிவபிரான் தான் அருமையாகக்கைக்கொண்டு ஆண்டு பகைவென்று வந்த மிகவலிய வில்லை ஸ்ரீராமன் வெகுஅலக்ஷ்யமாக இடக்கையாலெடுத்து நிறுத்தி வளைத்து முறித்தமைபற்றி நாணினனென்க. ஸ்ரீராமன் அவ்வில்லில் நாணேற்றி அந்நாணியைத்தெறித்துச் சத்தமுண்டுபண்ணி இழுக்கும்பொழுது அவ்வில் முறிகையில், அதிலிருந்து பேரிடிமுழக்கம்போலவும் மலைபிளந்தாற்போலவும் அண்டகோளம் அதிரும்படி பெரியசத்தம்எழுந்து பரவியதை 'கோதண்டவேகம்பிறப்பித்தல்' என்றார். க்ஷத்ரியவம்சநாசகரனான பரசுராமன் அவ்வோசையைக்கேட்டவுடனே க்ஷத்ரியவம்சந்தளிர்ப்பதைக்குறித்துப்பெருங்கோபங்கொண்டு ஓடிவந்ததனால் 'வென்றிகொண்டு மழுவாளிகோபமுதிர்ந்தது' எனப்பட்டது. ("சரியில்மன்னிறுத்த வல்வி லொலியினைச் சகியமென்னும், வரைமிசையதனிற்கேட்டு மனமுறுசினத்தினோடும், பரசுராமன்றானெய்திப் பழிப்பிலாவிராமன்றன்னோ, டொருமொழவுலகமஞ்சவுருத்திவையுரைத்தானம்மா" என்ற மகாபாகவதம் இங்கேநோக்கத்தக்கது.)

மஹாதண்டம், கரம், மிதிலா, கோதண்டவேகம், வேதண்டம், கோபம்-வடசொற்கள். மிதிலை எவ்விடத்திலுள்ள தென்றால், வடக்கிலுள்ளதென வேண்டுதலின், அதனை 'வடமிதிலை' என விளங்கக்கூறினார்; "வடவேங்க

டந் தென்குமரி' என்றாற்போல. எனவே, இங்கு 'வடக்கு' - இனம்விலக்க வந்தஅடைமொழியன் றென்க. மிதிலை யென்பதற்கு - மிதியென்பவனால் ஏற்படுத்தப்பட்ட நகரமென்பது பொருள். மிதியென்பது, ஜனககுலத்தலைவனான ஓரரசனுக்குப் பெயர்; கடைந்ததனாலுண்டானமைபற்றியது. வேதண்டம் - மலை. மேய—மே-பகுதி: (இதுவே மேவுஎனவும்நிற்பது;)ய்-இறந்தகாலவிடைநிலை, அ - விகுதி. மழு ஆளி - மழுவை ஆள்பவன்: இ - கருத்தாப்பொருள்விகுதி; அல்லது, மழு வாளி - மழுவாகிய படைக்கலத்தையுடையவன்: இ - உடைமைப்பொருள்காட்டும் பெயர்விகுதி. மழு-எரியிரும்புப்படையும், கோடாலியும்: இதனை வலக்கையிற் கொண்டுள்ளார். 'வென்றிகண்டு' என்பதை, மத்திமதீபமாக, முன்வாக்கியத்தோடுங் கூட்டலாம்; மேம்பாட்டைநோக்கி யென்க. இனி, மூதண்டம் வென்றிகண்டுஅஞ்சும் மழுவாளி யென்னவுமாம். இருபத்தொருமுறை உலகைச்சுற்றிவந்து க்ஷத்திரியசங்காரஞ்செய்தவனாதலால்,'அண்டமஞ்சும்மழுவாளி' எனப்பட்டான். தண்டம் ஏவும் எனப்பிரித்து, கதாயுதத்தைப் (பகைவெல்லுமாறு) பிரயோகிக்கின்ற என்றலு மொன்று. வென்றி - தொழிற்பெயர்; வெல் - பகுதி,றி-விகுதி, லகரம் னகரமானது - சந்தி விகாரம். அண்டம் - இடவாகுபெயர்.

இப்பாசுரத்தால், ஸ்ரீராமபிரானது பேராற்றலும், பரத்வமும் கூறப்பட்டன. (௫௯)

௬௰. மாகம்பிலந்திக்கிமையோருலகமழுவுடையோ
னாகநன்னாடளவாகப் பன்னாகநடுங்கவம்பு
வேகங்கொடுதொடரப் பறந்தோடியுமீண்டுவந்து
காகஞ்சரணென்ன நம்பெருமானுயிர்காத்தனரே.

(இ - ள்.) காகம் - காகாசுரன், பல் நாகம் நடுங்க அம்பு வேகம் கொடு தொடர - பலதிசைகளிலுள்ளபிராணிகளும் அஞ்சிநடுங்கும்படி (இராமபிரானது) பாணம் வேகங்கொண்டு (தன்னைத்) தொடர்ந்துவருதலால், மாகம் - பெரிய ஆகாயமும், பிலம் - பாதாளலோகமும், திக்கு - திசைகளும், இமையோர் உலகம் - தேவலோகமும், மழு உடையோன் நாகம்-மழுவென்னும்ஆயுதத்தையேந்தியவனான சிவபிரானது (கைலாச) கிரியும், நல் நாடு-நல்ல இந்தப்பூலோகமும், அளவு ஆக - ஆகியஇவற்றின் எல்லையுள்ளவரையிலும், பறந்து ஓடியும் - பறந்து ஓடிப்போய்ப் பார்த்தும், (தனக்குப்புகலிட மொன்றும் வாய்க்காமையால்), மீண்டு வந்து - திரும்பி வந்து, சரண் என்ன - '(உனது திருவடியே) சரணம்' என்று அடைக்கலம்புக, நம்பெருமாள் உயிர் காத்தனர் - ஸ்ரீரங்கநாதனாகியஅவ்விராமபிரான்தானே(அந்தக் காகாசுரனது) உயிரைப் பாதுகாத்தருளினார்; (எ - று.)

வனவாசகாலத்திற் சித்திரகூடமலைச்சாரலிலே இராமபிரானும்ஜாநகிப்பிராட்டியும் ஏகாந்தமாகஇருக்கிறசமயத்தில்,இந்திரன்மகனான ஜயந்தன் பிராட்டியின் அழகைக் கண்டு மோகித்து அவளைத் தான் ஸ்பரிசிக்க வேண்டுமென்னுந் தீயகருத்தினனாய்த் தேவவேஷத்தைமறைத்து வஞ்சகமான காகவேஷத்தைப் பூண்டுகொண்டு வந்து, பிராட்டியின்மடியிலே பெருமாள் பள்ளிகொண்டருளுகையில் தாயென்றறியாதே பிராட்டியின் திருமார்பில் மூக்கினாற் குத்த, அவ்வளவிலே பெருமாள் உணர்ந்தருளி அதிகோபங்கொண்டு ஒரு தர்ப்பைப்புல்லை யெடுத்து அதிற்பிரமாஸ்திரத்தைப் பிரயோகித்து அதனை அந்தக்காகத்தின்மேல் மந்தகதியாகச்செலுத்திவிட, அதுவும் பின்தொடர்ந்துசெல்ல, அக்காகம் அந்த அஸ்திரத்திற்குத் தப்பவழிதேடிப் பலவிடங்களிலும்ஓடிச்சென்றுசேர்ந்தவிடத்தும் ஒருவரும் ஏற்றுக்கொள்ளாமையாலே மீண்டு இராமனையே சரணமடைய,அப்பெருமான்

அருள்கொண்டு அக்காகத்திற்கு உயிரைக்கொடுத்து, அந்த அஸ்திரம் வீண் படாமற் காகத்தின் ஒருகண்ணை அறுத்தவளவோடு விட்டிடும்படி செய்தருளின னென்ற வரலாறு, இங்குக் குறித்தது.

"சித்திரகூடத் திருப்பச் சிறுகாக்கை முலைதீண்ட, அத்திரமேகொண் டெறிய வனைத்துலகுந் திரிந்தோடி, வித்தகனே யிராமாவோ நின்னபய மென்றழைப்ப, அத்திரமே யதன்கண்ணை யறுத்தது மோரடையாளம்" என்ற பெரியாழ்வார்திருமொழி, இங்கே நோக்கத்தக்கது. (அதன் வியாக்கியானத்தில் 'மூந்துறப் பித்ருக்ருஹத்திலே சென்றவளவில் பிதாவாலும் மாதாவாலும் கைவிடப்பட்டு, பந்துக்களானவர்கள் கைக்கொள்ளுவர்களோ வென்று அவர்கள்பக்கலிலே சென்றவளவில் அவர்களாலும் பரித்யக்தனாய், ஆந்ருஶம்ஸ்யப்ரதாநரான ருஷிகள்தான் கைக்கொள்ளுவர்களோ வென்று அவர்கள்பக்கலிலே சென்றவளவில் அவர்களும் கைவிடுகையாலே, திறந்து கிடந்த வாசல்கள்தோறும் ஒருகால்நுழைந்தாற்போலே ஒன்பதின்கால் நுழைந்து மூன்றுலோகங்களையும்வளைய ஓடித்திரிந்தவிடத்திலும் ஒருவரும் கைக்கொள்ளாமையாலே "தமேவ ஶரணம் கத:" என்கிறபடியே 'சீறினாலும் காலைக்கட்டிக்கொள்ளலாம்படியிருக்கும் க்ருபாவானாகையாலே விஸ்மயநீயனாய் எல்லாரையும் குணத்தாலே ரமிப்பிக்கவல்லவனே!' என்று ஶரண்யரானபெருமாள்குணத்தைச்சொல்லி'ஓ!'என்று தன்னுடைய அநந்யகதித்வத்தை முன்னிட்டுக்கொண்டு 'உனக்கு அபயம்' என்று ஶரணாகதனானமைதோற்றக்கூப்பிட, இப்படி ஶரணம்புகுகையாலே,...........க்ருபையாலே பெருமாள் ரக்ஷித்தருளுகிறவளவில், காகத்துக்கு ப்ராணப்ரதானம்பண்ணி, அஸ்த்ரத்துக்கு ஒருகண்ணழிவு கற்பிக்கையாலே, முன்பு தலையறுப்பதாகத்தொடர்ந்த அஸ்த்ரந்தானே அதனுடைய ஒருகண்ணை அறுத்துவிட்டது' என்றதும் காண்க.) "அங்கதஞ்சிநடுங்கி யயன்பதியண்மி, இங்குநின்வரவென்ன வெனக்கனல்வெய்த, மங்கைபங்கனொடெண்டிசையுஞ்செல மற்றோர், தங்கள்தங்களிடங்கள் மறுத்தமை தைப்பாய்" என்ற கம்பராமாயணத்தாலும், அக்காகம் எங்கும்சரண்பெறாமை விளங்கும். பெருமாளுடைய கோபத்திற்கு இலக்கான இதனை ஏற்றுக்கொண்டால் நமக்கு முட்பட என்வருமோ வென்னும் அச்சத்தாலும், ஆற்றலில்லாமையாலும், எவரும் அதற்குப் புகலிடமாகவில்லை யென்க. பெருமாள் கிருபையாலே மந்தகதியாகச் செலுத்த அங்ஙனமே மெதுவானநடையுடன் காகத்தை அஸ்திரம் பின்தொடர்ந்துசென்றிருக்கவும் 'அம்பு வேகங்கொடு தொடர' என்றது, அஞ்சியோடுவதும் இயல்பில்விரைந்தநடையில்லாததுமான காகத்தின் கருத்தாலே யென்க; "காகமொன்றை முனிந் தயல்கல்லெழுபுல்லால், வேகவெம்படைவிட்டது" என்றார் கம்பராமாயணத்திலும். இனி, வேகம் - உக்கிரத்தன்மையுமாம்.

மாகம் - மஹாகம் என்ற வடசொல்லின் விகாரம். திக், நாகம், வேகம், காகம் - வடசொற்கள். நாகம் - மலை யென்ற பொருளில், இடம்விட்டுப் பெயராத தென்று காரணப்பொருள்பெறும். சுவர்க்கத்தையடைகின்றவர்களுக்கும் மோக்ஷத்தையடைகின்றவர்களுக்கும் பிரவிருத்திநிவிருத்திகர்மஸாதநபூமி இதுவே யாதலால், 'நல்நாடு' என்றார். 'மாகம்' என்றது, புவர்லோகத்தை. 'இமையோருலகம்' என்றது, ஸுவர்லோகம் முதலியவற்றை. 'நல்நாடு'என்றது, பிரமனது சத்தியலோகத்தையு மாகலாம். இமையோர்-கண்இமையாதவர்; எதிர்மறைப் பலர்பால் வினையாலணையும்பெயர்: எதிர்மறையாகாரம் புணர்ந்துகெட்டது: விகுதிமுதல்ஆகாரம் ஓகாரமாயிற்று; [நன் - பொது - உ.] நாகம் - திசை: திசைகளிலுள்ள பிராணிகளுக்கு இடவாகுபெயர். இனி, மலையென்றுங் கொள்ளலாம். நடுங்குதல் - அச்சத்தால்

உள்ளமும் உடலும் நடுங்குதல். கொடு - கொண்டு என்பதன் தொகுத்தல். காகம் - காஎன்று கத்துவ தெனப் பொருள்படுங் காரணக்குறி. சரண் - ஶரண மென்ற வடசொல்லின் விகாரம்; பாதுகாப்பவ னென்பது பொருள்.

இப்பாசுரத்தால், ஸ்ரீராமபிரானது ஆற்றலும், அருளும், சரணாகதரக்ஷகத்வமும், பரத்வமும் கூறப்பட்டன. (௪௦)

௪௧. மாதவரும்பர்பெருமாளரங்கர்வலியுணரா
தாதவன்மைந்தனயிர்த்தவந்நா ளிலக்காயநெடும்
பாதவமேழுமுடனேநெடுங்கணைபட்டுருவப்
பூதலமேழு மெழுபாதலங்களும் புண்பட்டவே.

(இ - ள்.) மாதவர் - மாதவனென்னும்ஒருதிருநாமமுடையவரும், உம்பர் பெருமாள் - தேவர்கட்குத் தலைவரு மாகிய, அரங்கர்-ஸ்ரீரங்கநாதரது அவதாரவிசேஷமான இராமபிரானது, வலி - வலிமையை, உணராது-அறியாமல், ஆதவன் மைந்தன் - சூரியகுமாரனான சுக்கிரீவன், அயிர்த்த அ நாள் - சந்தேகித்த அக்காலத்தில், இலக்கு ஆய - (அச்சுக்கிரீவன்சொன்ன படி இராமபாணத்திற்கு) எய்யும்இலக்காகிய, நெடும் பாதவம் ஏழும்-பெரிய மராமரங்க ளேழும், உடனே - ஒருசேர, நெடுங் கணை பட்டு உருவ-நீண்ட அவ்விராமபாணம் பட்டுப் பாய்ந்து துளைத்தோடிச்செல்லப் பெற, (அந்த அம்பினாலேயே), பூதலம் ஏழும் எழு பாதலங்களும் புண்பட்ட-பூமிமுதலிய மேலுலகங்க ளேழும் (அதலம் முதலிய) கீழுலகங்க ளேழும் விரண மடைந்தன; (எ - று.)

இராவணனால் வலியக்கவர்ந்துசெல்லப்பட்ட சீதையைத் தேடிக்கொண்டு சென்ற ராமலக்ஷ்மணரை அநுமான்மூலமாகச் சிநேகித்தபிறகு, சுக்கிரீவன், தனது பகைவனும் மகாபலசாலியுமான வாலியைக் கொல்லும் வல்லமை இராமபிரானுக்கு உண்டோ இல்லையோ வென்று ஐயமுற்று, தன் சந்தேகந்தீரும்படி 'எதிரிலுள்ள மிகப்பெரிய ஏழுமராமரங்களையும் ஏக காலத்தில் தொளைபடும்படி எய்யவேண்டும்' என்றுசொல்ல, உடனே இராமபிரான் ஓரம்புதொடுத்து அந்த ஸப்தஸாலவிருக்ஷங்களை ஒருங்கு தொளைபடுத்தின னென்ற வரலாறு, இங்கு அறியத்தக்கது. அப்பொழுது இராமபாணம் அம்மராமரங்களேழுடனே ஏழுலகங்களையும் துளைபடுத்தியமையை, "ஏழுமாமரமுருவிக் கீழுலகமென்றிசைக்கும், ஏழுமூடுபுக்குருவிப் பின் னுடனடுத்தியன்ற, ஏழிலாமையான்மீண்ட தவ்விராகவன்பகழி, ஏழு கண்டபினுருவுமா லொழிவதன்றினும்," "ஏழுவேலையு முலகமேலுயர்ந்தனவேழும், ஏழுகுன்றமு மிருடிகளெழுவரும் புரவி, ஏழு மங்கையரெழுவரு நடுங்கின ரென்ப, ஏழுபெற்றதோவிக்கணைக்கிலக்கமென்றெண்ணி" என்ற கம்பராமாயணங்கொண்டும் உணர்க.

'இராமபிரானது வலிமையை யுணராது' என்ற பொருளில் 'அரங்கர் வலியுணராது' என்றது, இந்தஅர்ச்சாவதாரமும் அந்தவிபவாவதாரமும் ஆகியஇரண்டும் ஸ்ரீமந்நாராயணனது திருமூர்த்திகளே யாதலால் அவ்வொற்றுமைநயம்பற்றி யென்க. இவ்வுரை, முன்னும் பின்னும் கொள்ளத்தக்கது. ஆதவன்மைந்தன்—மேருமலையின் வடபுறச்சிகரத்தி லுள்ளதொரு சரசில் மூழ்கி யெழுந்தமாத்திரத்தாற் பெண்வடிவமடைந்த ருக்ஷரஜஸ்என்னும் வானரராஜனது கழுத்தினழகைக் கண்டு காதல்கூர்ந்த சூரியனது அநுக்கிரகத்தால் அப்பெண்குரங்கினிடம் தோன்றியவன் சுக்கிரீவ னென்று உணர்க. சுக்கிரீவனுக்கு 'மஹாராஜர்' என்பது, ஸ்ரீவைஷ்ணவசம்பிரதாயத்தில் வழங்கும் பெயர். மராமரம் - ஒருவகை ஆச்சாமரம்.

மாதவர், ஆதபன், பாதபம், பூதலம், பாதலம்-வடசொற்கள். மாதவன்—மா - இலக்குமிக்கு, தவன் - கணவன் என்று பொருள்படும். இனி, மா தவர் - பெருந்தவத்தையுடையவரான முனிவர்கட்கும், உம்பர் - தேவர்கட்கும், பெருமாள் - தலைவர் என்று உரைப்பினுமாம். உம்பர் - எல்லாவுலகங்கட்கும் மேலதான பரமபதத்தில் வாழும் நித்தியசூரிகளுமாம். ஆதபன்-எங்கும் தபிப்பவ னென்று பொருள்படும்; தபித்தல் - வெயிலினாற்சுடுதல். இலக்கு-லக்ஷ்ய மென்ற வடசொல்லின் சிதைவு; எய்யப்படுங் குறி. பாதபம்-மரம்; அடியால் நீரைக்குடிப்ப தென்று காரணப்பொருள்பெறும். உடனே-ஒருங்கு: சமகாலத்தில். காலதாமதமின்றி விரைவிலே யென்றுமாம். மேலேழுலகங்கள் - பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம், மஹர்லோகம், ஜநலோகம், தபோலோகம், ஸத்யலோகம் என்பன. பூதலம் ஏழும் - பூமியின் தீவுகளேழும் என்றலும் ஒன்று. கீழேழுலகங்கள்-அதலம், விதலம், சுதலம், தலாதலம், மகாதலம், ரசாதலம், பாதாளம் என்பன. புண்பட்ட - பலவின் பால்முற்று. ஆய - பெயரெச்சம்; ய் - இறந்தகாலவிடைநிலை.

இப்பாசுரம், இராமபிரானது வேண்டுமளவினும்மிக்கதான பேராற்றலைக் கூறியது. (சக)

சஉ. ஒற்றைச்சரஞ்சுட்டவுட்கடல்போற்புறத்தோலமிட
மற்றைக்கடல்வெந்ததெவ்வண்ணமோ மதமாவழைக்க
வற்றைக்குதவுமரங்கர்வெங்கோபத்தையஞ்சி யரன்
கற்றைச்சடையினிடையேவெதும்பினள்கங்கையுமே.

(இ - ள்.) மதம் மா அழைக்க - மதத்தையுடைய விலங்காகிய கஜேந்திராழ்வான் ('ஆதிமூலமே!' என்று) கூவியழைக்க, அற்றைக்கு உதவும் - அப்பொழுதே (ஓடிவந்து அதன்முன்நின்று அதனைவருத்தியமுதலையைக் கொன்று அந்தயானையைக்) காத்தருளிய, அரங்கர் - திருவரங்கநாதராகிய இராமபிரானது, வெம் கோபத்தை - கடுங்கோபத்திற்கு, அஞ்சி - பயந்து,—அரன் சடை கற்றையின் இடையே கங்கையும் வெதும்பினள்-சிவபிரானது (கபர்த்தமென்னும்) சடைத்தொகுதியினிடையே (அடங்கியுள்ள) கங்காதேவியும் வெப்பமடைந்தாள்: (என்றால்),—ஒற்றை சரம் சுட்ட உள் கடல் போல்-(அந்தஸ்ரீராமனது) ஓரம்பினாற் சுடப்பட்ட உள்ளேயுள்ள நீர்க்கடல் போல, புறத்து மற்றை கடல் - (அதற்கு) அப்புறத்திலுள்ள மற்றையகடல்களும், ஓலம்இட வெந்தது - பேரொலிசெய்யுமாறு வெதும்பியது, எவ்வண்ணமோ - எத்தன்மையதோ! [அதுசொல்லுதற்குஅரிது என்றபடி]; (எ - று.)

இராவணனாற் கவரப்பட்ட சீதாபிராட்டி இலங்கையிலிருக்கிற செய்தியை அநுமான் சென்று அறிந்துவந்து சொன்னபின்பு, இராமபிரான் வாநரசேனையுடன் புறப்பட்டுச் சென்று கடற்கரையையடைந்து, கடல்கடக்க உபாயஞ்சொல்லவேண்டுமென்று அக்கடலரசனாகிய வருணனைப் பிரார்த்தித்து அங்குத் தருப்பசயனத்திலே படுத்து ஏழுநாளளவும் பிராயோபவேசமாகக்கிடக்க, சமுத்திரராசன் அப்பெருமானது மகிமையைக் கருதாமல் உபேக்ஷையாயிருக்கவே, ஸ்ரீராமன் அதுபற்றிக் கோபங்கொண்டு 'அனைவரும்நடந்துசெல்லும்படி கடலை வற்றச்செய்துவிடுவேன்' என்று ஆக்நேயாஸ்திரத்தைத் தனதுஅம்பொன்றிலே யோஜித்து அதனைத்தொடுக்கத்தொடங்கியவளவிலே, அதன்உக்கிரத்தால் தபிக்கப்பட்டு வருணன் அஞ்சி நடுநடுங்கி ஓடிவந்து அப்பெருமானைச் சரணமடைந்து கடல்வடிவமான தன்மேல் அணைகட்டுதற்கு உடன்பட்டு ஒடுங்கிநிற்க, பின்பு இராமபிரான் வாநரங்களைக்கொண்டு மலைகளாற் சேதுபந்தநஞ்செய்தனன் என்ற வரலாறு, இங்கு அறியவேண்டியது.

மகாவீரனான ஸ்ரீராமன் ஜலாதிபதியான வருணன்மீது கோபித்துக் கடலின்மேல் அக்கினியஸ்திரப்பிரயோகஞ்செய்தபொழுது அந்தஅஸ்திராக்கினிக்கும் அப்பெருமானது கோபாக்கினிக்கும் அஞ்சி ஜலதத்துவமென்ற மாத்திரத்தால் உருத்திரமூர்த்தியின்ஜடாமகுடத்தில் நெடுநாளாகஇருக்கின்ற கங்கையென்னுங்கடவுள்நதியும் கொதித்த தென்றால், கடலுக்கே இனமான மற்றைக்கடல்கள் பட்ட பாடு சொல்லுதற்குஆமோ! என்பது, இச்செய்யுளின் கருத்து. ஒருபொருளைக் கூறி அதுகொண்டு மற்றொரு பொருளை எளிதிற்சித்திக்கச்செய்தலால், தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணி; இதனை வடநூலார் காவ்யார்த்தாபத்தியலங்காரமென்பர். "அண்டமூலத்துக்கப்பாலாழியுங்கொதித்த தேழு, தெண்டிரைக்கடலின்செய்கை செப்பியென் றேவன்சென்னி, பண்டைநாளிருந்தகங்கைநங்கையும்பதைத்தாள் பார்ப்பான், குண்டிகையிருந்தநீருங்குளுகுளுகொதித்ததன்றே" என்ற கம்பராமாயணம். இங்கு ஒப்புநோக்கத்தக்கது. மற்றைக்கடல்கள்வெந்தவகையை, "உரவுத்திரைநீர்க்கடலடைப்பான் வருணற் பழிச்சி யுயர்கரையின், விரியுந்தருப்பசயனத்தின்மேவி யோரேழ்நாள்நோற்ப, வருணன்போதந்திலனாக வெகுண்டு வரிவெஞ்சிலையினொடும், புருவச்சிலைகால்குனித்திடலும் புகைந்த வோரேழ்புணரியுமே" என்ற கூர்மபுராணத்தாலும், "வருணன்மேற் சரம்விட வாரிவெந்ததே," "பரவைகளேழினும் பகழிபாய்ந்திட, எரிகனல்மடுத்திட" என்ற மகாபாகவதத்தாலும் காணலாம். நதிவெதும்பியமைகூறியதுகொண்டு நதிபதிவெதும்பியமை உணர்த்தப்பட்டது. ஒற்றைச் சரம் - எவ்வளவுபெரியபகையையும் அழித்தற்கு வேறொன்றன்உதவியைவேண்டாத தனியம்பு; ஒப்பற்ற அம்பு எனினுமாம். உட்கடல் - இந்த ஜம்பூத்வீபத்தையடுத்துள்ளதான உவர்நீர்க்கடல். புறத்து மற்றைக்கடல் - அக்கடலுக்குஅப்பால் ஒன்றன்பின்ஒன்றாகவுள்ள மற்றைஆறுதீவுகளையும் தனித்தனி சூழ்ந்திருக்கின்ற கருப்பஞ்சாற்றுக்கடல்முதலிய ஆறுகடல்கள். இத்தொடரில் அண்டகடாகத்திற்குப் புறத்தி லுள்ள ஆவரணஜலமாகிய பெரும்புறக்கடலும் அடங்கும்.

ஒன்று + சரம் = ஒற்றைச்சரம், அன்று + கு = அற்றைக்கு: மென்றொடர் வன்றொடராய் ஐகாரச்சாரியைபெற்றது. ஶரம், மதம், ஜடா, கங்கா - வடசொற்கள். ஓலம் - ஒலி. ஓலமிட - தமதுவருத்தத்தைமுறையிடுகின்றாற்போலக் கதற வென்க; (இராமன்பக்கல்)அபயம்வேண்டுமாறு எனினுமாம். மற்றை-சுட்டியதற்கு இனமுணர்த்தும் இடைச்சொல். வெந்தது - வே என்ற பகுதியின் இறந்தகாலத்தொழிற்பெயர்; பகுதி குறுகிற்று. ஓகாரம், வியப்புத்தோன்ற நின்றது. மதம் மா - மதங்கொள்ளும் மிருகம்; எனவே, யானையாயிற்று. "அச்சக்கிளவிக்கு ஐந்து மிரண்டும், எச்சமிலவே பொருள்வயினான" என்ற தொல்காப்பியத்தை நோக்கி 'கோபத்தை யஞ்சி' எனப்பட்டது; உருபுமயக்கமாக, கோபத்திற்கு எனத் திரித்தலுமாம். உம் - உயர்வுசிறப்பு. 'கங்கா' என்பது வடமொழியிற் பெண்பாற்சொல்லாதலாலும், நதிக்குஉரியதெய்வம் ஸ்த்ரீஜாதி யாதலாலும், 'வெதும்பினள் கங்கை' எனப் பெண்பாலாற் கூறினர்.

இப்பாசுரமும், மேற்பாசுரம்போலவே இராமனது போராற்றலை யுணர்த்தியது. (௭௨)

௭௩. கொங்குண்டுவண்டமர்தண்டாரரங்கர்வெங்கோபமுடன்
பொங்குஞ்சரஞ்செய்தமாயமென்னோ தன்புகழுடைய
மங்கும்படிக்குமறஞ்செயிராவணன்வாகினிகண்
டெங்குங்குரங்கெங்கும்ராமனென்றேங்கியிரிந்திடவே.

(இ - ள்.) தன் புகழ் அடைய - தனது கீர்த்தி முழுவதும், மங்கும்படிக்கு - அழியும்படியாக, மறம் செய் - கொடுந்தொழில்களைச் செய்த, இராவணன் - இராவணனுடைய, வாகினி - (மூலபலமென்னும்)சேனையானது, கண்டு-பார்த்து,எங்கும்குரங்கு எங்கும் ராமன் என்று ஏங்கி இரிந்திட-எங்கே பார்த்தாலும் குரங்கும் எங்கே பார்த்தாலும் இராமனுமா யிருக்கின்றதென்று ஏக்கமடைந்து அழிந்திடும்படி, கொங்கு உண்டுவண்டு அமர் தண் தார் அரங்கர் வெம் கோபமுடன் பொங்கும் சரம் செய்த - தேனைக்குடித்துக்கொண்டு வண்டுகள்விரும்பிமொய்த்திருக்கப்பெற்றகுளிர்ச்சியான மாலையையுடைய ரங்கநாதராகிய இராமபிரானது கடுங்கோபத்துடன்கொதித்து வந்த அம்பு செய்த, மாயம் - மாயை, என்னோ - யாதோ! (எ - று.)

அவரதுகோபம் பொங்கியபோதே அம்பும் பொங்கியதனால், 'அரங்கர் வெங்கோபமுடன் பொங்குஞ் சரம்' எனப்பட்டது. இரண்டுபொருள்களுக்கு ஒருவினைபொருந்தச் சொல்லுத லாகிய புணர்நிலையணி இங்குத் தோன்றுதல்காண்க;இதனை வடநூலார் ஸஹோக்தியலங்கார மென்பர்: 'உடன்' என்ற மூன்றும்வேற்றுமையுருபு, இவ்வணிக்கு உரியது. இனி, அரங்கரது கோபத்தை அவரது அம்பின்மேல்ஏற்றி 'வெங்கோபமுடன்பொங்குஞ் சரம்' என்று ரென்றலுமாம்; உடையானது பண்பை உடைமையின்மேலேற்றிக் கூறும் உபசாரவழக்கு. பொங்குதல் - கொதித்துக்கிளர்தல். அரங்கர் சரமென்க. மற்றும், அந்தஅஸ்திரத்திற்குஉரியஅதிதேவதை கொள்ளுங் கோபத்தை அம்பின்மேல்ஏற்றவுந் தகும். 'வெங்கோபமுடன்பொங்கும்' என்ற அடைமொழியை அரங்கர்க்குக் கூட்டவுமாம். 'என்னோ' என்றது, வியப்புப்பற்றி. பிரமனதுகுலத்திற்பிறந்தமை,வேதமுழுவதும்ஓதியமை,அநேகசாஸ்திரங்களைக்கரைகண்டமை, நித்தியகர்மாநுஷ்டானம், அரியதவவேள்விகள் செய்துபெருவரம்பெற்றமை முதலியவற்றால் இராவணன் தான் அடையும் புகழ் முழுவதும் பொலிவுபெறாதுகெடும்படி, தமையனையடக்குதல், முனிவர்கட்கும்தேவர்கட்கும்தீங்குவிளைத்தல், பிறர்மனைவியரைக்கவர்தல், பிராட்டியை வஞ்சனையால் அபஹரித்தல் முதலிய பல கொடுந்தொழில்களைச் செய்து பழிபாவம் மிகப்பெற்றதனால், 'தன்புகழடையமங்கும்படிக்கு மறஞ்செய் இராவணன்' என்றார்.

ராவணன் என்ற வடமொழிப்பெயர் - கூச்சலிடுபவ னென்றும், கூச்சலிடச்செய்பவ னென்றும் பொருள்படும். சிவபிரானது கைலாசகிரியைப் பெயர்க்கத்தொடங்கி அதன்கீழ்த் தன்கைகள்அகப்பட்டு நசுங்குண்டபோது பேரிரைச்சலிட்டதனாலும், தனது கொடியசெய்கைகளால் உலகத்தைக் கதறச்செய்ததனாலும், இவனுக்கு இப்பெயர். இது, சிவபிரான்இட்டது. தனக்கும் பிறர்க்கும் இதமறியாத துஷ்டஸ்வபாவமுடையவ னென்பதை இப்பெயர் விளக்கும் இனி, விசிரவமுனிவனது புதல்வ னெனப் பொருள்படுந் தத்திதாந்தநாம மெனக் கொள்ளுதலு மொன்று.

மாயம், வாகினி - மாயா, வாஹிநீ என்ற வடசொற்களின் விகாரம். மாயை - உள்ளதை இல்லாததாகவும்,இல்லாததை உள்ளதாகவும், ஒன்றை மற்றொன்றாகவுங் காட்டும் விசித்திரம். தனது நற்குண நற்செய்கைகளினாலும் திருமேனியழகினாலும் எல்லாரையும் மகிழ்விப்பவ னென்பது, ராமனென்ற திருநாமத்தின் பொருள். 'ராமன்' எனத் தற்சமமாகவேகூறினர், செய்யுளோசையின்பொருட்டு. மங்கும்படிக்கு என்றதில்,கு-சாரியை. ஏங்கியிரிந்திடச் செய்த மாயம் என இயையும். தண் தார் - திருத்துழாய்மாலையும், மலர்மாலைகளும். கொங்கு உண்டு - வாசனையை மோப்பத்தால்உட்கொண்டு எனினுமாம். கொங்கு - பூந்தாதுமாம். ஏங்குதல் - அச்சத்தால்

உள்ளமும் உடலும் மெலிதல். இரிதல் - அழிதல்; 'இடு' என்ற துணைவினை, தேற்ற முணர்த்திற்று.

இராக்கதசேனைகளனைத்தும் படைத்தலைவர்பலரும் கும்பகர்ணன் அதிகாயன் இந்திரஜித்து முதலியோ ருட்படப் போரில் வாநரவீரர்களாலும் இராமலக்ஷ்மணர்களாலுங் கொல்லப்பட்டுத் தொலைந்தபின்பு, மிக்க வருத்தத்தையும் அதிகோபத்தையும் அடைந்த இராவணன், நெடுநாளாகப் பலவிடங்களிற் சேமித்துவைத்திருந்த மூலபலசேனையையெல்லாம் போர்க்குச்செலுத்த, புற்றிலிருந்து ஈசல்கிளம்புவதுபோல அநேகஆயிர வெள்ளக்கணக்காய்வந்துநெருங்கியமூலபலவீரர்களைப்பார்த்துவாநரசேனை அஞ்சி நிலைகெட்டுச் சிதறி யோட, அதுகண்டு இராமபிரான் அவ்வாநரசேனையை மீட்டுக்கொண்டுவந்து காக்கும்படி அங்கதன் சுக்கிரீவன் இலக்குமணன் முதலியோரை ஏவிவிட்டு, தான் தனியேசென்று அதிவேகத்துடன் அச்சேனைமுழுவதிலுந் திரிந்து பற்பல அம்புகள்தொடுத்துப் போர்செய்து, காந்தர்வாஸ்திரமென்னும் மோகநாஸ்திரத்தைப் பிரயோகிக்க, அதனால் அவ்வரக்கரனைவரும் ஒருவர்க்கொருவர் குரங்காகவும் ராமனாகவும் தோன்றவே, அவர்கள் ஒருவரையொருவர் பகையென மாறுபடக்கருதிப் படைக்கலங்களால் அடித்துக்கொண்டு ஏழரைநாழிகைக்குள் தம்மில்தாமேஅழிந்துபோயினர் என்பது, இங்குக்குறித்த பொருள். 'ஏழுநாழிகைக்குள்' என்றும், 'மூன்றேமுக்கால்நாழிகைக்குள்' என்றும் கூறுதலும் உண்டு.

இப்பாசுரமும், இராமனது பெருந்திறல் கூறியதே. (௪௩)

௪௪. பேரொத்தவாயிரம்பேர்மடிந்தாற்பிறக்குங்கவந்த
நேரொத்தவாடு மதாயிரமாடினெடுஞ்சிலையி
னேரொத்தகிண்கிணிசற்றோலிடு மதோர்யாமநின்று
காரொத்தமேனியரங்கர்தம்போரிற்கறங்கியதே.

(இ - ள்.) பேர் ஒத்த ஆயிரம் பேர் மடிந்தால் - புகழ்பொருந்திய ஆயிரம்வீரர்கள் (போரில்) இறந்தால், கவந்தம் பிறக்கும் நேர் ஒத்த ஆடும் - தலையற்றஉடற்குறை (யொன்று) எழுந்து சரிவரத் தாளவடைவுபொருந்தக் கூத்தாடும்; அது ஆயிரம் ஆடில் - அவ்வாறு ஆயிரங்கவந்தங்கள் எழுந்துகூத்தாடினால், நெடுஞ் சிலையின் ஏர் ஒத்த கிண்கிணி சற்று ஒலிஇடும் - பெரிய வில்லிற் கட்டப்பட்டிருக்கின்ற அழகுபொருந்திய மணியானது சிறிதுஒலிக்கும்: கார் ஒத்த மேனி அரங்கர்தம் போரில் - காளமேகத்தைப்போன்ற திருமேனியையுடைய திருவரங்கநாதராகிய இராமபிரானது யுத்தத்தில், அது ஓர் யாமம் நின்று கறங்கியது - அந்தமணி [இராமன் கைக்கொண்ட கோதண்டத்தி லுள்ளமணி] ஒருயாமகாலம் இடைவிடாம லொலித்தது.

'அரங்கர்தம் போரில்' என்றது, மேற்கூறியபடி இராமபிரான் விசித்திரமாகப் போர்புரிந்து மூலபலத்தை செய்தபொழுது என்றபடி. அப்போரில் மடிந்தவர் அளவற்ற பல ரென்பது, இவ்வாறு விளக்கப்பட்டது. அவர்தொகை, கூறுதற்கரி தென்பதாம். இச்செய்யுளிற்கூறிய மரபை, கம்பராமாயணத்து மூலபலவதைப்படலத்தில் "ஆனையாயிரந்தேர்பதினாயிர மடர் பரியொருகோடி, சேனைகாவலராயிரம்பேர் படிற் செழுங்கவந்தமொன்றாடும், கானமாயிரமாயிரகோடிக்குக் கவின்மணி கணிலென்னும், ஏனையம் மணி யேழரைநாழிகையாடியதினிதன்றே" என்றதனாலும், வில்லிபுத்தூரார் பாரதத்துப் பதினான்காம்போர்ச்சருக்கத்தில் "அநேகமாயிரம்பேர்படக் கவந்தமொன்றுடு மக்கவந்தங்கள், அநேகமாயிரமாட வெஞ்சிலைமணியசைந் தொருதரமார்க்கும், அநேகநாழிகை யருச்சுனன்சிலைமணியார்த்த தக்களம் பட்ட, அநேகமாயிரம்விருதரை யளவறிந்தார்கொலோவுரைக்கிற்பார்"

என்றதனாலுங் காண்க. சற்று ஒலிடும் - அசைந்து ஒருமுறை ஒலிக்குமென்றபடி.

யாமம் - வடசொல்: ஏழரைநாழிகைப்பொழுது; ஒருநாளின் எட்டிலொருபகுதி: (மூன்றுமணிநேரம்.) [ஸ்ரீவால்மீகிராமாயணத்து மூலபலவதைகட்டத்தில் "திவஸஸ்ய அஷ்டமே பாகே" என்றதற்கு-'ஒருபகலின் எட்டிலொருபாகத்திலே' என்று பொருள்கொண்டு, 'மூன்றேமுக்கால்நாழிகை' என்று உரைசெய்திருக்கின்றார்கள்; அதற்கு - 'ஒருநாளின் எட்டிலொரு பாகத்தில்' என்று பொருள்கொண்டால், ஒருயாமகாலத்திலென்றதாகும்.] கவந்தம் - கபந்தமென்ற வடசொல்லின் திரிபு; அதற்கு - வடமொழிநிகண்டில், 'தொழிலுடன்கூடின தலையற்றஉடல்' என்று பொருள்கூறப்பட்டிருக்கின்றது. கிண்கிணி - கிங்கிணீ என்ற வடசொல்லின் விகாரம்; சிறிது ஒலிப்பது என்பது, அதன் காரணப்பொருள் கிண்கிணியென்பதைத் தமிழ்ச்சொல்லாகவே கொண்டு, கிண்கிண்என்றுஒலிப்பதெனக் காரணப்பொருள்கூறுதலும் ஒன்று. பேர் - பெயர் என்பதன் மரூஉ. பிறக்கும் - முற்றெச்சம். ஒன்று மூன்று நான்காம் அடிகளில், 'ஒத்த' என்பது - இறந்தகாலப்பெயரெச்சம்; ஒ - பகுதி: ஒத்தல் - பொருந்துதலும், சமானித்தலும். இரண்டாமடியில் 'ஒத்த' என்றது - செயவென்னும்வாய்பாட்டு வினையெச்சம்; ஒத்து - பகுதி: ஒத்துதல் - தாளம்போடுதல். 'சற்று' - இடைச்சொல். ஒல் இடுதல் - ஒலியைச் செய்தல். ஓர் - ஒன்றுஎன்பதன் விகாரமான இது உகரம்பெறாமலும் முதல்நீளாமலும் நின்றது.

மேற்பாசுரம்போலவே, இராமன் மூலபலத்தையழித்த திறத்தை வியந்துகூறியது, இப்பாசுரமும். (௪௪)

௪௫. சற்பத்துறங்குமரங்கா வுன்பாதந்தனையடைந்த
நற்பத்தருக்கொருநாசமுண்டோ நலமாமருத்தின்
வெற்பைக்கொணர்ந்தவிறலனுமானு மவ்வீடணனுங்
கற்பத்தளவுமழியா திருக்கவுங் கற்பித்தையே.

(இ - ள்.) சற்பத்து உறங்கும் அரங்கா - ஆதிசேஷன்மேல் (பள்ளிகொண்டு) யோகநித்திரைசெய்தருள்கின்ற திருவரங்கனே! நலம் ஆம் - நன்மையைத்தருவதான, மருத்தின் வெற்பை - ஸஞ்சீவிபர்வதத்தை, கொணர்ந்த - தூக்கிக்கொண்டுவந்த, விறல் அனுமானும் - வலிமையையுடைய ஹநுமானும், அ வீடணனும் - அந்த விபீஷணாழ்வானும், கற்பத்து அளவும் அழியாது இருக்கவும் - உலகமுடியுங்காலமளவும் இறவாமலிருக்கும்படியாகவும், கற்பித்தையே - (நீ) கட்டளையிட்டருளினையே; (ஆதலால்), உன் பாதம்தனை அடைந்த நல் பத்தருக்கு ஒரு நாசம் உண்டோ - உனது திருவடிகளையடைந்த நல்லஅடியார்கட்கு அழிவுஉண்டோ? [இல்லையென்றபடி]; (எ-று.)

இராமபிரான் தனது அடியவர்களான அநுமானுக்கும் விபீஷணனுக்கும் பிரமகற்பமளவும்அழியாமற்சிரஞ்சீவியாய்வாழும்படி அநுக்கிரகஞ்செய்த தாகிய சிறப்புப்பொருளைக்கொண்டு, திருமாலின் திருவடிகளையடைந்த மெய்யடியார்கட்கு யாதோரழிவுமுண்டாகா தென்ற பொதுப்பொருளைச் சாதித்தலால், தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணி.

அனுமான் - ஹநுமாந் என்ற வடசொல்லின் விகாரம்; இப்பெயர், கன்னத்தில் விசேஷமுடையவனென்று பொருள்படும். ஹநு - கன்னம், மாந் - உடைமைப்பொருள்காட்டும் வடமொழிப்பெயர்விகுதி. மேருபர்வதத்திற் கேசரியென்ற வாநரவீரனது மனைவியான அஞ்சநாதேவியினிடம் வாயுதேவனது அநுக்கிரகத்தாற் பிறந்த குமாரனான இவன், பிறந்தவுடனே இளஞ்சூரியனைக் கனிந்தபழமென்றுகருதிப் பிடித்தற்குப் பாய்ந்தபொழுது, அதனையறிந்து கோபங்கொண்ட இந்திரன் வச்சிராயுதத்தினால் அடிக்க

அவ்வடிபட்டுச் சிதைந்த கன்ன முடையவனானதனால், இவனுக்கு ஹநுமான் என்று பெயராயிற்று; இது, இந்திரன் இட்டது. இவ்வாநரவீரன், சுக்கிரீவனுக்கு மந்திரியும் சினேகிதனுமானவன்; ராமலக்ஷ்மணர்கள் சீதையைத் தேடிக்கொண்டு சென்றபொழுது, அவர்கள்பக்கல் பேரன்புகொண்டுவந்து சந்தித்துப் பணிந்து பேசி இராமனுக்கும் சுக்கிரீவனுக்கும் நட்புச்செய்வித்தவன்; இராமதூதனாய்ச்சென்று கடல்கடந்து இலங்கைசேர்ந்து சீதையின் வரலாற்றையறிந்து மீண்டுவந்து இராமபிரானிடம் செய்திகூறி, அதன்பின் இராமன் சென்று இராவணன்முதலிய அரக்கர்களைக்கொல்வதற்கு மிக்க உதவிபுரிந்தவன். 'சிறியதிருவடி' என்பது, ஸ்ரீவைஷ்ணவசம்பிரதாயத்தில் அநுமானுக்கு வழங்குந் திருநாமம்.

இராமலக்ஷ்மணர் வாநரசேனைகளுடனே கடல்கடந்து இலங்கைசேர்ந்து நடத்திய பெரும்போரில் ஒருநாள் இராவணன்மகனான இந்திரசித்து பிரமாஸ்திரத்தைப் பிரயோகித்து அதனால் லக்ஷ்மணனையும், வாநரராஜனான சுக்கிரீவனையும் வாநரசேனைகளையும் கட்டுப்படுத்தி அவசமாய் மூர்ச்சித்து மரணமடைந்தவர்போற் கிடக்கும்படி செய்தபொழுது, இராமபிரானும்அவர்கள்நிலைமையைக்கண்டு துக்கித்துவிழுந்திட, ஜாம்பவான்சொன்னபடி அநுமான் அதிவேகமாகப் புறப்பட்டு, இமவத்பர்வதத்திற்கு வடக்கேயுள்ள ஓஷதிபர்வதத்தைச் சார்ந்து அம்மலையிலுள்ள ம்ருதஸஞ்சீவநீ, விஸல்யகரணீ, ஸாவர்ண்யகரணீ, ஸந்தாநகரணீ என்ற மூலிகைகளைத் தேடுகையில், அந்தத்திவ்வியஓஷதிகள் மறைந்தனவாக, அநுமான் அந்தமலையையே வேரோடுபெயர்த்து எடுத்துக்கொண்டுவந்துசேர, அதன்காற்றுப் பட்டமாத்திரத்தால் அனைவரும் மயக்கம்ஒழிந்து மூர்ச்சைதெளிந்து ஊறுபாடுதீர்ந்து உயிர்த்துஎழுந்தனர் என்ற வரலாறு, இங்கு அறியத்தக்கது. அப்போரில் மற்றொருசமயத்தில் இராவணன் விபீஷணன்மேல்எறிந்த தெய்வத்தன்மையுள்ள வேலாயுதத்தை அவன்மேற்படவொட்டாமல் இலக்குமணன் தன்மார்பில் ஏற்றுக்கொண்டு அதனால் மூர்ச்சையடைகையில் மீளவும் அநுமான் அம்மலையைக்கொண்டுவந்து இலக்குமணனை உயிர்ப்பித்தனனென்பதும் உணர்க.

வீடணன்-விபீஷணன்என்ற வடசொல்லின் சிதைவு. இப்பெயர், (பகைவர்க்கு) விசேஷமாய்ப்பயங்கரனானவனென்று காரணப்பொருள்படும். இனி, இதற்கு-பயங்கரனல்லாதவனென்று பொருளுரைப்பாருமுளர். இவன், இராவணனது இறுதித்தம்பி; நற்குணநற்செயல்களையுடையவன். இராமபிரான் இராவணாதியரை யழித்தற்பொருட்டுப் பெரியவாநரசேனையைச்சித்தப்படுத்திக்கொண்டு புறப்பட்டுத் தென்கடலின் இக்கரையைச் சேர்ந்தவளவிலே, இலங்கையில் சபைவீற்றிருந்த இராவணன் இனிச்செய்யத்தக்கதைக்குறித்து மந்திரிகளுடனே இரகசியமாக ஆலோசனைசெய்கையில், அவனது தம்பியும் சத்துவகுணசீலனுமான விபீஷணன் பற்பலநீதிகளையெடுத்துக்காட்டி 'மகாபலசாலியான இராமனிடத்திலே சீதையைக் கொண்டுபோய் ஒப்பித்துவிடுவதே தகுதி' என்று வற்புறுத்திக்கூறவும், இராவணன் அதுகேளானாய்க் கோபங்கொண்டு பலவாறுஇகழ்ந்துபேச, விபீஷணன் அதனைப்பொறாது அத்தமையனையும் சுற்றத்தையும் இனத்தையும் விட்டுத் தீப்பற்றியவிடத்தினின்று வெளிப்படுமாறுபோல அந்தத்துஷ்டர்கூட்டத்தினின்று புறப்பட்டு வந்து இராமபிரானைச் சரணமடைந்து அப்பெருமானால் அன்போடு அபயமளித்து ஏற்றுக்கொள்ளப்பட்டு அவனுக்குஉதவியாகி அரக்கர்களுடைய சூழ்ச்சிகளையெல்லாம் எடுத்துச்சொல்லி, அவர்களனைவரையும் போரில்அழித்தற்குப் பெருந்துணைசெய்து, 'ஸ்ரீராமனால் இலங்கையரசனாக முடிசூட்டப்பட்டனனென்ற வரலாறும், இங்கு அறியத்தக்

கது. 'அவ்வீடணன்' என்றது, மேன்மைபற்றி; அகரச்சுட்டு, பிரசித்தி பற்றி வந்தது. ரஜோகுண தமோகுணங்களால் மிக்குத் தீயனவேசெய்யுங் கொடியஅரக்கர்கோஷ்டியில் ஒருவனாயிருந்தும் ஸத்வகுணமேமிக்கு நல்லனவேசெய்யுமியல்பினனான விபீஷணனது ஞானசீலங்களின் மேன்மை தோன்ற, 'அவ்வீடணன்' என்றார்.

அநுமான் மருத்துமலைகொணர்ந்து இலக்குமணனை உயிர்ப்பித்த இருமுறையிலும் இராமபிரான் அவன்பக்கல் மிகவுந்திருவுள்ளமுகந்து அவனைச் சிரஞ்சீவியாய் என்றும்வாழும்படி அருள்செய்தனன். (கம்பராமாயணத்து யுத்தகாண்டத்தில் மருத்துமலைப்படலத்தில் "இன்றுவீகலா தெவரு மெம்மொடு, நின்றுவாழுநாள் நெடிதுநல்கினாய், ஒன்றுமின்னல்நோயுறுகிலாது நீ, என்றும்வாழ்தியா லினிதெனேவலால்" என்றதும், வேலேற்றுப்படலத்தில் "வீர னனுமனைத் தொடரப் புல்லிப், பெற்றனெ னுன்னை யென்னை பெறாதன பெரியோ யென்றும், அற்றிடையீறுசெல்லாவாயுளையாக வென்றான்" என்றதுங் காண்க.) இராமபிரான் திருவவதாரத்தைமுடித்துக் கொண்டு இவ்வுலகத்தைநீத்துத் தன்னடிச்சோதிக்குஎழுந்தருளும்போது விபீஷணனுக்குச் சிரஞ்சீவியாய்வாழுமாறு அருள்செய்தன னென்பதை, உத்தரகாண்டத்து இறுதிப்படலத்தில் "மின்பயில்சடக்கைவேல்வீடணன்தனைப், பொன்பயில்நகர்வயிற்போதி பூதல, மன்பதையளவு நீவாழ்தியாலென, அன்புடனுணையானகலநீக்கினான்" என்றதனால் உணர்க. இவர்களில் அநுமானுக்கு "ஒருநாளும்விளியாநாளுமுறுக" என்று பிரமனும், "யான் மறுவிலாமனத்தேனெனின், ஊழியோர்பகலாயோதும்யாண்டெலாம் முலக மேழுமேழும்வீவுற்றஞான்று மின்றெனவிருத்தி" என்று சீதாபிராட்டியும், விபீஷணனுக்கு "நீயென்று மிறவாதிருத்தி" என்று பிரமனும் கொடுத்திருக்கின்ற அழிவிலாவரத்தைப் பெருமான் இங்ஙனம் பரிபாலித்தருளின னென்க. மற்றையோர்பலரைப் பெருமான் தன்னுடன் வைகுந்தத்திற்கு அழைத்துக்கொண்டுபோகின்றபோது இவ்விருவரையும் உடன்கொண்டு செல்லாமற் பிரமகற்பமளவும் இவ்வுலகில்வாழுமாறு கட்டளைகூறி முன்பு அவர்கட்குப் பிரமனும்பிராட்டியுந்தந்தவரத்தைப் பரிபாலித்ததை இங்ஙனம் பாராட்டிக்கூறினருமாம். விபீஷணனுக்கு இலங்கையிற் பட்டாபிஷேகஞ் செய்விக்கும்பொழுது இவ்வகைவரமளித்ததாகவும் கூறுவ துண்டு. "இலங்கைகாத்தளிப்ப வீடணற்காயு ளியம்புமோர்கற்ப மதளித்து" என்றது, ஸ்ரீபாகவதம்.

ஸர்ப்ப மென்ற வடசொல்லின் விகாரமான சர்ப்பமென்பது, எதுகை நயம் நோக்கிச் சற்பமெனத் திரிக்கப்பட்டது; தரையென்பது தறையென வேண்டுமிடத்து ரகரம்மாற்றப்படுதல் போல. பாதம், பக்தர், நாமம், கல்பம்- வடசொற்கள். ஓ - எதிர்மறை. மருத்தின் வெற்பு - மருந்தையுடைய மலை; ஒளஷதிகிரி: 'மருந்து' என்ற மென்றொடர் வன்றொடராயிற்று; இன் - சாரியை. நலம் - நன்மையைத்தருகின்ற, மா மருந்து - மஹௌஷதி யென்றுங் கொள்ளலாம். நல என்றுஎடுத்து, நல்ல என்றலுமாம். கொணர்ந்த, கொணா- பகுதி; அது, குறுக்கலும் விரித்தலு மாகிய விகாரங்களைப் பெற்று, 'கொணர்' என் நின்றது. விறல் - வெற்றியுமாம். மூன்றாமடியில், உம்மைகள் - எண்ணுப்பொருளன. நான்காம் அடியில், உம்மைகள் - உயர்வுசிறப்பு. 'அழியாதிருக்கவும்' என்ற உம்மையை எச்சப்பொருளதாகக் கொண்டு, அவர்கட்கு முறையே தன்னால்தழுவிக்கொள்ளப்படுதலும் இலங்கையரசனாதலும் முதலியசிறப்புக்களைத் தந்ததுமன்றி யென்பதை வருவித்தலுமாம். கற்பித்தை - முன்னிலையொருமை யிறந்தகாலமுற்று; ஐ - விகுதி. ஒரு நாசம் உண்டோ- நாசம் ஒன்றேனும்உண்டோ என்றபடி. (சு௧)

௬௯. ஆவும்பயமுமமுதுமொப்பானவரங்கருக்கு
மேவும்புகழின்னுமேவுங்கொலோ வவர்மெய்யருளாற்
றாவுந்தரங்கத்தடஞ்சூழயோத்திச்சராசரங்க
ளாவுங் கிளையுடன் வைகுந்தலோகத்திலார்ந்திட்டவே.

(இ - ள்.) ஆவும் பயமும் அமுதும் ஒப்புஆன - பசுவையும் (அதனிடத்துப்)பாலையும் (அதனிடத்து)இனிமையையும் போலுள்ள. அரங்கருக்கு- திருவரங்கநாதராகிய இராமபிரானுக்கு. மேவும் - உண்டான. புகழ்-கீர்த்தி, இன்னும் மேவும்கொல்லோ - வேறுயார்க்கேனும் உண்டாகுமோ? [உண்டாகா தென்றபடி]; (என்னெனில்).—தாவும் தரங்கம் தடம் சூழ் அயோத்தி சர அசரங்கள் ஆவும் - மேன்மேலெழுந்துவருகின்ற அலைகளையுடைய தடாகங்கள் சூழ்ந்த அயோத்தியாபுரியிலுள்ள சரங்களும் அசரங்களு மாகிய எல்லாப்பொருள்களும், கிளையுடன் - (தம்தம்) சுற்றத்துடனே, அவர் மெய் அருளால் - அந்தஸ்ரீராமபிரானது பழுதுபடாதகருணையினால், வைகுந்த லோகத்தில் ஆர்ந்திட்ட-வைகுண்டலோகத்திற் சென்று சேர்ந்திட்டன.

இராமபிரான் இவ்வுலகத்தைவிட்டுச்செல்லத்தொடங்கிய சமயத்தில், அயோத்தியாநகரத்துஉயிர்களெல்லாம் அப்பெருமானைச் சரணமடைந்து 'தேவரீர் எங்குச்சென்றாலும் அடியேங்களையும் உடனழைத்துக்கொண்டு செல்லவேண்டும்' என்று பிரார்த்திக்க, ஸ்ரீராமன் அவர்களுடைய அன்பின் உறுதியைக் கண்டு 'அப்படியேஆகட்டும்' என்று அருளிச்செய்து, அனைவரையும் தம்மைப்பின்தொடர்ந்துவருமாறு பணித்தருளிப் பிரயாணப்பட்டனர்; அப்பொழுது, அந்நகரத்திருந்த மனிதர்களே யன்றி விலங்கு பறவை முதலிய அஃறிணையுயிர்களும் அகமகிழ்ந்து சுவாமியின்பின் சென்றன: இங்ஙனம் பலரும் புடைசூழ ஸ்ரீபகவான் சரயூநதியில்இறங்கித் தன்னடிச்சோதிக்குஎழுந்தருளும்போது, தம்மிடத்துஇடையறாதஅன்புகொண்டு பின்பற்றிச் சரயுவில்மூழ்கி உடம்பைத்துறந்த எல்லாவுயிர்கட்கும், பிரமலோகத்திற்குமேற்பட்டதாய்ப் பரமபதம்போலவே புக்கவர்மீண்டுவருதலில்லாத மேம்பாடுள்ள ஸாந்தாநிகமென்னும்உலகத்தை அளித்தருளினர் என்பது, இங்கு அறியத்தக்கது.

"அன்று சராசரங்களை வைகுந்தத்தேற்றி", "கற்பா ரிராமபிரானையல்லால் மற்றுங்கற்பரோ, புற்பாமுதலாப் புல்லெறும்பாதி யொன்றின்றியே,நற்பாலயோத்தியில்வாழுஞ் சராசரம் முற்றவும், நற்பாலுக்குய்த்தனன் நான்முகனார்பெற்றநாட்டுளே" என்றார் ஆழ்வார்களும்.

'இராமபிரானுக்குஉண்டான கீர்த்தி வேறியார்க்கேனும்உண்டாகுமோ?' என்று ஒருவிஷயத்தைக் கூறி, அதனை, 'அப்பெருமானது திருவருளால் அயோத்திச்சராசரங்கள்யாவும் கிளையுடன் வைகுந்தலோகத்தில் ஆர்ந்திட்டவே' என்ற உக்ககாரணத்தைக்கொண்டு சாதித்தது, ஏதுவணியின் பாற்படும். இப்படி தாம்திருவவதரித்த நகரத்தில் வாழ்ந்த சராசரங்களெல்லாவற்றிற்கும் வைகுந்தமளித்தவர் வேறெவருமில்லை யாகையால், இவ்வகைக்கீர்த்தி பெருமானுக்கே அஸாதாரணமாகின்றதென்க.

பசுவினிடத்துப் பாலும் அதனிடத்து இன்சுவையும்போல அசித்தாகிய சரீரத்திலே சித்தாகிய ஜீவாத்மாவும் அதனிடத்தே அந்தர்யாமியான பரமாத்மாவுமாக வாழ்பவ ரென்பார், 'ஆவும் பயமும் அமுது மொப்பான அரங்கர்' என்றார். இது விசிஷ்டாத்வைத சித்தாந்தம். அமுது - பாலின் ஸாரமெனினுமாம். சர + அசரம் = சராசரம்: தீர்க்கசந்திபெற்ற வடமொழித்தொடர்; உம்மைத்தொகை. சரம் - அசையும்பொருள், இயங்குதிணைப் பொருள்; ஜங்கமம். அசரம் - அசையாப்பொருள், நிலைத்திணைப்பொருள்; ஸ்தாவரம். இவையே இருவகைத்தோற்றம். மெய் அருள் - பயன்விளைத்

தல்தவுறுத அருள். பயஸ், அம்ருதம், அயோத்யா, வைகுண்டலோகம் என்ற வடசொற்கள் விகாரப்பட்டன. அயோத்யா என்பது - போர்செய்து வெல்லமுடியாத தென்று பொருள்படும். நான்காமடியில், 'யாவும்' என்பது, 'ஆவும்' என விகாரப்பட்டது; ஆனை, ஆடு, ஆளி, ஆமை, ஆறு, ஆர் என்பன போல. கிளை - மரத்திற்குக் கிளைபோலத் தமக்கு உறுப்பாகும் உறவினம்; உவமவாகுபெயர். கொல் ஓ என்ற இரண்டிடைச்சொற்களில், ஒன்று - வினவகையால் எதிர்மறை குறித்தது; மற்றொன்று - அசை. ஆர்ந்திட்ட - 'அன்'சாரியை பெறாத பலவின்பால்முற்று; 'இடு' என்ற துணைவினை, துணிவுணர்த்திற்று. ஈற்றுஏகாரத்தைத் தேற்றப்பொருளதென்னலாம்; தேவதாந்தரங்களை ஏசுங் கருத்தினதுமாம். தரங்கம் - வடசொல். தடம் - சரயூநதியுமாம்; அந்த மகாநதி அயோத்தியாபுரியைத்தழுவுவது போல வளைந்திருத்தலால், 'தாவுந்தரங்கத்தடஞ்சூழயோத்தி' எனலாகும்.

[இதுவும், அடுத்தபாசுரமும் - ஸ்ரீபலராமாவதார வைபவம்.]

சஎ. ஒருதாயிருந்துவருந்த வைதேகியுடன் சுரத்தி
லொருதாய்சொலச்சென்றதென்னரங்கா வையமுய்யும்வண்ண
மொருதாயுதரத்திலோரறுதிங்களுறைந்தபின்னை
யொருதாய்வயிற்றில்வந்துற்றதெம்மாய முரைத்தருளே.

(இ - ள்.) ஒரு தாய் சொல - ஒருதாய் [கைகேயி] சொன்னதனால், ஒரு தாய் இருந்து வருந்த - ஒருதாய் [கௌசல்யை] (அயோத்தியாபுரியிலேயே) இருந்து வருந்தும்படி, வையம் உய்யும் வண்ணம் - (உலகத்துஉயிர்கள் (கொடியோரால்நேர்ந்த உபத்திரவம் நீங்கி) வாழும்பொருட்டு, வைதேகியுடன் சுரத்தில் சென்ற - சீதையுடனே கொடியகாட்டிற்குப் போயருளிய, தென் அரங்கா - அழகிய திருவரங்கத்துநாதனே!— (நீ), ஒரு தாய் உதரத்தில் ஓர் அறு திங்கள் உறைந்த பின்னை - ஒருதாயின் [தேவகியினது] திருவயிற்றிலே ஆறுமாதகாலம் வசித்தபின்பு, ஒரு தாய் வயிற்றில் வந்து உற்றது - மற்றொருதாயின் [ரோகிணியினது] திருவயிற்றில் வந்துசேர்ந்தது, என் மாயம் - என்னமாயை! உரைத்தருள் - சொல்லியருள்வாயாக.

சீதாகல்யாணத்தின்பிறகு தசரதசக்கரவர்த்தி இராமபிரானுக்குப் பட்டாபிஷேகஞ்செய்ய யத்தனிக்கையில் மந்தரைசூழ்ச்சியால் மனங்கலக்கப்பட்ட கைகேயி, தன்கொழுநரான தசரதரை நோக்கி, முன்பு அவர் தனக்குக்கொடுத்திருந்த இரண்டுவரங்களுக்குப் பயனாகத் தன்மகனான பரதனுக்குப் பட்டங்கட்டவும் கௌசல்யைமகனான இராமனைப் பதினான்குவருஷம் வனவாசஞ்செலுத்தவும் வேண்டுமென்றுசொல்லி நிர்ப்பந்திக்க, அதுகேட்டு வருந்திய தசரதர் சத்தியவாதியாதலால், முன்பு அவட்கு வரங்கொடுத்திருந்த சொல்லைத் தவறமாட்டாமலும், இராமன்பக்கல் தமக்குஉள்ள மிக்க அன்பினால் அவ்வரத்தை நிறைவேற்றுமாறு அவனை வனத்திற்குச்செல்லச் சொல்லவும் மாட்டாமலும் கலங்கி வாய்திறவாதிருக்கிற சமயத்தில், கைகேயி இராமனை வரவழைத்து 'பிள்ளாய்! உங்கள்தந்தை பரதனுக்கு நாடுகொடுத்துப் பதினான்குவருஷம் உன்னைக் காட்டேறப்போகச்சொல்லுகிறார்' என்றுசொல்ல, அச்சொல்லைத் தலைமேற்கொண்டு, அந்த மாற்றாந்தாயின் வார்த்தையையும், அவட்குத் தனது தந்தை கொடுத்திருந்த வரங்களையும் தவறாதுநிறைவேற்றி மாத்ருபித்ருவாக்யபரிபாலனஞ்செய்யவிரும்பி அப்பொழுதே இராமபிரான் தன்னைவிட்டுப் பிரியமாட்டாதுதொடர்ந்த சீதையோடும் இலக்குமணனோடும் அயோத்தியைவிட்டுப் புறப்பட்டு வனவாசஞ்சென்றனனென்பது, முதலிரண்டடியிற்குறித்த கதை.

தந்தை ஏவவேண்டுமென்பதை எதிர்பாராமலே இராமபிரான் "மன்னவன்பணியன்றாகில் நும்பணிமறுப்பனோ,...... இப்பணி தலைமேற்கொண்

டேன், மின்னொளிர்கானமின்றேபோகின்றேன் விடையுங்கொண்டேன்" என்று சொல்லிப் புறப்பட்டமை தோன்ற, 'ஒருதாய்சொலச் சென்ற' என்றார். "தொத்தலர் பூஞ்சுரிகுழற் கைகேசி சொல்லால் தொன்னகரந் துறந்து" என்றார் குலசேகராழ்வாரும். முதலடியில்'ஒருதாய்'என்றது,பெற்றதாயை.இரண்டாமடியில்'ஒருதாய்'என்றது,மாற்றாந்தாயை.ஒரேவகைச் சொல்லால் இருவரையும் சமமாகக்குறித்தது, இராமபிரானுக்கு அவர்களிடம் ஒருநிகராகவுள்ள அன்புநிலையைப்பற்றி யென்க. புத்திரனைப்பிரிவதால்வருத்தமுற்ற கௌசல்யை 'என்னையும் உன்னுடன் அழைத்துக்கொண்டுபோ' என்றுவேண்டவும், இராமன் அங்ஙனம் செய்யாமல் 'சக்கரவர்த்தியுடன் இருந்து அவர்க்குஆவனசெய்தலே அறமாம்' என்றுசொல்லி அத்தாயைத் தந்தையினிடம் இருக்கவிட்டுச் சென்றன னாதலால், 'ஒருதாய் இருந்து வருந்தச் சென்ற' எனப்பட்டது. "ஏற்றுத்தாய் பின்தொடர்ந்தெம்பிரா னென்றழக், கூற்றுத்தாய்சொல்லக் கொடியவனம்போன, சீற்றமிலாதான்" என்றது. பெரியாழ்வார் திருமொழி. இப்படி வனவாஸஞ்சென்றது ராவணாதிராக்ஷஸஸம்ஹாரஞ்செய்து உலகத்தவர்களை இனிதுவாழச்செய்தற்பொருட் டாதலால், 'வையம்உய்யும்வண்ணம் சுரத்திற்சென்ற' என்றார். சுரம் - கடுங்காடு. ("மாதிரங்கள், மின்னுருவின் விண்டேர் திரிந்து வெளிப்பட்டுக், கன்னிரைந்து தீந்து கழையுடைந்து கால்சுழன்று, பின்னுந் திரைவயிற்றுப் பேயே திரிந்துலவாக், கொன்னவிலும் வெங்கானம்" என அதன்கொடுமையைத் திருமங்கையாழ்வார் அருளிச்செய்தார்.) சீதையை எடுத்துச்சென்று இராவணன் அழிய வையம்உய்தற்குப் பெருமாள்பிராட்டியுடன்வனஞ்சென்றதே மூல மாதலால், 'வையமுய்யும்வண்ணம் வைதேகியுடன் சுரத்திற் சென்ற' எனலாயிற்று.

எம்பெருமானால் நியமிக்கப்பட்ட யோகநித்திரை யெனப்படும் மாயை, நந்தகோபருடைய கோகுலத்திலே யிருந்த வசுதேவபத்தினியான ரோகிணியின் வயிற்றி லிருந்த வாயுரூபமான ஆறுமாதத்துக்கர்ப்பத்தைக் கலைத்துவிட்டு வசுதேவருடைய மற்றொருபத்தினியான தேவகியின் வயிற்றி லிருந்த ஆதிசேஷாம்சமான கர்ப்பத்தைக் கொண்டுபோய் அந்த ரோகிணியின்வயிற்றிற் சேர்த்திட, இங்ஙனம் வசுதேவபத்தினிகளுள் தேவகியின் கர்ப்பத்தில் (ஏழாவதுகருவாக) ஆறுமாசமும், ரோகிணியின் கர்ப்பத்தில் மற்றோர்ஆறுமாசமும் இருந்து பிறந்தவன் பலராமனென்பது, பின்னிரண்டடியில் அறியத்தக்கது. இவன் - திருமாலின் எட்டாம்அவதாரம்; இவனிடத்து, ஆதிசேஷனது அம்சமும் கலந்திருந்தது. தேவகியின் எட்டாவது கர்ப்பத்தில் அவதரிப்பவனும் திருமாலின் ஒன்பதாம் அவதாரமுமான கண்ணனுக்கு முன்பு இவன் பிறந்ததனால் அவனுக்குத் தமையனாயினன். தசாவதாரங்களுள் ஏழாவதான தசரதராமாவதாரத்தோடு எட்டாவதானபலராமாவதாரத்தையுஞ் சேர்த்து அருமைபாராட்டினர், இப்பாசுரத்தில்; இரண்டும் அடுத்தஅவதாரங்க ளாதலால். 'வையம்உய்யும்வண்ணம்' என்றதை மத்திமதீபமாக, 'உறைந்தபின்னை', 'வந்துற்றது' என்பவற்றோடுங் கூட்டலாம்; துஷ்டஅசுரர்கள்பலரும் கெட்டஅரசர்கள் பலரும் ஒருங்கே கூடி வசிப்பதனாலுண்டான பூமிபாரத்தை நிவிருத்திசெய்து உலகத்தவரை வாழ்வித்தற்பொருட்டு அப்பூமிதேவியின் பிரார்த்தனைப்படி தேவர்கள் வேண்டியதனால் திருமால் வசுதேவகுமாரராய்ப் பலராமகிருஷ்ணர்களாகத் திருவவதரித்தனனென உணர்க. இப்படி கருப்பம் ஒருத்திவயிற்றைவிட்டு மற்றொருத்திவயிற்றிற்கு மாறுவது உலகத்தில் எங்கும் என்றுங் காணாததோர் அதிவிசித்திர மாதலால், அதற்குக்காரணமான பகவானுடைய அற்புதசக்தியை 'எம்மாயம்' என்று கொண்டாடினர். மாயை - அகடிதகடநா ஸாமர்த்யம், செயற்கரியனசெய்யுந்திறம். அது பிறர்கூறுதற்கரிய தென்ற கருத்தால், நீயே உரைத்தருளென்றார்.

வைதேஹி என்ற வடசொல் விகாரப்பட்டது. உடம்பில்லாமற்போகக் கடவதென்று வசிட்டமுனிவராற் சபிக்கப்பட்டு விதேகனாகிய நிமியரசனது மரபில் வளர்ந்தவனென்று பொருள்படும்; தத்திதாந்தநாமம். சொல-தொகுத்தல். உதரம்-வடசொல். திங்கள்-சந்திரன்; அமாவாசைக்கு அமாவாசை ஒரு மாசமெனக்கொண்டு சந்திரசம்பந்தத்தாற் காலத்தைவரையறுக்குஞ் சாந்திரமானரீதிபற்றி, 'திங்கள்' என்று மாதத்திற்குப் பெயர்வழங்கலாயிற்று: 'மதி' என்பதும் இது; இலக்கணை. பின்னை, ஐ - சாரியை. (௪௭)

௪௮. கதிபட்டபொன்னியரங்கேச ராடுகருந்திரைநீர்
நதிபட்டபாடுநவின்றிடலாகு நலங்கெழுகூர்
நுதிபட்டநெட்டலத்தாலேயிழுத்திட நூற்றுவர்தம்
பதிபட்டகண்கலக்கந்தெரியாது பகருதற்கே.

(இ - ள்.) கதி பட்ட பொன்னி அரங்க ஈசர் - விரைந்தோடுதல் பொருந்திய காவேரிநதியாற் சூழப்பட்ட திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமான், ஆடு - (பலராமாவதாரத்தில்) நீராடுகின்ற, கரு திரை நீர் நதி - கருமையான அலைகளையுடைய நீரையுடைய யமுனையாறு, பட்ட பாடு - (அவர் கலப்பைகொண்டு இழுத்திட்டதனால்) அடைந்த வருத்தம், நவின்றிடல் ஆகும் - (ஒருவாறு) சொல்லுதல்கூடும்; நலம் கெழு - நன்மை மிக்க, கூர் நுதி பட்ட - கூர்மையான நுனிபொருந்திய, நெடு அலத்தாலே- நீண்ட கலப்பையாலே, இழுத்திட-(அப்பலராமர்) இழுத்திட்டதனால், நூற்றுவர்தம் பதி - துரியோதனாதியரது ஊராகிய ஹஸ்திநாபுரி, பட்ட-அடைந்த, கண்கலக்கம் - துன்பமோ என்றால், பகருதற்கு - சொல்வதற்கு, தெரியாது—; (எ - று.)

ஒருகாலத்தில், பலராமர், பக்கத்தில் ஓடுகின்ற யமுநாநதியை நோக்கி, 'ஓ யமுனாய்! நீ இங்கே வா, நான் நீராடவேண்டும்' என்று அருளிச்செய்ய, அவ்யமுனை அவர் மதுபானமதத்தினால் இப்படிச்சொல்லுகின்றாரென்று அவர்வார்த்தையை அவமதித்து அங்கே வரவில்லையாக, அதுகண்டு அவர் வெகுண்டு தமது ஆயுதமான கலப்பையைக் கையிலெடுத்து அதன் நுனியாலே அந்நதியை இழுக்க, அந்நதி தான்போகும்வழியைவிட்டு அவரெழுந்தருளியிருக்கும்வனத்தில் வந்து பெருகிய தன்றியும், தன்னுடைய சரீரத்தோடு அவர்க்கெதிரில்வந்து பயத்தினாலே மிகவும் நடுநடுங்கி விசேஷமாக வேண்டிக்கொள்ள, பின்பு அந்நதியை க்ஷமித்து அதில்நீராடின ரென்பதும்; அஸ்தினாபட்டணத்திலே துரியோதனன் தன்மகளான இலக்கணைக்குச் சுயம்வரங்கோடிக்க, அக்கன்னிகையை ஸ்ரீக்ருஷ்ணனது மஹிஷிகளுளொருத்தியாகிய ஜாம்பவதியின் குமாரனான ஸாம்பனென்பவன் பலாத்காரத்தால் தூக்கிக்கொண்டுபோக, துரியோதனாதியர் எதிர்த்து யுத்தஞ் செய்து அவனைப் பிடித்துக் காவலிலிட்டுவைக்க, அச்செய்திகேட்ட பலராமர், தான் அவனை விடுவித்துவருவதாய்ச் சொல்லிப் புறப்பட்டு அஸ்தினாபுரத்திற்குஎழுந்தருளி 'நம்முடைய ஸாம்பனை விடவேண்டும்' என்று அருளிச்செய்ய, அக்கௌரவர்யாவரும் 'துஷ்டகாரியஞ்செய்த அவனை நாங்கள் விடமாட்டோம்' என்று ஒரேகட்டுப்பாடுடையவர்களாய் இகழ்ந்துபேச, பலராமர் கரையில்லாதகோபங்கொண்டு எழுந்திருந்து, 'குருகுலத்தார் வாசஞ்செய்துகொண்டிருக்கின்றஇந்நகரத்தைக்கங்கையிற்கவிழ்த்துவிட்டு, பூமியிற் கௌரவப்பூண்டில்லாமற்செய்துவிடுவோம்' என்று சொல்லி, தமது கலப்பையை மதிலின்மேலுள்ள நாஞ்சிலென்னும்உறுப்பில் மாட்டிஇழுக்க, அதனால் அப்பட்டணமுழுவதும் அசைந்துசாயவே, அதுகண்டகௌரவரெல்லாரும் மனங்கலங்கிச் சாம்பனை இலக்கணையோடும் பலசிறப்புக்களோடும் கொண்டுவந்து சமர்ப்பித்து வணங்கி வேண்ட, இராமபிரான் அவ்வளவோடு கலப்பையை வாங்கியருளினரென்பதும், இதிற்குறித்தகதைகள்.

இதனால் இப்பொழுதும் அஸ்தினபுரி தென்புறம்உயர்ந்து வடபுறம் தாழ்ந்து அப்பக்கத்திலுள்ள கங்கையினுள்ளே விழுவதுபோலவிருக்கின்ற தென்பதை, "புரவல வின்னும்பொன்னகருக்கூட்டையில், திருநகர் தென்ற லைச்சேணிலோங்குறு. விரிதிரைக்கங்கையில்வீழ்தல்போன்று மற்று, ஒரு குழையவன்வலியுணர்த்துகின்றதால்" என்ற ஸ்ரீபாகவதத்தால் உணர்க. (பலராமனுக்குக் கலப்பையும் உலக்கையும் முக்கியஆயுதங்கள்.) அதனால், அவ னுக்கு ஹலாயுதன், ஹலி, முஸலி என்ற பெயர்கள் வழங்கும். நலம் - சிற ப்பு, துஷ்டநிக்கிரகருமாம். நலங்கெழு-அலத்திற்கு அடைமொழி. 'நலங் கெழுகூர்நுதிபட்டநெட்டலத்தாலேயிழுத்திட' என்றதை மத்திமதீபமாக, 'நதிபட்ட' என்றதனோடுங் கூட்டுக. யமுநாநதியின் ஜலம் கருநிறமுடைய தாதலால், 'கருந்திரைநீர்நதி' எனப்பட்டது.

கதி, நதி, ஹலம் - வடசொற்கள். நெடுமை + அலம் = நெட்டலம்: பண் புப்பெயர், ஈறுபோய்த் தன் ஒற்றுஇரட்டியது. நூற்றுவர்-நூறுபேர்; இங்கே, துரியோதனாதியர்க்குத் தொகைக்குறிப்பு. துன்பம்உண்டானபோது கண் கலங்குதலால், துன்பத்திற்கு 'கண்கலக்கம்' என்று ஒருபெயர் வழங்கும்; காரியவாகுபெயர். துன்பத்திற்கு 'அலக்கண்' என்று ஒருபெயரிருத்தல், இங்குநினைக்கத்தக்கது. பகருதற்குத்தெரியாது-சொல்லமுடியாதென்றபடி.

யமுநாநதிபட்டபாட்டினும் அஸ்தினபுரிபட்டபாடு பெரி தென்பது கருத்து. இங்ஙனம் பலராமனது பேராற்றலை யுணர்த்தினர். (சச)

[இதுமுதல் இருபத்தைந்து கவிகள் - ஸ்ரீகிருஷ்ணாவதார வைபவம்.]

சரு. பண்டுவிழுங்கியபாருந்திசையும்பனிக்கடலுஞ்
சண்டநெடுங்கிரித்தானமெல்லாஞ் சண்பகாடவிமேன்
மண்டுபெரும்புனல்சூழரங்கேசர்தம்வாய்மலருட்
கண்டுமருவினள் சீர்நந்தகோபர்தங்காதலியே.

(இ - ள்.) சண்பகம்அடவிமேல்-சண்பகமரச்சோலையின்மேல், மண்டு-மிக்குப்பாய்கின்ற, பெரும் புனல்-பெரியகாவேரிநீரினால், சூழ் - சூழப்பட்ட, அரங்கம் - திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கின்ற, ஈசர்தம் - பெருமானாகிய கண்ணபிரானது, வாய் மலருள் - செவ்வாம்பல்மலர்போன்ற திருவாயினுள்ளே,— பண்டுவிழுங்கிய-முன்னே [கற்பாந்தகாலத்தில்]உட்கொண்ட, பாரும் - பூமியையும், திசையும் - திக்குக்களையும், பனி கடலும் - குளிர்ந்த கடலையும், சண்டம் நெடுங் கிரி தானம்-மிகவும் பெரிய மலைகளினிடங்களையும், எல்லாம் - (அவற்றிலுள்ள) எல்லாப்பொருள்களையும், நந்தகோபர்தம் காதலி-நந்தகோபரது மனைவியான யசோதைப்பிராட்டி, கண்டு - பார்த்து, சீர் மருவினள் - சிறந்தமகிழ்ச்சியை யடைந்தாள்; (எ - று.)

நந்தகோபர்-இடையர்களையும் பசுக்களையுங்காப்பவர்: நந்தர்-இடையர்; கோ-பசு. இவர், கண்ணனை வளர்த்த தந்தையார். வசுதேவனும் தேவகியும் கம்ஸனாற்சிறையிலிருத்தப்பட்டு வடமதுரையில் தளைபூண்டிருக்கையில், திரு மால் தேவகியினிடம் எட்டாவதுகருப்பத்திற் கண்ணனாய் அவதரிக்க, அக் குழந்தையைக் கம்சன் கொல்லக்கூடுமென்ற அச்சத்தால், தாய்தந்தையர் அத் தெய்வக்குழவியின் அநுமதிபெற்று அந்தச்சிசுவை அதுபிறந்தஅராத்திரியி லேயே திருவாய்ப்பாடியிலுள்ள இடையர்க்கெல்லாந்தலைவரானநந்தகோப ரது திருமாளிகையிலே இரகசியமாகக் கொண்டுசேர்த்துவிட்டு, அங்கு அப்பொழுது அவர்மனைவியான யசோதைக்கு மாயையின்அம்சமாய்ப்பிறந் திருந்ததொரு பெண்குழந்தையை எடுத்துக்கொண்டுவந்துவிட, அதுமுதற் கம்சனைக்கொல்லுகிறவரையிற் கண்ணபிரான் அக்கோகுலத்திலேயே நந்தகோபகுமாரனாய் யசோதைவளர்க்க வளர்ந்தருளினன். அங்ஙனம் வளர்கையில் ஒருநாள், கண்ணன் குழந்தையாகிய தன்னை நீராட்டும் [illegible] மஞ்சளாலே தனது மெல்லியநாவை வழித்த யசோதைக்குத் திவ்ய

சகடாசுரனைக்கொடுத்துத் தன்வாயைத்திறந்து தன்வைபவத்தைக்காட்டியருள, அவள் அந்தப்பிள்ளையின்வாயினுள்ளே ஸகலலோகங்களையுங் கண்டனளென்க. "கையுங்காலும்நிமிர்த்துக் கடாரநீர், பையவாட்டிப் பசுஞ்சிறுமஞ்சளா, லையநாவழித்தாளுக் கங்காந்திட, வையமேழுங்கண்டாள் பிள்ளைவாயுளே," "வாயுள் வையகங் கண்ட மடநல்லார், ஆயர்புத்திரனல்ல னருந்தெய்வம், பாயசீருடைப் பண்புடைப்பாலகன், மாயனென்று மகிழ்ந்தனர் மாதரே" என்றார் பெரியாழ்வாரும்.

சண்டம், கிரி, ஸ்தாநம், சம்பகாடவீ, நந்தகோபர் - வடசொற்கள். வாய் மலர் - முன்பின்னாகத் தொக்க உவமத்தொகை. மலர் - செந்தாமரை மலருமாம்; "மண்டிணிஞாலமும் வானமு முட்பட, அண்டமுண்டுமிழ்ந்த தோ ரம்போருகமே" என்பர் திருவரங்கக்கலம்பகத்தில். சீர் நந்தகோபர் என்று எடுத்து, ஸ்ரீநந்தகோபர் என்றுஉரைத்து, 'மருவினள்' என்பதற்கு - (மகிழ்ந்து அக்குழந்தையை) அணைத்துக்கொண்டாள் என்றலும் ஒன்று. காதலி - அன்புக்குஉரியவள்; இ - பெயர்விகுதி. (சுகூ)

ரு௦. உன்னைக்களவினுரலோடுகட்டிவைத் துன்னுடைய
அன்னைக்கொருத்தியறிவித்தபோ தலையாழிமங்கை
தன்னைப்புணர்ந்தருடாரரங்கா வவடன்மருங்கிற்
பின்னைக்கொடுசென்றபிள்ளை மற்றாரென்றுபேசுகவே.

(இ - ள்.) அலை ஆழி மங்கைதன்னை - அலைகளையுடைய திருப்பாற்கடலில் தோன்றிய திருமகளை, புணர்ந்தருள் - சேர்ந்தருள்கின்ற, தார் அரங்கா - மாலையையுடைய திருவரங்கனே! களவில் - (நீ தயிர்நெய்பால் வெண்ணெய்) திருடியதற்காக, ஒருத்தி - ஓர்இடைச்சி, உன்னை உரலோடு கட்டிவைத்து - உன்னை உரலுடன் சேர்த்துக்கட்டிவைத்து, உன்னுடைய அன்னைக்கு அறிவித்த போது - உனது தாயான யசோதைக்கு (அச்செய்தியை)த் தெரிவிக்கச்சென்றபொழுது, அவள் - அவ்விடைச்சி, தன் மருங்கில் - தன் இடையில், கொடு சென்ற - கொண்டுபோன, பிள்ளை - குழந்தை, பின்னை ஆர் என்று பேசுக - வேறுயாரென்று சொல்வேனாக? (எ - று.)— நீயேயாயினை என்றதாம்.

கண்ணன் இளம்பிராயத்தில் இடையர்வீடுதோறுஞ்சென்று வெண்ணெய் பால் தயிர் நெய் முதலியவற்றைக் களவாடி யுண்டுவர, அதனை ஒருநாள் பதிவிருந்து பார்த்த ஒரு கோபஸ்த்ரீ கிருஷ்ணனைத் தன் வீட்டில் உரலுடன் சேர்த்துக்கட்டிவைத்துவிட்டு, அச்செய்தியை யசோதையினிடஞ் சொல்லி அவளைக்கொண்டு கண்ணனைத் தண்டிக்கவேண்டுமென்றுகருதித் தன்பிள்ளையை இடுப்பிலெடுத்துக்கொண்டு யசோதையினிடம்வந்து கண்ணன் செய்தியைச்சொல்லிமுறையிட, அச்சமயத்திற் கண்ணபிரான் மாயையால் அவளது இடுப்பிலுள்ளபிள்ளை தானாகவும் அவள்வீட்டிற் கட்டுண்ட பிள்ளை அவள் மகனாகவு மாய்விட, அதுகண்டு அவள் நாணங்கொண்டு சென்றன ளென்பது, இங்குக் குறித்தது.

களவில் - திருடியபொழுது. அன்னை - வளர்க்குந்தாய். 'அலை ஆழி மங்கைதன்னைப் புணர்ந்தருள்' என்றதற்கு - இரட்டுறமொழிதலென்னும் உத்தியால், அலைகளையுடைய கடல் சூழ்ந்த பூமிதேவியைச் சேர்ந்தருள்கின்ற என்ற பொருளுங் கொள்ளலாம்; "பூமடந்தையும் நிலமடந்தையுந்தேவியர்" ஆதலால்: "பங்கயமின்னொடு பார்மகள் தேவி" என்பர் மேல் எஅ - ஆம் பாசுரத்திலும். பேசுக - வியங்கோள்முற்று; இங்கே தன்மையொருமைக்கு வந்தது; நீ சொல்வாயாக என முன்னிலையொருமையுமாம். (ரு௦)

# அநுபந்தம்.

## திருவரங்கத்துமாலை.

௯.—'எள்ளு மெண்ணெயும் போல் நீங்கா துலகத்துயிர்க்குயிராகி'— "எண்ணுமெண்ணெயுமியைய மற்றெப்பொருளகத்தும்,நண்ணுநாரணன்" என்ற பாகவதத்தையும் காண்க. 'ஓங்காரமா யதனுட்பொருளாய் நின்ற வொண்சுடர்'— "எப்பொழுதும் தியானஞ்செய்துகொண் டிருக்கின்ற யோகிகள், தங்களுடைய பாபபுண்யரூபமான கர்மங்கள் நசித்தவுடனே, எந்தச்சொரூபத்தைப் பிரணவப்பொருளாகக் காண்கின்றார்களோ," "உன்னுடைய ஆராதநரூபமான யாகங்களும், வஷட்காராதிகளும், சகலவேத மூலமான பிரணவமும் நீயே" என்றது விஷ்ணுபுராணம்.

௧௦.—படைப்புக்குள்ளான பிரமன் முதலிய ஜீவகோடிகளெல்லாம் காலவசப்பட்டனவே யென்பதும், காலவசப்படாதவன் எம்பெருமான் ஒருவனே யென்பதும் விளங்க, இதுகூறினார். கற்பங்கழிவதனால், எம்பெருமானது ஆயுள் கழிவதில்லை யென்க. 'ஒருமூச்சு' என்றதும் உபசாரவழக்கே. "கருடவாகனனுக் குலப்பிலாப்பிரமர் கழியும்நாள் கணத்துக்கும்பற்று," "கமலரெண்ணிலர்க ளமர்ந்திடும் பதத்தைக் கழிந்திடுங்காலத்தைக் கடக்கும்,விமலன்" என்ற மகாபாகவதமும், "ஓரிருபரார்த்தங் கழியுமேல் மலர்வீட்டுறைதரு நான்முக னுலக்கும், ஏர்கெழுபரார்த்தமிரண்டு வெண்டரங்க மெடுத்தெறி தடங்கடன்முகட்டிற்,கார்முகில்கமலக்காடுபூத்துறங்குகாட்சி பேர்[illegible]கண்வளர் தலைவத்,தாரவன்றனக் கோரிமையென வுரைப்பர் சாற்றுமவ்வு[illegible]ரயுபசாரம்" என்ற ஸ்ரீபாகவதமும், காணத்தக்கன.

௧௮.—ணகரத்திற்கும், நகரத்திற்கும், வரிவடிவில் வேறுபாடிருப்பினும் ஒலிவடிவில் மிக்கவேறுபாடில்லாமையால், அவை, விரவி, எதுகையில் அமைக்கப்பட்டன.

இவை, சென்னைத் திருவல்லிக்கேணி தெளிசிங்கப்பெருமாள்கோவில் வீதி எஅ - ஆவது கிருகத்தில் (சென்னை ராயபேட்டை வெஸ்லி காலெஜ் தமிழ்ப்பிரதமபண்டிதர்) சே. கிருஷ்ணமாசாரியரிடத்திற் கிடைக்கும்.

## கம்பராமாயணம்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஆரணியகாண்டம் முழுவதும் உரையுடன் ... ... ... | ரு | 0 |
| பாலகாண்டம் கையடைப்படலவுரை ... ... ... ... | 0 | உ |
| ஷை மிதிலைக்காட்சிப்படலம்,குலமுறைகிளத்துபடலம்உரையுடன் | 0 | கஉ |
| ஷை எதிர்கொள்படலம்முதல் காண்டமுடிவுவரையில்உரையுடன் | க | சு |
| அயோத்தியாகாண்டம் முதல்நான்குபடலம் உரையுடன் ... | உ | 0 |
| சுந்தரகாண்டம் முதலிரண்டுபடலம் உரையுடன் ... ... | க | அ |
| ஷை உருக்காட்டுபடலம், சூளாமணிப்படலம் உரையுடன் ... | க | 0 |
| ஷை இறுதிநான்குபடலம் உரையுடன் ... ... ... | க | ச |
| யுத்தகாண்டம் இரணியன்வதைப்படலம் உரையுடன் ... ... | 0 | அ |
| ஷை நாகபாசப்படலம் உரையுடன் ... ... ... ... | க | அ |
| ஷை மீட்சிப்படலம் உரையுடன் ... ... ... ... | க | அ |
| உத்தரகாண்டம் இராவணன்பிறப்புப்படலம்,வரையெடுத்தபடலம் இவற்றின் உரை ... ... ... ... ... ... | 0 | சு |

## வில்லிபுத்தூரார் பாரதம்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| அருச்சுனன்தீர்த்தயாத்திரைச்சருக்கம் உரையுடன் ... ... | 0 | சு |
| காண்டவதகனச்சருக்கம் உரையுடன் ... ... ... ... | 0 | அ |
| இராயசூயச்சருக்கம் உரையுடன் ... ... ... ... | க | 0 |
| சூதுபோர்ச்சருக்கம் உரையுடன் ... ... ... ... | க | ச |
| நிரைமீட்சிச்சருக்கம் உரையுடன் ... ... ... ... | 0 | கஉ |
| வீட்டுமபருவம் உரையுடன் ... .. ... ... | க | 0 |
| பதினான்கு பதினைந்து பதினாறும் போர்ச்சருக்கங்கள் உரையுடன் | க | 0 |
| பதினெட்டாம்போர்ச்சருக்கம் உரையுடன் ... ... ... | க | 0 |

## பாகவதம்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| முதலிரண்டுகந்தம் உரையுடன் ... ... ... ... | க | 0 |

## கந்தபுராணம்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| திருவிளையாட்டுப்படலம் உரையுடன் ... ... ... ... | 0 | அ |
| தகரேறுபடலம்முதல் படையெழுபடலம்வரை உரையுடன் ... | 0 | அ |
| தாரகன்வதைப்படலம் உரையுடன் ... ... ... ... | 0 | கஉ |
| வழிநடைப்படலம் முதல் திருச்செந்திப்படலம்வரை உரையுடன் | 0 | அ |
| மார்க்கண்டேயப்படலம் உரையுடன் ... ... ... ... | க | 0 |
| விந்தகிரிப்படலம்முதல் ஐந்துபடலங்கள் உரையுடன் ... | 0 | அ |
| இந்திரன்கரந்துறைபடலம், காவிரிநீங்குபடலம், இந்திரனருச்சனைப்படலம் உரையுடன் ... ... ... ... | 0 | கஉ |

## பிள்ளைப்பெருமாளையங்கார் அஷ்டப்பிரபந்தம்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| திருவரங்கத்தந்தாதி உரையுடன் ... ... ... ... | 0 | க0 |
| திருவரங்கக்கலம்பகம் உரையுடன் ... ... ... ... | 0 | அ |
| திருவரங்கத்துமாலை முற்பாதி உரையுடன் ... ... ... | 0 | சு |
| திருவேங்கடமாலை உரையுடன் ... ... ... ... | 0 | அ |
| திருவேங்கடத்தந்தாதி உரையுடன் ... ... ... ... | 0 | க0 |
| அழகரந்தாதி உரையுடன் ... ... ... ... ... | 0 | க0 |

| | | | |
|---|---|---|---|
| குருபரம்பராப்ரபாவம் குருபரம்பராவிவரணத்துடன் | ... | உ | 0 |
| சடகோபரந்தாதி உரையுடன் ... | ... | 0 | க0 |
| அழகர்கலம்பகம் உரையுடன் (இரண்டாம்பதிப்பு) ... | ... | 0 | அ |
| மதுரைக்கலம்பகம் உரையுடன் (இரண்டாம்பதிப்பு) | . | 0 | அ |
| நம்மாழ்வார் அருளிச்செய்த திருவந்தம் விரிவுரையுடன் | . | 0 | கஉ |
| முதுமொழிக்காஞ்சி உரைகளுடன் | ... | 0 | அ |
| ஆழ்வார்கள்சரித்திரம் (இரண்டாம்பதிப்பு) | . | 0 | ச |
| பட்டர்வைபவம் | . | 0 | அ |
| அபயப்ரதாநஸாரம் ... | ... | 0 | அ |
| தண்டியலங்காரம் பொதுவணியியல் விசேடவுரையுடன் | .. | 0 | ச |
| ஷை பொருளணியியல் விசேடவுரையுடன் | ... | 0 | அ |
| சிலப்பதிகாரம் காடுகாண்காதை உரைகளுடன் | ... | 0 | அ |
| சூளாமணி முதல்நான்குசருக்கத்துக்குத் தெளிவான உரை | ... | 0 | க0 |
| ஷை அரசியற்சருக்கத்தில் கஙுகு - செய்யுளுக்குத் தெளிவானஉரை | | 0 | ங |
| குருவசரித்திரம் | ... | 0 | உ |
| விசாரசநுயர் வரலாறு | ... | 0 | க |
| பன்னூற்றிரட்டு கல்வியதிகாரம் உரையுடன் ... | ... | 0 | அ |
| இராமாயணவெண்பா வனம்புகுகாண்டம் உரையுடன் | .. | 0 | அ |
| ஷை போர்புரிகாண்டம் உரையுடன் | . | 0 | அ |
| ஷை முடிபுனைகாண்டம் உரையுடன் | . | 0 | அ |
| மணவாளமாமுனிநூற்றந்தாதியும், நூற்றெட்டுத்திருப்பதியகவலும் | | 0 | உ |

---

| | | | |
|---|---|---|---|
| மாறன்கோவை | .. | 0 | ங |
| திருவேங்கடவுலா | .. | 0 | ரு |
| ஆண்டாள் பிள்ளைத்தமிழ் | .. | 0 | ரு |
| ஆண்டாள் சந்திரகலாமாலை | ... | 0 | க |
| அழகர் கிள்ளைவிடுதூது | ... | 0 | க |

*திருக்குறளிலும், நாலடியாரிலும், பாரதவெண்பாவிலும் சிற்சில பகுதி உரையுடன் கிடைக்கும்.*

---

| | | | |
|---|---|---|---|
| நன்னூற்காண்டிகை | ... | க | 0 |
| நான்காவது ஐந்தாவது பாரம் ரீடர் | . | 0 | ங |
| ஷை உரை | .. | 0 | ச |
| மெட்ரிக்யுலேஷன் தமிழ்ப்பாடபுத்தகவுரை | ... | 0 | க0 |
| யப்-ஏ, தமிழ்ப்பாடபுத்தகம் உரையுடன் | | | |
| பி-ஏ, தமிழ்ப்பாடபுத்தகம் உரையுடன் | | | |

---

| | | | |
|---|---|---|---|
| கம்பராமாயண வசனம். புதியபதிப்பு. 100-விசித்திரப்படங்களுடன் ஏழுகாண்டமும். | ... | ச | 0 |
| ஷை உயர்ந்த கடிதத்தில் அச்சிட்டது ... | ... | ங | 0 |
| தேவாரம் திருவாசகம் முதலிய பன்னிருதிருமுறைத்திரட்டு | ... | 0 | அ |
| நீதிநூற்கோத்து | ... | 0 | ங |
| சித்தம்பலநாடிகள் சாத்திரக்கோத்து .. | ... | 0 | ரு |